

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

# குருபூஜை விழா மலர்

17—5—1949.

வெளியீடு எண் 192.

உ

குருபாதம்

# ஆதீனக் கோயில்கள்

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகளவர்கள்

திருவுள்ளப்பாங்கின்படி

வெளியிடப்பெற்றது.

மகாராஜா சரபோசி சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

எழுதியவர்:

வித்துவான், ச. தண்டபாணி தேசிகர்.

விரோதி.

பிரதிகள் 1000.

ஞானசம்பந்தப் பதிப்பகம்,
தருமபுரம்.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| முகவுரை | .... | i |
| மதிப்புரை | .... | vi |
| ஆதீனமடாலயம் | .... | 1 |
| ஆச்சாபுரம் | .... | 25 |
| சீகாழி | .... | 41 |
| வைத்தீஸ்வரன்கோயில் | .... | 71 |
| குறுக்கை | .... | 91 |
| மாயூரம் - குமரக்கட்டளை | .... | 107 |
| மாயூரம் - வள்ளலார்கோயில் | .... | 119 |
| கருங்குயில்நாதன்பேட்டை | .... | 127 |
| திருபுவனம் | .... | 133 |
| குத்தாலம் | .... | 143 |
| மணக்குடி | .... | 169 |
| திருவையாறு | .... | 175 |
| மாயூரம் - விசுவநாதர்கோயில் | .... | 203 |
| திருப்பனந்தாள் | .... | 207 |
| திருநள்ளாறு | .... | 227 |
| திருத்தருமபுரம் | .... | 233 |
| விளநகர் | .... | 237 |
| திருப்பறியலூர் | .... | 243 |
| திருக்கருப்பறியலூர் | .... | 251 |
| திருநின்றியூர் | .... | 257 |
| பேரளம் | .... | 263 |
| திருக்கற்குடி | .... | 273 |
| திருவாரூர் - இராஜாங்கக்கட்டளை | .... | 295 |
| திருச்சி - மௌனமடம் | .... | 303 |
| திருவிடைமருதூர் - பிச்சக்கட்டளை | .... | 315 |
| திருக்கடவூர் | .... | 321 |
| திருக்கோளிலி | .... | 341 |
| தென்திருமுல்லைவாயில் | .... | 355 |
| தருமபுர ஆதீனம் | .... | 369 |

# படங்களின் விபரம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்
ஞானசம்பந்தப் பதிப்பகம் 16
சொக்கநாதப்பெருமான் பூஜைமடம் 17
ஆச்சாபுரம் திருவெண்ணீற்றுமை ஆலயம் 32
வைத்தீஸ்வரன்கோயில் வேம்படிப்பெருமான் 76
வைத்தீஸ்வரன்கோயில் சித்தாமிர்த தீர்த்தம் 77
குறுக்கை வீரட்டேசுவரர் ஆலயம் 96
மாயூரம் — வள்ளலார்கோயில் வதான்யேசுவரர் ஆலயம் 120
திருபுவனம் சரபேஸ்வரர் 136
திருபுவனம் கம்பகரேசுவரர் கோயில் 137
குத்தாலம் உக்தவேதீசுவரர் கோயில் 160
திருவையாறு தென்கயிலாயம் 196
திருவையாறு சூரியபுஷ்கரணி தீர்த்தம் 197
திருப்பனந்தாள் இராஜகோபுரம் 216
திருப்பனந்தாள் நாககன்னிகை தீர்த்தம் 217
திருவிளநகர் துறைகாட்டும்வள்ளலார் கோயில் 240
திருப்பறியலூர் வீரட்டேசுவரர் கோயில் 248
திருக்கருப்பறியலூர் குற்றம்பொறுத்தீஸ்வரர் கோயில் 256
திருநின்றியூர் லக்ஷ்மிபுரீசுவரர் கோயில் 261
பேரளம் சுயம்புநாதசுவாமி கோயில் 264
திருக்கற்குடிமாமலை 294
திருக்கடவூர் அமிர்தபுட்கரணி தீர்த்தம் 327
திருக்கடவூர் நூற்றுக்கால்மண்டபம் 328
திருக்கோளிலி தியாகராஜசுவாமி கோயில் 344
திருக்கோளிலி பஞ்சபாண்டவர்கள் பூஜை 345
தருமபுர ஆதீனம் தருமபுரீசுவரர் கோயில் 372
தருமபுர ஆதீனம் ஞானபுரீசுவரர் கோயில் 373

உ

குருபாதம்

# முகவுரை

சிவம்பெருக்குந்தென்னாடு திருக்கோயில்களாற் பொலிவது. திருக்கோயில்களும் திருமடங்களும் உடையான் உடைமைத்தொடர்பும், அவயவ அவயவித்தொடர்பும் உடையன. இவை இரண்டுமே சமயம் வளர்த்து விளக்கும் தகுதி மிகுதியும் உடையன. சமய விளக்கங்கள் திருக்கோயில்களால்; வளர்ச்சி திருமடங்களால். இறையொளி விளங்குமிடங்கள் திருக்கோயில்கள்; அதனைக்கண்டுகாட்டும் இடங்கள் மடங்கள். ஆதலால் இவையிரண்டுமே நாட்டுக்கு இருகண்களை ஒத்தன. மனிதனுடைய இருகண்களுமே ஒருநோக்குடையன. அதுபோலவே இருநிலையங்களும் ஒருநோக்குடையன.

இத்தகைய பல மடங்களில் பல மடாதிபதிகள் இருந்து, சமயநெறிவளர்க்க வழிவகுத்து, அவ்வப்போது எழும் மனவிடர்தீர்த்து, மாண்பொருள் அளித்துவர அருளுபதேசம் வழங்கும் இடங்களே ஆதீனங்கள். ஆதீனம் என்றாலே உரிமையுடையது என்பது பொருளாகும். உலக உடைமையாகிய பொருளுடைமையைக் காட்டிலும், உயிர் உரிமை

யாகிய உணர்வுரிமையை என்றும் உடையதாய் அதனை வளர்க்கும் இடங்களே ஆதீனங்கள்.

ஆதீனங்கள் எப்படித் தமிழ்நாட்டில் வளர்ந்தன? அவை மேற்கொண்டபணிகள் யாவை? பணிகளால் சமயநிலை எங்ஙனம் வளர்ந்துவந்தது? அவற்றிற்கு ஏற்பட்ட இடையூறுகள் யாவை? அவை நீங்கி ஆதீனங்கள் எங்ஙனம் விளக்கம்பெற்றன? என்பனமுதலாகிய வரலாற்றுண்மைகளை இன்றைய தமிழ் உலகம் எதிர்நோக்கியிருக்கின்றது.

நேற்றைய உலகமோ ஆதீனங்களின் அருள் விளக்கம் ஒன்றையேநாடி அதற்கான புராண வரலாறுகளையே பெரிதும்நோக்கின. இவையிரண்டுமே இக்காலத்து மக்களனைவராலும் அறிந்துகொள்ளத் தக்கன. ஆதலால் புராணவரலாறும், வரலாற்று உண்மைகளும் அமைய ஒருவரலாறு எழுதுவிக்க வேண்டும் என்று ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் திருவுளம்பற்றினர்கள். அவ்வமயம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்தைத் தரிசிக்கவந்திருந்த எனது அரும் பெறல் நண்பர் வித்வான் ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்களிடம் "இத்தகையமுயற்சி நம்நாட்டு மக்களால் வரவேற்கத்தக்கதொன்றல்லவா? அதனை ஆராய்ச்சிப்புலவரே செய்துகொடுக்கட்டுமே" எனப் பணித்தார்கள். பிள்ளையவர்கள் தமக்குள்ள அலுவல்காரணமாகவும், என்மீதுள்ள அன்புகாரணமாக வும் "நம் ஆதீனக்கல்லூரி ஆசிரியரைக்கொண்டே செய்வித்தல் நலம்" எனத்தெரிவித்துக்கொண்டார்

கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களும் அதனை மகிழ்ச்சியோடு திருவுளங்கொண்டு தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜைப் பெரு விழா நினைவு மலராக இந்நூல் வெளிவரவேண்டும் என ஆணைதந்தார்கள். ஆணைதந்தது மேமாதம்பதி னொராம் நாள். இதற்கும் குருபூஜை விழாவிற்கும் இடையிலிருந்த நாட்கள் இருபத்துநான்கு. எழுத வேண்டியதோ ஆதீனமும் ஆதீனக்கோயில்களுமாக இருபத்தெட்டு. அதற்கு இன்றியமையாத புராண வரலாற்றுப் பகுதிகள் ஆதீனப் புத்தகசாலையிற் பெரிதும் உள்ளன. கல்வெட்டுப்பகுதிகளிற் சிலவே இருந்தன. ஆதலால் முழுதும் தெரிந்துகொள்ள வேண்டித் தஞ்சை சரஸ்வதிமால் புத்தகசாலைக்குச் சென்று அரசாங்கக் கல்வெட்டிலாகா குறிப்புக்களை யும், தஞ்சை திருச்சி ஜில்லா கெஜட்டியர்களையும், இன்றியமையாத ஆங்கில வரலாற்று நூல்களில் சிறந்த ஆறு நூல்களையும் மூன்று நாட்களில் ஆராய்ந்து குறிப்புத்தயாரித்துவந்தேன். அவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு மிகக் குறைந்த காலத்தில் இராப்பகலாக எழுதிமுடிக்கப் பெருந் துணையாக இருந்தது செந்தமிழ்முருகன் திருவருளும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் ஊக்கமொழி களுமே எனலாம்.

இந்த நூலுள் திருசிராமலையைப்பற்றிய வர லாற்றுக்குறிப்பு எழுதப் பெரிதும் துணையாயிருந் தது. கல்வெட்டாராய்ச்சியில் அணிவிரல் முடக்க

லொட்டாத் தகுதிவாய்ந்தவர்களும், அண்ணுமலைப் பல்கலைக்கழகத்து ஆராய்ச்சிப்பிரிவு விரிவுரையாள ருமாகிய அன்பர் திரு. T. V. சதாசிவபண்டாரத்தார் அவர்கள் செந்தமிழில் எழுதிய ஆராய்ச்சியாகும்.

அங்ஙனமே திருவையாறு, உலோகமாதேவீச் சரம், திருக்கோளிலி முதலிய தலங்களைப்பற்றிய கல்வெட்டுக்களை, வித்துவான், திரு. சுந்தரேச வாண்டையார் அவர்கள் ஆதீனச்சார்பில் முன் னரே சென்று படியெடுத்து வந்திருந்தார்கள். அந்தக் குறிப்புக்களும் இதற்கு உதவிசெய்தன.

இந்நூல் முதற்கண் அழகுசெய்யும் நிலப்படம், சுந்தரப்பெருமாள்கோயில் ஆசிரியர் திரு. சிவகுரு நாதன் அவர்கள் வரைந்து கொடுத்ததாகும். இவ் வண்ணம் இந்த ஆராய்ச்சிநூல் ஓரளவு செவ்விய முறையில் மிகக்குறுகியகாலத்து வெளிவந்தது.

இவ் வரலாற்றுநூலில், சமயத் தொடர்புள்ள புராணவரலாறுகட்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள் ளது. அதிலும் தல அமைப்பு, தலத்தில் வாழ்ந்த புலவர்கள், அன்பர்கள், அவர்களைப்பற்றிய நூல் கள், அவைகளைப்பற்றிய சில குறிப்புக்கள் இவை களும் புராணவரலாற்றுப் பகுதியில் சேர்க்கப்பெற் றுள்ளன. இவைகளாற் புராணவரலாறு மிகுந்து காணப்பெறுகின்றது எனச் சிலர் கருதக்கூடும். ஆனாலும் இவை மிக இன்றியமையாத வரலாற்று உண்மைகளே எனக் கருதலாம்.

இந்நூலுக்குவேண்டிய சில இன்றியமையாத குறிப்புக்களைத்தேடி எழுதிக்கொள்வதற்குத் துணை புரிந்த தஞ்சை சரஸ்வதிமால் நூல்நிலைய ஆராய்ச்சியாளர்களாகிய பிர்மஸ்ரீ. வாசுதேவ சாஸ்திரிகள் திரு. பண்டித முத்துரத்ன முதலியார் ஆகியோர்களின் அருமுயற்சிகளும் இவ்வெளியீட்டுக்குப் பெருந்துணைசெய்தன.

திரு. தருமலிங்கம்பிள்ளை அவர்களும், ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்துவான், திரு. M. ஆறுமுக தேசிகர் அவர்களும் வழக்கம்போல அச்சிடுங்காலத்து உடனிருந்து ஒப்புநோக்கியும் ஆராய்ந்தும் ஆவனசெய்தார்கள்.

இந்நூல் இங்ஙனம் பல படங்களுடன் வெளிவரக் கருணைபாலித்த, அருட்டிருமேனியிலமர்ந்து அடியார்கட்கு ஆரமுதம் வழங்கி எழுந்தருளியிருக்கும் குருஞானசம்பந்தப்பெருமான் பொன்னார் திருவடிக்கும், இதனை என்கண்விட்டுப் பணிகொண்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவடிகட்கும் என்றுங் கடப்பாடுடையேன்.

"குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

தருமபுரம்,
17—5—49.

**வித்வான், ச. தண்டபாணிதேசிகர்,**
ஆதீனப்பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்.

# மதிப்புரைகள்

அண்ணாமலைப்பல்கலைக்கழக ரிஜிஸ்டரார்

**திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள், B. A., L. T.**

**'ஆதீனக் கோயில்கள்'** என்னும் இவ்வரியநூல், திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் தாபகராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை விழா நினைவுமலராக இவ்வாண்டு வெளிவருகின்றது. இவ் வாதீன மடாலயத்தைப்பற்றியும், இதன் மேற்பார்வையிலுள்ள இருபத்தேழு திருக்கோயில்களைப் பற்றியும் சிறந்த பல உண்மைகளை, ஆதீனப்புலவர் திரு. வித்வான் தண்டபாணிதேசிகரவர்கள் அனைவரும் அறியவேண்டிய இந்நூலில் அழகுற எழுதியுள்ளார்கள். முதற் பகுதியில், "மடம்" என்னும் சொற்பொருள் விளக்கமும், தமிழகத்து மடங்களின் வளர்ச்சிமுறையும், தருமையாதீன வரலாறும், அதன் அதிபர்கள் கடந்த சுமார் நானூறு ஆண்டுகளாகச் செய்துவந்துள்ள சமயத் தொண்டுகளின் மாண்பும் இனிது விளக்கப்பெற்றுள்ளன. தொடர்ந்துவரும்பகுதிகளில் ஆதீனக் கோயில்களின் புராண சரிதைகளும், சரிதகாலச்சான்றோர் தொடர்புகளும், அவ்வவற்றின் கல்வெட்டுகளிற்காணும் சீர் சிறக்கும் சிவபுண்ணியச் செயல்களும் மிக நன்றாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந்நூல் சிறந்த பல படங்களுடன் எழிலுற விளங்குகின்றது.

அறிவுச் சுரங்கமென வெளிவரும் இந் நூலானது, இதுவரையில் சரித ஆராய்ச்சி வல்லார் சிலர்க்கும் கல்லூரி மாணவர்களின் சிலர்க்கு மட்டுமே தெரிந்திருந்த நம் முன்னோர்தம் அன்புத்திறன்

களையும் அறச் செயல்களையும், நம்மவர் பலர்க்கும் மிக எளிதில் புலப்படுத்துகின்றது. சிதம்பரம், திருவாரூர் முதலிய சில பெருந் தலங்கட்கு விரிந்த முறையில் முன்னமே இத்தகைய நூல்களை இவ் வாதீனம் வெளியிட்டுபகரித்துள்ளது. சிவ நெறியும் செந்தமிழும் மறுமலர்ச்சிபெறத் தொடங்கியிருக்கும் இக் காலத்தில், இத்தகைய சரிதவளம் செறிந்த வெளியீடுகள், நன்மக்களின் பேருணர்வை யெழுப்பி மீண்டும் செயற்கருஞ் செயல் பல செய்யத் தூண்ட வல்லவை.

இத்தகைய விழுமிய அறிவுச் செல்வத்தை வாரி வழங்கிவரும் தருமையாதீனத்திற்குச் சைவவுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

---

தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர்,

## வித்துவான், திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்

ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர், அண்ணாமலைநகர்.

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீன மகா சந்நிதான மவர்கள் மக்களுக்குப் பெரிதும் பயன்படத்தக்க செயல்கள் எவை யும் செய்தற்குச் சிறிதும் தயங்காது செய்துதவும் சிறப்புடைய வர்கள் என்பது செந்தமிழ்நாடு நன்கறிந்ததொன்று. பல நூற்றுக் கணக்கினவாகிய நூல்களை - பயன்படத்தக்க நூல்களை - அவர்கள் வெளியிட்டிருப்பதொன்றே இதற்குப் போதிய சான்றுபகருகின்றது. திருத்தருமையாதீனத்தின் அருளாட்சியின்கீழ் இருபத்தேழு திருக் கோயில்கள் உள்ளன. அவை அவ்வப்போது பழுதுபார்க்கப்பெற்றுக் காண்பார்க்கு எப்போதும் இனிய காட்சி வழங்குகின்றன. அவற் றின் தூய இனிய அழகிய நிலைமை திருத்தருமையாதீன மகாசந்நி தானத்தின் ஆட்சி நலத்தைச் சிறப்பித்துக் காட்டிநிற்கிறது. இவத்

றின் ஆட்சிநலத்தை ஆராய்ந்துவரும் இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழக அரசியல் அலுவலாளர் அனைவரும் ஒருமுகமாக ஆண்டுதோறும் பாராட்டிக் கூறியிருப்பது ஈண்டுக் குறிக்கத் தகுவதாகும்.

இது நிற்க; திருத்தருமையாதீனத்தின் கீழுள்ள திருக்கோயில் களின் புராண வரலாறும் கல்வெட்டுக்கூறும் வரலாறும் ஒரு சிறு நூல்வடிவில் இருக்கப்பெறின், அது திருக்கோயில்களின் மாண்பு காட்டும் முறையில் ஆதீனத்தின் ஆட்சி மாண்பையும் ஒருங்கு விளக்கவல்லதாம் எனக்கருதி ஒருகால் அடியேன் குருமகாசந்நி தானத்தின திருமுன் தெரிவித்துக்கொண்டேன. நல்லது கேட்பின் அதனை விரைந்து செயற்படுத்தும் சிறப்புளங்கொண்டு விளங்கும் மகாசந்நிதானம் அதனை என்னையே செய்யுமாறு பணித்தருளினார்கள். ஆயினும் யான் என் மனையின்கண் நிகழும திருமணத்துக்குரிய முயற்சியில் ஈடுபட்டிருப்பதை எடுத்துரைத்து, இதனைச் செவ்விய முறையில் செய்தற்குரிய தகுதி முற்றும் நிரமபப் பொருந்தி யிருக்கும் என் நணபர் வித்துவான், திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள் இதனை மேற்கொண்டு செய்துமுடிப்பது தககதென விண்ணப்பித் துக்கொண்டேனாக, அவ்வண்ணமே மகாசந்நிதானத்தின் ஆணைமேற் கொண்டு திரு தேசிகரவர்கள் இனிய அழகிய தூய நடையில் இந் நூலை ஆக்கி யிருக்கின்றார்கள். இப்பணியில் வித்துவான் திரு ஆறுமுக தேசிகரவர்களது புலமைப்பணியும் போதிய பங்குபெற்றுள தென்பதை நண்பர் பலரும் அறிவர். திரு. தண்டபாணி தேசிக ரவர்களும், திரு ஆறுமுகதேசிகரவர்களும் திருத்தருமையாதீன வெளியீடுகள் பலவற்றையும் செய்து புகழ்விளைத்துவரும் அருமை யினைத் தமிழுலகு அறிந்து பெருமகிழ்ச்சி எய்துகின்றது.

இந்நூலில் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் கூறப்படும் வரலாறு களில் புராண வரலாறு சிறிது பெருகியும், கல்வெட்டாராய்ச்சி வரலாறு சிறிது சுருங்கியும் யிருப்பது காணும் ஆராய்ச்சி அறிஞர் சிலர் முன்னது சுருங்கியும் பின்னது பெருகியும் இருக்கவேண்டு

மெனக் கருதுகின்றனர். நம் மாகாணத்தில் இதுகாறும் நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் அரசியலாரால் படியெடுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் ஒன்பதினுயிரம் கல்வெட்டுக்களே வெளியாகியிருக்கின்றன, சென்ற பத்தாண்டுகளில் அரசியலார் பல கல்வெட்டுக்களை எடுத்திருக்கின்றனர்; ஆயினும் அவற்றைப்பற்றிச் சுருக்கக்குறிப்புக்கொண்டு விளங்கும் ஆண்டறிக்கைதானும் வெளியாகவில்லை. இதனுல் வரலாற்ருராய்ச்சியை நன்கு நடாத்தி விரிந்த முறையில் எழுதுதற்கு இயலாத நிலை உண்டாகியிருப்பதை அறிஞர்கள் நினைவுகூர்தல்வேண்டும். ஆகவே புராண வரலாற்றினும் கல்வெட்டாராய்ச்சி வரலாறு சிறிது சுருங்கியே இருக்கவேண்டியுளது.

இதனைப் பார்வையிட்ட அறிஞர் சிலர் திருக்கோயில்களின் பெயர்கள் கல்வெட்டுக்களில் எவ்வண்ணம் குறிக்கப்படுகின்றனவோ அவ்வண்ணமே பெயர்களும், அவ்வத்திருக்கோயில்களிலும் முற்காலப் பல்லவ பாண்டிய சோழ நாயக்க வேந்தர்கள்செய்த திருப்பணிகளைக் குறிப்பதுபோல ஆங்காங்கு திருத்தருமையாதீனத்தார் செய்திருக்கும் திருப்பணிகளும் இந்நூலில் குறிக்கவேண்டுமெனக்கருதுகின்றனர்.

இந்நூலை இவ்வாண்டில் நடக்கும் குருபூசைவிழாவின் நினைவுக்குறியாக வெளியிடல்வேண்டுமென மகாசந்நிதானம் திருவுள்ளங்கொண்டமையின், அக்காலவெல்லையில் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் விரிந்த வரலாற்றினை எழுதிச் சேர்த்தற்குப் போதாமையாலும், ஆண்டுதோறும் ஆராய்ச்சியறிவுப் பெருகப் பெருக இந்நூலும் பெருகி மேம்படும் பேறுடையதாதலாலும் இவ்வளவில் வருவதாயிற்று. வரலாற்றுண்மைகளைத் திட்டவட்டமாகத் தெள்ளித் தெளிந்தபின்பே எழுத்துவடிவில் இறங்குதல்வேண்டும் என்னும் சீர்த்தபுலமைவாய்ந்த என் நண்பர் திரு. தண்டபாணிதேசிகரவர்கள், ஆண்டுதோறும் பெருகும் பெருமைகொண்ட இந்நூலை இப்போது

அடிகோலி, அழகுதிகழும் கருத்தும் நடையும் அமைந்த தீவிய இனியதமிழால் தந்திருக்கும் இதற்குத் தமிழாராய்ச்சியுலகு பெரிதும் கடமைப்பட்டுள்ளது.


அரும்பெரும் ஆராய்ச்சிக்கழகங்களில் அறிஞர் பலர் இருந்து ஆராய்ந்து செய்தற்குரிய இந்த அரிய பணியை திரு. தண்டபாணி தேசிகரவர்கள் ஒருவரே தனித்திருந்து பிழையறக் குறைவறச் செய்து முடித்ததிறம் நினைக்குந்தோறும் இன்பம் தருவதொன்று.

புலவரது புலமை வளத்தை நலங்கெழுமிய அருட்பணியில் ஈடுபடுத்திப் புலமைப்பயனை உலகுபெறச்செய்யும் திருத் தருமபுர ஆதீன மகாசந்நிதானத்தின் திருவுள்ளம், சைவரும் தமிழும் தழையத் தழைக்கும் தமிழருள் திருவுள்ளமாய், தமிழ்கூறும் நல்லுலகு பரவும் பெரும் பெயர்ப் பேருள்ளமாய் விளங்குகின்றமையின், அவ்விளக்கம் அழுக்காற்றுப்பகைப்பேய் விரிக்கும் இருட்படலத்தைக் கிழித்துதத் தனது ஞானவொளியால் தாவிலாத்தமிழகத்திற் சிவம் பெருக்கித் திகழுமாக எனவேண்டியமைகின்றேன்.

உ

திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

# திருக்கோயில்கள்



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# ஆதீன மடாலயம்

## உயிரும் உடலும் :

மொழி உடல். கருத்து உயிர். கருத்து என்பது கொள்கை. கொள்கையில்லாத மொழி உயிருள்ள உடம்பாகாது. கொள்கைகளில் அவ்வப்போது உள்ள தேவைக்கு ஏற்ற கொள்கைகள் சில. என்றும் இன்றியமையாத கொள்கைகள் சில. முற்கூறிய தேவைகளைப் பெரியோர் சிறுதேவை என அழைப்பர். அவை பசிக்குணவு, நாட்டுக்குப் பொருள், புகழுக்குப் பதவி என்பவை போன்றன. பின்னது பெருந்தேவை. அத்தேவை எப்போது உண்டாயிற்று. எப்போது நிறைவேறும் என்பது யாராலும் சொல்லமுடியாத ஒன்று. அத்தேவையைத்தான் உணர்வு, ஞானம், தவஞானம், சிவ ஞானம் என்று அநுபவ ஞானிகள் தாம் தாம் கண்ட பயனுக்கு ஏற்பப் பெயர் கொடுத்தழைக்கின்றனர். அந்த உயிர்த்தேவையை நிறைவேற்றிப் பயிற்சி செய்விக்கும் இடங்களே மடங்கள்.

பொருள் என்ன ?

மடம் என்பதற்கு மென்மை, அழகு, இணக்கம், இளமை என்பன பொருள்கள். இவையனைத்தும், பொருள்களின் பண்புகளை உணர்த்துவனவே. பொருளின்குணம் பொருளைவிட்டுப்பிரிந்து நில்லா. மென்மை முதலிய குணங்களும், அக்குணங்களை உடைய இடத்தைச் சார்ந்தே நிற்கும். அன்றியும் ஒற்றுமைபற்றி இக்குணப்பெயர்களே குணத்தை உடையவற்றிற்குப் பெயராகவும் ஆகலாம். ஆதலால் எந்த இடத்து மென்மையும், அழகும், இணக்கமும், இளமையும் இருக்கிறதோ அதுவேமடம். வன்மையும், வெறுப்புணர்ச்சியும், பிணக்கமும், முதுமையும், போட்டியும், பொறாமையும் உள்ள இடங்கள் மடமாகா.

இனி, மடம் என்றசொல் முதன்முதலில் என்றும் அழியா அழகும், அடியாருடைய துன்பம் கண்டு பொறாத மென்மையும், இளமையும், இணக்கமும் உடைய இறைவன் எழுந்தருளியுள்ள கோயிலுக்கே பெயராக வழங்கிற்று. இப்போதும் வீடுகளில் இறைவனை வழிபடும் இடத்தைப் பூசைமடம் என்றழைக்கக் காண்கின்றோம்.

இறைவனை மனக்கோயிலிற் கண்டு காட்டும் பேரறிவாளர் தங்கிய இடமும் மடமெனப்பெற்றது. அதன்பின்னர் சாத்திரங்கள் சம்பிரதாயங்களாய், தொடங்கிய குறிக்கோளினின்றும் விலகி நெடுங்

தூரம் போய்ச் சடங்களவில் நின்றுவிடுவதுபோல இறைவனும் அவனடியார்களும் எழுந்தருளிய இடத்திற்குவழங்கிய மடமென்னும் பெயர், வருவார் போவார்கட்கு அன்னம்வழங்கும் சத்திரங்களுக்கும் அறம் என்ற பொதுமையினுல் பெயராயிற்று. பிங்கலந்தை நிகண்டின் காலத்தில் அறச்சாலை என்ற தன்மையினும் நீங்கி இடப்பொதுப் பெயராகக்கூட வந்துவிட்டது.

நானார்த்த தீபிகை என்னும் நிகண்டு நூல் "மடம் அறியாமை அறப்புறம் மாணவரும் முனிவரும் உறும் உறையுள்" என்று கூறுகிறது. 'மடமென்ப அறியாமை முனிவர் வாசப்பேர்' என்றது சூடாமணி நிகண்டு. இவற்றை யொத்துள்ளங் கொள்ளும்போது, எங்கு தன்னலம் பேணுத தகுதியாளர்கள் தங்குகின்ருர்களோ! எங்கு அறவழியில் நாட்டைப் பண்படுத்துபவர்கள் தங்கியிருக்கின்ருர்களோ! எங்கு தன்னலத் தியாகிகளைப் பயிற்றுவிக்கும் பேராசிரியர்கள் தங்கியிருக்கின்ருர்களோ! அதுவே மடம் என்பது தெற்றென விளங்கும்.

**தமிழ் நூல்களில் :**

சங்க இலக்கியங்களில், மடம் இடங்குறித்த பெயராக வழங்கப்பெற்றிலது. இடைப்பட்ட காலத்திலேயே இச்சொல்லுக்கு இப்பொருள்வந்திருத்தல் வேண்டும். அவைகளில் 'அறச்சாலைகள் உண்டு; அதில் ஆதுலர்க்கு அன்னம் வழங்கியதுண்டு'

என்பன அறிவிக்கப்பட்டுள்ளது. சிறைக்கோட்டம் அறக்கோட்ட மாக்கப்பட்டது என்று மணிமேகலை தெரிவிக்கிறது.

இவைகளனைத்தும் அரசாங்கப் பாதுகாப்பிலும் குடிமக்கள் இல்லங்களிலும் இருந்தனவேயன்றித் தனிப்பட்ட நிலையங்களாக இல்லை. சைன பௌத்தத் துறவிகள் தங்கிய தவச்சாலைகள் பள்ளி என்று அழைக்கப்பெற்றன. மாணவர் கல்வி பயிலும் இடமும் பள்ளியென்று வழங்கிவருகின்றது. மடம் என்று சைன பௌத்தத் தமிழ் நூல்கள் சொல்லவில்லை.

வடமொழியில் :

மடம் ( **मठम्** ) என்ற சொல்லுக்கும் இதே பொருள் அமைந்துள்ளது. அமரத்திலும் மாணவர் வசிக்குமிடம் என்னும் பொருளிலேயே வந்துள்ளது. பட்டோஜி தீட்சிதர் பிள்ளையாகிய தஞோஜி தீட்சிதரும் இதற்குவியாக்கியானம் எழுதும்போது, மாணவர்கள் வசிக்குமிடம் என்றும், பரிவிராசக சமணர்களுடைய இடமென்றும், பௌத்த விகாரமென்றும் குறிப்பிடுகிருர். இறுதியாக மாணவர்கள் வசிக்குமிடம் என்றே முடிவுகட்டுகிருர்.*

* **मठश्छात्रादि निलयः । छात्रोऽन्तेवासी आदि येषां परिव्राजक क्षपणकादीनां तेषां निलयः । बौद्धानां तु विहारोऽस्ती ।......... शिष्याणां गृहस्य मठस्य ॥** 2 காண்டம். புரவர்க்கம்.

இச்சொல் தமிழா? ஆரியமா? என்பது நமது ஆராய்ச்சியின் நோக்கமன்று. ஆனாலும் மென்மை, இளமை முதலிய பண்பை உணர்த்தும் உரிச் சொற்கள், தமிழுக்கே உரியவாதலின் உரியடியாகப் பிறந்த ஆகுபெயர்ச் சொல்லாகிய இதுவும் தமிழ்ச் சொல்லே. வடசொல்லாகக் கொள்ளினும், ஒலி மாற்றமின்றிப் பொருள்மாற்றமில்லை.

**பெரியபுராணத்தில் :**

இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவராகிய சேக்கிழார் பெருமான் ஞானசம்பந்த சுவாமிகள் மதுரைக்கு எழுந்தருளியபோது ஒரு திருமடத்தில் எழுந்தருளியதாகக் குறிப்பிடுகின்றார்கள். அப்பர் சுவாமிகள் திருப்பூந்துருத்திக்கு எழுந்தருளிய போது, அங்கு ஒரு திருமடம் தாபிக்கப்பட்டதாகப் பெரியபுராணம் சொல்லுகின்றது. திருப்புகலூரில் அப்பரும் சம்பந்தரும் எழுந்தருளியிருந்த இடம் முருக நாயனர் திருமடம் என்றும் அப்பெரிய புராணம் குறிக்கின்றது.

**கல்வெட்டுக்களில் :**

கோப்பெருஞ்சிங்கன் காலத்து, கீழைமடச் சந்தானமாக, திருநோக்கழகியான் திருமடஞ் செய் வித்து, அதில் நாயனர் பொற்குடைக்கீழ் எழுந்தரு ளும்போது, அத்தியயனம் பண்ணிச் சேவிக்க

நிபந்தம் ஏற்படுத்தியதாகத் தெரிகிறது. (624, Vol. 7). அவனுடைய 36-வது ஆண்டில், சிதம்பரம் அம்பலநாயகப் பெருந்தெருவில், திருநாவுக்கரசு நாயனார் பெருமடங் கட்டுவித்தான் (43 Vol 8,). குலோத்துங்கன் III காலத்திலே (1178 - 1218) சுவாமிதேவர் என்ற மடாதிபதி செல்வாக்குடையவராக இருந்தார். (M. E. R. 40 of 1906. 393 of 1925. 395 of 1925)

இவனுடைய ஆட்சி 22-வது யாண்டில், குகைகள் அழிக்கப்பட்டன. (471 of 1912) குகை என்பது, முனிவர்கள் வாழ்ந்த மடமாகும். தேவாரச் செல்வன் குகை, திருத்தொண்டத் தொகையான் குகை முதலிய குகைகளும் இருந்தன. இதுவன்றி முதல் இராசராசன் காலத்திலேயே வடநாட்டிலிருந்து, மடபதிகள் வரவழைக்கப்பட்டார்கள். அவர்கள் இருந்தமடம் கோளகி மடம், லக்ஷாத்யாய மடம், பிக்ஷா மடம் முதலியன. இவற்றுள் கோளகி மடத்து அதிபரே, ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியார் என்பது குறிப்பிடத்தக்கது. மடாதிபதிகளுக்கு இருந்த செல்வாக்கு மிகவும் அதிகம். திருக்கடவூர்க் கோயிலில் அரசன் விதித்த ஒழுங்கையும் மாற்றி சுவாமிதேவர் என்ற மடாதிபதி, புதிய ஏற்பாடுகளைப் புகுத்தினார். திருவானைக்காவில் காளாமுகர்களின் கோமடமும், திருஒற்றியூரில் சதுரானனபண்டித மடமும், பந்தணைநல்லூரில் வாரணாசி பிக்ஷா மடமும், திருப்பாச்சூரில் லக்ஷாத்யாய இராவாளர்

கொல்லா மடமும் இவன் காலத்து இருந்தன. (M. E. R. 357 of 1911. 72 of 1931. 111 of 1930).

இன்னும், சீகாழியில் ஞானசம்பந்தர் திருமட மொன்றிருந்ததாக S. I. I. 370 of 18 கல்வெட்டும், ஆச்சாள்புரத்தில் பரசமய கோளரி மடம் இருந்ததாக விக்ரம சோழனுடைய மூன்ருும் யாண்டுக் கல்வெட்டும் கூறுகின்றன (S.I.I. 534 of 1918). உமாபதி சிவாசாரிய சுவாமிகள், சேக்கிழார் புராணத்தில் பெரியபுராணம் அரங்கேற்றிய காலத்து வண்மை மடபதிகளும், துறஞ்சிறந்த மடபதிகளும் புராணங் கேட்க வந்திருந்தார்கள் என்று கூறுகின்ருர்கள். இதில், வண்மை மடபதிகள் என்பார் கர்மாந்த குரவர்களான கிரகஸ்த ஆச்சாரியர்களும், அவர்களது உபதேசாதிகாரம் பெற்ற சீடர்களுமாவார்கள். மற்ருெரு வகையினர், துறவுபூண்டு உலக நன்மையே தம் நன்மையாகக்கொண்டு விளங்கும் உபதேசகர்த்தர்கள்.

முத்திநிச்சயம் இரண்டாவது பாட்டுரையில்,, அசிந்தியவிஸ்வாகமத்திலிருந்து மேற்கோள்காட்டி ஆசிரியர் எழுந்தருளியுள்ள இடம் மடம் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. மடங்களுக்குக் குகை என்ற பெயருண்டென்பதையும் குறிப்பிடுகிறது.*

---

* मठं वृक्षश्च गोत्रञ्च गोचरञ्च तथैव च ॥
आचारं च गुहा चापि वृक्षश्च वनमेव च ।

கடவுளுணர்ச்சி விளைவிக்கின்ற நிலையங்கள் Muthe எனவும், Mutt எனவும் இருவகையின என்றும், முன்னது மதப்பிரசாரம் செய்யக் கடமைப் பட்டதென்றும், பின்னது முனிவர் உறையுமிட மட்டுமே என்றும் ஆங்கில அகராதி ஒன்று பொருள்கூறுகிறது. இச்சொற்களுக்கு இந்தப் பொருளை அது எங்கிருந்து பெற்றதென்பதை அறியக்கூடவில்லை. எங்ஙனமாயினும், எல்லா மொழிகளிலும், மடம் என்பது அறிவுவிளக்கத்தை ஆக்குவனவாக, அருள்வழங்கு நிலையங்களாக, சரித்திர காலத்திலிருந்தே விளங்கிவருகின்றது என்பது வெளிப்படை.

**மடங்களின் வளர்ச்சி:**

நாட்டில் சண்டை சச்சரவில்லாமல் அமைதி நிலவுகிறகாலமே அறிவுவளர்ச்சிக்கேற்ற காலம். மக்கள் பொருளாதார வளர்ச்சிபெற்று, வயிரார உண்டு, அரையார உடுத்து, மகிழ்ந்திருக்கிற நேரத்திலேதான் தத்துவ விசாரம் செய்யத் தலைப்படுவர்.

தத்துவஞான உணர்ச்சி அவரவர்களுடைய அநுபவவாயிலாக, அமையவேண்டுவது. ஏட்டிற் படிக்கிற தத்துவஞானம், எல்லார் வாயையும் அடக்கப் பயன்படுமே யன்றி, தனக்கு இன்பம் பயவாது. அநுபவவாயில், எல்லோருக்கும் ஒரு தன்மையாய் இருக்கமுடியாது. யானைகண்ட குருடர் போல அவரவர்களும் தத்தம் அநுபவத்தையே

வியந்து பாராட்டுவர். அப்போதுதான், பலவேறு கொள்கைகள், நாட்டில் நிலவத்தலைப்படும். அங்ஙனமன்றிக் குருவழிவந்து குறிவழிநின்ற சந்தானாசாரியர்கள், அநுபவத் திறத்தோடு அருளுபதேசம் வழங்கினர். உலகம் உபதேசவழி நிற்கத்தலைப்பட்டது. எங்கும் 'உயிருண்டு, உலகுண்டு, இறையுண்டு, இடையீடாகிய மலமுண்டு, வினை உண்டு; இவற்றுள், இறை, உயிர், மலம் என்ற மூன்றும் நித்தியப் பொருள்கள். உயிர்கள் மலம்வாடி நலமடைவதே முத்தி' என்ற சைவசித்தாந்த மரபு சந்தானாசாரியர்களுடைய உபதேசங்களால் தமிழ்நாட்டில் எங்கும் நன்கு பரவி இருந்தது. சைவத் தமிழரசர்களும், இக்கொள்கையினையே தழுவிவந்தனர். மக்களை நல்வழிப்படுத்த மதநிலையங்கள் பல நிறுவப்பட்டன.

கைலாசமடம், பௌண்ட்ரகமடம், வலாகக மடம், கற்பகிராமமடம், பதரீமடம், தேவதாருவன மடம், கந்தர்ப்பமடம், உத்தராரண்யகம், தக்ஷிணாரண்யகம், கோவிதாரமடம், ஆமந்தகமடம், மத்த மடம், மாயூரமடம், ரணபத்திரமடம், சோழகமடம் ஆகிய பதினைந்து மடங்கள் தொன்றுதொட்டிருந்தன என்று அகோரசிவாசாரிய பத்ததி, மகோத்ஸவவிதி படலத்தில் கூறுகின்றது. அவற்றுள் சோழகம், மாயூரம், தக்ஷிணாரண்யகம் முதலியன தென்னாட்டுமடங்கள். அவற்றில் காசிபர் முதலிய மகரிஷிகளின் சந்ததியார்கள் வசித்தார்கள் என்று காமிகத்தும் கூறப்பெற்றுள்ளது.

மாயூரமடத்தில் இருந்தவர்கள் அகஸ்திய சந்ததியார். ஞானசம்பந்தர் தருமைக்குவந்தகாலத்து, தருமபுரம் அகஸ்தியாச்சிரமமாக இருந்தது. அகஸ்திய சிஷ்யர்கள் ஞானசம்பந்தரிடம் ஆச்சிரமத்தையும், தருமபுரீசுவரர் கோயிலையும் ஒப்புவித்துச் சென்றனர் என்று தருமபுர ஆதீன வரலாறு கூறும்.

இவ்விரு வரலாறுகளையும் இயைத்துப்பார்க்கும்போது தருமபுரம் தொன்றுதொட்டே அதாவது அகஸ்தியர்காலமுதலே திருமடமாக இருந்தது என்பது தெளிவு. ஆதலால் கமலைஞானப்பிரகாசரிடம் அருளுபதேசங்கண்ட ஞானசம்பந்தர், அகஸ்திய சந்ததியாரிடம் மடாதிபத்தியத்தை மேற்கொண்டனர் என்பது துணியப்பெறும். மற்றும் அகஸ்தியர்க்குத் தமிழறிவுறுத்திய முருகப்பெருமானைத் தமது உபாஸனமூர்த்தியாகக்கொண்டு வருகிறார்கள் என்பதும் இக்கருத்தை வலியுறுப்பதாகும்.

மதச்சண்டை:

இவ்வாறு, தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ற சைவ சித்தாந்த மதம், நன்கு பரவத்தொடங்கியபோது, 13-வது நூற்றாண்டில், வடநாட்டிலிருந்து சிலர், தத்தமக்குத் தோன்றிய புதுக்கொள்கையோடு வந்திறங்கினர். முத்தியிலும் மூன்று முதலுண்டு; சிவபெருமானே முதற்கடவுள் என்கின்ற சித்தாந்தக்

கொள்கை தங்கள் கொள்கைக்கிடையூருய் இருத்தலை அறிந்தனர். அறிவுப் போட்டி, காலத்தின் அமைதியைக் கெடுத்தது. கலகம் விளைத்தது. அதனல் இங்கிருந்த புராதன மடங்களிற் சில அழிக்கவும் பெற்றன. திருத்துறைப்பூண்டியில், இருந்த மடம் சொத்துக்களோடு அழிக்கப்பெற்றது என்ற கல்வெட்டு மடங்களுக்குள் * கலகம் விளைந்ததைத் தெற்றெனக் காட்டும்.

**நாட்டின் நிலை:**

இக்காலத்து நாட்டில், தண்டெடுத்தவன் தடிகாரனுனற்போல, சிறிதறிவு விளக்கம் பெற்றவர்களும் ஆசாரியர்களாயினர். அப்போது மெய்கண்டதேவர் என்கிற பேரருட்சூரியன் பிறந்து, உபதேசவாயிலாகவும், நூல் வாயிலாகவும் தமிழர் சமயமாகிய சைவசித்தாந்தத்தை நிலைபெறுவித்தது. இதுவே, சைவமடங்களின் எழுச்சிக் காலமாகும். இக்காலத்து ஏகான்மவாத ஆசிரியர்களும் மிக முயன்று தம் கொள்கையைப் பரப்பத் தலைப்பட்டனர்.

---

* குகைமடங்களில் வாழ்ந்த துறவிகள் தங்கள் ஞான சீலங்களாலும் உபதேசங்களாலும் நாட்டுமக்களால் நன்கு மதிக்கப்பட்டுப் பிரபலம் பெற்றுவந்ததைக் கண்டு பொருத வடதேசத்துக் குருமார்களால் இக்கலகம் ஏற்பட்டதோ என்று ஐயம் நிகழ்கின்றது.

—வி. ரா. ராமச்சந்திர தீக்ஷிதர். III-ம் குலோத், பக். 101, 102.

ஆயினும், அவர்கள் முயற்சி ஓரளவும் பயன் தரவில்லை என்னலாம். அதற்காக, அவர்கள் தம் முயற்சியில் சிறிதும் தளர்ந்தாரல்லர். உபதேசக் கிரமத்தில் வந்த சைவசித்தாந்திகள் சிலர் செவியிலும், இவருடைய உபதேசமொழி ஏறுமலில்லை. அதனுல் சிவசமவாதமும் ஆன்மானந்த வாதமும் போன்ற சில கொள்கைகள் தோன்றத் தலைப்பட்டன. இவ்வாசிரியர்கள் சைவசித்தாந்தத்தின் தனிப்பெருந்தகுதியை அறிந்திருந்தும், சைவசித்தாந்தத்தின் மெய்கண்டசந்தான மரபுவழி வருகின்றவர்களுக்கன்றி, ஏனையோருக்கு ஆசிரியத்துவம் கிடைக்காதே என்கிற கெடுமதி கண்ணை மறைக்க ஆசிரியப்பதவி வேட்கையால், அவரவர்களும் தம் மதத்தைப் பரப்பினர். அதற்காகச் சைவசித்தாந்த ஆசிரியராகிய ஸ்ரீமத் உமாபதிசிவாசாரிய சுவாமிகளிடம் உபதேசம் பெற்ற சீடர்கள் பலரும், சித்தாந்த அரசாட்சியைத் திசைதோறும் சென்று செலுத்தினர். அவ்வாறிருந்தும் சிவசமவாதமும், ஆனந்தான்ம வாதமுமாகிய முரட்டுக் கொள்கைகள் முடிவுறாதிருந்தன.

சிவசமவாதத்தைக்காட்டிலும், ஆனந்தான்ம வாதமே மிகப்பரவத் தொடங்கிற்று. ஆனந்தான்ம வாதத்திற்குக் காளத்தி கண்ணப்பப் பண்டாரமும், அவர் மாணுக்கராகிய சிதம்பரம் குகைமடத்தில் இருந்த காளத்தி கண்கட்டிமறைஞான பண்டாரமும் ஆசிரிய புருஷர்களாக விளங்கிவந்தனர். பசி

நீக்கியான இன்பம்போல மலநீக்கத்திலே ஆன்மா இன்பத்தை அடையுமென்ற இக்கொள்கை நாட்டில் பல இடங்களில் பரவத்தொடங்கியது. காளத்தியிலிருந்து கன்னியாகுமரி வரையில் இக்கொள்கை பரவியிருந்ததென்பதற்கு அநேக கிளை மடங்கள் பரவி இருந்தமையே தக்கசான்றும். திருநெல்வேலியில்கூட ஒரு மடம் இருந்தது. அதில் தமிழாகரர் என்பார் இம்மதத்தைப் பரப்பிவந்தனர். இவ்வாறு புறச்சமய இருளும், ஆன்மானந்தவாத நட்சத்திரங்களும், சிவசமவாதச் சந்திரனும், சமயவிண்ணை மூடிந்தவரையில் அலங்கரித்து விளங்குகின்றநிலையிலே, மெய்கண்ட சந்தானத்தில் பழுதைகட்டி ஞானப்ரகாசரது மாணுக்கருள் ஒருவராகக் கமலை ஞானப்ரகாச இளஞாயிறெழுந்து உலகத்தை அருள்விழிப் பூட்டியது.

விஜயநகரத்தை ஆண்ட கிருஷ்ணதேவராயருக்குப்பின் பட்டமேற்ற சதாசிவதேவமகாராயர் காலத்தில், தஞ்சைப் பிரதிநிதியாய் இருந்தவன் கிருஷ்ணமகாராசய்யன். சகம் 1483-ல் திருவாரூர் ஞானப்ரகாசபண்டாரத்தை, பரதேசிமுத்திரையும் கணக்கெழுத்தும் அடைத்துக்கொள்ளும்படிச் செய்வித்து, அதற்காக அவருக்குச் சர்வமான்யம் அளித்தான் என்று சிக்கல் வெண்ணெய்ப் பெருமான் கோயில் கல்வெட்டொன்று கூறுகிறது.

ஸ்வஸ்திஸ்ரீ அநு ஸ்ரீமந்மஹாமண்டலெஸ்வரந்து ஸதாசிவ தெவ மஹாராயர் பிருதிவிராஜ்யம் பண்ணியருளா நின்ற சகாப்தம்

சூசாஅயஉ-ன் மேல் செல்லானின்ற இரவுத்திரி வருஷம் ஆனி (2)மீ ச-வ அளி[ய]ராமராசைய்யகுமாரர் கிருஷ்ணமரா சையன் உத்தாரப்படிக்கு அவ[ஸ]ரம் விருபாக்ஷ நாயக்கர் சிக்கல் வடகுடி ஓடாச்சேரி முதலான தேவஸ்தானங்களுக்கு (3) திருவா ரூர்ஞானப்பிரகாச பண்டாரத்தைப் பரதேசிமுத்திரையும் கணக்கு எழுத்து மடைத்துக்கொள்ளும்படியும்[;] பரதேசி முத்திரைக்கு நாள் க-க்கு ஒட்டொடுக்கு பிரசாதம் சஉயும் மாசம் க-க்கு பு-உ கணக்குப்பிள்ளைக்கு, அறையிலக்கைப்படி சுவாமியஸ்வதந்தரமும் பற்றிக்கொண்டு கொற்றிலக்கை (5) கடைக்கூட்டிலக்கை நீங்க லாக ஸர்வமாங்யமாக கட்டளையிட்டபடியாலே சந்திராதித்தவரை யும் பூசை திருப்பணி நன்றாக விசாரித்துக்கொண்டு வரக்கடவா ராக. (6) இந்த தர்மத்துக்கு யாதொருத்தர் அகிதம் பண்ணினால் கங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலும் தன்னுடையமாதாவையும் பிதாவையும் (7) கொன்ற தோஷத் திலேபோகக்கடவாராகவும். உ.'

இவர் சகம் 1483-ல் கி. பி. 1561-ல் இருந்தவராவர். (104 of 1911). இவர்செய்த திருமழபாடி புராணத்து, புராணம் பாடிய காலம் சகம் 1488 என்று குறிப் பிடப்பட்டுள்ளது. இவற்றால் இவர்காலம் கி. பி. 1566க்குமுன் என்பது தெளிவு. அக்காலத்திலேயே குருஞானசம்பந்தரும், நல்வாயில் மாசிலாமணிச் சம்பந்தரும், ஒற்றியூர் ஞானப்பிரகாசரும், நிரம்ப அழகிய தேசிகரும் இவரிடம் கல்வியும் ஞானமும் பெற்றனர்.

**தருமையாதீனம்:**

குருஞானசம்பந்தர் 'ஸ்ரீவில்லிபுத்தூர் என்று ஒருக்கால் சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்'

என்று அடியாரும் புகழ்ந்து போற்றும் ஸ்ரீ வில்லி புத்தூரிலே அவதரித்து, செந்தமிழ்ச் சொக்கர் அருள்வழி நின்று, கமலை ஞானப்பிரகாசரை வந்தடைந்து உபதேசம்கேட்டவர்கள். கமலை ஞானப் பிரகாசரால் தருமைக்கு அனுப்பப்பட்டவர்கள். தருமபுரத்து அகஸ்தியாச்சிரமத்து வசித்திருந்த முனிபுங்கவர்கள் ஆசிரம பரிபாலனத்தையும், தருமபுரீசுவரர் ஆலயநிர்வாகத்தையும் ஒப்புவித்து, சிவப்பணிக்கு ஆமளவு இரசவாதவித்தையையும் கற்பித்துச் சென்றனர். அதனல் இக் குருமூர்த்திகளின் நாளிலேயே அருளும் பொருளும் மிகுதியாகப் பெருகி வளர்வதாயிற்று.


பின், ஆனந்தபரவசர் முதலிய 24 மகாசந்நிதானங்கள் தருமை ஆதீனத்தைப் பரிபாலித்து வந்தார்கள். அவர்களில், ஆனந்தபரவசர் அபிஷேகம் பண்ணுவிக்கப்பெற்ற அப்போதே சிவாநுபவங் கைகூடப்பெற்ருர். ஆதலின் அவர்கள் பட்டமேற்ற காலம் சுமார் கி. பி. 1570 ஆகலாம். பின்னர் உள்ள குருமூர்த்திகளுக்குச் சராசரி இருபத்திரண்டு யாண்டுகள் ஆட்சிக்காலமாகக் கொண்டால் 10-வது பட்டமாகிய சிவஞான தேசிகர் காசியாத்திரைக்குச் செல்ல விரும்பியகாலம் கி. பி. 1740 என்ற ஆதீனக் குறிப்போடு ஒத்துப்போகும். ஆக முதல் குருமூர்த்தியிலிருந்து பத்தாவது குருமூர்த்தி வரையில் உள்ள இடைப்பட்டகாலம் கி. பி. 1566 முதல் 1770 வரை உள்ள ஆண்டுகளாகும்.

இப் பத்துக் குருமூர்த்திகள் காலத்திலும், ஆதீனத்தில் ஞானவரண விளக்கவுரை, முத்தி நிச்சயப் பேருரை, பண்டார சாத்திரங்கள், தோத்திரங்கள் முதலான எல்லா நூல்களும் எழுந்தன.


6வது குருமூர்த்திகளாகிய திருஞானசம்பந்த தேசிகரிடத்து அடைக்கலம் புகுந்த தமிழாகர முனிவரால் திருநெல்வேலிச் சீமையில் நிலபுலன்களும், மடாலயங்களும் உரிமையாக்கப்பெற்றன. கந்தபுராணச் சுருக்கம் பாடிய சம்பந்த சரணாலய சுவாமிகள் மைசூர் மகாராசாவிடம் பெற்ற பரிசில்களும், விருதுகளும் ஆதீனத்திற்கு அளிக்கப் பெற்றன.

ஞானசம்பந்தர் ஆலயத்தை இடித்து, சைவ மடத்திற்குத் தீங்குசெய்த குற்றத்திற்குத் தண்டமாக 7வது குருமூர்த்தி திருவம்பல தேசிகரிடம் அரசனால் அர்த்தயாமபூசைக்காகச் சில நிலன்கள் சேர்ப்பிக்கப்பெற்றன.

10-வது குருமூர்த்திகள் சிவஞான தேசிகர் அவர்களால் மடம், ஆலயம், தீர்த்தம் முதலியவைகள் பழுதுபார்க்கப்பட்டன. சொக்கநாதப்பெருமான் பூஞ்சிமடமும், சித்தர்கட்டும், புள்ளிருக்குவேளூரில் அம்மன் சந்நிதி, தட்டம்சுற்றி மண்டபம், தீர்த்தவாரி மண்டபம் முதலியவைகளும் கருங்கற் பணி செய்விக்கப்பெற்றன. அவற்றை அறிவிக்கும் கல்வெட்டுக்கள் வருமாறு:-



ஞானசம்பந்தப் பதிப்பகம்



ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூஜைமடம்

"கலியுக வருஷம் 4842ல் சகாப்தம் 1663க்கு மேற் செல்லாநின்ற ரௌத்திரி வருஷம் சித்திரைமீ 3உ ஒன்பதாங் குருமூர்த்தமாக அவதரித்த திருநாவுக்கரசு தேசிக னருள்பெற்ற சிவஞானதேசிக சம்பந்த னருட் செங்கோல் செலுத்தும் நாளையிற் சொக்கநாதசுவாமி பூஜைமடமுந் நம்பிரான்கள் பூஜைமடமுந் தொட்டிக் கட்டுஞ் சித்திரக்கட்டுங் கருங்கல் திருப்பணியாகக் கட்டி நிறைவேறினது"[1]

"ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1689 கலியுக ஞூ 4868 இதன்மேற் செல்லாநின்ற சருவசித்துஞூ ஆவணிமீ போஸ்லே வங்கிசத்தார்களான துளசாமகா ராசா சாயபு அவர்கள் ராச்சிய பரிபாலனம் பண்ணுகிற நாளையில் ஸ்ரீ மல்லாசிகாடேராயரவர்களுக்கு சீகாழிச் சீமை முகாசு நடக்கையில் தருமபுரம் பண்டாரசன்னதி ஸ்ரீ சிவஞானதேசிக சம்பந்தன் அநுக்கிரகத்தைப் பெற்ற முத்துக்குமரசாமித் தம்பிரான் அவர்கள் வயித்தியநாத சுவாமி கட்டளை அதிகாரம் பண்ணுகிற காலத்தில் இரண்டாம் பிராகாரம நாலுபுறத்து மதிலும் திரு மாளிகைப் பத்தியும் அம்மன் சன்னதி தட்டி சுற்றி மண்டபமும் சாங்கமாகக் கருங்கல் திருப்பணியாய்க் கட்டி நிறைவேற்றி அந்தத்திருமாளிகைப்பத்தியின் மேலே நாலுபுறமும் வவ்வால் நெற்றி கட்டி நிறைவேறினது".[2]

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகனசகாப்தம்1692 கலியுகஞூ 4871-க்கு இதன்மேற் செல்லாநின்ற விக்றுதிஞூ

---

[1] இக்கல்வெட்டு ஆதீன மடாலயத்திலுள்ளது.

[2] புள்ளிருக்குவேளூர் அம்மன் சந்நிதியிலுள்ள தீர்த்தப்படித் துறையிலுள்ளது.

2

வைகாசிமீ போசலே வங்கிசத்தார்களான துளசாமகா ராசாசாயபு அவர்கள் ராஜ்யபரிபாலனம் பண்ணுகிற நாளையில் ஸ்ரீ மல்லாசி காடேராயரவர்க்குச் சீகாழிச்சீமை முகாசு நடக்கையில் தருமபுரம் பண்டாரசன்னதி ஸ்ரீ சிவஞானதேசிக சம்பந்தன் அநுக்கிரகத்தைப் பெற்ற முத்துக்குமரசுவாமித் தம்பிரான் அவர்கள் வயித்தியநாத சுவாமி கட்டளை அதிகாரம் பண்ணுகிற காலத்தில் தீர்த்தக்கரை நாற்சாரியும் மண்டபமும் சாங்கமாகக் கருங்கல் திருப்பணியாய்க் கட்டி. நிறைவேறினது.''*

11-வது குருமூர்த்தி சச்சிதானந்த தேசிகர் காலத்தில் அரசன் ஒருவனுல் மடாலயத்தில் சாதி வேற்றுமை யின்றி எல்லார்க்கும் இரக்கங்காட்டி இனிய அமுதளிக்கும் தன்மை எடுத்து விளக்கப் பட்டுள்ளது.

13-வது குருமூர்த்திகள் ஞானசம்பந்த தேசிகர் காலத்தில் 1812-ல் இந்தியாவிற்கு வியாபாரத்திற் காக வந்த கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவி லுள்ள எல்லா ஆலயங்களையும் தாமே மேற் கொண்டு நடத்தத் தலைப்பட்டார்கள். ஆனுல், அவர்களால் சரிவர நடத்த முடியவில்லை. அவர்க ளுடைய குருக்களாகிய பாதிரிமார்கள் கூலிக்காக வேனும் இந்துசமயத்தைக் கம்பெனியார் பாதுகாப் பதுகண்டு சகிக்கவில்லை.

---

* புள்ளிருக்கு வேளூர். அம்மன் சந்நிதியிலுள்ள தீர்த்தப்படித் துறையிலுள்ளது.

கிறித்தவமதக் கட்டுப்பாட்டிற்கு நீங்கள் செய்வது தவறு என்று அவர்களைக் கண்டிக்கத் தலைப்பட்டார்கள். அல்லாமலும் கோயில் நிர்வாகமென்பது வெறும் பணவரவு செலவைமட்டும் பொறுத்ததல்ல; மந்திரம், தந்திரம், சடங்குகள், படிப்பு, கலை இவற்றின் பாதுகாப்பின் நடுவிலே சிறிது நிர்வாகமும் பொருந்தியது. கி. பி. 1812-ல் இருந்து 1841 வரை 29 யாண்டுகள் வைத்து நடத்திப்பார்த்தார்கள். கோயிலுக்குக் கோயில் சடங்குமுறையில் வேறுபாடு; ஒரே கோயிலிலும் காலத்துக்குக்காலம் வேறுபாடு; இவற்றைக்கண்டு இந்த நிர்வாகம் வேண்டாமென்று விடத்தலைப்பட்டனர்.

இவ்வாதீனத்திலிருந்து பெற்ற கோயில்களை 14-வது பட்டத்திருந்த கந்தப்பதேசிகர் காலத்திலே ஒப்பித்துவிட்டார்கள். திருச்சத்திமுற்றம் போன்ற பல கோயில்கள் கைம்மாறிவரும்போது நழுவிவிட்டன. அதிகாரத்திற் பற்றில்லாது அரன்பணி ஒன்றிலே பற்றுக்கொண்ட கந்தப்ப தேசிகர் அவர்கள், கோயில்களைச்சரிவரநிர்வகித்துவந்தனர். சற்றேறக்குறைய கி. பி. 1851-ல் பட்டமேற்ற பதினைந்தாவது மாசிலாமணி தேசிகர் அவர்கள் மணக்குடி, தருமபுரம் கோயில்களைத் திருப்பணி செய்வித்துக், கும்பாபிஷேகம் நடத்துவித்தார்கள்.

"மணக்குடி கோவில் கலியுக வருஷம் 4654 சகாப்தம் 1775 மேற்செல்லாநின்ற பிரமாதீச வருஷம் வைகாசிமீ 23உ தருமபுரம் ஆதீனம் கந்தப்பதேசிகன்

அருளைப்பெற்ற மாசிலாமணித்தேசிகன் நாளையில் சுவாமி கோவில் கட்டி நிறைவேறினது. உ நிடூழி உ."*

16ம் பட்டத்திலிருந்த சச்சிதானந்த தேசிகர் அவர்கள், மிகவும் பழுத்த சைவ சித்தாந்தி. அதனல், வெள்ளப்பள்ளம் சாஸ்திரிகளுக்கு ஞான உபதேசம் செய்து சைவசந்நியாசமும் அளித்தார்கள். சாஸ்திரிகளால் கொடுக்கப்பட்ட குருகாணிக்கையே வெள்ளப்பள்ளமென்னுங் கிராமம். மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தேசிகரிடத்து அன்புபூண்டவர்கள். சச்சிதானந்த மாலை பிள்ளையவர்களால் பாடப்பட்டது.

17ம் பட்டம் முதல் 22ம் பட்டம் முடிய உள்ள காலம் விலைவாசிச் சிக்கல்களும், வழக்குகளும் மிகுந்தகாலம். அதனல் வழக்கமான நிர்வாகம் ஒழுங்காக நடைபெற்றாலும், வளர்ச்சிக்கு வழி இல்லாது போயிற்று. இத்தனை கஷ்டங்களுக்கிடையிலும் 22வது பட்டத்து மாணிக்கவாசக தேசிகர் அவர்கள் 1918 - 20ல் முளைப்பாக்கம், மணக்குடி திருநின்றியூர் முதலிய கிராமங்களில் நிலங்களும் நெய்தவாசல் உப்பளமும் மடத்திற்காக வாங்கிச் சேர்த்தார்கள். திருபுவனம், திருப்பனந்தாள், திருக்கடவூர் ஆகியதேவஸ்தானங்களில் திருப்பணி செய்வித்துக் கும்பாபிஷேகமும் நடத்துவித்தார்கள்.

---

*இக்கல்வெட்டு மணக்குடி ஆலயத்திலுள்ளது.

23-வது பட்டத்துச் சுப்ரமண்ய தேசிகரவர்கள் கி. பி. 1923ல் பட்டமேற்று 1933வரை அருளாட்சி செலுத்தினர்கள். இவர்களால் தேவஸ்தான நிர்வாகம் ஒழுங்குபடுத்தப் பெற்றது. கலைவளர்ச்சி கவனிக்கப்பட்டது. சமயவளர்ச்சி தக்கவழிகளிலெல்லாம் இயற்றப்பட்டன.

கி. பி. 1933ல் 24வது பட்டமேற்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிகர் அவர்கள் 12 ஆண்டுகள் வரை அருளாட்சி செலுத்தினர்கள். அவர்களால் ஆதீன மடாலயத்தில் பெரியபுத்தகசாலை ஒன்று வைக்கப்பட்டது. பதிப்பகம் ஒன்று நிறுவப்பெற்றது. ஞானநூல்கள் பல பதிப்பித்து வழங்கப்பெற்றன. மாகாநாடுகள் பல கூட்டுவிக்கப்பெற்றன. ஞானசம்பந்த மென்னும் மாதத்தாள் ஒன்று தொடங்கப் பெற்றது. ஆதீனக் கோயில்களும் ஆதீன மடாலயமும் கண்ணைக்கவரும் வகையில் அழகாகத் திருப்பணி செய்விக்கப் பெற்றன.

1945ல் ஸ்ரீலஸ்ரீ சுப்ரமண்யதேசிகர் அவர்கள் 25ம் குருமூர்த்திகளாகஎழுந்தருளினர்கள். இவர்கள் ஆட்சி நடந்துவருகிறது. கல்லூரிகள் வைத்ததும் கோயில்களில் நிறுவியபணிகளும் ஆகிய பலவற்றையும் சைவத்தமிழுலகம் நன்கறியும்.

**மடத்தைப்பற்றிய செப்புப்பட்டய சாசனம்:**

சிதம்பரத்தில் தருமபுர ஆதீன நமசிவாயத் தம்பிரானவர்கள் கட்டளைவிசாரணையாக இருந்த

பொழுது, சிதம்பரம் தெற்கு வாசலில் அறுபத்து மூவர் குருபூஜை அன்னதான மடத்தில் அறுபத்து மூவர் சமயாசாரியர் சந்தானுசாரியரவர்கள் குரு பூஜை தினத்தில் மாகேசுரபூஜை நடத்திவர வேளாளரனைவருமாகச் சேர்ந்து நிலமளித்திருக்கிறுர்கள். அதனை அறிவிக்கும் செப்புப்பட்டயம்:—

"சுபமஸ்த்து சாலிவாகன சகாப்தம் ளஎஉச மேல் செல்லாநின்ற ருத்ரோத்காரி வருஷம் மாசிமீ கஙஉ குருவாரம் பூசநக்ஷத்திரமும் கூடிய நாளில் பூலோக கைலாசமான சிதமபர க்ஷேத்ரத்தில் ஸ்ரீ சபாநாதர் ஆனந்த நிருத்தம் செய்யாநின்ற சபாசன்னிதானத்தில் தெற்கு வாசலில் அறுபத்துமூவர் குருபூஜை அன்னதான மடத்தில் தருமபுர ஆதீன நமசிவாயத் தம்பிரானவர்களிடத்தில் அறுபத்து மூன்று நாயன்மார் மாணிக்கவாசக சுவாமி முதலானசமயாசாரிய சந்தானுசாரியர்இவர்கள் தினத்தில் அபிஷேக நெயிவேத்தியம் குருபூஜை அன்னதானம் நடந்து வருகிறதுக்காக வேளாளரனைவரும் அணக்குடி கண்ணங்கொடை பொன்னம்பலப் பிள்ளை அவர்கள் முகாந்திரம் பட்டயம் எழுதிக் கொடுத்தபடி அணக்குடி கருப்பூர் பந்தணைநல்லூர் நெய்வாசல் திருச்சிற்றம்பலம் விளத்தொட்டி சோதிவிளாகம் காரிகுடி அத்திப்பாக்கம் திருமாந்துறை திருப்பனந்தாள் அந்தமங்கலம் நந்திவனம் திருநாகேசுரம் கும்பகோணம் திருசிரபுரம் விசயமங்கை திருப்பிரம்பியம் ஊருடையானத்தம் திரிலோக்கி கீழக் காட்டூர் திருவாளபுத்தூர் மண்ணிப்படிக்கரை சீயாழி தயங்கம்பாடி பிறையாறு குத்தாலம் வழூவூர் சித்தக்காடு மாங்குடி கீழமாந்தூர் இந்தக் கிராமங்களிலிருக்கிற பேரனவரும் இந்தப்பட்டயத்தில் அவரவர்கள் மனப்பூர்வமாக சமசித்த கையெழுத்து. எழுதினபடிக்கு வருஷா

வருஷம் மாசி பங்குனி மாதம் கொடுத்து வருவோமாகவும். அணக்குடி முத்திரமரக்கால். இந்தப்படி ராமசாமியாப் பிள்ளை கையெழுத்து. ஷியூர் பொன்னம்பலப் பிள்ளை கையெழுத்து. கருப்பூர் அழகப்பிள்ளை. அந்தமங்கலம் மு. சாம்பசிவப் பிள்ளை. முத்துசிதம்பரம் பிள்ளை. திருநாகீசுரம் கனகசபாபதிப் பிள்ளை. நெய்வாசல் பொன்னம்பலப் பிள்ளை. வரதப்பிள்ளை. விளத்தொட்டி சிதம்பரம் பிள்ளை. பாப்பாகுடி பொதுவிடைகளத்துக்குக் கீழ்புறம் குழி கஉ௰௫ இதுக்கு சட்டயப்பிள்ளை ஆபத்தாரணப் பிள்ளை. உப்பிலாமணியா பிள்ளை. சட்டயப் பிள்ளை இந்த நாலுபேரும் கையெழுத்து. சஞசயத்துறை ஊர் பொதுவிடை குழி க௰உ௫ சபாபதி நெயிவேத்யம் தங்கம்மை அரிசி படி $1\frac{1}{2}$. தீட்சிதருக்கு அரிசி படி க. சொந்த மடத்துக்கு க படி அரிசி சாதம். அரகேசரி குடியானவர்கள் படையாச்சிமார்களனவரும் அளனெஞ்சிவனம் பொன்னம்பலப்பிள்ளை உ மாவே 200 குழி. குத்தாலம் தெய்வராயபிள்ளை ௫௰௰. திரிசிரபுரம் அருணசலப் பிள்ளை புஞ்சை வேலி உ. கீழமாந்துறை வரந்தருபெருமாபிள்ளை உ வேலி க௰௫ குழி. ருத்ரவாரியா பிள்ளை குழி க௰௰. ஒளக்குடி தியாகராசப்பிள்ளை ௩௰௰. சோமனுபுரம் பொன்னம்பலப்பிள்ளை திருப்பிரம்பியம் சங்கரமூர்த்தியா பிள்ளை சாமினுத பிள்ளை சொக்கநாத பிள்ளை விசையமங்கை மருதப்பிள்ளை ஊருடையானத்தம் குமரசாமியா பிள்ளை கீழக்காட்டூர் சட்டையப்பப் பிள்ளை அத்திப்பாக்கம் சாமிநாதப் பிள்ளை பந்தணநல்லூர் வையாபுரியா பிள்ளை வைத்தினுத பிள்ளை முத்தியபிள்ளை கருப்பப் பிள்ளை சுப்பிரமணிய பிள்ளை நாகப் பிள்ளை திருமேனியார் சோலை சாமினுத பிள்ளை கும்பகோணம் மாதுளம் பேட்டை சுப்பப் பிள்ளை கடலங்குடி வைத்திலிங்கப் பிள்ளை வழுவூர் பொதுவிடை வளையாம்பக்கத்

துக்கு மேல்பக்கம் உத்தாடியம்பட்டணத்துக்கு கீழ் பக்கம் நிலம் கஅஉ குழி ஊரானவர் சொற்படி கிருமம் சாமியாப்பிள்ளை கையெழுத்து. செங்குடி முத்தியபிள்ளை புறையாறு அருணசலம் பிள்ளை வெட்டுமுளை தயங்கம் பாடி கித்திய பிள்ளை வெள்ளிப் பூணேந்திய பிள்ளை மன்னர் கோவில் சீமையார் சிறகிழந்தநல்லூர் அங்க ணுடைய சுப்பருய பிள்ளை எருக்குடை அருணசலம் பிள்ளை ஞானமாநகரமாகிய சிதம்பர நகர்க்கண்ணுயினும் பக்கலாயினும் அன்னதானம் செய்பவர் சிவவரம் பெறுதல் சத்தியம். சிதம்பரபுராணம் துற்றெரிசனச் சருக்கம். ஆயிரம்பெயர்க்கறுசுவை யடிசிலங்களித்த மேய செல்வர் தம் பயனினும் பிடியுடை ஒருவன ஏயவாருெருபிடி அவிழ் தரும்பயனெய்தும் தூய தெப்பதியினும் உளதிதுவென்பர் தூயோர். பரங்கிப்பேட்டை ஆடியபாதச் செட்டியார் முத்தியபிள்ளை சுந்தரவாத்தியார் சுப்பராய செட்டியார் இந்தப்பட்டயம் பண்ணின நன்மைக்கு வைத்திநாதபிள்ளை னெட்டெழுத்து.''

இத்தகைய தருமை ஆதீனத்தின் மேற்பார்வையில் இருந்துவருங்கோயில்கள் இருபத்தேழு. இருபத்தேழு நட்சத்திரங்களினிடையே விண்ணிடை விளங்கும்நிறைமதிபோல, இருபத்தேழு திருக்கோயில்களின் நடுவே மடாலயம் விளங்கிவருகிறது.

அக்கோயில்களைப்பற்றிய கல்வெட்டுக்குறிப்புக்களும், செப்புப்பட்டயக் குறிப்புக்களும், வரலாற்றுக் குறிப்புக்களுமாகிய பிறவும் தனித்தனியே சுருக்கமாகத் தரப்படுகின்றன.

# ஆச்சாள்புரம்

# ஆச்சாள்புரம்

இத்தலம் தஞ்சை ஜில்லாவில் சீகாழி தாலூகாவில் கொள்ளிடமென்னும் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே மூன்றுகல் தொலைவிலுள்ளது; மிகத் தொன்மையானது, இதற்குச் சிவலோகபுரம், நல்லூர், திருமணவை, முத்திபுரம் முதலிய மறு பெயர்கள் புராணங்களில் காணப்படுகின்றன.

தேவாரத்தில் சம்பந்த சுவாமிகள், 'நல்லூர்ப் பெருமணமேய நம்பானே' என்று குறிப்பிடுவதால் நல்லூர் என்ற பெயரே நாயன்மார் வழக்கிலிருந்த தென்பது வெளிப்படை. பெருமண மென்பது திருக்கோயிலின் பெயராதல் வேண்டும். ஆன்மாக்கள் முத்திநங்கையை மணக்கும் மணமே பெருமண மாதலின் அனைவர்க்கும் முத்திவழங்கும் திருக்கோயிலும் பெருமணம் எனப்பட்டது போலும். அன்றி, ஞானசம்பந்தப் பெருமானுக்குப் பெருமணம் நிகழ்ந்த இடமாதலின் பெருமணநல்லூர் என வழங்கப்பெற்றதெனின், ஞானசம்பந்தப் பெருமானே தம்தேவாரத்தில் தம் நிகழ்ச்சியான் வந்த பெயரைக் குறிப்பிடுவார்களோ என்பது ஐயத்திற்கிடமாகும். ஆதலால் இப்பெயர் மிகப் பழமையானது என்பது தெளிவு.

ஆச்சாள்புரம் என்பது திருவெண்ணீற்றுமை, வெண்ணீறளித்து, சம்பந்தர் திருமணத்துக்கு வந்திருந்த எல்லாரையும் சிவச்சோதியுட்கலக்கச்செய்த

காரணத்தான் வந்தபெயர். ஆச்சாள், ஆயாள் என்பன இறைவியின் பெயர்கள்.

### தல அமைப்பு :

தலம் மிகச் சிறிய ஊர். கொள்ளிடத் தென் கரையில் இருக்கிறது. தண்ணீர் வசதி மிகுதியும் உடையது. வசிட்டர் முதலிய முனிவர்களுக்குச் சிவலோகக்காட்சி யளித்தது. மாந்தாதாமன்னனல் முதன் முதல் திருப்பணி செய்விக்கப்பெற்றது. கோயில் ஊருக்கு நடுவே இருக்கின்றது. இருபிரா காரங்களை உடையது. நூற்றுக்கால் மண்டபம் ஏனைய அர்த்தமண்டப மகாமண்டபங்கள் ஆகிய இவைகளைப்பெற்று விளங்குவது.

### மூர்த்திகள் :

இறைவன் திருநாமம் சிவலோகத்தியாகர். இறைவி திருவெண்ணிற்றுமை. தலவிநாயகர் மாவடிப்பிள்ளை யார். பூகைலாசநாதர், நாகநாதர், சுந்தரேசுவரர், விஸ்வநாதர், மாதிருபூதேஸ்வரர் இவர்கள் திருவுரு வங்களும் வடக்குத் திருமாளிகைப் பத்தியில் விளங்குகின்றன. நூற்றுக்கால் மண்டபத்தில், திருஞானசம்பந்தப்பெருமான் ஸ்தோத்திர பூரணி யம்மையோடு தனிக் கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கிறூர். சம்பந்தர் அம்மையாரை மணந்தபின் இறைவன்மீது பாடிய தோத்திரப் பாடல்கள் முடி

வுற்றமையின், ஸ்தோத்திரபூரணி எனப் பெயர் பெற்றார். கல்வெட்டுக்களில் சொக்கியார் என்று வழங்கப்படுகிறது. சொக்கு = பேரழகு.

புராண வரலாறு :

வசிட்டர், பராசரர், பிருகு, ஜமதக்னி முதலிய முனிவர்கள் பதினாயிரம் ஆண்டு செய்த கடுந்தவத்திற்குக் கருணைகூர்ந்த இறைவன் சிவலோகங் காட்டி யருளினார். கயிலையில் குறட்சிறு பூதங்கள் பாடியாட பதினெண்கணத்துத்தேவர்களும்வழிபட இளங்குமரனோடு அம்மையும்தானுமாக எழுந்தருளி யிருக்கும் காட்சியினைக் காட்டினர். முருகனுக்கு, சிவபெருமான் சிவலோகத்தையளிப்பதாகிய தலம் இதுவே எனத் திருவுளம்பாலித்தனர்.

'விஷ்ணு இத்தலத்தில்வந்து வழிபட்டு அவுணர்களை வெல்லும் வரம்பெற்றார்; பிரமன் படைத்தற்றொழில் கைவரப்பெற்றான்; இந்திரன் போகம் பெற்றான்; சந்திரன் அபயம் பெற்றான்; நீயும்சென்று வழிபடுக' என்ற வசிட்டர் வார்த்தையைச் சிரமேற்கொண்ட மாந்தாதா மன்னன் வழிபட்டு எண்ணிய எண்ணியபடி எய்தினான்.

காகமுனிவர் இறைவனுணையின் வண்ணம் இத்தலத்திற்குவந்து தலத்தைக் காலாலேயும் மிதித்தற்கு அஞ்சித் தலையாலேயே நடந்து திருக்கோயிலை யடைந்தார். வணங்கினார். இறைவனுணையின் வண்ணம் நிருதிதிசையிற் சிவயோகத்தமர்ந்

தார். சிவவுரு தோன்றக்கண்டார். வழிபட்டார். முனிவர் ஆணைப்படி சோழ அரசன் திருக்கோயில் கட்டினன். நிபந்தங்கள் அளித்தான். திருஞான சம்பந்தர் திருமணக்காலம்வரை முனிவர் சிவபூசையும் தவமுமியற்றியிருந்து திருமணத்தில் தாமும் முத்தியெய்தினர்.

கங்கை தவஞ்செய்து இறைவன் அருளின் வண்ணம் இங்குள்ள வாவியில் எழுந்தாள். வலம் வந்தாள். வழிபட்டாள். சிவலோகத் தியாகரைப் பிரியமுடியாது வருந்தினள். பெருமான் 'கார்த்திகை ஞாயிறுதோறும் வந்து வழிபட்டுச் செல்க' என்று விடையளித்தார். அருள்பெற்றுக் காசியடைந்தாள்.

உலகமுய்யத் தமிழ்வாழ, சைவந்தழைக்க, அவதரித்த சீகாழிப்பிள்ளையார், தமிழ்நாடுமுழுவதும் புறச்சமய இருள்கடிந்து, புண்ணியத் திருநீற்றொளி பரப்பி, இத்தலத்துக் கெழுந்தருளி மணத்திருக் கோலங்கொண்டு, மணமக்களுடன் சிவச்சோதியில் எல்லாரோடும் கலந்தருளினர். சிலர் தீச்சுடும் என்று அஞ்சியோட, நந்தியம்பெருமான் வளைத்து 'அருட் சோதி சுடாது. குளிர்ந்திருக்கும்' என்று அறிவித்துப்புகச்செய்தனர். 'காதலாகி' என்ற பதிகம் தோத்திரபூர்ணமாகத் தோன்றிற்று.

**தீர்த்தங்கள் :**

பஞ்சாக்கர தீர்த்தம், பிருகு தீர்த்தம், அசுவ தீர்த்தம், வசிஷ்ட தீர்த்தம், அத்திரி தீர்த்தம்,

சமதக்னி தீர்த்தம், வியாச தீர்த்தம், மிருகண்டு தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் உள்ளன.

**பஞ்சாக்கர தீர்த்தம்:—** இறைவனுடைய திருக்கரத்துச் சூலப்படையால் உண்டாக்கப் பெற்றது. திருச்சடையில் உள்ள கங்கை நீர் கலந்தது. திருவைந்தெழுத்து தாபிக்கப் பெற்றது. இது எல்லாத் தீர்த்தங்களிலும் சிறந்தது.

**தலவிருக்ஷம்:**

தலவிநாயகர் மாவடி விநாயகராக இருப்பதால் தலவிருட்சமும் மாமரமாகும்.

**சிற்பங்கள்:**

சிற்பங்கள் மிகுதியாக இல்லை. ஆனலும் இருப்பனவாகிய சிலவும் பல்லவர்கள் காலத்தை நினைவூட்டுவனவாக உள்ளன.

**திருவிழா:**

இத்தலத்தில் வைகாசியில் பிரமோற்சவம் நடைபெறும். வைகாசி மூலநாளில் திருஞான சம்பந்தப்பெருமான் திருமணமும், முத்தி எய்திய காட்சியும் திருவிழாவாக நடத்தப்படுகின்றன.

**அன்பர்கள்:**


திருஞானசம்பந்தரோடு முத்தி அடைந்த அன்பர்கள் திருநீலகண்ட யாழ்ப்பாணரும், முருக நாயனரும், திருநீல நக்கரும் ஆவர்.

**நூல்கள்:**

இந்தத் தலத்தைப்பற்றிச் சம்பந்தசுவாமிகள் தேவாரம் ஒன்றே உள்ளது. ஆச்சாள்புரத் தல புராணமும், திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழும் ஆக இரண்டு இலக்கியங்கள் உள்ளன. புராணம் பாடியவர் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர். பிள்ளைத்தமிழ் பாடியவர் மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை.

**வரலாற்றுத் தொடர்புள்ள இடங்கள்:**

கோயிலுக்கு மூவர் பேராலும் கிராமங்கள் உள்ளன. ஆலால சுந்தரவட்டத்தில் மாணிக்க வாசல் என்னும் மாணிக்கவாசகநல்லூரும், ஆச்சாள்புர வட்டத்தில் திருஞானசம்பந்தம் என்னுங் கிராமமும், நல்லநாயகபுரம் வட்டத்தில் தண்டேச நல்லூர் என்னுங் கிராமமும் இருக்கின்றன. மாணிக்கவாசல் என்பது அபயமாணிக்கச்சேரி என்று கல்வெட்டில் வழங்கப்படுகிறது (531 of 18). தேவகன்மியாகிய ஆதிசண்டேசுரருக்குத் தேவ தானங்களை அளிப்பது பண்டைய வழக்கமாதலின் தண்டேசநல்லூர் எனப் பெயர்பெற்றது.



ஸ்ரீ திருவெண்ணீற்றுமை அம்மை சந்நிதி

**சுற்றியுள்ள தலங்கள்:**

மகேந்திரப்பள்ளியும், நல்லூர் கயிலாசநாதர் கோயிலும், யோகீசர் கோயிலும் உள்ளன.

## கல்வெட்டுக்கள்

இத்தலத்தைப்பற்றி 19 கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் சோழர்கள்கல்வெட்டுப் பதினைந்து. பாண்டியர் கல்வெட்டு மூன்று. தஞ்சைமகாராஷ்டிர மன்னர் கல்வெட்டு ஒன்று. இவற்றால், திருக்கோயிலைப்பற்றிய குறிப்புக்கள் சில காணப்படுகின்றன. இவ்வூர், வடகரை இராசாதிராசவளநாட்டு வெண்ணியூர் நாட்டு பஞ்சவன்மாதேவியான குலோத்துங்கசோழ சதுர்வேதிமங்கலத்தைச் சார்ந்தது (522-527 of 18). இறைவன் திருப்பெருமணமுடைய மகாதேவராவர். ஆளுடையபிள்ளையார், சொக்கியார், ஸ்ரீ கயிலாசமுடையார், பண்படிக்க ஆடுவார் முதலிய பல மூர்த்திகளின் திருநாமம் குறிப்பிடப்படுகின்றன. பிற்காலத்திய மஹாராஷ்டிரர் கல்லெழுத்தே இறைவனைச் சிவலோகத்தியாகராஜராக அழைக்கிறது.

இக்கோயிலுக்கு ஆயிரத்தெண்ணூற்றுவர் சந்தி என்ற பூசை நடந்து வந்தது. (527 of 18)

மகிபாலகுலகாலபேரளம், நெற்குன்றம், அபயமாணிக்கச்சேரி, சிவசரணசேகரநல்லூரான சாத்த

மங்கலம், பராக்ரமசோழ சதுர்வேதிமங்கலம் என்ற இடப் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

மலையப்பிரியர், நெறியுடைச் சோழ மூவேந்த வேளான், தண்டலைகண்டன் சோழன் சோழிய தரையன் முதலிய அரசியல் அலுவலாளர்களும், சந்திரசேகரன் பஞ்சநதிவாணனை நெற்குன்றத்துத் தலைவன் என்ற கொடையாளியும் குறிப்பிடப் படுகின்றார்கள்.

## அரசர்களும் பணிகளும்

**விக்கிரமசோழன்:** கி. பி. 1117—1134

இவன் ஆட்சியேற்ற மூன்றாம் யாண்டு கி. பி. 1120-ல் பரசமய கோளரி மடத்து மாகேசுரருக்கு உணவளிக்க வெண்ணியூர்நாட்டுப்பராக்கிரம சோழ சதுர்வேதிமங்கலச்சபையோரால் நிலம் வாங்கிப் பதிவு செய்யப்பெற்றது. பரசமயகோளரி என்பது திருஞானசம்பந்த சுவாமிகளுடைய விருதுப் பெயர்களில் ஒன்று. அம்மடம் இப்போது தருமையாதீனத்துக் கட்டளைமடமாக இருக்கிறது.

**இராஜராஜன் II :** கி. பி. 1144.

'திரிபுவனசக்ரவர்த்தி இராஜராஜ தேவர்க்கு' என்று தொடங்கும் முதற்பிராகாரத்து வடசுவரில் உள்ள இக்கல்வெட்டு யாண்டு பதினேழாவது ரிஷபரவி சதுர்த்தி சனிக்கிழமை புனர்பூச நாளில்

கோயில் நிலங்களை இறையிலி செய்ய உத்தர விட்டான் என்று அறிவிக்கிறது (526 of 18).

இரண்டாம் யாண்டு 45ம் நாளில் இராஜாதி ராஜவளநாட்டு வெண்ணியூர் நாட்டுப் பஞ்சவன்மா தேவியான குலோத்துங்கசோழசதுர்வேதிமங்கலத் தில், ஆளுடையபிள்ளையார்க்கும் சொக்கியார்க்கும் நிவேதனத்திற்காகவும், அபூர்விகளின் உணவிற் காகவும், கயிலாசமுடையார் கோயிலுக்கு ஆயிரத் தெண்ணூற்றுவர் சந்திக்காகவும் நிலம் அளித் தான். இன்னும் கரிகாற்சோழனுடைய பன்னிரண் டாவது ஆண்டினதும், திரிபுவன வீரனது முப்பதா வது ஆண்டினதுமான நிகழ்ச்சிகளும் குறிப்பிடப் பட்டுள்ளன. (527 of 18)

18ம் யாண்டில் திருப்பெருமணமுடைய நாயனர் கோயிலுக்குத் திருப்பெருமண நல்லூர் திரிபுவன வீரமங்கலம் என்ற கிராமங்களின் நிலங்களை அளித்தான். பஞ்சவன்மாதேவி கிராமத்தின் நிலங்களுக்காகச் சிவசரணசேகரநல்லூர் என்னும் சாத்த மங்கலத்தில் பரிவர்த்தனையாக நிலமளித் தான். பஞ்சவன்மாதேவி நிலம் இவன் தந்தையான திரிபுவன வீரதேவனுடைய முப்பதாவது ஆண்டில் அளிக்கப்பட்டதாகும். (529 of 18)

**இராஜாதிராஜன் II : கி. பி. 1165.**

மூன்ருங்குலோத்துங்கனுக்கு முன்னிருந்தவன். இவனது கல்வெட்டு 'கடல்சூழ்பார்' என்று

தொடங்குகின்றது. மதுரையும் ஈழமுங் கொண்ட இராஜகேசரிவர்மனுன திரிபுவன சக்ரவர்த்தி இராஜாதிராஜதேவர்க்கு யாண்டுபதினுலில் கோயி லில் ஊழியம் செய்பவராகிய குடிமக்களுக்கு ஊழிய உரிமையாக, கடமை வாரம் இவற்றைக்குறைத்து, நிலத்தை அனுபவித்துக் கொள்ளும்படி, பஞ்சவன் மாதேவியான குலோத்துங்கசோழ சதுர்வேதி மங்கலத்து மகாசபையாருக்கு உத்தரவிட்டுள்ளான். (538 of 18).

இப்பிராகாரத்துக் கீழ்ப்பக்கத்துச் சுவரிலும் இவனுடைய வேருெரு கல்வெட்டு உண்டு; அது முற்றுப்பெறவில்லை (539 of 18)

குலோத்துங்கன் III : கி. பி. 1178—1218

திரிபுவன சக்ரவர்த்தி கோநேரின்மைகண்டான் குலோத்துங்கன் III யாண்டுபத்து 184வது நாள் இராஜாதிராஜவளநாட்டு வெண்ணியூர் நாட்டு' நல்லூர் திருப்பெருமணமுடைய மகாதேவர் கோயி லுக்கு, நல்லூரான மகிபால குலகால பேரளத்தில் ஆண்டுதோறும் மூவாயிரங்கலம் உப்பு விடக்கடவ தாகவும், போனகத்துக்குச் செலவு போக, மிச்சத்தை விற்றுச் சந்தனக்காப்பணி செய்விக்க என்றும் அரசியல் அலுவலாளரான மலையப்பிரிய ரைக்கொண்டு ஆணை பிறப்பித்தான். (522 of 18).

யாண்டு பத்தாவது மகரமாதம், நவமி, திங்கட் கிழமை விசாக நாள் வடகரை இராதிராஜவள நாட்டு, வெண்ணியூர் நாட்டுப் பஞ்சவன்மா தேவி யான, குலோத்துங்கசோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார், ஸ்ரீகயிலாசமுடைய நாயனர் கோயிலி லுள்ள கருவூலத்து முற்றத்துக்கூடி, திருநல்லூர்ப் பெருமணமுடையார்க்கு விடப்பட்ட நிலங்களை, இறையிலி செய்யுமாறு அரசன் ஆணையாக உத்தர விட்டது. இதனல் கயிலாசமுடையார் கோயிலும்[1] நல்லூர்ப் பெருமணமுடையார் கோயிலும் வேறு என்பது தெளியப்படும்.

மதுரையும் பாண்டியன் முடித்தலையுங்கொண்ட திரிபுவன சக்ரவர்த்தி குலோத்துங்க சோழ தேவர்க்குப் பதின்மூன்ரும் யாண்டில் விருச்சிக மாதத்து 26ம் நாள், சாத்தமங்கலமான சிவசரண சேகர நல்லூரில், நிலங்களை வாங்கி ஆளுடைய பிள்ளையார்க்கு நந்தவனமாக, அபயமாணிக்கச் சேரியில்[2] உள்ள ஒருவரால் அளிக்கப்பெற்றது.

24வது யாண்டில், நல்லூரான நகரீசுவரப் பேரளத்துத் திருப்பெருமணமுடையார் கோயிலில்

---

[1] கயிலாச முடையார் கோயில் என்பது, கடைக்கண் விநாயக நல்லூரிலுள்ள கோயிலாகும். இவ்வூர் ஆச்சாள்புரத்துக்கு இரண்டுகல் தொலைவில் உள்ளது.

[2] அபயமாணிக்கச்சேரி என்பது இப்போது மாணிக்கவாசல் என வழங்குகின்றது. அதில் நந்தவனக்கொல்லை என்று ஒரு தலத் திற்குப் பெயரிருப்பது ஊன்றி ஆராயத்தக்கது.

உள்ள, பண்படிக்க ஆடுவார் என்னும் கூத்தப் பிரானுர்க்குப் புறக்குடி பிருதிகங்கரையன் என்பவ ரால் நிலம் விடப்பட்டது.

மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்ட இவ்வரசற்கே யாண்டு 24வது, பண்படிக்க ஆடுவாரது வழிபாட்டிற்கும், யாத்ரீகர்களுக்கு உணவளிக்கவும் நிலம் அளிக்கப் பட்டது.

32ம் யாண்டு 327ம் நாளில், ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க்கோட்டமான குலோத் துங்க சோழவளநாட்டு நெற்குன்றத்துத் தலைவனுன சந்திரசேகரன் பஞ்சநதிவாணனுல் திருப்பெருமண முடையார் கோயிலில் திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார்கோயில் கட்டப்பட்டது. இதில், நெறி யுடைச்சோழ மூவேந்தவேளான் என்னும் திரு மந்திர ஓலைநாயகமும் குறிப்பிடப்படுகின்ருன்.

36ம் யாண்டில் மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்ட திரிபுவனசக்ர வர்த்தி குலோத்துங்கசோழ தேவனுல், கோயில் வழி பாட்டிற்காக வரும் அபூர்விகளின் (யாத்ரீகர்களின்) உணவிற்காக நிலம் விடப்பட்டது. (533 of 18)

**மாறவர்மன் பராக்ரமபாண்டியன்?**

இவனுடைய '8ம் யாண்டு, தைப் பஞ்சமி வியாழக்கிழமை பூசநாள்' என்று தொடங்கி

மூன்றுங் குலோத்துங்கனுடைய 10வது யாண்டு நிகழ்ச்சியைத் தெரிவிப்பதாக இருக்கின்றது. (525 of 18)

சடாவர்மன் சுந்தரபாண்டியன்: கி. பி. 1251—1268

துலாமாசத்து, சதுர்த்தி, திங்கள் மகநாளில், பாண்டிமண்டலத்து மிழலைக் கூற்றத்துக் கீழைப் பகுதி, தண்டலைகண்டன் சோழியன் சோழிய தரையன் வெண்ணியூர்நாட்டு இராஜசூரியசதுர் வேதிமங்கலத்து இருவரைக்கொண்டு நிலம் விற்ற செய்தியைக் குறிப்பிக்கிறது. (536 of 18)

'9ம் யாண்டு துலாமாச சதுர்த்தி, திங்கள் மக நாள்' என்று தொடங்கி முற்கூறிய கல்வெட்டு தொடர்ச்சியாக வந்திருக்கிறது.

ஏகோஜிமகாராஜா: கி. பி. 1683.

தஞ்சை அரசராகிய இவர் சகம் 1605 கலி 4784 துந்துபி வருஷம் சித்திரைமாதம் 8உ புதன் கிழமை பூச நாள் சிவலோகத் தியாகர் கோயிலுக்கு சில நிலங்கள் விடச் செய்தார். (540 of 18)

இவையன்றி, சிதைந்த இரண்டு கல்வெட்டுக் கள், 'இராஜகேசரி வர்மஞன' என்று தொடங்கி

நிலம் விட்டசெய்தியை அறிவிக்கின்றது. இதில் மெய்க்கீர்த்தி 'பூமேவிவளர' என்று தொடங்குகிறது (523 of 18).

இக்கல்வெட்டுக்களால் பெருமணமுடைய மகாதேவர்க்கும் அம்மைக்கும் உப்பு வருமானத்திலிருந்து சந்தனக்காப்பு இடப்பட்ட செய்தியும், ஆளுடையபிள்ளையாரின் திருமணப்பெண் சொக்கியார் என்பதும், நாச்சியார் கோயிலைக்கட்டியவன் சந்திரசேகரன் பஞ்சநதிவாணனை நெற்குன்றத்துத் தலைவன் என்பதும் குறிப்பிடப்படுகின்றன. நடராசப்பெருமான் பண்படிக்க ஆடுவார் என்று அழைக்கப்படுவதிலிருந்து, திருமுறைகளிடத்து IIIம் குலோத்துங்கன் காலத்தில் இருந்த நன்மதிப்பு நன்கு விளங்கும்.

# சீகாழி

# சீகாழி

தஞ்சை ஜில்லாவில் சீகாழி தாலூகாவின் தலை நகராய் விளங்குகிறது இது. ஒரு புகைவண்டி நிலையமாகவும் உள்ளது.

**மறுபெயர்கள் :**

பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், புறவம், சண்பை, காழி புரம், கொச்சைவயம், கழுமலம், சிரபுரம் என்ற பன்னிரண்டு திருநாமங்களை உடையது. 'வசையில் காட்சி' என்னும் திருக்கழுமல மும்மணிக்கோவை யில், பன்னிரண்டு யுகத்திலும் இப்பன்னிருபெயர் களும் விளங்கிவந்தனவாகப் பட்டினத்தடிகளால் உணர்த்தப்படுகிறது. சங்கநிதிபுரம், பதுமநிதிபுரம், சிவாசாரியபுரம், பராசர க்ஷேத்ரம், புனர்ஜன்ம புரம், கிரிபுரம், உமாபதிபுரம், சீவன்முத்திபுரம், நீலகண்டவெற்பு, மாலைமாற்றுப்பதி, எழுகூற் றிருக்கைப்பதி, லிங்காடவி, உய்யகாசி, மூலாதார க்ஷேத்திரபுரம் முதலான பல பெயர்களும் புராண இலக்கியங்களில் புகலப்படுகின்றன.

**திருக்கோயில் :**

நகர்நடுவில் நான்கு கோபுரங்களும் சுற்று மதில்களும் உடையதாக விளங்குகிறது. இறைவன்

திருநாமம் பிரமபுரீசுவரர். இறைவி திருநிலைநாயகி. வடமொழியில் ஸ்திரசுந்தரி எனவழங்கும். இவர்களுக்குத் தனித்தனியே ஆலயங்கள் உள்ளன. அம்மன் ஆலயத்திற்கு வலதுகைப்பக்கத்திலும், சுவாமி கோயிலுக்கு இடதுகைப்பக்கத்திலும் ஞானசம்பந்தர் ஆலயம் அமைந்திருக்கின்றது. இத்தோற்றம் அம்மையப்பருக்கு இடையில் ஆனந்தவடிவினனாகிய முருகன் எழுந்தருளிஇருக்கின்ற சோமாஸ்கந்த திருமேனியை நினைவூட்டும். சுவாமிகோயிலையொட்டி ஒரு கட்டுமலை இருக்கிறது. அது இருபது பறவைகள் தாங்கிக்கொண்டிருப்பதாக த்தோற்றமளிக்கிறது. இதனை அப்பர் சுவாமிகள் 'நாலைந்து புள்ளினம் ஏந்தினவென்பர்' என்று குறிப்பிடுகிறார்கள்.

இம்மலை பேரூழிக்காலத்து மிதந்த தோணி. இதில் உமாமகேசுவரர் எழுந்தருளி இருக்கிறார். இவர் திருவுருவம் மிகப்பெரியது. சுதைத்திருமேனி. இறைவர் பெயர் பெரியநாயகர். இறைவி பெயர் பெரியநாயகி. திருஞானசம்பந்தப் பெருமானுக்குச் சிவஞானத்தை இன்னமுதுடன் கூட்டியளித்த அம்மை இவரே.

இத்தலம் குரு இலிங்கம் சங்கமம் ஆகிய மூன்று திருமேனிகளை உடையது. குருமூர்த்தம் தோணியப்பர். லிங்கமூர்த்தம் பிரமபுரீசர். சங்கமமூர்த்தம் சட்டைநாதர். இவர் மகாவிஷ்ணுவின்

தோலைச் சட்டையாகப் போர்த்தியவர். விஷ்ணுவின் எலும்புக்கூட்டைக் கையில் கதையாகக் கொண்டார். 'அங்கம் யாவுமோர் கதையதாய்க் கொண்டு அதன் அங்கியாப்புனை காழிச் சங்கவார் குழைச் சட்டை நாயகன்' என்ற புராணப்பகுதி இதனை நன்கு விளக்கும். சட்டைநாதர் திருமேனியும் சுதையாலானது. தெற்குப்பார்த்த சந்நிதி. வீரத்திருக்கோலம். இவர் சந்நிதிக்கு நேராகக் கோயில் தெற்குப் பிராகாரத்தில் ஒரு பலிபீடம் இருக்கிறது. அதற்குத்தான் நாடோறும் அபிஷேகாதிகளும் மகாநைவேத்தியமும் நடைபெறும். சட்டைநாதருக்கு வெள்ளிக்கிழமை அர்த்தயாமத்தில் புனுகுகாப்புச் சாத்தப்பெறும். பின் வடைமாலையும், பாயஸான்னமும் நிவேதிக்கப்பெறும் இங்கே தேங்காய் உடைத்து நிவேதிப்பது வழக்கமில்லை. பூரணபலமாகவே நிவேதிக்கப்பெறும்.

**தீர்த்தங்கள் :**

பிரம தீர்த்தம் முதலிய இருபத்திரண்டு தீர்த்தங்கள் இத்தலத்திலுள்ளன. ஞானசம்பந்தப் பெருமான் திருமுலைப்பால் உண்டதனல் சிறந்தது பிரம தீர்த்தமே; காளி தீர்த்தம் என்பது இப்போது கரிக்குளம் எனவழங்குகிறது. காளிதேவியின்பழிநீக்கிய தீர்த்தமிது. இவற்றில் கழுமலநதி, விநாயகநதி, புறவநதி என்ற ஆறுகளும் அடங்கியுள்ளன.

**புராணவரலாறு :**

பெரும்புறக்கடல் ஊழிக்காலத்தில் பொங்கி எழுந்து எல்லா உலகையும் அழித்தது. இறைவன் எழுத்திலக்கணம் முதலாகிய 64 கலைகளையும் ஆடையாகக்கொண்டு பிரணவமே தோணியாக, தானும் தன் இடம்பிரியாளுமாக ஏறி இருந்து தோணி இயக்கிவந்தனர். எல்லாமழிந்தும் அழியாத இத் தலத்தைக்கண்டு இதுவே மூலமென்றெண்ணி இங்கே தங்குவாராயினர்.

சட்டைநாதர்:— திருவிக்கிரமாவதாரமெடுத்த மகாவிஷ்ணு வெற்றிச் செருக்குக்கொண்டு திரிந்தார். இதனை அறிந்த வடுகநாதர் தமது திருக்கரத்தால் விஷ்ணுவை மார்பில் ஓங்கி அடிக்க, விஷ்ணு கீழே வீழ்ந்தார். இலக்குமியின் வேண்டுகோட்காக இறைவன் அருள்செய்தார். விஷ்ணு உயிர்பெற்றெழுந்தார். வணங்கினர். தமது தோலையும் எலும்பையும் அணிகளாகக் கொள்ளவேண்டுமென்று விண்ணப்பித்தார். அவ்வாறே, சட்டையாகவும் கதையாகவும் ஏற்று அருள்வழங்கினர். அதனால் இவர்க்குத் தண்டபாணி, சட்டைநாதர், வடுகநாதர், ஆபதுத்தாரணர் எனப்பல திருநாமங்கள் வழங்குவனவாயின.

**மலைவந்த வரலாறு:—** உரோமச முனிவருக்காக இறைவன் திருக்கயிலைச் சிகர மொன்றைத் தென் திசையில், வாயுதேவன்மூலமாகத்தோற்றுவித்தார்.

அதில் தானும் அம்மையுமாக எழுந்தருளிக் காட்சி வழங்கி வருகின்றார்.

திருஞானசம்பந்தர்:—தவஞானச் செம்மலாகிய இவர் சிவபாத இருதயருக்கும், பகவதியாருக்கும், திருக்குமாரராக அவதரித்தார். தந்தையாரோடு குளக்கரைக்குச் சென்றபிள்ளையார் இறைவனை நோக்கி 'அம்மே!' 'அப்பா!!' என்று அழுதார். இறைவன் ஆணைப்படி பொன்வள்ளத்து அம்மையார் சிவஞானத்தின்னமுதம் குழைத்துக்கொடுக்க உண்டு, சிவஞானசம்பந்தராயினர். தமது உடற்றந்தையார்க்கு அறிவிக்க உயிர்த் தந்தையாரைத் 'தோடுடைய செவியன்' என்று தொடங்கிப்பாடிக் காட்டியருளினர். பற்பல அற்புதங்களை நிகழ்த்தி நல்லூர்ப் பெருமணத்தில் வைகாசி மூலத்தில் சிவச் சோதியிற்கலந்தார்.

**வழிபட்டோர்:**

இத்தலத்தில் குமரவேள், காளி, பிரமன், முதலிய தெய்வங்கள் பிரமபுரீசுவரரை வழிபட்டுப் பேறுகள் பல பெற்றதாகப் புராணவரலாறுகளில் பெரிதும் பேசப்படுகின்றன.

**சுற்றுக்கோயில்கள்:**

ஸ்ரீகாளிபுரீசுவரர்கோயிலும், தருமதேவதை பூசித்த கோயிலும், குமரகோயிலும், பதினெண்

புராணேசுவரர் கோயிலும் உள்ளிட்ட பத்துக் கோயில்களுக்குமேல் உள்ளன.

**மண்டபம்:**

இத்தலத்து ஆஸ்தான மண்டபமும், வெளிப் பிராகாரம் தெற்குக்கோபுரத்தை யடுத்திருக்கும் வலம்புரி மண்டபமும் மிகச்சிறந்தன. வலம்புரி மண்டபத்தை அஷ்டபைரவர்களும் யோகஸ்தான மாய்க் கொண்டு விளங்குகின்றனர். சட்டைநாதர் பள்ளியறைப்பூசை நடைபெறும் இடமும் இதுவே. இதில் உள்ள அசைந்தாடும் மஞ்சத்தில் சட்டை நாதர் திருவுருவப்படம் வைக்கப்பெற்றுள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் இரவு பன்னி ரண்டுமணிக்கு அர்த்தயாமம் முடிந்ததும் இங்கு வழிபாடு நடைபெறும். இங்குச் சுதந்திரபைரவர், சுயேச்சைபைரவர், லோகபைரவர், காலபைரவர், உக்கிரபைரவர், பிச்சையாபைரவர், நின்மாண பைரவர், பீஷணபைரவர் என்ற எட்டுப் பைரவர் களும் எழுந்தருளியிருக்கின்றனர். தேவஸ்தானம், சட்டைநாதஸ்வாமி தேவஸ்தானம் என்றே வழங் கப் பெறுமானல் வடுகநாதப் பெருமானுக்குள்ள சிறப்பு எம்மாற் சொல்லுந்தரத்ததாமோ!

**விழாக்கள்:**

இத்தலத்தில் சித்திரை மாதந்தோறும் பெரு விழா நடைபெறும். இதில் 2ம் நாள் திருவிழாவே

திருமுலைப்பால்விழா. இது மிகச்சிறந்த திருவிழா. மக்கள் திரளாகவந்து தரிசிப்பார்கள். ஏனைய திருவிழாநாட்களிலும் ஞானசம்பந்தர் வரலாற்றை யொட்டிய ஐதீகங்கள் நடைபெறுகின்றன.

**அன்பர்கள்:**

ஞானபூமியாகிய இத்தலத்து அனேக அன்பர்கள் வாழ்ந்திருந்தார்கள். அவர்களில்:-

**ஞானசம்பந்தப்பெருமான்:—** முதல்வராகிய இவர்கள் அருளிச் செய்த இத்தலப் பதிகங்கள் 67. இவர்களுடைய வரலாறு முன்னரே புராண வரலாற்றோடு சேர்த்து அறிவிக்கப்பட்டுள்ளது.

**திருநாவுக்கரசுசுவாமிகள்:—** திருநாரையூரை வணங்கிக்கொண்டு சீகாழிவந்தவர் ஞானசம்பந்தப் பிள்ளையாரைக் கண்டு வணங்கி அருட்கடலும் அன்புக்கடலுமாகக் கலந்து திருத்தோணியப்பரை வணங்கத் திருக்கோயிலுட் சென்றார். பதிகம் பாடினார். பாடிய பதிகங்கள் மூன்று.

**சுந்தரமூர்த்தி சுவாமிகள்:-** தில்லையை வணங்கிக் கொண்டு ஆனந்தக்கூத்தர் ஆணையின்படி, திருவாரூருக்கு எழுந்தருளுகின்றவர்கள் காழியம்பதியை அடைந்தார்கள். இப்பதி ஞானசம்பந்தசுவாமிகளது அவதாரஸ்தலமாதலின், மிதித்தற்கஞ்சிப் புறநகரிலேயே "கழுமலவளநகர்க் கண்டுகொண்

டேனே'' என்று பதிகம் பாடிச் சென்றூர்கள். இவர்கள் பாடியபதிகம் ஒன்று.

**மாணிக்கவாசகசுவாமிகள்:-** பாண்டியநாட்டை விட்டுத் தில்லைக் கெழுந்தருளும்போது திருக்கழு மலத்தை அடைந்து, 'உம்பர்கட் கரசே!' என்று தொடங்கும் பிடித்தபத்து அருளிச் செய்தார்கள்.

**பூந்துருத்திநம்பிகாடநம்பி:-** இவர்கள் காழிக்குத் தனியே திருவிசைப்பா கூறவில்லை; ஆனாலும், ஞானசம்பந்த சுவாமிகள் ஆட்கொண்ட அருளிப் பாட்டினைச் 'சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட்கொண்டருளி' என்று வைத்துப் போற்றி யுள்ளார்கள்.

**பட்டினத்தடிகள்:—** பெருந்தன வணிகராய் இருந்தும் ஞான முதிர்வால், ஒரேகாலத்து ஒருசேர எல்லாவற்றையுந் துறந்த, உண்மை ஞானியாகிய இவர்கள் திருக்கழுமலத்திற் கெழுந்தருளியபோது, திருக்கழுமல மும்மணிக்கோவை என்ற பிரபந் தத்தை இயற்றியருளினூர்கள்.

**கணநாதர்:—** சீகாழியில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். திருமாலைகட்டுதல் முதலிய இறை திருப் பணியில் எல்லோரையும் பயிற்றுவிப்பவர். அதனுல் திருக்கயிலையிலும் கணநாதராய் இருக்கும் பெரும் பேறுபெற்றூர்.

**நம்பியாண்டார்நம்பிகள்:—** திருநாரையூர் ஆதி சைவகுலத்தில் அவதரித்தவர். பொல்லாப்பிள்ளை

யாரின் பேரருளால் திருமுறைகளை விளக்கங் கண்டவர். காழி ஞானசம்பந்தர் மீது ஆளுடைய பிள்ளையார் திரு மும்மணிக்கோவை, திருச்சண்பை விருத்தம், திருத்தொகை, திருவந்தாதி, திருவுலா மாலை, திருக்கலம்பகம் ஆகிய நூல்கள் இவரால் பாடப்பெற்றன.

**சேக்கிழார்:—** இரண்டாங் குலோத்துங்கனுக்கு உதவியமைச்சராய் இருந்து, காழியைப் பலகால் தரிசித்த பயனால் திருஞானசம்பந்தசுவாமிகள் புராணத்து, சீகாழியைப் பலவாறாகப் பாராட்டி யுள்ளார்கள்.

**அருணகிரிநாதர்:—** முருகன் அன்பர்களில் தலைசிறந்தவர். காழிக்குமரவேளைத் திருப்புகழ் பாடிச் சிறப்பித்துள்ளார்.

**மச்சுச் செட்டியார்:—** சீகாழியில் சைவச் செட்டியார்பரம்பரையில் அவதரித்தவர்கள். உலகத் தீமைகளைப் பார்க்க விருப்பமில்லாது மச்சைவிட்டு இறங்காமையால், மச்சுச்செட்டியாரென்று பெயர் பெற்றார்கள். இவர்களுக்கு அருள் நமச்சிவாய தேசிகர் என்றும் பெயருண்டு. இவர்களும் உமாபதி சிவாசாரிய சுவாமிகளோடு மறைஞான சம்பந்தரிடம் அருளுபதேசம் பெற்றவர்கள்*. இவர்களுடையமாளிகை சீகாழி வடக்குவீதியிலிருந்தது.

---

*முத்திநிச்சயப்பேருரை, பக்கம் 9.

**காழிக் கங்கைமெய்கண்டார்:—** இவர் மச்சுச் செட்டியாரின் மாணவர். வெண்ணெய் மெய்கண்டாரின் வேறு என்பதற்காகக் கங்கைமெய்கண்டார் என்று சிறப்பித்துப் பாராட்டப் பெற்றவர். ஞானு சாரியருள் ஒருவர்.

**சீகாழிச் சிற்றம்பலநாடிகள்:—** இவர் கங்கை மெய்கண்டாரின் மாணவர். சீகாழி வடக்கு வீதியிலேயே இவர்கள் மடம் இருந்தது. இவருடைய சந்ததி சைவாசாரிய பரம்பரையாகப் பெண்வழி மரபில் இருக்கின்றது. சிவப்பிரகாசத்திற்குக் கொளுச் சூத்திரம் செய்தவர் இவரே. இவர்களுக்கு 63 மாணுக்கர்கள். ஒருவர் தவிர அறுபத் திருவரொடு பரிபூரண மெய்தியவர்கள். இவருக்குக் காழிப் பழுதைகட்டிச் சிற்றம்பல நாடி பண்டாரம் என்றும் பெயருண்டு. யாக்கை நிலையாமையையும், அதன் இழிவையும், உலகவர்க்கு நன்கு விளக்கக் காலில் எப்பொழுதும் பழுதை கட்டி இருப்பார். அதனுல் பழுதைகட்டி என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது.

**கண்ணுடையவள்ளல்:-** இவர் திருஞானசம்பந்த சுவாமிகளுடைய திருவருள் பெற்றவர். இவர்செய்த நூல் ஒழிவிலொடுக்கம் முதலியன. சீகாழி மேல வீதியில் உள்ள வள்ளலாதீனஸ்தாபகர் இவரே.

**திருத்தோணியப்பர்:—** இவர் தத்துவப் பிரகாசரது சீடர். தமது குருவாகிய தத்துவப் பிரகாச

ரோடு கிருஷ்ணதேவரது பிரதிநிதியாகிய சாளுவ தேவரைக்காணச் சென்றார். அவர் தமது ஆசாரிய ரையும் தம்மையும் இழிவாய் நடத்தியதைக் கண்டு வருந்தி "ஆயிரவர் புலவோரில்" என்னும் பாடலைச் சொல்லி அரசப் பிரதிநிதிக்குப் புத்திபுகட்டினார். "மூட்டைகலம் புழுதி" என்றபாடலைச் சொல்லித் தமக்குக் கொடுத்த வீட்டினியல்பை விளக்கினார்.

**சீகாழி மறைஞானசம்பந்தர்:—** சிவஞானசித்தி யாருக்கு உரை இயற்றிய அறுவரில் ஒருவரா கிய இவர், ஞானசம்பந்த உபதேச பரம்பரையில் வந்த அறுபத்துநான்கு வள்ளல் சந்தானத்தில் ஆனந்தவள்ளல் சந்தானத்தைச் சார்ந்தவராவர். பிராமணர் என்று அறுவருரைப் பதிப்பாசிரியர் கூறுகின்றார். அவர் கூறும் இம்மறைஞான சம்பந்தர், கண்கட்டி மறைஞானசம்பந்தராக முத்திநிச்சயத்தால் தெளியப்பெறுவதால் அவர் உரை ஆராயத் தக்கது.

**அருணந்திசிவாசாரிய சுவாமிகள்:—** இவர்கள் சண்பையர் தலைவன் என்று குறிப்பிடப்படுகிறார்க ளென்பதும், இவர் அவதாரத்தலம் சீகாழியே என்பதும் பிரபல ஆதாரங்களால் நிலைபெறும் செய்தி என்று சோமசுந்தர தேசிகர் கூறுவார்.*

**சண்பை ஞானப்பிரகாசர்:—** இவர் "சண்பை நகரில் இருந்த சேந்தையர் காவலராகியஞானப்பிர

---

*தமிழ்ப்புலவர்கள் வரலாறு, 16ம் நூற்றாண்டு, பக்கம் 133.

காசர்" என்று சென்னை கையெழுத்துச் சுவடிகளின் அட்டவணை கூறுகின்றது. அதனை ஒட்டி சிவஞானசித்தி ஞானப்பிரகாச முனிவர் உரை பாயிர அகவலில், 'சண்பையர் தலைவன், கற்றவர் பரவும் சேந்தையர் காவலன், நற்றவரடிபணி ஞானப்பிரகாசன்' என்று கூறப்பெற்றுளது.* ஆதலால் இந்த ஞானப்பிரகாசர், திருஒற்றியூர் ஞானப்பிரகாசரின் வேறுவரோ என்று ஐயப்பட இடமுண்டு. இது ஆய்விற்குரியது.

சிவஞானதேசிகர்:— இவர்கள் தருமையாதீனத்துப் பத்தாவது குருமூர்த்திகளாவார்கள். இவர்கள் இயற்றியநூல் சீகாழி சட்டைநாதசுவாமிகள் விஷயமான ஆபதுத்தாரணமாலை என்பது.

மாசிலாமணிதேசிகர்:— இவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்து எட்டாவது மகாசந்நிதானமாவார்கள். இவர்கள் இயற்றியநூல் திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்.

சிதம்பரநாத முனிவர்:— இவர் குருவாணைப்படி சீகாழி ஆலய நிர்வாகப் பணியை ஏற்று நடாத்தி வந்தார்கள். இவர்களோடு பூர்வாசிரமத்தில் உடன் கல்வி கற்றவர் தில்லையாடியில் பிறந்த அருணசலக் கவிராயர். ஒருபோது வியாபார நிமித்தமாகப் புதுச்சேரிக்குப் போகும்வழியில் சீகாழிக்குவர அங்கே கட்டளை விசாரணையில் சுவாமிகள் இருப்பது

---

*பெருந்தொகை, பா. 1901.

அறிந்து பார்க்கச் சென்று அளவளாவினர். சுவாமிகள் தாம் சீகாழிக்கு ஒரு பள்ளுப் பிரபந்தம் பாடத் தொடங்கியிருப்பதையும், அதனை முடிக்க அவகாசமின்மையையும் உணர்த்தி 'இதனை இருந்து முடித்துச் செல்க' என்று கூறினர்கள். சுவாமிகளது அன்புரையை எதிரேயே மறுத்துச் செல்லும் மனவாற்றலில்லாதவராய், கவிராயர் பிரபந்தத்தைப்பாடி முடித்து அங்கிருந்து மறுநாள் இரவு அப்பிரபந்தத்தை மற்றொருவர் கையிற்கொடுத்துச் சுவாமிகளிடம் சேர்ப்பிக்கச்செய்து தாம் புதுவைக்குச்சென்றார்.

முனிவர்பிரான் கவிராயர் சென்றுவிட்டார் என்பதைக் காலையிலறிந்துகொண்டு எவ்வாற்றானும் இங்கேயே இருத்திவிடவேண்டும் எனத் திருவுளங்கொண்டு கவிராயர் அழைப்பது போலக் கடிதம் அனுப்பி அவர்கள் குடும்பத்தாரை வரவழைத்துச் சீகாழியில் வீடொன்று வாங்கி அதில் இருக்கச்செய்தார்கள். சிலநாளில் கவிராயர் மீண்டு வந்தனர். சுவாமிகளைத் தரிசித்துச் சின்னாள் உடனிருந்தனர். ஒருநாள் சுவாமிகள் "வீதிவலம் வருவோம்" என்று கூறி உடனழைத்து வருங்கால் வடக்குவீதி அடைந்ததும் தம் குடும்பம் ஒரு வீட்டில் இருப்பதை அறிந்து ஆச்சரியமடைந்தார் கவிராயர். சுவாமிகள் "உம்மை உடனிருத்துவதற்காகவே இக்காரியம் நம்மால் செய்யப்பெற்றது" என்று அறிவித்தார்கள். கவிராயர், கல்வியை நுகரும் சுவாமிகள் கருத்தையறிந்து சீகாழியிலேயே

வசிப்பாராயினர். அதுமுதல் அப்புலவர் தில்லையாடி அருணாசலக் கவிராயர் என்ற பட்டம்நீங்கிச் சீகாழி அருணாசலக் கவிராயர் என வழங்கப்பெற்றார். சீகாழியில் இருக்கும்போது முனிவராணைப்படி சீகாழிக்குத் தல புராணமுஞ் செய்தனர்.

**அருணாசலக் கவிராயர்:—** தில்லையாடியிலே கார்காத்த வேளாளர்மரபிலே பிறந்தவர். தருமபுர ஆதீன வித்வான்களில்ஒருவர். இவருடைய வித்யா குரு அம்பலவாணக் கவிராயர். இவர்கள் சீகாழி யைப் பற்றிப்பாடிய நூல்கள் காழிப் பள்ளு, காழி யந்தாதி, காழிப்புராணம் முதலியன. இராமாயணக் கீர்த்தனம் பாடியவர் இவரே. இவர் கி. பி. 1712 முதல் 1779 வரை இருந்தவர்.

## கல்வெட்டுக்கள்

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் படி யெடுக்கப்பட்டவை 46ம், எடுக்கப்படாதது ஒன்றும் ஆக 47 கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் இரண்டாங் குலோத்துங்கன் கல்வெட்டு மூன்றும், இரண்டாம் இராஜராஜதேவனின் கல்வெட்டுக்கள் ஐந்தும், மூன்றுங்குலோத்துங்கன் கல்வெட்டுக்கள் ஏழும், வீரராஜேந்திரன் கல்வெட்டு மூன்றும், இரா ஜாதிராஜதேவர் கல்வெட்டு ஒன்றும், கோனேரின் மைகண்டான் என்ற குறிப்பில் இரண்டு கல்வெட் டுக்களும், மூன்றும் இராஜராஜ தேவர் கல்வெட்டு

இரண்டும், கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டு நான்கும், பெயர் குறிக்கப்படாத பரகேசரிவர்மன் கல்வெட்டு ஒன்றும், இராஜகேசரிவர்மனது மூன்றும், வீரவிருப்பண்ண உடையார் கல்வெட்டு இரண்டும், ஆண்டுமட்டும் குறிக்கப்பட்டது மூன்றும், கிருஷ்ண தேவராயரது ஒன்றும், வேங்கடதேவ மகாராயரது ஒன்றும், பெயர் குறிக்காதன எட்டும் ஆக 46கல்வெட்டுக்கள் உள்ளன. 140 of 1910ல் எடுக்கப்பட்ட கல்வெட்டுக் குறிப்பு கிடைத்திலது.

கல்வெட்டுக்களால் பலவழக்கங்களும், சில அளவை முறைகளும், தலம் மூர்த்தி இவைகளின் அமைப்புக்களும் பிறவும் அறியப்பெறும். இத்தலம் ராஜராஜவளநாட்டு திருக்கழுமலநாட்டுப் பிரமதேயம் திருக்கழுமலம் என்று குறிக்கப்பெற்றுள்ளது.

பிரமபுரீசர் திருக்கழுமலமுடையார் என்றும், தோணியப்பர் திருத்தோணிபுரம் உடையார் என்றும், தோணியப்பர் பக்கத்திலுள்ள அம்மை பெரியநாச்சியார் என்றும், சம்பந்தப் பெருமான் ஆளுடையபிள்ளையார் என்றும் குறிக்கப்பெறுகின்றார்கள்.

இங்குள்ள ஆளுடைய பிள்ளையார் கோயிலில் முதன்முதல் ஆளுடையபிள்ளையார் திருவுருவத்தை தலத்திற்கு எழுந்தருளச் செய்தவள் மூன்றாவது குலோத்துங்கனுடைய அடுக்களைப் பெண்டுகளிலே

மூத்தவள் இராஜவிச்சாதரி என்பாள். இதனுல் அக் காலத்தரசர்கள் பட்டத்தரசியாரை யன்றி அடுக்க ளைப் பெண்டிராகப் பலரையுடையராக இருந்தனர் என்பதும் அறியப்பெறும். அன்றி அடுக்களையில் உள்ள ஏவற்பெண்டிராகவும் இருக்கலாம். ஆனுல் பெயர் இராஜவிச்சாதரி என்றிருப்பது அவள் குல வுயர்வைக் குறிப்பதாகலாம். அவள் ஆளுடைய பிள்ளையாரை மூதன் முதல் எழுந்தருளுவித்தாள்.

குலோத்துங்கனுக்கு முந்தியவனுகிய இரண் டாம் ராஜராஜனது கல்வெட்டு கங்கைகொண்ட சோழபுரத்தா னொருவன், ஆளுடைய பிள்ளையார் கோயில் மூதற்பிராகாரம் திரு மதில் எடுக்கப் பொன் கொடுத்ததை அறிவிக்கிறது. ஆதலால், எழுந்தருளுவித்த என்பதற்குத் திருவீதி உலாச் செய்வித்த என்று பொருள் கொள்வதே பொருந்தும். சிலர் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்ததைக் கருதுகின்றனர். அதுபொருந்தாது (388 of 18).

நிலஅளவை:

நிலங்களை இப்போது இருப்பதைப் போலவே 100 குழி ஒரு மாவாகவும், 20 மா ஒரு வேலியாகவும் இரண்டாங் குலோத்துங்கன் காலத்திலும் கணக் கிடப்பட்டிருந்தது. (374 of 18).

விலைக்கு விற்கின்றபோது அந்தக் காலத்தி லுள்ள நிறைப் பொன்னையே குறிப்பிடுவது

வழக்கம். வீரராஜேந்திரன் காலத்திய கல்வெட் டொன்று இராஜராஜப் பெருவிலை கொண்டு என்று குறிப்பிடுகிறது.

இராஜராஜன் மாடை என்ற நிறைகல் வழக் காற்றில் இருந்தது இங்கே நினைவூட்டத்தக்கது. நிலங்களுடைய பரிவர்த்தனை விற்பனை இவற்றில், புறவுவரி பார்ப்பாரும், கர்ணநாயகத்தாரும், பெருங் குறிச்சபையோரும் கையெழுத்திடுவது வழக்கம். நிலவிலையை ஆவணக்களரியின் முன்னிலையில் வாங்கிக்கொள்வதும் குறிப்பிடப்படுகிறது. கோயில் களுக்கு நிலம் ஒதுக்குகின்ற காலத்து, பசாளம் (மசானம்) அந்தராயம் (இடைவெளி) இவற்றையும் இல்விப் பூண்டும், இராவணன் தாடியும் முளைத்து இருக்கின்ற அலைவாயும் மணற்குன்றும் செம்படவர் குடி இருப்பும் இவற்றை விலக்கியே விற்பதும் இறையிலி செய்வதும் வழக்கம். நிலங்களை விற்கும் போது நிலத்தோடு நீராணிக்கக் காரர்களையும் சேர்த்து விற்பதும் குறிப்பிடப்படுகிறது.

**உருவ அமைப்பு:**

திருநட்டப்பெருமான் ஆளுடைபிள்ளையாருக்கு என்று வருவதால், ஞானசம்பந்தர் உருவம் ஒரு காலைத்தூக்கி ஒருகாலை ஊன்றி வலது கைச் சுட்டு விரல் நீட்டிக் கூத்தாடுகின்ற குழந்தைமையைக் காட்டும் திருவுருவ அமைப்பாக இருக்கலாம்.

**திருமுறைப்பற்று:**

அக்கால அரசர்களுக்குள்ள திருமுறைப்பற்று எல்லேக்குட்பட்டதன்று. திருமுறை ஏடுகளைப் புதுப்பிக்கவும், பூசிக்கவும், போற்றவும் மானியமளித்துக் காப்பாற்றிவந்தனர்.

**வரலாறு:**

பொத்தப்பிச் சோழன் என்பவன் வீரபாண்டியனைவென்று அங்கிருந்த நடராசமூர்த்தியைச் சீகாழியில் கொண்டுவந்து வெற்றிப்பரிசாக வழங்கினான்.

**வீரராஜேந்திரன்:** கி. பி. 1055—1070.

இவன், இராஜமகேந்திரனுக்குப்பின் அரசை மேற்கொண்டவன். இவனுடைய ஆறும் யாண்டில் தொங்குவிளக்குகள் இரண்டு வைக்கவும் எரிக்கவும் சயங்கொண்ட சோழமண்டலத்துப் பழயனூரில் நிலம் விடுத்திருக்கிறான் (163 of 18). அதே யாண்டில் குலோத்துங்கசோழவளநாட்டு திருநறையூர்நாட்டு வேளூர்வாசியான ஒருவரால் ஆளுடையபிள்ளையார்கோயில் நிலங்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டன (376 of 18).

இவன் ஆட்சி ஏழாம் யாண்டில் திருத்தோணிபுரமுடையார் பெரியநாச்சியார் நிவேதனத்திற்

காக ஸ்ரீபாததூளி சதுர்வேதிமங்கலத்துத் தென் பக்கத்துக்கிராமமான கிடாரங்கொண்ட சோழநல்லூரில் நிலம்வழங்கிய செய்தி அறிவிக்கப்படுகிறது. இன்னும் இராசராச வளநாட்டு கருப்பூர் உதையஞ் செய்தான் தாழியான் சோழேந்திரசிங்க விழுப் பரையர் என்னும் அரசியல் அலுவலாளர் ஒருவர் பிரமதாயம் விதித்ததைப் பேசுகிறது (360 of 18).

குலோத்துங்கன் II : கி. பி. 1133.

இவன் விக்கிரமசோழன்மகன் ஆசிரிய அன்பு நீங்காதவன். அநபாயன் என்று சிறப்பித்துப் பேசப்பெற்றவன். இவனுடைய ஆட்சியாண்டு மூன்றில் முதலாங் குலோத்துங்கன் தன் ஆட்சியாண்டில் 18-ல்கொடுத்த இறையிலிநிலம், தரிசாகக் கிடக்க, அதனைத் திருத்தி வேறு ஒருவருக்கு அளித்தான். (380 of 18)

நான்காம் யாண்டில் சம்பந்தசுவாமிகள் கோயிலில் நெடுநாளாகவே தேவாரத்திருமுறைகள் எழுதி வைக்கப்பெற்றிருந்தன. அவற்றைப் பூசித்துக் கண்காணிக்க ஒரு தமிழ் விரகர் நியமிக்கப் பெற்றிருந்தார். அவர் கடமை, திருமுறை ஏடுகள் பழுதடையாமல் பாதுகாத்துக்கொள்ளுதலும், பழுதடையின் அவற்றை எழுதிப் புதுப்பிப்பதும், அவற்றைப் பூசிப்பதுமேயாம். அவர் கிராமக்காரியம் பார்ப்பாரை இறையிலியாக நிலம் வேண்டிக்கொள்ள அவர் விருப்பப்படி நிலம் விடப்பட்டது. (381 of 18)

பத்தாம் யாண்டில் ஜயங்கொண்டசோழவள நாட்டு ஆக்கூர்நாட்டு தலைச்செங்காட்டில் மும்முடிச் சோழன் பேரம்பலம் என்ற பொதுமன்றத்தில் சபையார்கூடி திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாற்போனகத்துக்கு நிலம் விடப்பட்டது. (374of18)

இராஜராஜன் II: கி. பி. 1144.

இவன் II-ம் குலோத்துங்கன் மகன். இவனது ஆட்சி இரண்டாம் யாண்டு நாள் இருநூற்றுப் பத்தொன்பதில் ஆளுடையபிள்ளையார் கோயில் திருப்பணிக்காகக் கங்கைகொண்டசோழபுரத்தி லுள்ள ஒருவரால் நிலம் விடப்பெற்றது. (288 of 18) ஆட்சி 11-ம் யாண்டிலும் ஆளுடையபிள்ளையாருக்கு நிலம் விடப்பெற்றுள்ளது. (123 of 1896)

ஆட்சி பன்னிரண்டாம் ஆண்டில், ஆளுடைய பிள்ளையார் கோயிலில் எழுந்தருள்வித்திருந்த மங்கையர்க்கரசி நாச்சியாருக்கு நிவேதனத்திற் காக வீரசோழ நல்லூரில் நிலம் விட்டமை குறிக்கப் பெறுகிறது (375 of 1918).

பதினெட்டாம் யாண்டில், நாலூரில் உள்ள ஒருவரால் திருநந்தவனப் புறமாக நிலம் அளிக்கப் பெற்றது (390 of 1918).

24ம் யாண்டு ஆநாங்கூரில் உள்ள ஒருவர் நந்தவனத்திற்கு நிலம் விட்டார் (389 of 18).

**இராஜாதிராஜன் II:** கி. பி. 1165.

இவன் 1162ல் பட்டத்திற்கு வந்தாலும், நான்கு ஆண்டுகள் வரையில் இராஜராஜன் பேராலேயே அரசாட்சி நடந்துவந்தது. II-ம் ராஜராஜனுக்கு நேர் ஆண்மகவு இல்லாமையால் அமைச்சர்கள் அவன் ஆணையின்வண்ணம் தாயத்தாளுகிய இவனைத் தேர்ந்தெடுத்தனர். இவன் மிகவும் வயதானவன். இவன் பட்டமேற்ற பதினொராவது ஆண்டில் ஆளுடையபிள்ளையார் கறியமுத்துக்கு பயிறுக்காக வெண்மலைத்தலைவனை ஆட்கொண்ட நாயகன் நட்டபெருமான் என்பவனுல் நிலம் விடப்பெற்றது. (379 of 1948).

**குலோத்துங்கன் III:** கி. பி. 1178.

இவன் II-ம் ராஜாதிராஜன் தம்பி. மதுரையில் நிகழ்ந்த கலகத்தை யடக்கித் தமதாக்கி, திரும்பவும் விக்கிரமபாண்டியனுக்கே கொடுத்து மீண்டான். இவன் ஆட்சி மூன்ரும் யாண்டில் கும்பரவி பூர்வ பக்கத்து சப்தமி திங்கட்கிழமை அநிலம் (சுவாதி) கூடிய நாளில், தேவாரப்பண் ணிசைப்பார்க்கும் பயிற்றுவார்க்குமாக நிலம் விட்டான். (287 of 18)

9-ம் யாண்டு 176ம் நாளில், விளக்குக்காக நிலம் அளித்த செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் முதற் குலோத்துங்கனுடைய 15-வது யாண்டில் நிலம் அளக்கப்பட்ட தென்றும்,

அதன் பிறகு அளக்கப்படவே இல்லை என்றும், மக்கள் கோயிலுக்கு வேண்டிய நிலங்களை மேலும் மேலும் பெருக்கிக்கொண்டே போனார்கள் என்றும் அறிவிக்கின்ற வாக்கியங்கள் அமைந்துள்ளன. (365 of 18). முதற் குலோத்துங்கன் நிலம் அளந்த செய்தியையே 125 of 1896 கல்வெட்டும், அறிவிக்கிறது.

ஆட்சி 11-ம் யாண்டில் பாண்டிநாட்டிலே வீர பாண்டியன் விளைவித்த கலகங்களை அடக்கச் சென்றவர்களில், சீயகங்கன் மாமனாரான பொத்தப்பிச் சோழனுமொருவன். இந்தச் சீயகங்கனே பவணந்தியை நன்னூல் இயற்றச்செய்தவன் ஆவன். இப்பொத்தப்பிச் சோழன், தனது வெற்றிக்கு அறிகுறியாக மதுரையிலிருந்து நடராசமூர்த்தியைக் கொண்டு வந்தான். சீகாழியிற் பிரதிட்டை செய்வித்தான். நித்திய பூசைக்காக வேண்டும் நிலங்களை விட்டான். 12ம் யாண்டில் ஆளுடையபிள்ளையார் கோயில் தேவகன்மிகள் கேட்டுக்கொண்டபடி, எதிரிலிசோழ சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறிச் சபையார் நிலம் அளித்தார்கள் (377 of 18.)

14-ம் யாண்டில் இராசாதிராச வளநாட்டு திருக்கழுமலநாட்டுப் பிரமதேயமான திருக்கழுமலத்து இராசராச வளநாட்டு நடுவில்நாட்டு ஆனங்கூர் குன்றைக்கிழான் மகளும் பேத்தியுமான இரு பெண்களால் தங்களுக்கும் தங்கள் கணவர்களுக்கும் நன்றாக நந்தவனப்புறமாக நிலம் அளிக்கப்

பெற்றது. அந்நிலங்கள் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மேல்மலே பழையனூர்நாட்டு பழையனூரும், சுற்றமலேவளநாட்டு வெண்ணிக்கூற்றத்துப் பெருமூரும், இராசராசவளநாட்டு மேட்டூர்நாட்டு ஒழுகரை என்கின்ற குலோத்துங்கசோழநல்லூரும் ஆம் (364 of 18). அதேயாண்டில், அரசசுற்றமான எதிரிலிப்பெருமாள் என்பார் கோயிலுக்கு வைத்த நிபந்தத்தை நந்திமங்கலம் கிழான் சூரியதேவன் அபகரித்துக்கொள்ள முறைப்பாடுண்டானபோது, கணக்கனும் சபையோரும் சேர்ந்து நிலத்தைமீட்டு அளித்தனர் (364 of 18).

17-ம் யாண்டில் ஆளுடைய பிள்ளேயாருக்குக் குலோத்துங்கசோழ, சதுர்வேதி மங்கலத்துச் சபையார் நந்தவனத்திற்கும் அதன் பராமரிப்புக் குமாக நிலம் அளித்தார்கள். (378 of 18)

27-ம் யாண்டில் ஆளுடையபிள்ளேயார் கோயிலுக்காக ராசாதிராச வளநாட்டு திருவாலியான எதிரிலி சோழசதுர்வேதிமங்கலத்துத் திருமுல்லே வாயில் நிலங்களே இறையிலியாக அளித்தது (383 of 18.)

**இராசராசன் III: கி. பி. 1216.**

இவன் மூன்ரும் குலோத்துங்கன் மகன். தகப்பனைப்போலச் சிறந்த வீரமுடையவன் அல்லன். அதனல், சுந்தரபாண்டியன் படையெடுத்து

வந்தான். தன் மாமனை கோசளன் உதவியால் போரைவென்ருன். இவனுடைய ஆட்சி இரண்டாம் யாண்டில் ராசாதிராச வளநாட்டுத் திருக்கழுமலத்தைப்பற்றியும், இராசராசேசுரமுடைய திருக்கோயிலைப்பற்றியும், குலோத்துங்கன் 35-ம் யாண்டு குறிப்புக்கள் மீண்டும் எழுதப் பெற்றுள்ளன (368 of 18).

8-ம்யாண்டில், ராஜாதிராஜ வளநாட்டுத்திருவாலியான மும்முடிச்சோழ சதுர்வேதி மங்கலத்துப் பனங்குடியில் நிலம் விற்றமையும், திருத்தோணிபுரம் உடையார்க்கு நிலம் இறையிலியாக அளித்தமையும் குறிக்கப் பெறுகின்றன. இதில் நெறியுடைச் சோழமூவேந்த வேளான் என்ற அதிகாரி குறிப்பிடப்பெறுகிருன் (392 of 18).

17ம் யாண்டு 258ம் நாள், தோணிபுரத்துத் திருக்கோயிலுக்கு ஆளுடைய நாயனர் பருகப் பொன் வட்டில் அளிக்கப்பெற்றது (362 of 18).

**கோப்பெருஞ்சிங்கன் III: கி. பி. 1243.**

இவன் பல்லவ வம்சத்தைச் சேர்ந்தவனுகக் கருதப்படுகிருன். III-ம் இராஜராஜனிடம் சிற்றரசனுகத் தொண்டைமண்டலத்தை யாண்டுவந்தான். சோர்வுபார்த்துத் தம்முடி மன்னனேடு சண்டையிடத்தலைப்பட்டான். கி. பி. 1243ல் சகலபுவன சக்ரவர்த்திகள், அவனியாளப் பிறந்தான் முதலிய

பல விருதுகளைச் சூடிக்கொண்டான். இவன் ஆட்சியாண்டு பத்தொன்பதில் ஜயங்கொண்ட சோழவளநாட்டுக் கூடலூரான் ஒருவனுல்வெண்ணி யூர்நாட்டு ஒலையாமங்கலம் என்னும் கிராமம் வாங்கி யளிக்கப்பெற்றது. (394, 395 of 18). தானும் திருத் தோணிபுரமுடைய நாயகர்க்கு நிலம் விட்டான் (391 of 18). திருக்கை கோட்டித் திருப்பதிய மோது வார்க்கு இறையிலியாக நிலம் அளித்தான்.

**வீரவிருப்பண்ண உடையார்:**

கி. பி. 1377க்குப்பின் புக்கண அரசர் விஜய நகரம் என்ற பட்டணத்தை யுண்டாக்கினர். அவருக்குப்பின் அவர் மகன் இரண்டாம் அரிகரன் பட்டம் ஏற்றான். தென்னாட்டுப் பிரதிநிதியாக வீரவிருப்பண்ண உடையாரை நியமித்திருந்தான். இவர் சகம் 1315ல் தில்லைவிடங்கநல்லூரிற் சில பட்டர்களுக்கும் சீகாழியிலுள்ள திருநெறி மாளிகை மடத்துக்கும் மடப்புறமாக நிலம் விட்டார். அக்கல் வெட்டு வருமாறு:-

**ஸ்வஸ்தி ஸ்ரீமன் மஹா மண்டலீச்வரன் பூருவ தெக்ஷிண பச்சிம உத்திராதிபதி ஸ்ரீ வீரஹரிஹர ராயன் குமாரன் ஸ்ரீ வீரவிருப்பண உடையார் பிருதிவிராச்சியம் செல்லாநின்ற சகாப்தம் 1315ன்மேல்—துந்திபி வருஷம் மார்க்கசிர சுத்த பஞ்சமியும் சுக்கில கார்த்திகை மாதம் 20-ம்தேதி, சோழமண்டலத்து காவேரிக்கும்கொள்ளிடத் துக்கும் நடுவுப்பட்டபற்று ராஜாதிராச வளநாட்டு**

கிழக்கு வடகாலனுதாரத்தி[ல்] தில்லைவிடங்கநல்லூர் அடைப்பின்படி நிலம் 60-வேலிக்கு......நாயனுர் ஆளுடைய பிள்ளையார்க்கு நிலம் ......140, மாவும் ஆபஸ்தம்ப சூத்திரத்து கமுகை அருணகிரி சிவற்கு இவ்வூர் நத்த முள்பட மடப்புறம் நிலம் 20-மா......இந்த கோத்திரத்து இந்த சூத்திரத்து ராமநாத பட்டற்கு பிரதான தண்டிற்கு கூலிக்கு மா 20, சீகாழி திருநெறி மாளிகை மடத்து முதலியார்க்கு மடப்புறம் மா20, பாரத்துவாசி திருஞான சம்பந்த பண்டிதற்கு பூதான தண்டிறையிலிருக்கு மா 20, தேவகன்மி காசியபன் காழிக்கற்பக பட்டற்கு பூதான தண்டிறைக்கு மா 20, ஆக மா தூயலிஞல் ......20 இந்நிலம் (இந்நிலம்) இருநூற்கு நாற்பதுமாவும் சர்வ மான்யமாகச் சந்திராதித்தவரையும் நடத்திக்கொளள. இதுக்கு விரோதஞ் செய்தாருண்டாகில்......[கல்லிலும்] செம்பிலும் வெட்டிக்கொள்ள; இப்படிக்கு தர்ம சாதனப் பட்டயம் குடுத்தமைக்கு. *(373 of 18.)*

சகம் 1319ல் ஈசுவர வருஷம் பங்குனி மாதம் மண்டபத் திருப்பணிக்காகத் தனிப்பட்ட ஒருவன் நிலம் அளித்திருக்கிருன்.

**கிருஷ்ணதேவராயர்: கி. பி. 1509.**

இவர் விஜயநகரத்தரசர். பெருவீரர். 'வீரப்ரதாப கிருஷ்ணதேவமகாராய' என்று சிறப்பிக்கப் படுகிருர். மணப்பகுதியாக ஆண்டுதோறும் பத்துப் பொன் கோயிலுக்கு, வாடகை கட்டிவர உத்தர விட்டிருக்கிருர்.

**வேங்கடதேவராயர்** கி. பி. 1613.

இவர் சகம் 1520ல் ஆபதுத்தாரணர் அபிஷேகத்திற்காக நிலம் அளித்திருக்கிறார்.

**பிறகல்வெட்டுக்கள்:**

கோடல் வசவன நாயக்கன் மகன் இராமப்ப நாயக்கன் நிலம் விட்ட செய்தியை அறிவிப்பது (399 of 18). இன்னாது என்றறியமுடியாத கல்வெட்டுக்கள் பலஉள்ளன. அவற்றில் 369 of 18 கல்வெட்டு திருவாலி என்னும் மும்முடிச் சோழ சதுர்வேதிமங்கலத்து நிலம்விட்டசெய்தி குறிப்பிடுகிறது. 370 of 18 என்ற கல்வெட்டு சகம் 1313-ல் பிரஜாபதி ஆண்டு மகர மாதம் திருதிகை வெள்ளி, சதயநாள், திருஞானசம்பந்தர் மடத்திற்கு நிலம் விட்ட செய்தியை அறிவிக்கிறது.

371 of 18 என்ற கல்வெட்டு சகம் 1300ல் நிலம் விட்ட செய்தியையும், 372 of 18 என்ற கல்வெட்டு சித்தார்த்தி ஆண்டு துலாமாதம் செவ்வாய்க்கிழமை தேவதானமாக நிலம்விட்டசெய்தியையும் அறிவிக்கிறது.

384 of 18 ஆளுடைய பிள்ளையார் பூசைக்காக நிலம் விட்டதையும், 385 of 18 கல்வெட்டு ஆரனூர் இணச்சியப்ப அகர வல்லபன் மூன்று தூண்களை அளித்த செய்தியையும், 386 of 18 ஆளுடைய

பிள்ளையார் கோயில் திருப்பணிக்காகவும், நந்த வனப்புறமாகவும், நிலம் விட்டசெய்தியையும், அறிவிக்கின்றன.

396 of 18 கல்வெட்டு சகம் 1410ல் கோனேரி தேவமகாராஜா என்பவர் சீகாழிக் கோயிலுக்கு நிலம் விட்டார் என்பதை அறிவிக்கிறது. இவர் யார் என்பது அறியச்சான்று ஒன்றும் இல்லை.

401 of 18 கல்வெட்டில், விட்டலதேவமகாராஜா முதலிய விருதுகள் குறிக்கப்படுகின்றன. இவ்விருதுகள் மேலைச்சளுக்கிய மன்னர்களது கவிகளிலும் காணப்படுமாதலால், சிதைந்த இக்கல்வெட்டு அவர்களுடையதாக இருக்கலாமோ என்று ஐயப்பட இடமுண்டு.

இத்தலத்தில் பாண்டியரைப்பற்றியதான கல்வெட்டுக்கள் ஒன்றும் இல்லாமலிருப்பது குறிப்பிடத்தக்கது.

# வைத்தீஸ்வரன்கோயில்

# வைத்தீஸ்வரன்கோயில்

சீகாழி தாலூகாவில், காவிரியின் வடகரைத் தலங்களுள் இது சிறந்தது. இதற்குப் புள்ளிருக்கு வேளூர் என்பது பழம் பெயராகும். தென்னிந்திய புகைவண்டி நிலையமாக இருக்கிறது. பிரார்த்தனைத் தலங்களுள் இதுவும் ஒன்று.

**மறு பெயர்கள்:**

சடாயுவும், இருக்கு வேதமும், முருகனும், பூசித்தமையினால் புள்ளிருக்குவேளூர் என்னும் பெயருண்டாயிற்று. சடாயுவும், வேதமும், முருகனும், சூரியனும், செவ்வாயும், அம்மையும் பூசித்தமையால் முறையே சடாயுபுரி, வேதபுரி, கந்தபுரி, பருதிபுரி, அங்காரகபுரம், அம்பிகாபுரம் எனப் பல பெயர்களையுமுடையது. மக்கள் வினைதீர்த்தான் கோயில், தையனாயகிகோவில் என்றும் வழங்குவார்கள். சில தலங்களில், தலங்களின் அடியாகக் கடவுளுக்குப் பெயர் அமைந்திருக்கும்; இங்கு கடவுளினடியாகத் தலத்திற்குப் பெயரமைந்திருப்பது கருதத்தக்க சிறப்பாம்.

**கோயிலமைப்பு:**

கோயில், நகர் நடுவில் இருக்கிறது. நாற்புறமும் உயர்ந்த மதில்களால் சூழப்பெற்றது. கிழக்கிலும்

மேற்கிலும் பெரிய இராச கோபுரங்கள் இருக்கின்றன. சுவாமி வைத்தியநாதர்; அம்மை தையல் நாயகி. இருவர்க்கும் தனித்தனி ஆலயங்கள் உள்ளன. ஆலயத்தின் கீழ்த்திசையில் வைரவக் கடவுளும், மேல்திசையில் வீரபத்திரரும், தென் திசையில் கற்பக விநாயகரும், வடதிசையில் காளியும் காவல் புரிகின்றனர். இதனை,

> தெற்கிற் கணேசன் திகழ்மேற்கில் வைரவனூர்
> தொக்க வடக்கில் தொடர்காளி — மிக்ககிழக்(கு)
> உள்ளிருக்கும் வீரனையும் உற்றுப்பணிந் துய்ந்தோம்
> புள்ளிருக்கும் வேளூரிற் போய்.

என்ற தனிப்பாடற் செய்யுள் நன்கு விளக்கும்.

**உட்கோயில்கள்:**

ஆறுமுகக் குமாரர் கல்யாண மண்டபத்திற் கருகில் கிழக்கு நோக்கி இருக்கிறார். இக்குமரற்கு, குமரகுருபரர் என்ற பெயரும் உண்டெனப் பேரூர் புராண ஆசிரியர்கூறுவர். ஆவுடையம்மன் கோயில் வடக்குப்பிராகாரத்தில் சுவாமி கோயிலையொட்டி உள்ளது. கீழைக்கோபுரத்தை அடுத்து உட்பக்கமாகத் தலவிருட்சம் இருக்கின்றது. விருட்சம் வேம்பு. இப்பகுதி வேம்படிமால் எனப்படும். வேம்படிப் பெருமான் ஆதிவைத்தியநாதராதலின் இத்தலம் ஆதிவைத்தியநாதபுரி எனவும் வழங்கும்.

தையனுயகிகோயில் தெற்குப்பார்த்த சந்நிதி யாக அமைந்துள்ளது. அம்மையின் திருமுன்பு, சித்தாமிர்தத்தீர்த்தம் இருக்கின்றது.

வைத்தியநாதர் சந்நிதி மேற்கு நோக்கியது. இவர் புள்ளிருக்கு வேளூரான், புள்ளிருக்குவேளூ ரரன் என்று தேவாரங்களில் வழங்கப்படுகின்றூர்.

**உற்சவத்திருமேனிகள்:**

தெற்குத் திருமாளிகைப்பத்தியில் சிங்கார வேலர், ஐயனர், பிடாரி, மாரியம்மன், திரௌபதியம் மன், கங்காளர், கங்காவிஸர்ஜனர், பிச்சாடனர், பிரதோஷ விநாயகர், சண்டீசர், அங்காரகன் முதலியவர்கள் இருக்கிறூர்கள். அங்காரகன் இத் தலத்திற்கு மிகச்சிறப்பானவர். மிக அழகான சோமாஸ்கந்தர் திருவுருவம் தென்மேற்கு மூலையில் இருக்கிறது.

**நவக்கிரகங்கள்:**

சூரியனும் அங்காரகனும் தனியே இருப்பதால் இவர்கள் ஒழிந்த மற்றை எழுவரும் உள்ளனர். கோளிலித்தலங்களுள் இதுவும் ஒன்று.

**சடாயு குண்டம்:**

இது, தெற்குப் பிராகாரத்தில் இருக்கிறது. இராமன் சடாயுவைத் தகனம் செய்த இடம்.


குண்டத்தின் மேல் இராமர், இலக்குமணர், விசுவாமித்திரர், வசிட்டர், சடாயு ஆகியோர்களின் திருவுருவங்கள் இருக்கின்றன.

தலப்பெருமை:


இது அங்காரக க்ஷேத்ரம். முருகன் வேல் வாங்கிய இடம். தன்னிடம் வசிப்பார்க்கு எமவாதனை நீங்கும் இடம். பேய்பிசாசு பில்லி சூனியம் பிடித்தவர்கள் இங்கு வந்தால் அவை அகலும். பிறவிப்பிணி மருத்துவராகிய வைத்தியநாதப் பெருமான், தையல்நாயகி திருக்கரத்தில் தைல பாத்திரமும், அமிர்த சஞ்சீவியும், வில்வத்தடி மண்ணும் எடுத்துக்கொண்டுஉடன்வர 4448 வியாதிகளையும் தீர்க்கின்ற இடம். பிறக்கவும், இறக்கவும் முத்திதரும் தலம்.

தலவிசேடங்கள்:

நேத்திரப்பிடி சந்தனம்:- பச்சைக் கற்பூரமும் குங்குமப்பூவும், சமனிடை வைத்துச் சந்தனத்தில் அறைத்துச் செல்வமுத்துக் குமாரனுக்கு அர்த்தயாம பூசையில் சாத்தப் பெறுவது. இதனை அணிபவர்கள் இராஜ வசியத்தையும், நினைத்ததெல்லாம் எய்தும் பயனையும் பெறுவர். உண்பவர்கள் குன்மம் முதலிய நோய்கள் நீங்கப்பெறுவர்.



வேம்படிப்பெருமான்



சித்ஸாமிர்தத் தீர்த்தம்

**சடாயுகுண்டம்:**

என்றைக்கும் சாம்பல் வற்ருமல் இருப்பது. இதிலுள்ள நீற்றினை இட்டுக்கொள்வதால் எல்லா விதமான சரும நோய்களும் நீங்கும்.

**திருச்சாந்துண்டை:—** இதனை உண்பதால் எல்லாவிதமான நோய்களும் நீங்கும்.

சுக்லபட்சத்தில் நல்ல நேரத்தில்அங்கசந்தான தீர்த்தத்தில் நீராடி, நடுவிலுள்ள மண்ணை எடுத்து புதுப்பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, ஆலயத்திற்கு வருதல் வேண்டும். விபூதிகுண்டத்திலுள்ள விபூதியையும் இட்டு, சித்தா மிர்தநீரைத்தெளித்து, திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டே பிசைதல் வேண்டும். அதனை முத்துக்குமாரசாமி திருமுன்பு உள்ள குழியம்மிபில்இட்டு, ஆயிரத்தெட்டுதரம் திருவைந்தெழுத்தை ஓதி அறைத்தல் வேண்டும். மீண்டும் சிவசிந்தனை மறவாது கடுகளவாக உருட்டி தையல்நாயகி திருவடிகளில்வைத்து, அருச்சித்த பின்னர், சித்தாமிர்தத் தீர்த்தத்தோடு நியமமாக உண்ணல் வேண்டும்.

**தீர்த்தங்கள்:**

**சித்தாமிர்ததீர்த்தம்:** இது ஒவ்வொரு யுகத்திலும் கோக்ஷீரதீர்த்தம், இக்ஷுசார தீர்த்தம், சடாயு தீர்த்தம், சித்தாமிர்தத் தீர்த்தமென்று பெயர்

பெறுவது. சுந்தரன் என்னும் பிராமணனது வெண் குட்டமும், அங்காரகன் செங்குட்டமும் நீக்கியது. சிவத் துரோகியாகிய தக்கனது உடலும் தலையும் ஒன்று சேர்த்தது.

சதானந்தர் என்னும் முனிவர், நீராடிக் கடவுளைத் தியானிக்கும்போது பாம்பால் துரத் துண்ட தவளை ஒன்று அவர்மீது பாய்ந்தது. தியானம் கலைந்தது. முனிவர் சினந்து, என்றைக் கும் இத் தீர்த்தத்தில் தவளையும் பாம்பும் இல்லா தொழிக என்று சபித்தார். அதனால் இன்றைக்கும் தவளை இருப்பதில்லை. இதன் சுற்றில் இந்திர தீர்த்த முதலாக எட்டுத்தீர்த்தங்கள் இருக்கின்றன.

**கோதண்டதீர்த்தம்:**—இது தென்மேற்குமூலையில் இருக்கிறது. துசீலன் என்னும் ஒரு சித்தன் இதன் கரையில் வசித்தமையால், சித்த தீர்த்த மென்றும் பெயருண்டு. அவனுக்குக் குமரகண்ட வலி நீக்கியதும் இதுவே. சடாயுவுக்கு இராமன் தர்ப்பணம் செய்ததும் இத் தீர்த்தத்திலேயே. பங்குனி உத்திரத் திருநாளில் ஸ்ரீ நடராசப்பெரு மான் இதில்தீர்த்தம் வழங்குவர். முடி எடுப்பவர்கள் இதில் நீராடிய பிறகே சித்தாமிர்த தீர்த்தத்தில் நீராடவேண்டும்.

**கோதண்டதீர்த்தம்:**- அதிதெய்வம் இராமர். காவற்றெய்வம் இலக்குமணர். விருட்சம் வன்னி.

கௌதமதீர்த்தம்:- அதிதெய்வம்வாயுபகவான். காவற்றெய்வம் சந்திரன். விருட்சம் மாமரம்.

வில்வதீர்த்தம்:- அதி தெய்வம் இந்திரன் காவற்றெய்வம் தண்டபாணி. விருட்சம் வில்வம்.

முனிவர்தீர்த்தம்:- அதிதெய்வம் சந்திரசேகரர். காவற்றெய்வம் கருடன். விருட்சம் ஆலமரம்.

அங்கசந்தானதீர்த்தம்:- அதிதெய்வம் வைத்திய நாதர். காவற்றெய்வம் அஸ்திரதேவர். விருட்சம் விளா.

**தலவிருட்சம்:**

இத்தலம் கிரேதாயுகத்தில், கதம்பவன மென்றும், திரேதாயுகத்தில் வில்வவனமென்றும், துவா பரயுகத்தில் வகுளவனமென்றும், இந்த யுகத்தில் நிம்பவனமென்றும் பெயர் பெறுவதால், முதல் யுகத்தில் உள்ள கடம்ப விருட்சமே மற்றைய மூன்று யுகத்திலும் மாறி மாறி இப்போது வேம்பாக இருக்கிறது.

**மண்டபங்கள்:**

ஆஸ்தான மண்டபம், அலங்கார மண்டபம், சித்திர மண்டபம், வசந்த மண்டபம், தீர்த்தவாரி மண்டபம், களஞ்சிய மண்டபம் முதலிய பலமண்ட பங்கள் உள்ளன. தட்டஞ் சுற்றி மண்டபமே

ஸ்ரீ சண்முகவிலாசப் பிரசார சபா மண்டபமாக இப்போது விளங்குகிறது.

**சிற்பங்கள்:**

பழைய பல்லவச் சிற்பங்களும், யாளங்கள் நிறைந்த தூண்களும், திருவுருவங்களும் மிகுதியாக உள்ளன. அம்மன் கோயில் தட்டஞ்சுற்றி மண்டபத்தில் கீழ்ப்பக்கத்துத் தூண்களில் பிரதாபசிம்ம மகாராசாசாயுபு அவர்களின் படிவமும், பத்தாவது மகாசந்நிதானமாகிய சிவஞான தேசிகர் அவர்கள் திருவுருவமும் உள்ளன. மேற்குப்பக்கத்துத்தூண்களில் ஸ்ரீ மல்லர் ஸ்ரீ காடேராவ்அவர்களின் படிவமும், ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் திருவுருவமும் இருக்கின்றன. சண்முகவிலாசப்பிரசார மண்டபத்தில் நடராஜப்பெருமான் திருவுருவமும், சோமாஸ்கந்தர் சந்நிதியில் அம்மை திருவுருவமும் உள்ளன. இவற்றின் மேற்பக்கத்து அந்தந்தப் பெயர்கள் பொறிக்கப்பெற்றுள்ளன.

**பூசையும் விழாக்களும்:**

நாடோறும் ஆறு காலபூசைகள் நடைபெறுகின்றன. முறைகாமிகவிதி. பிரமோற்சவம்பங்குனி மாதத்தில் நடைபெறும். அதில் ஐந்தாந் திருநாள் மிகச்சிறப்பானது. அன்று செல்வமுத்துக்குமாரசுவாமி வைத்திய நாதரைத் தியானித்துச் செண்டு பெறுங் காட்சி மிகச்சிறப்பானது. முத்துக்குமர

சுவாமிக்குத் தைமாதம் திருவிழாநடைபெறும். தை மாதக் கடைசிச்செவ்வாய் தீர்த்தவாரி. திருவிழாக் காலங்களில் இருமருங்கும் சுவாமியும் அம்பாளும் இடையில் முத்துக்குமரசுவாமியும் எழுந்தருளுங் காட்சிகண்ணுதற்பெருமானின் கயிலை இருப்பைக் கருத்துக்குக் கொண்டுவரும்.

செல்வமுத்துக்குமாரருக்கு ஒவ்வொரு மாதக் கார்த்திகை தோறும் சிறப்பான அபிஷேகம் நடைபெறும். அன்று பெருமான் பலவூரன்பர்கள் அன்பு மேலீட்டால் கொண்டுவந்த பாலிலும், தேனிலும், பன்னீரிலும் மூழ்கி விளையாடுவர். திருமேனியிற் பால்பட்டு வழியும்போது பார்க்கும் அன்பர்களின் தூய்மையான மனம் வழிந்தோடுவது போல இருக்கும். ஒவ்வொருநாளும் முத்துக்குமாரருக்கு அர்த்தயாமம் நடந்த பிறகுதான் சுவாமி யம்பாளுக்கு அர்த்தயாமம்நடைபெறும். அர்த்தயாமத்தில் புனுகுச்சட்டம் பிழிந்து கூட்டியதிருநீறு முத்துக் குமாரருக்குச் சாத்தப் பெறும். அதற்குப் புழு காப்பு என்று பெயர். ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையிலும் ஆட்டுவாகனத்தில் அங்காரகமூர்த்தி எழுந்தருளுவார். அம்மைக்கு ஆடிப்பூரம் நவராத் திரி உற்சவங்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

**சுற்றியுள்ள ஸ்தலங்கள்:**

திருப்புன்கூர், திருக்கண்ணார் கோயில் (குறுமாணகுடி), சீகாழி முதலிய பாடல்பெற்ற தலங்கள்

மிக அண்மையில் உள்ளன. அவற்றுள் திருப்புன்கூர் நந்தனுருக்கு அருள் செய்த இடம் என்பதை நாடறியும்.

**அன்பர்கள்:**

**திருஞானசம்பந்தர்:—** இவர்கள் திருக்கண்ணூர் கோயிலை வணங்கிக்கொண்டு, புள்ளிருக்கு வேளூருக்கு எழுந்தருளினர்கள். 'கள்ளார்ந்த பூங் கொன்றை' என்னும் சீகாமரப்பண்ணை அருளிச் செய்தார்கள். இதில், சம்பாதி சடாயு என்ற இருவரும் ஒரு யோசனை தூரம் சென்று, பூக்கொணர்ந்து வழிபட்டார்கள் என்பது விளக்கப்படுகின்றது. 'தீவினைக்கோர் மருந்தாவான்' என்பதனுள் இறைவன் பெயர் குறிப்பிடப்படுகிறது.

**திருநாவுக்கரசர்:—** இவர்கள் இத்தலத்திற்கு எழுந்தருளியதாக வரலாற்றுக் குறிப்பிற்காணவில்லை. ஆனாலும், 'ஆண்டானையடியேனை' என்னுந் தாண்டகமும், 'வெள்ளெருக்குமரவும்' என்னும் குறுந்தொகையும் அடங்கன் முறையில் இடம் பெற்றுள்ளன.

**அருணகிரிநாதர்:—** இவர்கள் இத்தலத்தைப் பற்றிப் பாடிய பாடல்கள் பதினான்கு. அவற்றுள் "உரத்துறைபோத" என்னும் பாடல் "வயித்திய நாதப்பெருமானே" என்று முடிகிறது. இங்ஙனம் இப்பாடலில் வயித்திய நாதர் என்று இறைவன்

பெயரை நினைவூட்டிய இவர்கள் "பாடகச்சிலம் பொடு" என்னும் பாடலில் "தையல்நாயகிக்கு நன் மகர்" என்கிறார்கள். இதனால் தையல்நாயகியும், வைத்தியநாதரும் ஒருசேர நினைவூட்டப்படுகிறார் கள். இவையிரண்டு பாடலும் நீங்க ஏனைய பன்னி ரண்டுபாடல்களும் வேளூர் என்னும் தலப்பெயரை ஆட்சியில் உடையன. இவற்றுள் 'அதிகராய்ப் பொருளீவார்' என்ற பாடலை 'வேளூர்மேவிய தம்பிரானே' என்று பாடங்கொண்டு வேளூர்க்குச் செலுத்துவாரும் உண்டு.

வடுகநாத தேசிகர்:— இவர் காத்தியாயன ரிருப்பு என்னும் ஊரிற் பிறந்தவர். வேளூர்த் தலபுராணம் இவரால் இயற்றப்பெற்றதே. அது 1133 திருவிருத்தங்களையுடையது.

சிவஞானதேசிகர்:-- தருமையாதீனத்தில் பத்தா வது குருமூர்த்தியாக விளங்கிய இவர்கள் அருட்பா என்னும் பெயரால் பல சிறு தோத்திரநூல்களை யியற்றியுள்ளார்கள். அவற்றுள் முத்துக்குமார சுவாமி திருவருட்பாவும் ஒன்று. அவர்கள்கவிகளிற் கனிவும் தெளிவும் இருக்கின்றன என்று சொல் வது மிகையாகும். அன்பு பழுத்த உள்ளம்அருள் கனிந்த கவிதையை யன்றி எதனைச்சொல்லும்.

குமாரகுருபர சுவாமிகள்:— இவர்கள் 4-வது குருமூர்த்தியான மாசிலாமணி ஞானசம்பந்தரிடம் உபதேசம் பெற்றவர்கள். வடநாட்டிலும் தமிழும்

சைவமும் பரவச் செய்தவர்கள். இவர்கள் இயற்றியது முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழ் என்னுங் கற்பனைகனிந்த நூலாகும்.

படிக்காசுத் தம்பிரான்:— தருமையாதீனத்து முனிவர்களில் ஒருவர். புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் இவரால் செய்யப்பெற்றது. பண்பாய பகர் சந்தம் அமைந்த பல பாக்கள் விரவத் தொடுக்கப் பெற்றது. இதில் "அடியார்கள் உய்ய உண்டைமருந்தளிக்கும் நீர் உமது மையலுக்கு மருந்தறியவில்லையே, ஊருக்கு வைத்தியன் தன்னுடம்புக்கு விரோதி என்றபழமொழிபோல ஆயினீர்" என நகைச்சுவை தோன்றக் கூறியுள்ளனர். இன்னும் இது போன்ற பல சுவையுள்ள பாடல்கள் இயற்றுதலில் இவர் வல்லவர்.

சிதம்பர முனிவர்:— இவர்களியற்றிய நூல் க்ஷேத்திரக்கோவைப்பிள்ளைத்தமிழ். அதில் முத்தப் பருவத்தில் முத்துக்குமாரரைத் தோத்தரித்திருக்கின்றார்கள். இச் செய்யுளில் முருகன் கவிசொல்லென்று ஆணையுந்தந்து அடியெடுத்துக் கொடுக்கப் பாடியபுலவர் அனைவர் பெயரும் குறிப்பிடப் பெற்றுள்ளன.

காளமேகப்புலவர்:— இவரையறியாத தமிழ் மக்கள் இருக்க முடியாது. விகடகவி. இவர்பாடிய தனிப்பாடல்கள் பல. அவற்றுள் இருபதுக்கு மேற்பட்ட பாடல்கள் புள்ளிருக்கு வேளூரைப் பற்றியன.

**இராமலிங்கசுவாமிகள்:—** வடலூர் சத்திய ஞானசபையை நிறுவியவர்கள். ஜீவகருணையும் தயையுமே தன்கொள்கைகளாகக் கொண்டவர்கள். மக்களிடம் சமரச ஞானம் பரவத்தக்க வழிசெய்த வர்கள். வேளூர் வைத்தியநாதர் பதிகம் செய்தவர் கள். இதில் அப்போது கட்டளை விசாரணையாக இருந்த உலகநாத முனிவர் அவர்களையும் பற்றிக் குறித்துள்ளார்கள்.

**உலகநாத முனிவர்:-** பதினைந்தாவது குருமூர்த்தி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிகரிடம் உபதேசம் பெற் றவர்கள். வடலூர் ராமலிங்க சுவாமிகள் இவர்களை வைத்தியநாதர் பதிகத்துப் பன்னிரண்டுபாடல்களி லும், 'தவசிகாமணி உலகநாதவள்ளல்' என்று குறிக்கின்றார்கள்.

**முத்துக்குமாரசாமித்தம்பிரான்:—** வேளூர்கட்டளை விசாரணையிலிருந்த காலத்து இவர்கள் செய்த தேவாலயப்பணிகள் பல. தேவஸ்தானவருவாய் பெருகப்பெரிதும் உழைத்தவர்கள் இவர்களே. இவர்களைப்பற்றிய கல்வெட்டுக்கள்* சில உள்ளன.

**அட்சயலிங்க சுவாமிகள்:—** சிறந்த சாத்திர தோத்திரப் பயிற்சியாளர். "அட்டமா சித்திவல்ல அக்ஷயலிங்கசாமி" என இவர்களைப் பட்டயம்ஒன்று புகழ்கிறது. வேளூர் விசாரணையில் இவர்கள் இருந்த காலத்து, சொத்து அதிகமில்லாமையால் பூசைக்கே

---

* இந்நூல் 17-ம் பக்கம் காண்க.

போதுமான வருவாய் இல்லாமலிருந்தது. பயிர் செய்யக் காளை முதலிய சாதனங்கள்கூடச் சேகரிக்கமுடியவில்லை. மடத்திலிருந்த ஒருகாளையை ஒருபக்கம்பூட்டி மற்றொருபக்கத்து நுகத்தடியைத் தம் கழுத்தில் வைத்துக்கொண்டு உழுதார்களாம். அவ்வழிச் சென்ற அரசன் மனம் கவன்று ஆவன பல செய்தான். இவர்கள்தான் வடுகநாத தேசிகரைக் கொண்டு தலபுராணம் பாடுவித்தவர்கள்.

பழமொழி:

வினைதீர்த்தான் கோயில் விளக்கழகு என்று ஒரு பழமொழி இந்தப்பக்கத்து வழங்கிவருகிறது.

## கல்வெட்டுக்கள்

இவ்வளவு சிறந்த இத்தேவாலயத்தில் போதிய கல்வெட்டுக் குறிப்புக்கள் இல்லை. மக்கள் தம் அன்புமேலீட்டால் அவ்வப்போது திருப்பணி செய்துவந்திருக்கிறார்கள். அதனாலேயே சில கல் வெட்டுக்கள் இடம் மாறியும், புதையுண்டும், பொடி யுண்டும் போயினபோலும். இருக்கின்ற சில கல் லெழுத்துக்களும் மிகப்பிற்காலத்தன. மகாமண்ட பத்து வடபக்கத்தின் உட்புறச் சுவரில் ஆங்காங்குச் சிறிது சிறிதாகக் காணப்பெறும் தொடர்ச்சியற்ற எழுத்துக்களின் குறிப்பால் கி. பி. 1120 முதல் 1136வரை ஆண்டவிக்கிரம சோழன் காலத்தனவாக

இருக்கலாம் என்று எண்ணப்பெறும். முதலிரண்டு பகுதிகளிற் காண்பன மெய்க்கீர்த்திப் பகுதிகள். இதனுல் இவைபோலப் பல்முப கல்வெட்டுக்கள் இருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்கலாம்.

அரசாங்கத்தால் படியெடுக்கப்பெற்றவையும், பெருதனவுமான கல்வெட்டுக்கள் எட்டு. அவற்றில் தஞ்சை மன்னனுகிய அச்சுதப்ப நாயக்கன் காலத்தது ஒன்றும், துளசாஜி மன்னனுடையன இரண்டும், விக்கிரமசோழனது ஒன்றும், ஸ்ரீசக்கோலோ தேவமகாராசாவினது ஒன்றும், பெயரும் காலமுந் தெரியாதன மூன்றும் ஆக எட்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் காலத்தால் முற்பட்டது வீர பாண்டியனுடையதே.

விக்கிரம சோழன் : கி. பி. 1117.

இவன் முதற் குலோத்துங்கன் மகன். இவன் இக்கோயிலுக்குச் செய்த பணி பெரிதாக ஒன்றும் இதனுல் விளங்கவில்லை யாயினும், இவனைப்பற்றின புகழாக 'திருவடி இரண்டும் தன்முடியாகத் தென்னவர்சூட, முன்னும் மனுவாறுபெருக, கலியாறு வறப்ப, செங்கோல் திசைதொறும் செல்ல, வெண்குடை இந்நிலவளாகம் எங்கணும் தங்க, வெண்ணிலாத்திகழ ஒரு தனி மேருவில் புவியிற் பொன்னேமியளவும் தன்னேமி நடப்ப, விளங்கு ஜயமகளை இளங்கோப்பருவத்து சக்கரக்கோட்டத்து வீரத் தொழிலால் வதுமணந்தான்' என்று கூறப்பெற்றுள்ளது.

**வீரராசேந்திர பாண்டியன் :**

பாண்டியர்களில் இப்பெயர் கொண்டார் யார்? எக்காலத்திருந்தார்? என்பன அறியக்கூடவில்லை. இக் கல்வெட்டு திருவம்பலமுடையானை தொண்டைமானல் திருப்புள்ளிருக்கு வேளூர் நாயனருக்கு இறையிலி விடப்பட்டது என்பதனை யறிவிக்கிறது.

**அச்சுதப்ப நாயக்கர் :**

இவருக்குப் புண்ணியமாக அழகப்பெருமாள் பிள்ளை என்பவர் சுவாமி சிதம்பரீசர்க்கு மகாசிவ ராத்திரி யபிஷேகத்திற்கு ஈடாக மண்ணிப்பள்ளம் என்ற கிராமத்தில் நிலம்விட்டு இறையிலி செய்தார். (423 of 1918)

**துளஸாமகாராசா :** கி. பி. 1767.

இவர் சகம் 1689-ல் தஞ்சையை யாளுகின்ற காலத்தில் சீகாழிச் சீமையை அரசப்பிரதிநிதியாயிருந்து ஆண்டவர் ஸ்ரீமல்லர் ஸ்ரீகாடே ராவ் அவர்கள். அப்போது தருமபுரத்தில் மகாசந்நிதானமாக இருந்துவந்தவர்கள் 10-வது குருமூர்த்தி சிவஞான தேசிகர் அவர்கள். வேளூர்க் கட்டளை விசாரணையிலிருந்தவர் முத்துக்குமாரசாமித் தம்பிரானவார்கள். அப்போது வேளூர் 2-ம் பிராகாரத்து நாற்புறத்து மதிலும், திருமாளிகைப்பத்தி மண்டபங்களும், அம்மன் சந்நிதி தட்டஞ்சுற்றி மண்டபமும், திருமாளிகைப் பத்தியின்மேல் வெளவால்

நத்தி மண்டபமும் கட்டி நிறைவேற்றப்பட்டன.* (421 of 1918). அடுத்த கல்வெட்டு சகம் 1692-ல் கி. பி. 1770-ல் சித்தாமிர்தத் தீர்த்தக்கரை நான்கு பக்கங்களும் நீராழிமண்டபமும் திருப்பணிசெய்யப் பெற்றதை யறிவிக்கும்.

**பெயர் குறியாத கல்வெட்டு:**

வேளூர் தேவஸ்தானகிராமங்கட்கு பாய்ச்சல் காலாக இருப்பது முடவனூறு. இந்த ஆறு பழவாற்றில் ஆதமங்கலத்திற்கு அருகாமையில் பிரிகிறது. இதிலிருந்து புங்கனூர் சமீபத்தில் சட்டைநாதபுரம் வாய்க்கால் பிரிகிறது. இந்தவாய்க்கால் கண்வாய்க்கு நீளம் முப்பத்தைந்து அங்குலமும், அகலம் எட்டங்குலமுமாக வைத்துக் கட்டினூர்கள் என்பதை யறிவிக்கிறது. இன்னும் பெரிதாகக் கண்வாய் வைத்துவிட்டால் தேவஸ்தான நிலங்களின் பாய்ச்சல்கெடும். ஆதலால் இக்கல்வெட்டை மாற்றவும் புதுக்கவும் முடியாதபடி கலியுகத்தும் கண்கண்ட தெய்வமாகிய செல்வமுத்துக்குமாரசாமி கருப்பக்கிருக நிலைப்படியில் செதுக்கிவைத்தனர். இங்கு அங்குலம் என்பது தச்சுமுழஅளவைப்படி யுள்ள அங்குலம். (419 of 1918).

கிராம அளவை செய்தபோது ஒரே யளவுள்ள கோலைப் பயன்படுத்தாமையால், இன்ன கிராமம்

---

* இந்நூல் 17-ம் பக்கம் பார்க்க.

இத்தனை யடியுள்ள கோலால் அளக்கப்பெற்றது என்பதனை யறிவிக்கிறது இக்கல்வெட்டு.

| | | | |
|---|---|---|---|
| தோட்டமானியம் அளந்தகோல் | 18 | அடி | நீளம் |
| மருத்தூர் அளந்த கோல் | 16 | ,, | ,, |
| கொண்டத்தூர் ,, | 15 | ,, | ,, |
| மாகாணம் கிராமம் ,, | 14 | ,, | ,, |

**சக்கோலோதேவமகாராசா :**

இவன் ஆரியவசவ கங்கணமதியாத மணவாளன் தந்தருளிய சக்கோலோ எனப்படுவதால் இவன் மணவாளன் மகனுக இருக்கலாம். இவ்வரசன் இவ்வூருக்கு ஆறு யானைகளை விட்டான்.

**கொடிமரத்தின் பீடத்தில் உள்ள கல்வெட்டு :**

சகம் 1802-ல் (கி. பி. 1980-ல்) தருமபுர ஆதீனம் 16-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சச்சிதாநந்த தேசிகரருள்பெற்ற மாணிக்கவாசக தேசிக னநுக்கிரகம்பெற்ற சோமசுந்தரத் தம்பிரான் கட்டளை விசாரணை செய்கின்றபோது சுவாமி அம்மன் துவஜஸ்தம்பங்கள் செப்பனிடப்பெற்று, குறடு கட்டி, தங்கம் வெள்ளி பூசப்பட்டன.

# குறுக்கை

# குறுக்கை.

தஞ்சை ஜில்லா மாயூரந் தாலூகாவில், உள்ளது. நீடூர் புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் ஐந்துகல் தொலைவில் இருக்கிறது. கி. பி. 1906ல் ஜனத்தொகை 1019 ஆக இருந்தது என்றும், பெரும்பான்மையான மக்கள் கேசிக பிராமணர்கள் என்றும், கோயில் வருமானம் சுமார் 4000ரூபாய் என்றும் தஞ்சை ஜில்லா கெஸட்டியர் கூறுகிறது.

**மறுபெயர்கள்:**

கடுக்காய்மரம் தலவிருட்சமாதலின் கடுவனம் எனவும், இறைவர் அம்மையாரைப்பிரிந்து யோகம் செய்த இடமாதலின்யோகீசபுரம்எனவும், காமனைத் தகித்த இடமாதலின் காமதகனபுரம் எனவும், இலக்குமியினது கம்பத் (நடுக்கத்)தைப் போக்கியதாகலின் கம்பகரபுரம் எனவும், தீர்க்கவாகு முனிவர் இத்தலத்து வந்து இறைவனை அபிடேகித்தற்குக் கங்கா நீரினை விரும்பித் தனது கரங்களை நீட்டக் கரங்கள் நீளாது குறுகினமையால் குறுக்கைஎனவும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

**கோயிலமைப்பு:**

மேற்கு நோக்கிய சந்நிதி. இரண்டு பிராகாரங்கள் உள்ளன. அம்மைகோயில் தனி ஆலயமாகத்

தெற்குநோக்கி இருக்கின்றது. முன்புறம் பெரிய வௌவால்நத்தி மண்டபம் இருக்கிறது. இதன் தலவிருட்சம் உட்பிராகாரத்தில் இருக்கிறது.

மூர்த்திகள்:

இறைவன் வீரட்டேசுவரர். இறைவி ஞானம்பிகை. எழுந்தருளும் திருமேனியாகிய காமதகன மூர்த்தியின் பெயர் யோகீசுவரர். அம்மை பூரணி. மன்மதன் இரதி திருஉருவங்களும் அங்கு உள்ளன. இவையன்றி, எல்லாச் சிவாலயங்கட்கு முள்ள கணபதி முதலிய பரிவார தேவதைகளும்,குறுக்கை விநாயகர், குறுக்கை முனிவர் இவர்கள் திருவுருவங்களும் உள்ளன.

தலப் பெருமை:

இறைவனது வெற்றிவிளங்கும் வீரட்டத் தலங்களுள் ஒன்று. இறைவன், தாட்சாயணியைப் பிரிந்து யோகத்துக்கு எழுந்தருளியதலம். இங்குள்ளசபை காமனங்காசனி சபை. சம்புவிநோத சபைஎன வேதாரணியபுராணம் கூறுகிறது.

புராணவரலாறு:

யோகீசுவரர்:— சிவநிந்தனை புரிந்த தக்கன் செய்த யாகத்திற்கு, 'தந்தை என்ற உரிமையினல் அம்மையார் செல்ல விடை கேட்டார்; அகம்பிரம

ளுகிய அவன் செய்யும் யாகத்திற்கு நீ செல்லலாகா தென்று தடுத்தார். அம்மை உடன்படாதது கண்டு தானும் விடையேறிப்புறப்பட்டார். யாக சாலையை அடைந்தார். தக்கன் மதியாமைமட்டு மன்றி தேவர்களேயும் மதிக்கக்கூடாதென்று தடுத் தான். மனம் நொந்த அம்மையார், யாகம் அழிக நீயும் அழிக எனச்சபித்தார். இறைவன் நெற்றிக் கண்ணிலிருந்து வீரபத்திரப்பெருமான் தோன்றி யாகத்தை அழித்தார். பலர் உயிர் துறந்தனர். இறைவன் மறக்கருணே அறக்கருணேயாக மாறிக் கடுக்காய் மர நிழலில் எழுந்தருளி இருந்து யோகீ சுவரர் ஆனர்.

அம்மையார், இமவானுக்குப் பெண்ணுய்ப் பிறந்து, இறைவனேயே மணந்து கொள்ளக் கடுந் தவம் இயற்றினர். இறைவன் வெளிப்பட்டு, மணம் செய்துகொள்வோம் என்று கூறி மறைந்தார்.

**மன்மதனே எரித்தது:—** அம்மையப்பர் இருவரும் தனித்தனியே யோகத்திருப்பாராயின் உலகில் என்ன நடக்கும்? அவனன்றி ஓரணுவும் அசையா தன்றே? எல்லாரும், காமநுகர்ச்சி மறந்து, துறவி யாயினர். சூரபதுமனுடைய துன்பம் பொறுக்க லாற்ருத தேவர்கள், இந்திரனிடம் முறையிட அவன் குருவை வினவினன். அவர், 'இறைவனும் இறைவியும், யோகத்திலிருப்பதால் இந்த நிலே வந்தது; மன்மதனேக்கொண்டு மனத்தை மாற்ற வேண்டும்' என்ருர். கேட்ட இந்திரனும் அவ்வாறே

அனுப்ப, மன்மதன் தனது பூப்பாணங்களை ஏவினான். சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றும் தீ பரவியது. மன்மதன் மடிந்தான். பிடிசாம்பலாயினான்.

**காமன் உயிர்பெற்றது:—** இறைவன், தேவர்கள் வேண்டுகோட்காகப் பார்வதியை மணந்து கொண்டார். அப்போது கணவனை இழந்து வருந்திய இரதியின் வேண்டுகோளின்படி மன்மதனை மனைவிக்கு உருவனாகவும். மற்றவர்கட்கு அருவனாகவும் தோற்றுவித்தார்.

**தீர்க்கவாகு:—** இவர் இமயமலையில் தவஞ் செய்தவர். திருநீறுங் கண்டிகையும் நீங்காதவர் தவத்தைச் செய்தற்கு விரும்பிய தவமுனிவராகிய இவர் பலதலங்களை வணங்கிக்கொண்டு, குறுக்கை வந்தார். தமது வழக்கப்படி நீராடி, ஆகாய கங்கையை அள்ளிப், பெருமானுக்கு அபிஷேகிக்கக் கையை நீட்டினார். கைநீளவில்லை. விநாயகரிடம் சென்றார். வேண்டினார். விநாயகர் இத்தலத்து யாமும் அவ்வாறிருக்கிறோம் பார் என்றார். முனிவர் தலத்தின் இயல்பு இதுவாயின், உயிர்விட்டு விடுதலே மேலென்று கல்விடைத் தலையை மோதப் போனார். அதில் ஒருகை வெளிவந்து தடுத்தது. வருந்தினார். இறைவன் அம்மையாரோடு இடப வாகனத்தில் காட்சியளித்தார். முனிவர் தம் கை குறுகிய காரணம் வினவ, இறைவன், தலப் பெருமையை அறிவித்து, நீ இதன் பெருமையை



ஸ்ரீ வீரட்டேசுவரர் ஆலயம்

அறியாது கங்கையை விரும்பினமையின் உன் கையைக் குறுக்கினே மென்றார். ஆயினும், குறுங்கை முனி என்பது இறைவன் அளித்த திரு நாமம்.

ஜெயத்துவசன்:— இவன் சோழநாட்டரசன். காளி உபாசகன். இவன் காலத்துச் சோழநாடு ஒரேகாடாக இருந்தது. நாட்டில் நெற்பயிர் விளைய வில்லை. வரகு முதலியன விளைந்தன. பெருமா னுக்கு நிவேதனம் செய்ய நெல்வேண்டுமென எண்ணினன். காசி அன்னபூரணி யம்மையின் ஆணைப்படியே உபாசனமூர்த்தியாகிய காளி, மணி ஒலிக்க அழல்வடிவாய் முன்வரத் தான்பின் னக வந்துகொண்டிருந்தான். இத்தலம் வந்ததும் மணி ஒலி அடங்கிற்று. அழல்வடிவும் அகன்றது. அரசனும் நீராடிப் பெருமானைவழிபட்டான். கருத் தறிந்த அம்மையார் ஒரு நாள் வெளிப்பட்டு வெண் சோறு விளங்கக் காண்றனள். சோறுபரவிய இட மெல்லாம் நன்செய் ஆயிற்று. மன்னனும் கவலை நீங்கினன்.

அகத்தியர்:— தனது திருமணத்தின்போது வடபுறம் தாழ்ந்து தென்பால் உயர்ந்ததைக்கண்ட இறைவன் உலகைச்சமமாக நிறுத்தக்கருதி, தென் பால் அகத்தியமுனிவரை அனுப்பினர். அதனல் திருமணத்தைக்காணுதற்கு இது இடையூறயிற்றே என்று வருந்திய அகத்தியர், இறைவன் ஆணைப்படி இங்குவந்து வழிபட்டுச் சின்னாளிருந்து இத்தலத்தின்

நிருதிதிசையிலுள்ள திருமணஞ்சேரியில் திருமணக் கோலம் தரிசித்து இன்பம் பெற்றார்.

**தீர்த்தங்கள் :**

தெய்வவிளக்கத்துக்கு இரண்டாவதான நிலைக் களனாயிருப்பவை தீர்த்தங்கள். தீர்த்தம் என்பதற்குப் பரிசுத்தமளிப்பது என்பது பொருள். சில தீர்த்தங்கள் உடற்பிணியைப் போக்கித் தூய்மையளிப்பதேயன்றி உயிர்ப்பிணிகளாகிய அறியாமை செருக்கு இவற்றைப் போக்கி உண்மை ஞானத்தை விளக்குவன. இத்தகைய தீர்த்தங்களில் இத்தலத்தில் சூல தீர்த்தம் முதலாகிய பத்துத்தீர்த்தங்கள் இருக்கின்றன.

**சூலதீர்த்தம்:—** ஆலயத்தின் முன்னிலையில் எப்பொழுதும் இறைவனது திருவருளைப் பெற்று விளங்குகின்றது. கங்கையைக்காட்டிலும் மிகச் சிறந்தது. இதன் பெருமை யறியாத தீர்க்கவாகு முனிவர் கங்கையை விரும்ப அவருடைய கை குறுகிற்று. இறைவன் கண்ணழலால் வெந்த காமனது உடலிற்பட்டதும் அவனுக்கு உயிரளித்த சிறப்புமுடையது இத்தீர்த்தம்.

**ஞானதீர்த்தம்:—** இது இப்போது பழவாறு என வழங்கும். இறைவன் யோகஞ்செய்தகாலத்து அவருடைய திருக்கண்களிலிருந்து வெளிவந்த ஆனந்த அருவி கலந்ததால் இப்பெயராயிற்று.

**சிற்பங்கள் :**

சுவாமி கர்ப்பக்கிரக வடபுறத்தில் காமன் தேரேறி வருதலும், புஷ்பபாணத்தைத் தொடுத்தலும், இறைவன் யோகத்திருத்தலும், விழித்தெரித்தலுமாகிய நான்கு நிகழ்ச்சிகள் செதுக்கப் பெற்றுள்ளன.

**அன்பர்களும் புலவர்களும்**

திருநாவுக்கரசு சுவாமிகள் சம்பந்த சுவாமிகளோடு திருக்கோலக்காவை வணங்கிக்கொண்டு அவர்களிடம் உத்தரவு பெற்றுக், கருப்பறியலூர் முதலான தலங்களையும் தரிசித்தவராய் இத்தலத்துக்கு எழுந்தருளியபோது 'ஆதியிற்பிரமனார்தாம்' எனத்தொடங்கும் திருநேரிசையும், 'நெடியமால்' எனத்தொடங்கும் திருநேரிசையும் பாடியருளினர்கள். இதில் 'தீர்த்தமாம் அட்டமிமுன் சீருடை ஏழு நாளும் கூத்தராய் வீதி போந்தார்' எனவரும்பகுதி வைகாசி மாதத்து அட்டமியில் தொடங்கி பௌர்ணமியில் முடிவதான திருவிழாவையும், அதில் ஆடுந்திருக்கோலத்தோடு பெருமான் எழுந்தருளுவதையும் குறிப்பிடுகிறது.

மகாவித்துவான் மீனட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் 736 திருவிருத்தங்களமைந்த ஓர்தல புராணம் இயற்றியுள்ளார்கள். வேறு பிரபந்தங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

**வரலாற்றுத்தொடர்புள்ள இடங்கள்:**

**தேவனூர்:—** தங்களுக்காக மன்மதன்பாணம் எய்யப்போவதைத் தேவர்கள் கூடிப்பார்த்திருந்த இடம்.

**கங்கணம்புத்தூர்.—** பெருவீரராகிய இறைவன் மீது பூவம்பு தொடுக்க மன்மதன் தோலாலாகிய உறையைத்தரித்த இடம்.

**வில்லியநல்லூர்:—** இறைவனை எதிர் நோக்காக வைத்து மன்மதன் வில்வளைத்த இடம்.

**கால்வளைமேடு:—** மன்மதன் இடக்காலை முன் வளைத்து ஊன்றி வலக்காலை மடித்துக் குறிபார்த்த இடம். இது காவளமேடு என இக்காலத்து வழங்கப் படுகிறது.

**பஞ்சபாண நல்லூர்:—** இறைவன் மீது பஞ்ச பாணங்களையும் எய்த இடம். தமிழில் 'ஐவாளி நல்லூர்' எனவழங்கும். இப்போது ஐவாணல்லூர் என மருவி வழங்குகிறது.

**சோத்தமங்கலம்:—** மன்மதனை எரித்த இறைவனது கோபத்தைப் பார்த்த தேவர்கள் அஞ்சி நமது காரியம் நிறைவேறாமற் போய்விடுமோ என்று எண்ணித் தோத்தரித்தார்கள். அதனால் இப்பெயராயிற்று. சோத்தம் - தோத்திரம்.

**கூத்தன் வாழ்க்கை:—** இறைவன் கூத்தராய் உலாக்கொண்டருள்வது வழக்கமாதலின் இப்பெயர் உண்டாயிற்று. கூத்தர் வாழி என இப்போது வழங்குகிறது.

## கல்வெட்டுக்கள்

இத்தலத்தைப்பற்றி இருபத்தொருகல்வெட்டுக்கள் உள்ளன. அவை 216 - 235 எண்ணுள்ளனவாக 1917-ம் ஆண்டு கல்வெட்டுக்குறிப்பில் குறிப்பு மட்டும் வெளிவந்துள்ளன. அவற்றால் குறுக்கை விருதராஜ பயங்கர வளநாட்டு குறுக்கைநாட்டுக் குறுக்கை விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலத்தைச் சார்ந்ததென்பது அறியப்படும். (217 - 218 of 1917).

கோயில் திருவீரட்டானமுடையார் கோயில் எனவும், திருவீரட்டேசம் எனவும் வழங்கப்படுகின்றது. இறைவன் பெயர் திருக்குறுக்கையுடைய திருவீரட்டானமுடையார். இறைவி பெரியநாச்சியார். இன்னும் வீதிவனநாதர், கூத்தராய் வீதி போந்தார் முதலிய திருப்பெயர்களுங் குறிக்கப் பெறுகின்றன. அவை எழுந்தருளுந் திருமேனியாகிய யோகீசுவரருக்குப் பெயராக இருத்தல் வேண்டும். இதனை அப்பர் சுவாமிகள் "கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கை வீரட்டனாரே" என்ற பகுதியால் குறிப்பிடுகின்றார்கள். ஆகவே அப்பர் சுவாமிகள் காலத்திலேயே எழுந்தருளுந் திருமேனிக்குக் "கூத்தராய் வீதிபோந்தார்" என்றே

வழங்கியிருக்கிறது. அன்றியும் நடனவகைகளுள் வீரநடனமும் ஒன்ருதலின் மன்மதனை எரித்துச் சென்ற வீரர் நட்டமிட்டு உலாப்போந்தாரென்பது குறிப்பு. அன்றி ஆட்கொண்ட நாயகர் என்ற ஒருபெயரும் காணப்படுகிறது. அது யாரைக் குறிப்பதாகும் என்பது கல்வெட்டுக்குறிப்புக்களைக் கொண்டு அறியப்படவில்லை.

அகப்பரிவாரப் பெண்டுகளில் உமையாள்வீ என்பவரால் திருப்பள்ளியறை நாச்சியார் திருவுருவமும் செய்விக்கப்பெற்றன. கோப்பெருஞ்சிங்கன் காலத்துத் திருவலஞ்சுழியுடையாரும் இங்கே பிரதிஷ்டை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. திருவலஞ்சுழியுடையார் என்பது விநாயகப்பெருமானைக் குறிப்பதாகலாம்.

இத்தலத்தில் வைகாசித் திங்களில் திருவிழா நடந்ததென்று தெரிகிறது. காமன்விழா வேனிற் காலத்து நடப்பது பொருத்தமாதலின் இறைவனை மணவினைக்குத் தூண்ட விரும்பிய மன்மதன் வைகாசித் திங்களில் வில்வளைத்தான் என்ற வரலாற்ரோடு பொருந்துவதாதல் காண்க. இதனை "இக்கோயிலுடையார் கூத்தர் வீதி போந்தார்க்கு வைகாசித்திருநாள் திரு எழுச்சிக்கு" என்ற குறிப்பு நன்கு விளக்கும்.

இத்திருக்கோயிலின் மகாமண்டபத்தைக் கட்டியவன் II-ம் குலோத்துங்கனாக இருக்கலாம்.

விக்கிரமன், இராசாதிராசன், III-ம் குலோத்துங்கன், II-ம் இராசராசன் ஆகியோர்களின் கல்வெட்டுக்களும் கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.

**விக்கிரமன் :** கி. பி. 1118—1136.

இவன் கல்வெட்டு 'பூமாலைமிடைந்து' என்று தொடங்குகிறது. 'திரிபுவன முழுதுடையாளோடு வீரசிம்மாஸனத்து வீற்றிருந்தருளிய திரிபுவன சக்ரவர்த்திகள்' என்று சிறப்பிக்கப்படுகின்றான். இவன் ஆட்சியாண்டும், இக்கோயிலிற்செய்த பணிகளும் நன்குதெரியவில்லை. இதில் திருச்சிற்றம்பலமுடையான் பொற்கோயில்பட்டன், மகாநுபவன், அச்சுதன், உமாசமேதவீரவிநோதபட்டன் முதலிய பட்டர்கள்பெயர் குறிப்பிடப்படுகின்றன. மகாநுபவன் என்பது ஒருசிலர்க்கே அடைமொழியாகக் கொடுக்கப்படுதலின் பட்டர்களுக்குள் தகுதிவாய்ந்தவர்கள் இவர்கள் என்பது அறியப்படும்.

**இராசாதிராசன் :** கி. பி. 1150—1178.

இவன் ஆட்சியாண்டு 13-ல் அகப்பரிவாரப் பெண்டுகளில் உமையாள்வீ பள்ளியறைநாச்சியாரையும், ஆட்கொண்டநாயக்கரையும், நாச்சியாரையும் எழுந்தருளுவித்தசெய்தி குறிப்பிடப்படுகிறது. அன்றியும் விருதராஜபயங்கரவளநாட்டு குறுக்கை நாட்டுப் பனையூர் திருச்சாமுண்டீசுவர முடையார்

கோயில் முப்பதுவட்டத்துக்காணியுடையான் சந்திர சேகரபட்டர் முதலான பல பட்டர்கள் குறிப்பிடப் பட்டுள்ளார்கள். இதனால் குறுக்கைநாட்டுப் பனை யூரில் சாமுண்டீசுரம் என்ற திருக்கோயில் இருந்த தாக அறியப்படும். இப்பனையூர் சுந்தரர் பாடல் பெற்ற பனையூரின் வேறாகும்.

6-ம் ஆண்டில் விக்கிரமசோழ சதுர்வேதிமங் கலத்து மகாசபையார் அர்த்தயாமத்திற்கு செங்கழு நீர்த் திருப்பள்ளித்தாமம் சாத்தியருள நிலங்களை இறையிலிசெய்து அளித்தார்கள். அளிக்கப்பட்ட நிலம் அனுபவிப்பாரின்றியும் விளைவின்றியும் இருந் ததாகும். இதற்காக நூற்றறுபதுகாசு பெற்றுக் கொண்டு இறையிலிசெய்து கொடுத்தார்கள் என்று கல்வெட்டுகுறிக்கிறது. 7-ம் ஆண்டிலும் இச்செய்தி குறிப்பிடப்படுகிறது. ஆனால் இது மிகச் சிதைவு பட்டது.

குலோத்துங்கன் III : கி. பி. 1178 –1218.

ஆண்டு பத்தாவதில் திருக்குறுக்கையுடைய திருவீரட்டானமுடையார்கோயிலில்கும்பிட்டுநிற்கும் ஆண்டார்பாலூழான்பெரியன் திருஞானசம்பந்தர் திருவிளக்குக்குப்புறமாக நிலம்விடப்பட்டது. இத னால் ஞானசம்பந்தருடைய விருதுகளும், ஞானசம் பந்தர்மீதுள்ள நன்மதிப்பும் நன்கு விளங்கும். அதேயாண்டில் செயங்கொண்ட சோழவளநாட்டு விளைநாட்டு நித்தவிநோத சதுர்வேதிமங்கலத்து

நிலம்வாங்கிவிட்டான். இதில் பத்தானகாசுக்குவிலே கொண்ட என்றதனல் ஏற்கனவே குடிகளிடம் காசுகொடுக்கப்பட்டமையும், அதற்காக நிலம் வாங்கப்பட்டமையும் அறியப்படும்.

இருபதாம் ஆண்டில் திருநாவுக்கரசர் திருக்குகையில்அபூர்விகளாக எழுந்தருளின மாகேசுவரர்களுக்கு அமுதுசெய்வித்தருள நிலமளித்தான். இதனல் திருநாவுக்கரசர் திருக்குகை என்ற ஒருமடம் இருந்ததாகத் தெகிறது.

இருபத்தாறும் ஆண்டில் திருக்கடவூர் பாரத்வாரி சூரியதேவநந்தன் என்பவன் தன் தமையன் வழியில் உள்ள மனேக்கட்டொன்றைத் திருக்கோயிலுக்காக அளித்தான். மூப்பதாம் ஆண்டில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மணவில் கோட்டத்து பழையனூர் நாட்டுப்புடையார் நென்மலிகிழான், திருவேகம்பமுடையான், மடவிளாகத்தில் சம்பந்தர் குகையாக மனையளித்தான்.

இராசராசன் III:

இவன் திரிபுவனச்சக்ரவர்த்தி யென்று குறிப்பிடப்படுகிருன். இவன் இத்தலத்திற்குச் செய்த பணிகள் ஆட்சியாண்டு பதினன்கிலும் பத்தொன்பதிலும் உள்ளன. இரண்டாம் குலோத்துங்கன் மகனகிய இரண்டாம் இராசராசன் உலாக் கொண்ட வரலாற்றையன்றி ஆட்சிக்காலம் எவ்

வளவு என்பது அறியமுடியவில்லை. ஆதலால் இங்கு குறிக்கப்படும் இராசராசன் இருமுறை தோற்று இருமுறைவென்று தன்னுடைய ஆட்சியை நீட்டிச்சென்ற மூன்றும் இராசராசனையே குறிப்பதாகும் என்று துணியக்கூடும்.

இவன் ஆட்சி 14-ம் ஆண்டில் இருமுடிச்சோழ சதுர்வேதிமங்கலத்துக் குலோத்துங்கசோழநல்லூரில் நிலம்வாங்கிவிட்டான். 19-ம் ஆண்டில் வாகூரான ஜெயசிம்மகுலகாலசதுர்வேதிமங்கலத்து நிலம் வாங்கிவிட்டான்.

தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள கல்வெட்டால் தஞ்சை இராசராசேச்சரத்திற்கு இராசேந்திர சிம்மவளநாட்டுக் குறுக்கைநாட்டுக் குறுக்கையான திருவீரட்டமுடையார்கோயிலிலிருந்து பரிசாரகனை ஒரு பிரமசாரியையும், மெய்காப்பு ஒன்றையும் அளித்துவரவேண்டும் என்று அறியப்படுகின்றது. (Vol 2. Part 2. Pages 325-337.)

# மாயூரம்-குமரக்கட்டளை

# மாயூரம்-குமரக்கட்டளை

இத்தலம் மிகத் தொன்மையும் தெய்வீகமும் வாய்ந்தது. இறைவர் மயிலாடுதுறையார் என்று கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளார். இறைவி மயிலம்மை. அஞ்சல்நாயகி எனவும் வழங்கப்பெறு வர். இதன் வடமொழிப் பெயர் அபயாம்பிகை என்பது.

இங்கு காவிரித் தீர்த்தம் மிக விசேடமானது. ஐப்பசித் திங்கள் முழுதும் விழா நடைபெறும். துலாமாச அமாவாசையன்று கங்கை, துலாக்கட்டம் இடபத்துறையில் வந்து பாவங்களைப் போக்கிக் கொள்கிறுள் என்பது புராண வரலாறு.

தலப்பெயர்க்காரணம் :

பிரமபுத்திரனை தக்கன் இறைவனை மதியாது யாகஞ்செய்யத்தொடங்கியகாலத்து உலககாரணியும் தக்கன் மகளுமாகிய அம்மையார் இறைவனிடத்தில் ஒருவாறு விடைபெற்று யாக சாலையையடைந்தாள். அங்கு தக்கன் தன்னை அவமதித்ததோடு அவனுல் சொல்லப்பட்ட சிவநிந்தனைகளையும் கேட்டு மனம் பொருது சினங்கொண்டாள். அதன் காரணமாக உலகமே நடுங்கியது. அப்போது ஓர் மரத்தின் கிளையிலமர்ந்திருந்த ஓர் அழகிய மயில் நடுக்கத்திற்கு ஆற்ருது அம்மையார் கூந்தலைக் கண்டு இதுவும் தன் இனமென்று கருதி அம்மையாரை வந்தடைய, அம்மையும் 'தோகாய் அஞ்சலை' என்று அபய

மளித்தாள். பின்னர் தக்கனையழிக்கக்கருதி ஆங்கே யோகக்கனலை எழுப்பி அவ்வனலில் தான் மறைந்தனள்.

இச்செயலை நாரதமுனிவரால் அறிந்த இறைவன் வீரபத்திரக்கடவுளைத் தோற்றி, யாகசங்காரஞ் செய்தருளி, முடிவில் தானும் ஆங்குச் சென்று இறந்தவர்கள் எல்லாம் எழுந்திடச்செய்தார். எழுந்த யாவரும் இறைவனைப் பணிந்தனர். அப்போது அருகே சூக்கும உடம்பு தாங்கி நிற்கும் அம்மையாரை நோக்கிய இறைவன் "நீ முன்னர் ஓர் மயிலுக்கு அஞ்சலென அபயமளித்து இரங்கினமையால் நீயும் மயிலுருக்கொண்டு நம்மைப் பூசித்து நம்மையடைவாய்; நாமும் ஓர் மயிலாகி ஆங்கு உனக்குத் துணையாக இருப்போம்" என்றருளி மறைந்தனர்.

கலைமகள், நாமகள் முதலியோரும் மயிலுருக் கொண்டு துணையாக அம்மையார் தாமும் மயிலுருப் பெற்று இத்தலத்திற்கு வர இறைவன் முன்னர் அருள்பாலித்தவாறே தானும் மயிலுருக்கொண்டு காட்சி யளித்துத் தோகை விரித்து ஆடத் தொடங்கினர். அதனைக்கண்ட மயிலுருப்பெற்ற அம்மையாரும் சேர்ந்தாடினள். ஒருநாள் 'இத்தீர்த்தத்திலே படிந்து சிவலிங்கத்தைப் பூசிப்பாய்' என அசரீரி தோன்றிற்று. அதுகேட்ட அம்மையார் மன மகிழ்ச்சியுடன் பலகாலம் வாவியிற்படிந்து முறைப்படி அபிஷேகித்து அருச்சித்துவரவே பெருமான்

வெளிப்பட்டு "வேண்டும் வரத்தைக் கேள்" எனப் பணித்தனர். அப்போது அம்மையார் 'கௌரியாகிய யான் மயிலுருக்கொண்டு பூசித்தமையால் கௌரி மாயூரம் என இத்தலம் பெயர் வழங்கவேண்டும்; தேவரீருக்கு மாயூரநாதர் எனத் திருநாமம் வழங்க வேண்டும்; துலாமாதத்தில் இக்காவிரியில் நீராடு பவர்களுக்கு அருள்பாலிக்கவேண்டும்' என்பதாக அனேக வரங்களைப் பெற்றனள், அதுமுதற் கொண்டு இத்தலம் கௌரிமாயூரம் எனவும், பெரு மான் திருப்பெயர் மாயூரநாதர் எனவும், அம்மையார் தன்னிடம் நடுக்கத்துடன் அபயமென்று ஓடிவந்த ஓர்மயிலுக்கு அஞ்சல் என அருள் பாலித்தமையால் அம்மையார் திருப்பெயர் அபயப்பிரதாம்பிகை— அஞ்சல்நாயகி எனவும் வழங்கிவரலாயின.

**கௌரிதாண்டவம்:**

மேற்கூறியவாறு இறைவனைப் பூசித்த கௌரி அம்மையார் 'இறைவனே! தேவரீர் முன் மயிலுருக் கொண்டு நடனம் செய்தீர். இப்பொழுது பிரமன் விட்டுணு முதலியோர்கள் கண்டு களிக்கவும், மத்தளம் முதலிய இசைச் கருவிகள் ஒலிக்கவும் ஆனந்த தாண்டவம் புரிந்தருளல் வேண்டும்' என்று பிரார்த்திக்க அவ்வாறே இறைவன் தாண்டவஞ் செய்தருளினர்.

**இடபதீர்த்தம்:**

அம்மையார் மயிலுருக்கொண்டு இத்தலத்தில் இருக்குங்கால் இறைவன் அண்ட முற்றும் சுற்றிப்

பார்க்க எண்ணி இடபத்திலேறிச் சென்றூர். ஏனைய தேவர் மூதலியோர்களும் தத்தம் வாகனங்களிற் பின் தொடர்ந்தனர். அதுகண்ட இடபம் நாம் முந்தவேண்டும் என்ற செருக்குமீதூர்தலினல் விரைவாகச் சுற்றிக்கொண்டு இங்கு வந்து காவிரியின் நடுவில் செருக்குடன் தங்கியது. அதனை அடக்கத் திருவுளங்கொண்ட பெருமான் தனது திருவிரலொன்றூல் ஊன்ற இடபம் பாதலம்புக்கது; செருக்கடங்கியது; பெருமானே! ஓலம் என்றலறியது. உள்ளம் இரங்கிய பெருமான் மேலெழுக என்றருளி நீ இந்நதியின் நடுவில் எப்பொழுதும் மேற்கு முகமாக இருந்து நீராடுவார்க்கு வேண்டுவன அளிப்பாயாக என்ற ஆணையும் அருளினர். ஆயினும் இடபம் பெருமானை வணங்கி "உண்மை ஞானம் உபதேசிக்க வேண்டும்" என்று விண்ணப்பித்தது. பெருமானும் 'எண்ணில்லாததீர்த்தங்கள் தம்மிடம் மூழ்குவோர்களது பாவத்தினல் கருநிறமுற்று, பின்னர் அதனை நீக்கிக் கோடற்கு ஐப்பசிமாதம் அமாவாசையன்று இங்குவந்து காவிரியில் கலந்து மூழ்கும்; அன்று யாம் இந்நதியின் வடகரையில் உத்தரமாயூரத்தில் தோன்றி ஞானம் நல்குவோம்' என்றருளி மறைந்தனர்.

அதுகேட்ட இடபம் குறித்த நாளை நோக்கியிருந்தது. அமாவாசையன்று பெருமானும் உத்தர மாயூரத்தில் இலிங்கத்தின் தென்பால் தென்முகப் பரமனய் எழுந்தருளி இடபதேவருக்கு உபதேசம் செய்தருளினர். (இவ்வாலயம் வள்ளலார்கோயில்

என வழங்கப்படுகின்றது). தருமபுர ஆதீனத்தின் பரிபாலனத்திற்குட்பட்டது.

**பழமொழிகள்:**

ஆயிரமானாலும் மாயூரமாகாது; கொல்லையிற் காவேரி குளிக்கமாட்டாள் மூதேவி; ஒழுகுணிமா சத்து அழுகணி அஞ்சலை என்பன போன்ற பழமொழிகள் தலத்தின் பெருமையினையும், காவிரி முழுக்கு புண்ணியமுடையார்க்கே கிட்டும் என்பதனையும், மழை விடாது பெய்துகொண்டிருக்கும் துலா மாதத்திலேதான் அஞ்சலைக்குத் திருவிழா நடைபெறும் என்பதனையும் அறிவிக்கின்றன.

**அன்பர்கள்:**

**திருஞானசம்பந்தர்:—** புள்ளிருக்கு வேளூர் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு வருகின்ற பிள்ளையார் இத்தலத்தில் எழுந்தருளி 'கரவின்றி' என்ற தக்கராகப் பண்ணையும், 'ஏனை எயிறுடு' என்ற சாதாரிப் பண்ணையும் அருளிச்செய்தார்கள். இவர்கள் கருத்து முழுமையும் காவிரிப்பெருக்கு, அதில்வரும் பொருள்கள், நீரின் மணம், மணத்தின் காரணம், சோலை, சோலைவளம் ஆகிய இவைகளிலே தோய்ந்திருக்கின்றது என்பதைப் பதிகங்கள் காட்டுகின்றன.

திருநாவுக்கரசர்:— குறுக்கை நீடூர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு இங்கு வந்தபோது இதன் இயற்கைவளம் சமயக்கிழவர் மனத்தைத் தன் வசமாக்கியது. தான் கன்னித் தலைவியின் தாய் ஆயினர். 'கொள்ளும் காதன்மை' என்று தொடங்கும் பதிகம் எழுந்தது. இதில் தாயாயிருந்தும், அடியனுயிருந்தும், நுகரும் நுகர்ச்சித் திறங்கள் பேசப்படுகின்றன. மனத்தை அழைத்து 'உனக்குள்ள மகிமை என்னே' என்று வியக்கின்றது. உள்ளன்பு இல்லாத கள்ள நெஞ்சில் கடவுள் காலும் ஊன்ருன் என்கின்றது. இவ்வாறு ஆன்மாக்களின் பக்குவம் நோக்கிப் பாடல்களை அருளிச் செய்கின்ருர்.

நூல்கள்:

இத்தலத்தைப் பற்றிய நூல்கள் மாயூரத் தல புராணமும், மயிலைத்திரிபந்தாதியும், அபயாம்பிகை மாலையும், அபயாம்பிகை அந்தாதியும் ஆகும். இவைகளை அருளிச்செய்தவர்கள் மீனுட்சிசுந்தரம் பிள்ளை கவிகுஞ்சரபாரதி முதலியோர் ஆவார்கள்.

இந்தத்தலம் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆளுகைக்குட்பட்டது. ஆயினும் ஆலயத்துள் ஒரு பகுதியாகிய குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் தருமபுர ஆதீனத்தின்

பரிபாலனத்திற்குட்பட்டது. இதற்கு மூன்று திருப் புகழ்ப்பாடல்கள் இருக்கின்றன. அருணகிரியார் இத்தலத்தை 'ரத்தினச்சிகண்டியூர்' எனக் குறிப் பிடுகின்றார்கள். அப்பகுதிவருமாறு:—

எழில்வளைமிக்குத் தவழ்ந்துலாவிய
பொனிநதி தெற்கிற் றிகழ்ந்து மேவிய
இணையிலிரத்னச் சிகண்டியூருறை—பெருமாளே.

கௌரிமாயூரம் என்றும் இத்தலம் போற்றப் பெறுகின்றது.

## கல்வெட்டுக்கள்

இத் தலத்தைப்பற்றி 1911ம் யாண்டில் படி எடுத்த கல்வெட்டுக்கள் இரண்டும், 1907ல் எடுத்தன பதினாலுமாகப் பதினாறு கல்வெட்டுக்கள் இருக்கின் றன என்று அரசாங்கக் கல்வெட்டிலாகாக் குறிப்பு தெரிவிக்கிறது.

கோனேரின்மைகொண்டான் என்ற விருது முதற்கண் வீரராஜேந்திரனுக்கும் வழங்கிய தென் பது "வீரராஜேந்திர இராஜகேசரி வன்மரான கோனேரின்மை கொண்டான்" எனவரும் கல் லெழுத்து அறிவிக்கும். பின்னர் மூன்றாங்குலோத்

துங்கனுக்கும் "கோனேரின்மை கொண்டான் வீர ராஜேந்திரன் திரிபுவனவீரதேவன்'' என வழங்கியது; ஆதலால் கோனேரின்மைகொண்டான்என்ற இதனுல் மட்டும் யாரையும் துணிந்துவிடமுடியாது.

இவன் ஆட்சி 19-லும், 30-லும் குலோத்துங்க சோழன் குற்ருலமாகிற குலோத்துங்க சோழநல்லூரில் திருவையாறுடையார் திருவுருவத்தைப் பிரதிட்டிக்க நிலமளித்தான். அதிலேயே சுங்கம் தவிர்த்த குலோத்துங்கனது 21ம் யாண்டு நிகழ்ச்சியும் அறிவிக்கப்படுகின்றது.

**குலோத்துங்கன் I:** கி. பி. 1070—1120

ஆட்சி 21-ம் ஆண்டு நிகழ்ச்சிகள் இரண்டிடத்தில் குறிக்கப்படுகின்றன. நிகழ்ச்சிகள் சிதைவுபட்டன.

**இராசாதிராசன் II:** கி. பி. 1150—1178

ஆட்சி 14-ம் ஆண்டில் மயிலாடுதுறையுடைய நாயனர்க்கு நிலம் அளித்தான்.

**குலோத்துங்கன் III:** கி. பி. 1178—1218

ஆட்சி 19-ல் சில நிலங்களைவிற்ற செய்தி அறிவிக்கப்படுகின்றது (385 of 1907). 25-ல் ஜெயங்

கொண்ட சோழவளநாட்டு திருவழுந்தூர் நாட்டு குலோத்துங்கசோழன் குற்ருலமான திருவையா றுடையாருக்கு நிலம் அளித்தான் (380 of 1907).

சிவபாதசேகரன் சதுர்வேதிமங்கலத்து நெல் அளிப்பித்தான் (381 of 1907). நல்லூர் புதுக்குடிச் சபையோரால் நிலம் அளிக்கச் செய்யப்பட்டது (382 of 1907).

இராசராசன் III: கி. பி. 1216—1246

ஆட்சி 10-வது ஆண்டில் தேவதான மாகப் பொன் கொடுத்தசெய்தி காட்டுகிறது (371 of 1907).

**சடையவர்மன் சுந்தரபாண்டியன்:** கி.பி.1251—1268


ஆட்சி 10-வது ஆண்டில் வெட்டப்பட்டது. அதாவது 1261ல். ஆனல் சிதைந்துள்ளது. இதில் மூன்று பாண்டிய மன்னர்கள் பெயர் குறிக்கப்படு கின்றன.

பெயரறியப்பட்டு யாண்டுமட்டும் அறிவிக்கும் கல்வெட்டு மூன்றுள்ளன. அவை நிலமளித்தசெய் தியை அறிவிக்கின்றன.

இவையன்றிக் குமரகோயிலைப் பற்றிய கல்வெட்டுக்கள் ஒன்றும் இல்லை. அதற்குக் காரணம் சரித்திரப் பற்றில்லாத காலத்தில் திருப்பணி செய்யப் பெற்றமையேயாம்.



# மாயூரம் - வள்ளலார்கோயில்



ஸ்ரீ வதான்யேசுவர சுவாமி கோயில் உள்தோற்றம்

# மாயூரம்-வள்ளலார்கோயில்

இத்தலம், மாயூரம் துலாக்கட்டமாகிய இடப தீர்த்தக் கரையில் வடபக்கத்திலே உள்ளது. இத் தலத்துக் காவிரித்தோற்றமும், வடகரைக்கண் வர வேற்றுநிற்கும் தீர்த்தமண்டபமும், சிறிய கோபுர மும் மிக அழகுசெய்கின்றன. சுவாமிபெயர் வழி காட்டும்வள்ளல். வடமொழியில் வதாந்யேசுவரர் எனவழங்கப்பெறுவர். அம்மைபெயர் ஞானம்பிகை. சிறியகோயில். சுவாமியின் கருப்பக்கிருகத்தின் தென்பக்கத்து, தக்ஷிணாமூர்த்தி எழுந்தருளியிருக் கிறார். இங்கு தக்ஷிணாமூர்த்தி விசேஷம். தக்ஷிணா மூர்த்தி யோகாசனத்து, ஞான முத்திரைக்கைய ராக எழுந்தருளியிருக்கின்றார். ஏனைய தக்ஷிணா மூர்த்திகளைக்காட்டிலும் இந்தமூர்த்திக்குள்ள சிறப்பு நந்திபெருமான்மீது ஆரோகணித்து இருப்பது.

**தீர்த்தம் :**

ஞானமிர்தசரஸ். இந்தத் தீர்த்தம் பிரமாவால் தோண்டப் பெற்றது. பஞ்சப்பிரம லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்றமையின் பஞ்சப்பிரம தீர்த்தம் எனவும் பெயருண்டு. கார்த்திகைச் சோம வாரத்தில் நீராடி வதாந்யேசுவரரையும் ஞானம் பிகையையும் விதிப்படி வழிபட்டு, தக்ஷிணாமூர்த்தி யை வணங்கினவர் பொன்னையும் மெய்ப்பொருளை யும் எய்துவர்.

புராணவரலாறு:

இடபதேவர்:— இறைவனைத்தாங்கும்புண்ணியமும் வன்மையும்பெற்றவர்கள் யாமே என்று தருக்கித்துள்ளினர். எல்லார் உள்ளத்தும் இருந்து இயக்கும்பெருமான் இந்நிலையறிந்தார். இடபதேவர்க்கு நிறைந்தஞானம் கைவரச்செய்யவேண்டும் என்ற கருணையினால் தமதுசடாபாரத்தின் நுனியொன்றை எடுத்து இடபத்தின்மீது இட்டார். இடபதேவர் அதன் சுமையையும் ஆற்றலையும் தாங்கமுடியாது மனம்நொந்தார். இறைவனைநோக்கிப் 'பெரும! தமியேன் அறியாதுசெய்தபிழையைப் பொறுத்தருள்க. ஆன்மாக்கள் இயல்பு குற்றஞ்செய்தல். இறைவன் இயல்பு பொறுத்து ஞானமேவரச்செய்தல்' என்று வேண்டிக்கொண்டார். இறைவன் மனமிரங்கி அவருக்கு ஞானோபதேசஞ்செய்தார். குருமூர்த்தியாக இருக்கும் நிலையிலும் வாகனமாகஏற்று மகிழ்ந்தார். இதனை மாயூரத் தலபுராணத்தில் பிள்ளையவர்கள்,

"மலிதவப் பெருமை காட்டி வயங்கிடு மற்றோர் கூற்றில்
பொலிதரு சேமேற் கொண்டு தென்முகம் பொருந்த நோக்கி"

என்று குறிப்பிடுகின்றார்கள்.

காவிரிதீர்த்தவிசேடம்:— கண்ணுவமகரிஷி ஐம்பொறிகளையும் வென்ற பெருமையர். ஒருகாலத்துக் கங்கையில் நீராடவேண்டும் என்ற விருப்பம் மிகுந்தது. வழிக்கொண்டு செல்கின்றார். உத்தரமாயூரங்

தாண்டிச்செல்லும்போது மூன்றுபெண்கள் இவரை வழிமறித்தனர். அவர்கள் ஒளியிழந்த முகத்தை உடையவர்கள்; கரிய மேனியர்; பாவமெலாந் திரண்டால் ஒத்த வடிவத்தினையுடையவர்கள்; கண்ணுவமகரிஷி 'இவர்கள் சண்டாள கன்னிகை போலும்; இவர்கள் வழிமறிக்கக் காரணம் என்ன?' என்று அஞ்சி விலகி வேறுவழியாகச் சென்றார். அங்கும்வந்து இவர்கள் வழிமறித்தனர். பாவம் எங்குச்சென்றாலும்விடார்கள்போலிருக்கிறதே. இங்கும் வந்துவிட்டார்களே என்று எண்ணிக் கோபித்து அவர்களைநோக்கி 'நீங்கள் பலர்சண்டாள கன்னியர்களாயிருந்தும் வழியோடுபோகிறசிஷ்டாசாரமுள்ள முனிவனாகிய என்னை வழிமறிக்கக் காரணம்என்ன' என்று வினவினார். கன்னிகைகள் 'நாங்கள் சண்டாளப் பெண்கள் அல்லர்; கங்கை யமுனை சரஸ்வதி என்ற தேவநதித் தெய்வங்கள் நாங்கள்; எங்களிடம் பல்லாயிரக்கணக்கான மக்கள் தத்தம் பாவம்போக முழுகியதால் எங்கள் ஒளியிழந்து புனிதம் கெட்டு இத்தகையர்கள் ஆனோம்; எங்களைக்கண்டு வெறுக்காதீர். நீர் செல்லும் காரணம் எமக்குத் தெரியும்! என்றார்கள். முனிவர் வியந்து அப்படியா? இங்கு எங்குச் செல்கின்றீர்கள் என்று வினவினார். பெண்கள், காவிரியில் நீராடி உத்தர மாயூரத்திலுள்ள ஞானவள்ளலை வழிபட்டு எங்கள் பாவத்தைப்போக்கிக்கொள்ளப் போவதோடு, இனிஎல்லார்பாவத்தையும்போக்கி அப்பாவம் எங்களைப் பற்றாதிருக்கும்படியான வன்மையையும் பெறப்போகின்றோம் என்றார்கள்.

முனிவர் அப்படியாயின் அத்தலத்தின் மேன்மையை 'தெய்வநதிப் பெண்களே! விளக்கியருள வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். கங்கை முதலியோர் சொல்ல அவ்வாறே முனிவர் கங்கை செல்லும் விருப்பத்தைவிட்டு உத்தரமாயூரமாகிய வள்ளலார்கோயிற் சார்பையடைந்து ஞானதீர்த்தக் கரையில் ஒரு ஆச்சிரமம் அமைத்துக்கொண்டு கங்கைசொன்ன முறைப்படி நீராடி வழிபட்டுவருவாராயினர். பன்னெடுநாள் சென்று சிவஞானங் கைவரப்பெற்றார்.

அவ்வாறே விஷ்ணு இத்தலத்தை வழிபட்டுப் பிருகு முனிவர் பத்தினியைக் கொன்ற பெண் கொலைப்பாவத்தைப் போக்கிக்கொண்டார். அகஸ்தியர்வழிபட்டுச் சிவஞானப்பேறுபெற்றார். பிரமன் படைப்புத் தொழில் கைவரப்பெற்றான்.

**நூல்கள் :**

இந்தத் தலத்தைப்பற்றித் தனியாக நூல்கள் யாதொன்றுமில்லை. ஆனல் வடமொழியில் உத்தர மாயூர மகாத்மியம் என்ற ஒருநூல் இருக்கின்றது. அது இருபது அத்தியாயங்களையுடையது. அதில் உபதேசம் அருளிச்செய்த அத்தியாயம் சிறந்தது. அவ்வாறே தமிழில் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் மாயூரத் தல புராணத்தில் மாயூரநாதர் நாற்றிசைவள்ளலான

படலம், உத்தரமாயூரப் படலம், உபதேசப் படலம் என்ற மூன்ருலும் இதனை நன்கு விளக்கியிருக்கின்ருர்கள். உபதேசப்படலத்தில் ஆன்மாக்களின் சிறப்பியல்பும், மலமாயைகன்மங்களின் இயல்பும், அவை ஆன்மாக்களைப் பந்தித்துநிற்கும் பண்பும், பந்தமறுக்கும் உபாயங்களும், இறைவன் அருள் செய்யும் பேருருட்பெற்றியும் பேசப்படுகின்றன.

முத்தியெய்துதற்கு உபாயங்களான தீட்சை சட்சுதீட்சை, ஸ்பரிசதீட்சை, வாசிகதீட்சை, ஞான தீட்சை, தாந்திரிகதீட்சை, யோகதீட்சை, அவுத்திரி தீட்சை என ஏழுவகைப்படும் அவற்றுள் அவுத்திரி தீட்சை கிரியாவதி ஞானவதி என்று இரண்டாகும். அவற்றுள் ஒவ்வொன்றும் சமயம் விசேடம் நிர்வாணம் என மூன்ருகும்.

இந்த தீட்சைக்குரியவராய மக்கள் இறைவனைச் சேர்தற்குரிய வழி நான்காகும். அவை சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. அவற்றின் முறையில் நின்ருர் எய்தும்பயன் சாலோக சாமீப சாரூப சாயுச்சியமாகிற முத்திநெறிகளே. அவற்றையடைய ஆன்மாக்கள் முயற்சிக்க வேண்டுமென விளக்குகின்ருர்கள்.

அன்றியும் தருமையாதீனம் 10வது குருமூர்த்திகள் சிவஞானதேசிகர் அருளிய திருவருட்பாஒன்று உண்டு. அது பத்துப்பாடல்களையுடையது. இதில்

பத்தாவது செய்யுளில் எமக்கு இந்திராதிவாழ்வும் ஒருபொருளன்று. சித்திகள் முத்திக்குவழியன்மையால் வேண்டவே வேண்டா. கல்வியும் கலையும் செருக்குண்டாக்குவனவாதலால் அவை விரும்பத் தக்கன அல்ல. ஆதலால் பழவினையொழித்த அடியார்கள் பாததாமரைகளை எம் தலையிற்சூட்ட வேண்டும். அதுவே யாம் வேண்டுவது. அதற்குத் தடையாயிருப்பது மலம். அதனை நின்னருட்பார்வையால் அகற்றவேண்டும். நான் உலகமேதோன்றாமல் இறுமாந்திருக்கின்ற இன்பவாழ்வு வாழவேண்டும் இதுவே என் பெருவிருப்பு என்று தெரிவிக்கின்ற அருள்மனநிலை மிக இனியபகுதியாம்.

# கருங்குயில் நாதன்பேட்டை

# கருங்குயில் நாதன்பேட்டை

இது மாயூரம் துலாக்கட்டத்தின் வடகரையில் கிழக்கே ஒருகல் தொலைவில் உள்ளது. பழைய காவிரிப்பூம்பட்டினத் தெருவாகிய மட்சாலையிலிருக்கின்றது. பொழில்சூழ்ந்த எழில்மிகுந்த இடம்.

**கோயில்:**

கோயில் மிகச் சிறியது. சுவாமி கிழக்குநோக்கி எழுந்தருளியிருக்கிறார். அம்மை தெற்குநோக்கி இருக்கிறார். சத்தமாதர் திருவுருவங்கள் இருக்கின்றன. சத்தமாதர்களுள் வராகி என்பாள் பூசித்த தலம் என்று வடமொழிப் புராணம் சொல்கிறது. மாயூரப் புராணம் மகேசுவரி பூசனைசெய்து சிறந்த வரங்களைப் பெற்றாள் என்று தெரிவிக்கிறது.

**தலப்பெயர்:**

தலம் கருணபுரம் எனவும், கருங்குயில்நாதன் பேட்டை எனவும் வழங்குகிறது. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இறைவன் கருணை என்றும் விளங்கும் தலமாதலின் கருணபுரமாயிற்று என்கிறார்கள். குயில்வடிவாகிய இந்திரன் பூசித்தமையின் கருங்குயில்நாதன்பேட்டை ஆயிற்று என்கின்றது மற்றொரு புராணம். இப்போது கர்ணப்பேட்டை என மருவி வழங்குகிறது.

இறைவன்பெயர் சத்திபுரீசுவரர். இறைவி பெயர் ஆனந்தவல்லி.

**புராண வரலாறு:**

திருப்பறியலூரில், சிவநிந்தகனான தக்கன் ஒரு யாகம் நடத்தினான். யாகத்திற்குச் சிவபெருமானை நீக்கி ஏனைய தேவர்களை யழைத்திருந்தான். யாகம் தொடங்கப்பெற்றது. அம்மைதந்தையென்ற உரிமைபற்றி யாகத்திற்கு எழுந்தருளினர். இறைவனும்கூட எழுந்தருளினர். தக்கன் வரவேற்காது அவமதித்தான். அம்மைக்கும் சினம் வந்தது. சிவபெருமானுக்கும் சீற்றம் பிறந்தது. நெற்றிக் கண்ணிலிருந்து வீரபத்திரக் கடவுள் தோன்றினர். யாகம் அழிக்கப்பெற்றது. யாகத்திற்கு வந்த இந்திரன் அஞ்சிக் கருங்குயிலாக வடிவுகொண்டு தப்பியோடினான். பின்னர், தன் தவறினையுணர்ந்து சிவநிந்தனை செய்த தக்கன் யாகத்திற்குச் சென்றமையால் தன் தெய்வத்தன்மையிழந்து, பறவையாய்ப் போக நேர்ந்தமைக்கு வருந்தினான். அச்சிவநிந்தகன் அளித்த அவியுண்ட பாவந்தீர வேண்டினான். தேவகுருவாகிய வியாழன் மாயூரத்திற்குக் கிழக்கே ஒருகல் தொலைவில் மகேசுவரி பூசை செய்து வழிபட்ட தலம் ஒன்றுண்டு. கருணாபுரம் என வழங்குவது. அதனையடைந்து வழிபாடு செய்யின் உன் பறவைப் பிறவி நீங்கும் பாபமும் மறையும் என்று விதித்தனர். இந்திரன் வந்து கருணா தீர்த்

தத்தில் நீராடி ஆகமவிதிப்படி இறைவனை வழிபட்டு வந்தான். இறைவன் சிவலிங்கத் திருமேனியிற் காட்சி வழங்கி 'உன் குறை தீர்ந்தது; வேண்டுவதி யாது' என்று வினவினர். இந்திரன் 'என்றுங் கருணை புரத்துக் கருணையாளனுகவேயிருந்து எல்லா மக்களுக்கும் அருள்பாலித்தல் வேண்டும். என்னிழி தகைமையும், அடியேனையும் ஆட்கொண்ட பெற்றி மையும் தோன்ற இனி இத்தலம் அடியேன்பேரால் கருங்குயில்நாதன்பேட்டை என வழங்கிவருதல் வேண்டும்' என்று வேண்டிக்கொண்டான். அவ்வாறே இறைவனால் அருள்செய்யப்பெற்றது.

தீர்த்தம்:

தீர்த்தம் கருணைதீர்த்தம். கௌசிக கோத்திரத்துப் பிறந்த அந்தணன் ஒருவன் வேதங்களையும் வேதாங்கங்களையும் முறையே நல்லாசாரியன் பால் ஓதினன். ஓதியும் பூர்வ புண்ணியப் பதிவு இல்லாமையால் அவன் மனம் கூடா வொழுக்கத்தினை கூடிற்று. இழிமகளிரை எய்தினன். அதனாற் பொல்லாத தொழுநோய் உடல் முழுதும் பொத்தியது. வருந்திச் செய்வதியாதெனத் தெரியாது திகைத்தான். தவத்திற் சிறந்த முனிவர்களைக் காணின் அவர்கள் முன்பு செல்லவும் கூசினன். இவன் நிலையையுணர்ந்த முனிவர் ஒருவர் இரங்கி கருணை புரத்து கருணை தீர்த்தத்தில் முழுகுக உன்மேனி பொன்மேனியாகும் என்றார். அவனும் அவ்வாறே

நீராடிக் கருங்குயில்நாதரை முப்போதுங் கைப் போது கொண்டுவணங்கி நோய் நீங்கப்பெற்றான். அண்மையில் ஆறு ஆண்டுகட்கு முன்புகூட குட்ட நோயாளன் ஒருவன் ஓராண்டு இருந்து முழுகி நோய் நீங்கப்பெற்றான். அன்றியும் இத்தீர்த்தம் தோலைப்பற்றிய எல்லா நோய்களையும் நீக்கும் வன்மைவாய்ந்தது. இன்றும் கண்கூடாக நடந்து வருகிறது.

இத்தலமும் கல்வெட்டு முதலிய வரலாற்றுப் பகுதி இல்லாதது. வேறு இலக்கியங்களும் தோத் திரங்களும் இல்லை. இத்தலத்தைப்பற்றிப் பிள்ளை யவர்கள் மாயூரப் புராணத்து சத்தபுரப்படலத்து இரண்டு பாடல்களால் குறிப்பித்துச் செல்கிறார்கள். மற்றும் வடமொழியில் ஒரு புராணம் உண்டு. அது இன்னும் அச்சிடப்பெறவில்லை.

# திருபுவனம்

# திருபுவனம்

**தலம்:**

இது தஞ்சை ஜில்லாவிலே கும்பகோணம் தாலூகாவில் அமைந்திருப்பது. இந்நாட்டிலே சோழ மன்னர்கள் கட்டிய கற்றளிகள் பல. அவற்றுள் இது சோழ மன்னர்களின் அன்பின் பெருக்கத்திற்கும், அறிவின் ஆற்றலுக்கும், புகழின் பரப்பிற்கும் பெரிய எடுத்துக்காட்டாக அமைந்தது.

**தலப்பெயர்:**

இதனை, கல்வெட்டுக்கள் திருபுவன வீரபுரம் என்றே அழைக்கின்றன. புராணத்தில் வில்வவனம், திரிபுரவனம், தேவக்ஷேத்திரம், நிம்பாரண்ய க்ஷேத்திரம் எனப் பல பெயர்கள் காணப்படுகின்றன.

**கோயில்:**

ஊரின் நடுவிலே கிழக்குநோக்கி இருக்கிறது. மூன்று கோபுரங்கள் அணி அணியாக அழகு செய்கின்றன. அன்றைக்குப் பெரியபுராணக் கலைக் கோயிலில் தோரணத் திருவாயில் திருமாளிகைத் திருவாயில் திருவணுக்கன் திருவாயில் என்ற மூன்று வாயில்களையும் ஒரு முற்றவெளியையும் காட்டித் தந்தார். அக்காட்சியை இன்று நேரே காட்டுவது

இவ்வாலயம். முதற் கோபுரமாகிய தோரணத் திருவாயில் ஏழடுக்கு மாடங்களையுடையது. இரண்டாங் கோபுரமாகிய திருமாளிகைத் திருவாயில் மூன்றடுக்கு நிலையங்களையுடையது.

இக்கோயிலுக்கு இரண்டு பிராகாரங்கள் இருக்கின்றன. கோயில் மிக அழகான வேலைப்பாடமைந்த இடம். மண்டபத்தினெதிரே நடுக்கந் தீர்த்த பெருமான் எழுந்தருளி யிருக்கிறார். நடுக்கந் தீர்த்த பெருமானின் கர்ப்பக்கிருஹம் விமானம் முதலியவை கங்கைகொண்ட சோளேச்சரத்தையும் தஞ்சை ராஜராஜேச்சரத்தையும் ஒத்தனவாகும். விமானம் சச்சிதானந்த விமானம் என்று இவ்வூர்த் தலபுராணம் கூறுகிறது.


முதற்பிராகாரத்தில் வடபகுதியில் அம்மையார் கோயில் அமைந்திருக்கிறது. அதன் கீழ்பாலிருப்பது சரபேசராலயம். இரண்டாம் பிராகாரத்தில் திருக்கல்யாண மண்டபமும் யாகசாலையும் இருக்கின்றன.

மூர்த்திகள்:

மூலஸ்தானத்து எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் பெயர் கம்பகரேசுரர். தமிழில் நடுக்கந்தீர்த்த நாயகர் என வழங்கும். பிரகலாதன், திருமால் முதலியோர்க்கு வந்த நடுக்கத்தைப் போக்கினமையால் இப்பெயர் உண்டாயிற்று. அம்மை அறம் வளர்த்த நாயகி.



ஸ்ரீ சரபேஸ்வரர்



ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி கோயில் உள்தோற்றம்

இத்தலத்தின் சிறந்த மூர்த்தி சரபேசர். இரணியனது உதிரத்தை உண்ட நரசிம்மம் மதிமயங்கி உலகத்தை அழிக்கத்தொடங்கியது. இறைவன் சரபப்பறவையாக வடிவங்கொண்டு அதனுடைய வலிமையை வாட்டினர். இந்த மூர்த்தியை உபாசித்துப் பலர் பல நன்மைகளை அடைந்திருக்கின்றார்கள்.

**தலப் பெருமை:**

இத்தலத்தில் மீமாம்சமும், தமிழும், திருப்பதிகங்களும் முறையே ஓத விரிவான பல்கலைக்கழகம் போன்றதொன்று இருந்ததாகக் கல்வெட்டு கூறும்.

அசுவக்கிரீவனுக்கும், பிரமன் முதலான தேவர்கட்கும், வரகுணபாண்டியன் முதலான மன்னர்கட்கும் நடுக்கத்தைப் போக்கியமையால் நடுக்கந்தீர்த்த தலமென வழங்கப்பெறுவது. உலகம் நடுங்கச்செய்த நரசிம்ம அவதாரத்தினையும் நடுங்கச் செய்தது. சுகோஷன், வருணன், சித்திரரதன் முதலியோர்கள் வழிபட்டு அருள்பெற்ற தலம். பயத்தாலும் பகையாலும் வருந்தினோர் சரபமூர்த்தியை வழிபாடு செய்யின் எல்லாம் நீங்க இன்பம் எய்தலாம்.

**தொன்மை:**

இத்தலம், அமைப்பால் தஞ்சை ராஜராஜேச்சரத்தை ஒத்ததென்று முன்னமே குறிப்பிடப்

பட்டுள்ளது. இராஜராஜன் வழிவந்தோனுகிய IIIம் குலோத்துங்கன் இக்கோயிலைக் கட்டியிருக்கிருஞதலால் இற்றைக்குச் சற்றேறக்குறைய 771 ஆண்டுகளாகின்றன.

**புராண வரலாறு:**

இரணியனைக் கொன்ற நரசிம்மமூர்த்தி உலகத்தையே அழிக்கப்புகுந்தனர். இரணியன் விளைத்த தீமையைக்காட்டிலும் இவர் விளைத்த தீமை மிகுதியாயிற்று. தலைவலிபோகத் திருகுவலி வந்தாற்போலத் தேவர்கள் தவித்தனர். பெருமானை வழிபட்டனர். அச்சமகன்றனர். அதனுல் மகிழ்ந்த தேவர்கள், எல்லார்க்கும் அச்சந்தீர்த்த பெருமானுகை இத்தலத்தில் எழுந்தருளியிருக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அபயமளிக்கச் சரபமூர்த்தியாயும், அச்சமகற்ற கம்பகரேசுரராயும் எழுந்தருளிக் காட்சி வழங்குகின்ருர்.

**திரிபுரர்:—** அசுவக்கிரீவன், விருஷபக்கிரீவன், வியாளக்கிரீவன் என்ற மூன்றசுரரும் பொன் வெள்ளி இரும்பாலாய கோட்டைகளைப் பெறப் பூசை செய்த இடம் இதுவே. அதனுல் திரிபுரர் என்றழைக்கப்படுகின்ருர். இங்குள்ள சிவலிங்கப் பெருமான் அவர்களால் ஸ்தாபித்து வழிபடப் பட்டவர்.

**சுகோஷன்:**—இவன் வழிப்பறி செய்து வாழ்ந்த ஒரு வேடன். ஒருநாள் ஒரு பிராமணனைத் துரத்திச் சென்றான். அவனால் பூர்வ ஜென்மவரலாறுகளை அறிந்தான். திருந்தினான். கம்பகரேசுரரை வழிபட்டு உய்ந்தான்.

**வரகுணதேவன்:**— சிறந்த பாண்டியமன்னனாகிய இவன் வேட்டைக்குச் சென்றபோது கட்டுக்கடங்காத ஒரு குதிரையின் காலிலகப்பட்ட ஒரு பிராமணன் இறந்தான். அதனால் பிரமகத்தி இவனைத் தொடர்ந்தது. திருவிடைமருதூரை அடைந்து வழிபட்டுப் போக்கிக்கொண்டான். மழை விட்டும் தூவானம் விடாததுபோல் பிரமகத்தி தொலைந்தும் அச்சம் இவனை விட்டபாடில்லை. இத் தலத்து எல்லையை அடைந்ததும் அதுவும் நீங்கிற்று.

**தீர்த்தங்கள்:**

சரபதீர்த்தம், தேவதீர்த்தம், ஞானதீர்த்தம், வியாசதீர்த்தம், பிருஹஸ்பதீர்த்தம், சித்ததீர்த்தம் என ஆறு தீர்த்தங்களுள்ளன.

**சுற்றியுள்ள சிவஸ்தலங்கள்:**

திருவிடைமருதூர், திருநாகேசுரம், கும்பகோணம், சுவாமிமலை முதலியன.

**சிற்பங்கள்:**

சரபர் சன்னிதியிலுள்ள இரண்டு பெண்ணுருவங்கள் அழகுக்கு இலக்கியமாக விளங்குகின்றன.

அவை சீதேவியும் பூதேவியுமாம். சோமாஸ்கந்தர் மண்டபத்தின் தென்பகுதியில் பரத நாட்டியத்தின் பல்வேறு வகைகள் செதுக்கப் பெற்றுள்ளன. ராஜராஜனுடைய புகழ் தூண்களிலும் மண்டபங்களிலும் உயிர்க்கலையாக இருந்து விளங்கி வந்திருக்கின்றது. கர்ப்பக்கிருஹம் அடிமுதல் ஸ்தூபி வரையில் கருங்கல்லாலானது. அதில் விளங்குகின்ற சிற்பங்களும் அத்தகையனவே. குலோத்துங்கனுட்சியின் சிறந்த ஞாபகச் சின்னமாக விளங்குகிறது. திருமதில்களில் இராமாயணச் சித்திரங்கள் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன.

**அன்பர்கள்:**

இத்தலக்கோயில் மூன்ருவது குலோத்துங்கன் காலத்ததாதலின் இதைப்பற்றித் தேவார திருவாசகங்கள் ஒன்றும் எழவில்லை. பிற்காலத்துப் பாடல்களும் இல்லை. வடமொழியில் தலபுராணம் ஒன்றிருக்கிறது.

## கல்வெட்டுக்கள்

இந்தத்தலத்தைச் சார்ந்தனவாக ஏழு கல்வெட்டுக்கள்தான் இருக்கின்றன. அவை அரசாங்கத்தால் 1907-ம் ஆண்டிலும் 1911-ம் ஆண்டிலும் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் குறிப்புக்கள் மட்டும் வெளிவந்துள்ளன. பிற ஊர்க் கல்வெட்டுக்கள் சிலவற்றிலும் இத்தலத்தைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

கல்வெட்டுக்களில் இறைவன் திரிபுவன முடையார், திரிபுவன ஈசுரமுடைய மஹாதேவர் என்று குறிப்பிடப்படுகிறார். இக் கோயில் III ம் குலோத்துங்கனால் கட்டி முடிக்கப்பட்டது. இவனுடைய ஆசாரியரும், சித்தாந்தரத்னாகரத்தின் ஆசிரியரும், ஸ்ரீகந்த சம்புவின் புதல்வருமாகிய ஈசுவரசிவன் என்பவர் இக்கோயிலைப் பிரதிட்டித்தார்.

IIIம் குலோத்துங்கனுக்குத் திரிபுவன வீரதேவன் என்று ஒருபட்டம் உள்ளதாக இவனுடைய 36-ம் ஆண்டதான சிதம்பரம் கல்வெட்டொன்று அறிவிக்கிறது. எட்டுக் கல்வெட்டுக்களிலும் பேசப்படும் அரசர்பெருமக்கள் ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியனும், மூன்றாங் குலோத்துங்கனுமாம்.

அவருள் பராக்கிரம பாண்டியன் என்பான் ஜடாவர்மன் திரிபுவன சக்ரவர்த்தியென்று பாராட்டப் பெறுகின்றான். இவனுடைய ஆட்சி பத்தாவது ஆண்டில் திரிபுவன வீரபுரத்திலுள்ள குடிகளுக்கும் காவல்காக்கும் கள்ளர்கட்கும் நடந்த ஒரு ஒப்பந்தம் பேசப்பெறுகிறது. குலமங்கல நாட்டுக் கள்ளர்கள் காவலில் இருந்தார்கள். அவர்கள் வீட்டில் நடக்கும் ஒவ்வொரு திருமணத்திற்கும் ஒவ்வொரு புடவை கொடுக்கவேண்டும். அதற்காகக் காவற்கள்ளர்கள் இவர்களிடம் ஞாயமானமுறையில் நடந்துகொள்ள வேண்டும். துன்புறுத்தக்கூடாது. அந்தச்சேலையும் முதல் திருமணத்திற்குத்தான் கொடுக்கப்பெறும் என்ற ஒப்பந்தம் குறிக்கப்பெற்றுள்ளது. இதனால் குலமங்கலநாட்டுக்கள்ளர்கள் காவலுக்காகவைக்கப்

பெற்றிருந்தார்கள் என்பதும் அவர்களால் தொந்திரவுகளும் இருந்தன என்பதும், அதற்காக ஒப்பந்தம் நடைபெற்றது என்பதும் அறியப்பெறும் (159 of 1911).

மற்றொரு கல்வெட்டிலும் அதேஒப்பந்தத்தைச் சேனைப்பெருமாள் என்ற குலோத்துங்கசோழவரையன், உடையார் குலசேகர தேவனாகிய கூப்பகாராயன் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட செய்தி குறிக்கப்பெற்றுள்ளது (160 of 1911). இவ்விரு கல்வெட்டுக்களும் ரங்கநாதப்பெருமாள்கோயில் தென்பக்கத்து அடித்தலத்திலும், வடமேற்குமூலை அடித்தலத்திலும் அமைந்துள்ளவை.

**குலோத்துங்கசோழன்:**

இவன் 10 வது ஆண்டுக் கல்வெட்டு குலோத்துங்கனுக்கு வடநாட்டில் பெருவெற்றி கிடைத்தது என்றும், அதனால் வடநாட்டவர்கள் நிரம்பக் கப்பங் கட்டினர் என்றும் அறிவிக்கிறது (1902 of 1911).

இவ்வரசன் வடநாட்டில் லாடதேசத்திலிருந்து ஞானகுருக்களை அழைத்துவந்திருந்தான். அவர்களில் சித்தாந்தரத்நாகர ஆசிரியராகிய ஸ்ரீஸ்கந்தசம்பு சிவாசாரியரின் மகன் ஈஸ்வரசிவனாரும் ஒருவர். இவரைக்கொண்டு இக்கோயிலில் பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும் நடத்திவைத்தான் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

# குத்தாலம்

# குத்தாலம்

தமிழ்நாட்டு மக்கள் குத்தாலம் என்ற பெயரை ஒருபோதும் மறந்தறியார்கள். தட்பமும், பசுமையும், அழகும் ஒருங்கே நிலவுகின்ற இடம். உயர்ந் தோங்கிநிற்கும் மலைசெறிந்த இடம் என்பதையறிவார்கள். ஆயினும் சோழநாட்டிலும் ஒரு குத்தாலம் உண்டு என்பதைச் சொல்லித்தான் தெரியவேண்டும். இந்தக் குத்தாலம் மாயூரமிருந்து கும்பகோணம் செல்லும் புகைவண்டித் தொடர்ப் பாதையில் உள்ளது. மாயூரத்திலிருந்து இத்தலத்திற்கு மட்சாலையும் உண்டு. கற்சாலையும் உண்டு. காவிரியாற்றங்கரையில் விளங்குந் தலங்களுள் இது மிகச்சிறந்தது.

தலப்பெயர்:

இத் தலத்தைத் திருமுறைகள் திருத்துருத்தி யெனவே வழங்குகின்றன. துருத்தி என்பது ஆற்றிடைக்குறை. இருமருங்கும் யாறு விரிந்துசெல்ல நடுவிற் காணப்படும் திட்டு என்பதாம். இத்தலம் அத்தகைய யாறுகளின் நடுவில் முன்னிருந்தது. ஆதலால் திருத்துருத்தி யென்றழைக்கப்பெற்றது. இப்போது காவிரி ஆலயத்தின் வடபக்கமாகமட்டும் ஓடுகிறது. தல விருட்சம் உத்தாலம் ஆதலால் உத்தாலவனம் எனவும் அழைக்கப்பெறும். குத்தாவிருப்பதால் குத்தாலமாயிற்று என்பாரும் உளர். உத்தாலம் குத்தாலமாயிற்று என்பாரும் உளர்.

**கோயில் அமைப்பு:**

கோயில் ஊரின் நடுவே இருக்கிறது. கோயிலை இதயமாகவைத்து நகரம் கட்டப்படுவது அக்கால வழக்காம் என்பதை யாவரும் அறிவர். இரண்டு பிராகாரங்களையுடையது. மேற்குப் பார்த்தசந்நிதி. சுவாமி அம்மன் கோயில்கள் தனித்தனியே வலம் வரும் வண்ணம் பிராகாரங்களோடு அமைந்துள்ளன. மேற்குவாயில் ராஜகோபுரம். அம்மன் கோயில் தெற்குப் பார்த்த சந்நிதி. கோயிலின் வடமேற்கு மூலையில் ஒரு சிறு குளம் இருக்கிறது. அதன் பெயர் சுந்தர தீர்த்தம் என்பது. அதன் மேல்கரையில் சுந்தரர் ஆலயம் அமைந்துள்ளது.

**மூர்த்திகள் :**

இறைவன் சிவலிங்கத்திருமேனி. அவர் திருநாமம் சொன்னவாறறிவார். இறைவி திருநாமம் அரும்பன்ன வனமுலையார். தலவிநாயகர் துணை வந்த பிள்ளையார். இன்னும் மணவாளநாதர், நறுஞ்சாந்திளமுலையம்மை ஆகிய மூர்த்திகளும் எழுந்தருளி யிருக்கின்றனர்.

**சொன்னவாறறிவார் :** அம்மையார் திருமணம் புரிய விரும்பி இறைவனைநோக்கித் தவஞ்செய்தனர். இறைவன் வெளிப்போந்து இறைவியின் திருக்கரத்தைப்பற்றினர். இறைவி இறைவன் திரு

வடிகளில் வீழ்ந்து வணங்கித் 'தன்னிகரில்லாத் தலைவ! அடியேனுடைய தாய் தந்தையர் அறிய என்னைத்தீண்டிமணத்தல்வேண்டும்' என வேண்டிக் கொண்டனர். இறைவன் 'விதிமுறையை வகுத்த நாமே பிழைத்தல்கூடாது. அவ்வாறே நடந்து காட்டுவோம்' என்றனர். அவ்வாறே சொன்னவா றறிந்து வந்து மணந்தார். அதனால் சொன்னவா றறிவார் ஆயினர்.

**மணவாளநாதர்:** சொன்ன வண்ணம் செய்ய மணவாளத் திருக்கோலத்துடன் எழுந்தருளினர். அப்போது மண வாளநாதர் என அழைக்கப்பெற் றனர். இத் திருவுருவம் சிவலிங்கப்பெருமான் திரு முன்பு தல விருக்ஷத்தின் அடியில் இருந்தது. இப்போது காணப்பெறுவது மணவாளநாதருடைய திருவடிநிலைமட்டுமே.

**நறுஞ்சாந்திள முலையார்:** திருமணக் காலத்து கத்தூரி கலந்த கமழ் சாந்தத்தோடு, நறு மலர் முல்லைசூடி, நல்லணி பலவும் பூண்டு பேரழகியாய் விளங்கினர் ஆதலின் இப்பெயர் பெற்றார். இத்திரு வுருவம் முற்குறித்த மணவாளநாதர் திருவடிநிலை முன்பு எதிர்ப்புறமாகவுள்ளது.

**துணைவந்த விநாயகர்:** மணவாளத் திருக் கோலங்கொண்டு இறைவன் மண்ணிடையெழுந் தருளிய காலத்து உடன் வந்தவர் விநாயகப்பெரு மானே. ஆதலால் துணைவந்த விநாயகர் என

அழைக்கப்பெறுகின்றூர். இவர் சொன்னவாறறிவார் திருமுன்புள்ள முற்றப்பெரு வெளியிலேயே எழுந்தருளியுள்ளார்.

**தலப்பெருமை:**

உமாதேவியார் முறைப்படி சிவபூசைசெய்து இறைவனை மணந்த தலம் இதுவே; தொட்டது துலங்காது. தீண்டிய பொருள்யாவும் தீய்ந்து சாம்பராகும் என்று அக்கினிக்கு இருந்த ஒரு பெரும் பழியை அக்கினி இத்தலத்து வந்து வழிபட்டுப் போக்கிக்கொண்டான். விக்கிரம சோழனுடைய மனைவியாகிய கோவளைக்குக் குட்ட நீக்கிய தலம். வருணனுக்குள்ள சலோதரம் என்னும் பெருநோய் நீங்கியதும் இங்குத்தான். காளி இறைவனுடைய பெருநடங்கண்டு தலைவணங்கி வீறு ஒழிந்து ஊர் காவல் தெய்வமாக உயர்வளித்ததும் இத்தலமே.

காமன் அம்பெய்த அடாப்பழியைப் போக்கிக்கொண்ட இடமும் இதுவே; சப்த முனிவர்களும் சாவாமூவாப் பேரின்பம் எய்தியதும் இங்கேயே. இன்னும் இத்தலத்து பரிச்சோதமுனிவர் மகனுன சிவபத்தன் என்பான் காச நோயைப் போக்கிக்கொண்டான். வித்துவன்மாலி என்பவன் நெடுநாள் தவஞ்செய்து சூரியன் தன்மையைப் பெற்ருன். அதுகண்டு பொருத சூரியன் கலகம் விளைத்துத் தோற்ருன். பின்பு தோல்விக்கு

வருந்தி வந்த சூரியன் இத்தலத்து இறைவனைப் பூசித்துத்தன்னிலை பெற்றான். அங்ஙனம் பெற்றது கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையாகும். அந்நாளில் வழிபாடு செய்வார் அனைவருக்குமே பகைவென்று தகையளிக்கும் தன்மைவாய்ந்தது. உருத்திரசன்மன் என்னும் முனிவரைத் தடுத்தாட்கொண்டு அருள்வழங்கியதும் இத்தலமே. தன் மனைவியோடும் வந்து வழிபட்ட பரதமுனிக்கு இருமை இன்பத்தையும் வழங்கியதும் இத்தலமே. இவ்வாறாக எண்ணுவார் எண்ணியாங்கு இன்பம் எய்த விளங்கும் பெருமையுடையது.

புராணவரலாறு:

அம்மையார் திருமணம்:— திருக்கயிலாய மலையில் அம்மையார் இறைவனை நோக்கித், "தேவரீர் அடியேனை மணஞ்செய்து நெடுநாட்களாயின. ஆதலின் இப்பொழுது ஒருமுறை மணஞ்செய்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தனள். அதற்கு இறைவன் அப்போதே மணஞ்செய்துகொள்வதாகக் கூறாமல் "அடுத்த கற்பத்தில் செய்வோம்" என்றனர். அதுகேட்ட இறைவி வருத்தமுற்றுத் தோழிகளுடன் விளையாடச் சென்றனள். அஃதறிந்த இறைவன் "நீ பசுவாகுக" என்றருளினர். இறைவி நடுங்கி, "அண்ணலே! யான் தங்களிடம் மகிழ்ச்சி வேண்ட, அதற்குமாறாக மயக்கத்தைத் தந்தருளினீர். யாதுசெய்வேன் பொறுத்தருள வேண்டும்"

என்றாள், இறைவன் "அஞ்சற்க; நீ பசுவாகும் பொழுது நாமும் விடையாகி வருவோம்" என்று அருளினர்.

சற்று மனந்தேறிய அம்மையார் "அடியேனுக்கு இச்சாபந்தீரும் காலம் யாது" என்ன, இறைவன் "நீ காவிரியின் தென்பால் பசுஉருவுடன் உலாவுவாய். அப்போது நின் காற்குளம்பின் தழும்பினை யாம் பெறுவோம். உன்வடிவம் நீங்கும். நீங்கி ஒரு பிராமணன் செய்யும் வேள்விக்குண்டத்தில் தோன்றுவாய். யாமும் விடைவடிவத்தை விடுத்து உன்னைத் திருமணஞ் செய்துகொள்வோம்" என்று அருளினர். அவ்வாறே அந்தணர் குலத்தோன்றலாகிய பரதமா முனிவரென்பார் செய்த வேள்விக் குண்டத்து அம்மையார் மகவாகத் தோன்றினர். இறைவனைத் திருமணஞ்செய்துகொள்ளும் பொருட்டுச் சிவபூசைசெய்தற்கு எண்ணினர். தோழியர்களுடன் காவிரிக்குச்சென்றுநீராடி அக்காவிரியின் நடுவில் மணல்மேட்டில் கருப்பக்கிருகம், மதில்முதலியன அமைத்து அதனடுவே இலிங்கமும் அமைத்து முறைப்படி அபிஷேகம் முதலியன செய்து மலர் கொண்டருச்சித்து ஆராதனைகள் செய்தனர். இவ்வாறு ஒவ்வொருநாளும் இறைவனைப் பூசித்துத் தம் இல்லம் ஏகினர். ஏழுநாட்கள் ஆயின. எட்டாவது நாளில் இறைவனே அம்மையின் திருவுள்ளப்பாங்கினை யறிந்து தம்மைப் பூசிப்பதற்கு முன்பாகவே கருங்கல்லால் தாமே ஆலயமமைத்து இலிங்க வடிவாய் அமர்ந்தருளினர். அம்மையாரோ அன்று

வழக்கப்படி எழுந்து நற்சகுனங்கள் தோன்ற, பாங்கியர் சூழ, காவிரியை அடைந்தார். கல்லாலயத்தைக் கண்டு களிப்புற்றார். மகிழ்ச்சிமீதூரப் பூசனைபுரிந்து தோத்தரித்துநின்றார். இறைவன் இலிங்கத்தினின்றும் தோன்றி அம்மையார் திருக்கரத்தைத் தீண்ட உடனே அம்மையார் வணங்கி "தேவரீர் அருளிச்செய்தவாறு நூல்களில் விதித்த விதி நிலைபெற, தாய்தந்தையர்கள் உவப்ப, அடியேனைத் திருமணஞ்செய்துகொள்ள வேண்டும்" என்று விண்ணப்பித்தனர். இறைவனும் "அவ்வாறே செய்வோம்" என்று அருளித் திருவுருக் கரந்தனர். அம்மையாரும் இருப்பிடமெய்தினர்.

பின்னொருநாள் இறைவன் நந்தியம்பெருமான் வாயிலாகத் தாம் திருமணஞ்செய்ய வருதலை முன்னர்ப் பரதனுக்கறிவித்து, செய்திவந்த பின்னர், மணவாளகோலத்துடன் விடையில் ஏறி, விநாயகர் முன்செல்ல, உத்தாலமரம் நிழல் செய்துவர, தேவர்கள் புடைசூழ இத்தலத்து ஆலயத்திற்கு எழுந்தருளினர். மறுநாள் விதிமுறைப்படி அம்மையாரைத் திருமணம் புரிந்தருளினர். இறைவன் தோன்றியவிடத்துத் தமது பாதுகையைவிட்டு மறைந்தனர். அவ்விடத்தில் இன்றும் திருப்பாதுகை எழுந்தருளியிருக்கிறது.

உருத்திரசன்மன்:— மறையவர்குலத்தில் உதித்தவன். மாலறநேய மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் தொழுபவன். அவன் இத்

தலத்தின் பெருமையினை யுணராது, காசியம்பதியே தன்கண் இறந்தார்க்கு முத்தியளிக்குமெனக் கருதி மனைவி மக்கள் முதலியோரையும் விடுத்து உவகை யுடன் காவிரியைக் கடந்து சென்றான். விந்திய மலையை அணுகினன். இறைவர் அம்மறையவனுக்கு இத்தலத்தின் பெருமையினை யுணர்த்தத் திருவுளங் கொண்டனர். குண்டோதரனை நோக்கி "நீ பாம்பு உருக்கொண்டு அவன் செல்லும் வழியில் கிடந்து மறித்துக்கொள்வாய்" என்று அருளினர். குண் டோதரனும் அவ்வாறே மலைப்பாம்பாகக் கிடந் தான். சென்ற உருத்திரசன்மன் கண்டு பயந்து பல வகையாலும் தாண்டிச்செல்ல முற்பட்டான். பாம்பு மேலும்மேலும் தனது படத்தை விரித்துப் பய முறுத்தியது. மறையோன் கருடமந்திரத்தை உச் சரிக்கப் பாம்பு மயங்கிக் கீழேவீழ்ந்தது. அதன் நெட்டுயிர்ப்பால் கானம் கரிந்தது. உயிர்வர்க்கங்கள் யாவும்மயங்கின. அதுகண்ட மறையவன் நல்வினைப் பயனால் "இஃது துருத்திப் பெருமானால் விளைந்தது" என உட்கொண்டு அப்பெருமானை வணங்கி ஓலமிட் டரற்றினன்.

ஓசையினைக்கேட்ட பெருமான் பாம்பாட்டி வேடங்கொண்டு மறையவன் முன்னர்த் தோன்றி "யாம் திருத்துருத்தி ஐயர் கட்டளையால் இங்கு வந்தோம்" என்று அருளி, அவன் விருப்பின்படி குழலினை ஊதினர். மயங்கிய பாம்பு படமெடுத்து ஆடியது. அதுகண்ட மறையவன் "இவர் எம்பெரு

மானே?'' என்று ஐயங்கொள்ள, இறைவர் தாம் கொண்ட வடிவத்தை மாற்றி மணவாள நாதராகக் காட்சியளித்தனர். குண்டோதரனும் முன்னைய உருப்பெற்றான். மறையவன் வீழ்ந்து வணங்கிநின்றான். பெருமானும் "அன்பனே! காசியையடைய விரும்பினாய். ஆனால் அதனைவிட திருத்துருத்தி மிகவும் சிறந்ததலம். கங்கையினும் காவிரி சிறந்தது. அதன் கீழ்பால் விசுவநாதர் எழுந்தருளியிருப்பார். அக்கினிதிசையில் பைரவர் இருப்பார். அந்தத் தலத்தையடைக'' என்றருளிச்செய்தனர். மறையவன் பணிந்து "பெருமானே! இனி எவ்வாறு அங்குச் செல்வேன். உடல் களைத்துவிட்டதே' என்று விண்ணப்பிக்க, இறைவர் ஒரு பொய்கையைத் தோற்றி "இதன்கண் மூழ்குக'' எனப்பணித்து மறைந்தனர். மறையவனும் அதில்மூழ்கி இத்தலத்துக் காவிரித்துறையில் எழுந்து விசுவநாதரையும், பைரவரையும் பணிந்து ஆலயத்திற்குவந்து சிவபெருமானையும் வணங்கினான். சிலகாலம் பணிசெய்திருந்து முத்தி எய்தினன்.

**சுந்தரமூர்த்தி சுவாமிகள்:—** தலங்கள் பலவற்றைத் தரிசித்தும் ஆங்காங்கு பாமாலை தொடுத்துச்சாத்தியும் வருகின்ற சுந்தரர் திருவொற்றியூர்ப் பெருமானைப் பணிந்து ஆங்குத் தங்கினர். மகிழமரத்தடியில் "நின்னைப் பிரியேன்'' எனச் சபதங் கூறிச் சங்கிலியாரை மணஞ்செய்துகொண்டனர். சிலநாள் அங்குத்தங்கியிருந்தார். ஆரூர்ப்பெருமான்

திருக்கோலம் நினைவுக்குவந்தது. காணுதற்கு முற்பட்டார். சபதம் மறந்து ஒற்றியூரை அகன்றார். அதனால் இருவிழிகளும் ஒளிமழுங்கின. அதனோடு திருமுல்லைவாயிலையடைந்து பெருமானிடம் ஊன்றுகோல் பெற்றார், பலதலங்களை வணங்கிக்கொண்டு காஞ்சியை அடைந்து ஏகம்பநாதரை வணங்கினார். ஒருகண் ஒளி நிறைந்தது. காவிரியைக் கடந்து ஆவடுதுறையை அடைந்து பணிந்து அகன்றனர். அப்பொழுதும் முன்செய்தசபதம் தவறியதுகாரணமாகவே உடலில் பிணி ஏற்பட்டது. அதனால் மேனி கருநிறம் அடைந்தது. உள்ளம் புழுங்கினார். பரவை காணில் என்சொல்வாள். பாரோர் பலரும் என் நினைப்பர். எம்மான் அருளும் இப்படியோ? என்று கருதினர். திருத்துருத்தியை அடைந்தால் அகலும் என எண்ணினர். எண்ணியவாறே இத்தலத்துக்கு வந்தனர்.

ஆலயத்தினுட் சென்று இறைவனை வணங்கி, "தேவரீர் அடியேனுக்கு ஏற்பட்ட தீராதநோயினைத் தீர்த்துக் கருணைபாலிக்கவேண்டும்" என்று விண்ணப்பிக்க, இறைவன் "அன்பனே வருத்தம்நீங்குக. பதுமதீர்த்தத்தில் மூழ்குக" என்று திருவாய்மலர்ந்தருளினர். சுந்தரர் அவ்வாறே அத்தீர்த்தத்தில் மூழ்கி எழுந்தார். உடற்பிணி நீங்கிற்று. ஒளி மிகுந்தது. கண்டு வியப்புற்றார். "மின்னுமா மேகங்கள்" என்று எடுத்துத் திருப்பதிகம் பாடினர். மீண்டும்பன்முறைவணங்கி விடைபெற்றுக்கொண்டு இத்தலத்தை அகன்றார்.

சூரியன்:— வித்துவன்மாலியென்னும் திதியின் புதல்வன் சுக்கிரன்பாற் சென்று தலங்களிற் சிறந்தது யாது? என்று வினவி அறிந்து, இத்தலத்து வந்து, பதுமதீர்த்தத்தில் நீராடித் திருநீறுங் கண்டிகையும் பூண்டு, இறைவனையும் இறைவியையும் அருச்சித்து வழிபட்டுத் தவம்புரிவானாயினன். அவனது அருந்தவத்தைக்கண்ட இறைவன் காட்சி அளித்து "அன்பனே! விரும்பியது யாது? கூறுக" என்ன, அவன் "கதிரவனுகும் வரத்தையும் பொற்றேரும் அடியேனுக்குத் தந்தருளவேண்டும்; இன்னும் கதிரவன்போல நானும் மகாமேருவை வலம் வருதல் வேண்டும்" என்று விண்ணப்பித்தான். இறைவரும் அவ்வாறே அருள்பாலித்து மறைந்தனர்.

விரும்பியதைப் பெற்ற வித்துவன்மாலியும் இறைவனை வணங்கிப் பொற்றேரூர்ந்து ஆகாயத்திலெழுந்து உலகவரைப் பார்த்து, சூரியன் தக்கன் யாகத்தில் சென்று குறையுற்றது முதலாகிய பல குற்றங்களைக் கூறிக்கொண்டு கிழக்கே உதித்தான். சூரியன் மேற்கே உதித்தான். வித்துவன்மாலி மேருவின் வடபால் வந்தால் சூரியன் தென்பால் வருவான். இவ்வாறு வருதலால் உலகத்தில் இரவு என்பதே இல்லை. உயிர்கள் மயங்கின. அதுகண்ட வியாழபகவான் சூரியனிடஞ்சென்று, "காலத்தை அளந்துகாட்டும் கடவுளாகிய நீ காலத்தைக் காட்டாதிருப்பது முறையன்று" எனக் கூற, சூரியன்

வித்துவன்மாலியுடன் போர்புரியத் தலைப்பட்டான். போருக்காற்றாதவனாய வித்துவன்மாலி "துருத்தி நாயகனே ஓலம் என்று தேரோடு மண்ணில் வீழ்ந் தான். அதுகண்ட இறைவர் அவனுக்கு அபயம் அளித்துச் சூரியனைச் சினந்து நோக்கச் சூரியன் தேர் வீழ்ந்தது. வித்துவன்மாலி தேர் எழுந்தது.

கீழேவிழுந்தசூரியன் தன் தந்தையிடம் நிகழ்ந் தது கூறி அவராணைப்படி இத்தலத்துவந்து நீராடி இறைவனை வழிபட்டுத் தலத்தின் தென்பால் அரச மரத்தடியில் விநாயகப்பெருமானைப் பிரதிட்டித்து வணங்கி, அதன்மேல்பால் கோயில் ஒன்றமைத்து முறைப்படி பூசித்துவந்தான். பின்னர் தவத்தில் அமர்ந்தான். அத்தவ அழலால் வெதும்பிய தேவர் கள் இறைவனிடம் விண்ணப்பிக்க, இறைவன் கதி ரவன் வடிவத்தைக்கொண்டு சூரியனெதிர்தோன்றி, "கதிரவ! துருத்தி ஆலயத்திலுள்ள தீர்த்தத்தில் நீராடி ஓராண்டு இறைவனை வழிபடுக. பின்னர் இழந்த தன்மையை அடைவாய்" என்றருளினன். சூரியனும் அவ்வாறே ஓராண்டு வழிபட இறைவன் காட்சியளித்தான். சூரியன் வணங்கி "ஐயனே! அடியேன் முன்னர் இழந்ததன்மையைப் பெற அருள்பாலிக்கவேண்டும். கார்த்திகை ஞாயிறாகிய இன்று பதுமதீர்த்தத்திலும், காவிரிநதியிலும்நீராடி வழிபடுவோர்கள் யாவரும் விரும்பியபேற்றைப் பெறுதல் வேண்டும். இன்னும் அடியேன் தவஞ் செய்த இடம் கதிராமங்கலம் எனப் பெயர் எய்தல் வேண்டும். இவையே எனது வேண்டுகோள்" என்

றன். இறைவனும் "அவ்வாறே ஆகுக" என அருள் பாலிக்க, சூரியன் வணங்கி இருப்பிடஞ் சென்று அரசியலைப்பெற்று மகிழ்ந்தான். வித்துவன்மாலியும் கார்த்திகை ஞாயிறில் தீர்த்தமாடிச் சொன்ன வாறறிவாரை வழிபட்டுப் பேரின்பம் பெற்றான். அதுமுதல் சூரிய(கதிரவ)ன் தவஞ்செய்த இடம் கதிராமங்கலம் எனப் பெயர் இன்றும் வழங்கப்படுகின்றது.

தீர்த்தம்:

இத்தலத்து காவிரி, சுந்தர தீர்த்தம் முதலிய எட்டுத் தீர்த்தங்கள் இருக்கின்றன.

காவிரி:— ஆலயத்திற்கு வடபால் ஓடுவது. சதானந்தர், வச்சன் ஆகியோர் இதில் நீராடி முத்தி பெற்றனர். 'தவஞ்செயும் போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்செல்லும் காவிரி'; 'ஆடுவார் பாவந் தீர்த்து அஞ்சனம் அலம்பித் திகழுமா காவிரி' 'எண்டிசையோர்களும் ஆடவந்திங்கே சுழிந்திழி காவிரி' என்பனபோன்ற சொற்றொடர்களால் சுந்தரர்பெருமான் காவிரிச் சிறப்பைக் கூறிக் காட்டுகின்றார்.

சுந்தர தீர்த்தம்:— இது கோயிலுக்குள்ளே இருப்பது. சதானந்தர் இதில் ஓராண்டு மூழ்கி உண்மை ஞானம் பெற்றனர். வச்சரும் அப்படியே. சுந்தரர் தன்மேனியிலிருந்த படர்நோயைப்

போக்கிக்கொண்டதும் இத்தீர்த்தத்திலேயேதான். இந்நிகழ்ச்சியை 'படர்நோய்களைவானே' என்று அவரே குறித்துள்ளது கருதத்தக்கது.

**தலவிருட்சம்:**

உத்தாலமரம்; இது எங்கும் இல்லாததாய், அருமை யுடையதாய், ஒன்றாய் உள்ளது.

**சுற்றியுள்ள தலங்கள்:**

கதிராமங்கலம், திருவேள்விக்குடி திருமணஞ் சேரி, திருஎதிர்கொள்பாடி, உள்ளிட்ட தலங்கள் விளங்குகின்றன.

**கதிராமங்கலம்:—** வித்துவன்மாலி என்னும் கதிரவன் பதம் பெற்ற ஒருவனோடு மாறுபட்ட சூரியன் வழிபட்டுத் தன் ஒளிபெற்றமையால் கதிராமங்கலம் எனப் பெயராயிற்று.

**திருவேள்விக்குடி:—** அரசகுமாரனுக்கு மணம் முடிக்க இறைவன் புரோகிதராயிருந்து வேள்வி செய்த தலம். சுவாமி கல்யாணசுந்தரர், அம்மை பரிமள சுகந்தநாயகி. இத்தலம் குத்தாலத்திற்கு மேல்பால் ஒருகல் தொலைவில் இருக்கிறது.

**திரு எதிர்கொள்பாடி:—** வேள்விக் குடியில் மன்னவன் குமரனை மாமஙக வந்து இறைவனே

எதிர்கொண்டழைத்த தலம். சுவாமி ஐராவதேசுவரர். அம்மை மலர்க்குழல்மாது. குத்தாலத்திற்கு மேற்கே ஒன்றரைக்கல் தொலைவிலுள்ளது.

திருமணஞ்சேரி:— ஆமை உருவாகிய ஒரு புருஷன் இறைவழிபாடியற்றி ஆமையுரு நீங்கித் தன் முறைப் பெண்ணை மணந்ததலம். சுவாமி அருள்வள்ளல் நாதர். இறைவி யாழின்மொழி அம்மை. குத்தாலத்தின் வடமேற்கே நாலரைக்கல் தொலைவிலுள்ளது.

**அன்பர்கள்:**

திருஞானசம்பந்தர், திருநாவுகரசர், சுந்தரர், மணிவாசகர், ஐயடிகள் காடவர்கோன், நம்பியாண்டார் நம்பிகள் முதலிய அன்பர்கள் இத் தலத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்கள். சம்பந்தர் பதிகம் இரண்டும் நாவுக்கரசர் பதிகம் ஒன்றும், சுந்தரர்பதிகம் ஒன்றுமாக நான்கு பதிகங்கள் உள்ளன.

**நூல்கள்:**

இத்தலத்துக்கு மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய தலபுராணம் ஒன்றுள்ளது. 1602 பாக்களை யுடையது.

# கல்வெட்டுக்கள்

**தல அமைப்பு:**

அப்பர்சுவாமி 'பொன்னியின் நடுவுதன்னுள் பூம்புனல் பொலிந்துதோன்றும் துருத்தி' என்றும், 'தூமணற்றுருத்தி' என்றும் குறிப்பிடுகிறார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள்'காவிரித்துருத்தி' என்கின்றார்கள். இதனால் கோயில் காவிரியின் நடுவில் அமைந்திருந்தமை வெளிப்படை. கல்வெட்டுக்களிலும் இச்செய்தி யப்படியே யமைந்துள்ளது. ஆனால் இன்று காவிரித் தென்கரைத் தலமாக இருக்கின்றது. இந்தமாற்றம் சமயாசாரியர்கள் காலத்திருப்பின் குறியாதிரார். ஆயினும் (491 of 1947) கல்வெட்டு 'தென்கரை ராஜநாராயணவள நாட்டு வீங்குநீர்த்துருத்தி' என்று குறிப்பிடுவதால், அக்கல்வெட்டுக்கண்ட அரசன் விக்கிரமசோழனதலின் அவன்காலத்தின் முன்பே கி.பி. 1118க்கு முன்பே தென்கரைக்கோயிலாக ஆயிற்று என்பது தெளிவு.

இத்தலம் எந்த வளநாட்டை எந்தநாட்டை யடுத்து இருந்தது என்பதை யறிவிக்குங் கல்வெட்டுக்கள் பலவுள்ளன. அவற்றுட் சில மாற்றங்களும் காணக் கிடைக்கின்றன. விக்கிரமசோழன் காலத்தில் (கி.பி. 1118—1136) தென்கரை ராஜநாராயண வளநாட்டகத்ததாயிருந்தது. கோனேரின்மை கண்டான் காலத்து விருதராஜ பயங்கர



ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமி கோயில்

வளநாட்டகத்ததாயிற்று. மூன்றாங்குலோத்துங்கன் காலத்து ஜயங்கொண்டசோழவள நாட்டகத்ததாயிற்று. வளநாட்டுப் பிரிவு எங்ஙனமாயினும் மூன்னேனுகிய விக்கிரமன் காலத்திலேயே தென் கரைத்தலமாயிற்று என்பது தெளிவு.

**தலம் - கோயில் இவற்றின்பெயர்கள்:**

தலத்தாலும், கோயிலாலும் இறைவனுக்கும், இறைவனுற் கோயிலுக்கும் பெயர்கள் அமைந்திருக்கின்றன. தலத்தில் நடைபெற்ற சிறந்த நிகழ்ச்சிகளால் (ஐதீகங்களால்) இறைவனுக்குப் பெயர் அமைதலும் உண்டு. அவ்வாறே மூவர் தேவாரமும் தல அமைப்பு காரணமாக எழுந்த பெயராகிய துருத்தி என்பதனுலேயே இத்தலத்தையழைக்கின்றன. பின்னர் தல விருக்ஷத்தின் பெயரால் உத்தாலவனமாகி குத்தாலமாகி வழங்குகிறது.

கோயிலுக்கு இறைவன் தொடர்பால் எழுந்த சொன்னவாறறிவார் கோயில் என்ற பெயரும் வீங்குநீர்த்துருத்தியுடையார்கோயில் என்ற பெயரும் வழங்குகின்றன. அன்றியும் சிறப்பாகக், **'கல்யாண ஆலயம்'** என்றும் பெயர் வழங்கியதாகக் (488 of 1907) கல்வெட்டுக் காட்டும். ஆனல் இவ்வெழுத்து மிகச் சிதைந்ததாக காலமும், அரசன் பெயரும் இல்லாது காணப்பெறுகின்றது. இப்பெயர், இறைவன் மணவாளத் திருக்கோலங் கொண்டு வந்தமையின் விளைந்த பெயராகக் கோயிலுக்கு ஆகியிருக்கக்கூடும்.

**இறைவன்பெயர்:**

இறைவன் சொன்னவாறறிவார், வீங்குநீர்த் துருத்தியுடையார், கற்றளியுடையமாதேவர், என்று வழங்கப்பெறுகின்றார். அம்மை நாச்சியார் என்றே அழைக்கப்பெறுவர்.

**தொன்மை:**

இக்கோயில் மிகத் தொன்மையானது. திருநாவுக்கரசுசுவாமிகள் இக்கோயிலைப் புகழ்ந்து பாடியிருக்கின்றார்கள். அவர்கள் காலம் மகேந்திரவர்ம பல்லவன் I காலம். அவன் கி. பி. 7ம் நூற்றாண்டில் இருந்தவன். ஆகவே இக்கோயிலும் 7ம் நூற்றாண்டிற்கு முந்தியதென்பது வெளிப்படை.

பின்னர், ராஜகேசரிவர்மற்கு ஏழாம் யாண்டில் வெட்டப்பெற்ற கல்வெட்டு செம்பியன்மாதேவியாரால் கோயில் கட்டப்பெற்றது என்று அறிவிக்கிறது (103 of 1926). ராஜகேசரிவர்மன் என்பது முதலாம் இராஜராஜனைக் குறிப்பதாகும். ஆதலால் முதலாம் இராஜராஜன் காலத்து அதாவது பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கண்டராதித்தச்சோழர் மனைவியான, செம்பியன்மாதேவியாரால் இக்கோயில் திருப்பணி செய்விக்கப்பெற்றது. இஃதேயன்றி அந்த அம்மையார், கோயிலைப் புதிது கண்டவரல்லர்.

**சுற்றுக்கோயில்கள்:**

இத்தலத்தில், விக்கிரமசோழீச்சரமுடையார் கோயிலும், ஓங்கார ஈச்சரமுடையார் கோயிலும் கல்வெட்டுக்களால் அறியப்பெறுவன. அவற்றுள் விக்கிரம சோழீச்சரமுடையார்கோயில் சோளேச்சரர் கோயில் என்றும், செட்டியார் கோயில் என்றும் இக்காலத்து வழங்கும். ஓங்கார ஈச்சரமுடையார்கோயில் ஓங்காளீச்சரம் என வழங்குகிறது. இவற்றைப்பற்றிய கல்வெட்டுக்களும் நிபந்தங்களும் மிகுதியாக உள்ளன.

**திருவிழா:**

இக்கோயிலின் பெருவிழா வைகாசித்திங்களில் நடைபெற்றுவந்தது. இதனையறிவிப்பது விக்கிரம சோழன் எட்டாம்யாண்டிற் பிறந்த கல்வெட்டாகும் (492 of 1926).

இத்தலத்திற்குச் சோழமன்னர்கள் பலரும், விஜயநகர மன்னனும், மற்றும் சிலரும் நிபந்தங்கள் அளித்துள்ளனர். மண்டபம் முதலியன கட்டியுள்ளனர். அவர்களில் காலத்தால் மூந்தியவன் முதலாம் இராஜராஜன் ஆவான்.

**ராஜராஜன் I:** —கி. பி. 985—1014.

இவன் ஆட்சி ஏழாம் யாண்டில்தான் செம்பியன்மாதேவியார் கோயிலைப் புதுக்கிய செய்தி

குறிக்கப்பெற்றுள்ளது (103 of 1926). பதினாறும் யாண்டில் காவேரிநல்லூரானான வீர நாரணன் கூற்றத்தலையான வலங்கை வேலைக்காரன் 360 கழஞ்சு பொன்னைத் திருவழுந்தூர் நாட்டு எடுத்த பாதம் செய்யபாதமான திருத்துருத்திப்பிச்சனிடம் சேர்ப்பித்து அதன் வருவாயைக்கொண்டுசொன்ன வாறறிவார்க்கு அர்த்தயாமபூசை நடத்திவர ஏற் பாடு செய்தான் (106 of 1926). பதினேழாம்யாண் டில் வீங்குநீர்த்துருத்தி கற்றளியுடைய மாதேவ ரான சொன்னவாறறிவார் கோயிலிலுள்ள பொற் பலகை விடங்கர்க்கு நுந்தாவிளக்கிட, தொண்ணூறு ஆடுகளை திருவழுந்தூர் நாட்டுத் திருவழுவூர் மான பல்லவரையன் என்பான் கொடுத்தான். (105 of 1926)

இராஜேந்திரன் I: கி. பி. 1012—1044

இவன் ஆட்சி ஐந்தாம் ஆண்டில், கங்கை கொண்ட சோழபுரத்துள்ள வெண்காடன் ஆடல் வல்லான் என்பவர் அரசர்க்குத்தீதகல சொன்ன வாறறிவார் கோயிலுக்கு உச்சிப்போது வழிபாட் டிற்கும், அவ்வழிபாட்டையாற்றிய மாகேஸ்வரர் களுக்கு உணவளிக்கவும் ஆக நிலமும் பொன்னும் அளிக்கப்பெற்றது. (4851, 486 of 1907) இதனை யன்றியும் உய்யக்கொண்டான் வளநாட்டு திருவழுந் தூர்நாட்டு பிரமதேயமான வில்லவன்மாதேவி மகா சபையாராலும் நிலமளிக்கப்பெற்றது (487 of 1907)

ஆட்சி 5-ம் ஆண்டு 35-வது நாள் 3-ம் ஆண்டு நிகழ்ச்சியாக திருவழுந்தூர்நாட்டு வீங்குநீர்த் திருத்துருத்தி சொன்னவாறறியுமாதேவர்க்கு விழாக்கள் நடத்த நிலமளித்து இறையிலி செய்த நிகழ்ச்சி குறிக்கப்பெற்றுளது (101 of 1926). சில கிராமங்களிலிருந்து ஆண்டொன்றுக்கு 80 காசுவீதம் அரசன் பிறந்தநாளாய மார்கழித் திருவாதிரையில் விழாக் கொண்டாட ஏற்பாடு செய்விக்கப்பெற்றது. நான்காம் ஆண்டில் உய்யக்கொண்டார் வளநாட்டு திருவழுந்தூர்நாட்டு பிரமதேயமான வில்லவன்மாதேவி சதுர்வேதிமங்கலத்து மகாசபையால் எட்டுமாநிலங்களை 43 காசுக்கு விற்றதும், ஏனையநிலங்களை இறையிலிசெய்ததுமாயசெய்தி குறிக்கப்பெற்றுள்ளன.

ஆட்சி 23-ம் ஆண்டில் இராசேந்திரசோழவளநாட்டு திருக்கழுமலநாட்டு வீரவசோழநல்லூரில் சிவதன்மசேகரனை பரமாத்மனால் தன் அரசனுக்குத் தீதகலவும் நன்மைவிளையவும் திருக்கற்றளியுடைய மாதேவர்க்கு உச்சிப்போது பணிபுரியும் சிவயோகியர் உணவுக்காக நிலம்விடப்பெற்றது. நிலவரியில் இருந்து 12 காசு பொன் அவர்களுக்குத் தக்ஷிணையாகவும் அளிக்கப்பெற்றது (99 of 1926).

**கோநேரின்மைகொண்டான் :**

கி.பி. 1062-ல் திருக்கற்றளியுடையமாதேவர்க்கு திருவழுந்தூர்நாட்டுச் சபையாரால் காவிரிநல்லூர் என்னும் கிராமம் இறையிலிசெய்து அளிக்கப்பெற்

றது. அதில் சிலபகுதிகள் வெள்ளான்வாகைநாகன், ஆதித்தன்பிடாரன் முதலியோர்கட்கு உரிமையாக இருந்தன. அவற்றையும் விலைக்குவாங்கி உரிமை செய்யப்பெற்றது (100 of 1926)

**விக்கிரமன் :** கி. பி. 1117—1136

இவன் ஆட்சி 3-ம் ஆண்டில் விருதராசபயங்கர வளநாட்டு நல்லாற்றூர்நாட்டு பூலோகமாணிக்க சதுர்வேதிமங்கலத்துச் சபையார் தென்கரை இராச நாராயண வளநாட்டு வீங்குநீர்த்துருத்தி சொன்ன வாறறிவார் கோயிலுக்கு நிலமளிக்கப்பெற்றன. (491 of 1907).

5ம் யாண்டில் சொன்னவாறறிவார் கோயிலுக்கு நிலங்களை இறையிலி மடப்புறமாகக்கொண்டு அதனை இந்தச் செய்யபாதம் கழற்சேவகனை பொற்கோயிற் பிச்சனும் சிவன் வழிவந்தோரும் இத்தன்மம் செலுத்தக்கடவதாக என ஆணையிட்டுக் கொடுத்தது. இதில் செய்யபாதம் சோழீச்சுர முடையார்கோயிற் பிச்சனும் செய்யபாதம் சேர் கழல் வலார் பொற்கோயிற் பிச்சனும் குறிப்பிடப் படுகிறார்கள். நிலம் விற்றகாலத்து பாய்மடையும், வடிமடையும் குறிப்பிடப் படுதலும் அதற்குள்ள சில்வரி பெருவரியைக் கொடுத்துவர உரிமை கோறு தலும் குறிப்பிடப்படுகின்றன. (வெளிவராதது).

8ம் ஆண்டில் பூலோக மாணிக்கசதுர்வேதி மங்கலத்துச் சபையார் திருத்துருத்தியுடையார் பூஜைக்காக நிலம் விட்டார்கள். (490—492 of 1907)

குலோத்துங்கன் III: கி. பி. 1118—1218.

மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட திரிபுவன சக்ரவர்த்தி என்று குறிக்கப் படுகிறான். ஓங்கார ஈசுர முடைய பரமசாமிக்கு நிலம் விட்டான். (478 of 1907)

25ம் ஆண்டில் அதாவது 1203ல் ஜனவரி 4ந்தேதி சனிக்கிழமை (செவல்பாதிரிகூற்று) பிள்ளை ஜயதரபல்லவராயரால் கோயிலில் கல்வெட்டிக் கொள்ள உத்தரவிடப்பட்டது. (480 of 1907)

35-ம் ஆண்டில் ஜயங்கொண்டசோழவளநாட்டு அநபாய புரத்தில் நிலம் அளித்தாள். (484 of1907.) ஓங்கார ஈசுர முடையார் கோயிலுக்கு அரையன் ஆளுடையனான ஜயதரபல்லவராயர் சொன்னவாறறிவார் கோயிலுக்குச் சொந்தமான காவேரி நல்லூரை தேவதானமாக அளித்தான். இந்நிகழ்ச்சி இவ்வரசன் காலத்தது காலம் 12-3-1203 என்பர் செவல் பாதிரியார். (482 of 1907)

கிருஷ்ணதேவராயர்: கி. பி. 1518.

சகம் 1440-ல் விஜயநகர பூஜ்யபாலவீரப் பிரதாப கிருஷ்ணதேவ மகாராய தொண்டை

மண்டலத்துத் திருப்பயற்றூர் பகவராசா கேட்டுக் கொண்டபடி தாம் மகோற்சவத்துக்குக் குடந்தை வந்திருந்தபோது 90 பொன் அளித்தார்.

கம்பண வுடையார் பெயர்க் குறிப்போடுகூடிய சகம் 1333ல் உண்டான கல்வெட்டு குலோத்துங்க சோழவளநாட்டு கீழ்ப்பழையாறையான ராஜராஜ புரத்துத் திருச்சிற்றம்பல முடையார் கோயில் மனையை மடத்துக்கு அளித்த நிகழ்ச்சியைக் குறிக் கிறது. (444 of 1904.)

கி.பி. 1630ல் இருந்த சிதம்பரதீக்ஷிதர் என்பவர் அம்மையின் திருச்சுற்று மதிலையும் காவிரிப் பக்கம் செல்லும் வீதியையும் அமைத்தார் என்றும், அது பிப்பிலி சிதம்பர தீக்ஷிதபுரம் என வழங்கப் பட்ட தாயும் 107 of 1926 எண்கல்வெட்டு கூறுகிறது.

# மணக்குடி

# மணக்குடி

**தல அமைப்பு:**

காவிரியின் வடகரையில் கருங்குயில்நாதன் பேட்டைக்குக் கிழக்கே சற்றேறக்குறைய $\frac{3}{4}$ மைல் தூரத்திற்குள் இருக்கிறது. இத்தலம் பொழில் சூழ்ந்த அழகிய இடம். மணற்பாங்கான நிலப்பரப்பில் இருப்பதால் மணற்குடி யென்று பெயர் வந்ததுபோலும். தருமபுரத்திற்கு அண்மையில் வடகிழக்கு மூலையில் அரைகல் தொலைவில் விளங்குவது இத்தலம்.

**கோயில்:**

மிகச்சிறிய அந்தமான கோயில். சுவாமி, அம்மன் கருப்பக்கிருகமும், ஏனையபரிவார மூர்த்திகளுக்குத் தனியறைகளும் இருக்கின்றன. நாற்புறமும் திருமதில் சூழ ஒரே பிராகாரத்துடன் விளங்குகிறது.

சுவாமி பெயர் சுந்தரேசர். அம்மை பெயர் ஞானம்பிகை. நடராஜா, கணபதி, சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர் முதலிய எழுந்தருள் உருவங்கள் இருந்து காட்சி வழங்குகின்றன.

**பூசையும் விழாவும்:**

இவ்வாலயத்திற்கு நாலுகால பூசைகள் நடைபெறுகின்றன. மார்கழித் திருவாதிரையில் ஒருநாள் திருவிழாவாக நடராஜப்பெருமான் மட்டும் எழுந்தருளி வீதியுலாவருவர்.

**புராணவரலாறு:**

உமாதேவி மலைமகளாக அவதரித்து மணப்பருவத்தை யடைந்தபோது இமவானாகிய தந்தை தன்னருமைமகளின் அழகையும், தெளிவையும் பார்த்து இவளுக்குத் தக்ககணவனைத்தேர்ந்தெடுக்க வேண்டுமே எனக் கவன்றனர். பிராட்டியார் தந்தையர் மனக்கருத்து அறிந்து எமக்கு மணவாளன் எல்லாவல்லபமுமுள்ள முழுமுதற்கடவுளே; அவரே என் கணவராவார். என்தோள் அவரையன்றிச் சேராது என்றனர்.

தந்தை கவன்று 'ஐயோ இறைவனா! உன்னை மணப்பார். ஒன்றுக்கும் பற்றாத அடியேனுக்கு அவரா மருகனாவார் ? முடியாத காரியத்து முனையலாமா?' எனக் கவன்றனர். அம்மை தாயிடம் சென்று, தாயே! நான் தவம் செய்யப்போவேன். தடுக்காது உத்தரவளிக்கவேண்டும் என்றனர்.

இவ்வார்த்தை கேட்ட மேனை அப்படியாயின் உனது இனிமையழகு எங்கே! உனதுமெல்லிய பூங் கொம்புபோன்ற உடலமைப்பு எங்கே! தவம் எங்கே! இந்த வயதிற்கும் தவத்திற்கும் பொருந் தவே பொருந்தாது; வேண்டா வேண்டா எனத் தடுத்தனள். அம்மை அதனையும் கேளாது மீண்டும் தாயிடஞ்சென்று உத்தரவுபெற்று இமையத்துச்சி யில் சென்று சிருங்கம் என்னும் இடத்தில் தவஞ் செய்தனர். பல்லாண்டுகளாயின. தரித்திடும் தாழ் சடைப்பெருமான் மணந்துகொள்வதாக வரம் அளித்தார்.

தாயும் தந்தையுமில்லாத் தனிப்பரமன் நெருங் கிய அன்புறவு கொண்ட அடியார்களை - முனிபுங் கவர்களை மணம்பேச அனுப்பினர். மண முடித்துக் கொண்டார். அங்ஙனம் மணந்துகொள்ள கௌரி மாயூரத்திற்கு எழுந்தருளி வந்தபோது பெருமான் தங்கிய இடம் மணக்குடியாயிற்று. இத்தலத்தில் இறைவர் ஞானம்பிகா சமேத சுந்தரேசராக எழுந் தருளி மணக்கோலங்காட்டியருளுகின்றார்.

**தீர்த்தம்:**

கல்யாணதீர்த்தம்:— மணக்காலத்துப் பிரமன் இதில் நீராடி இறைவருக்கு மணஞ்செய்விக்கும் பேறுபெற்றான்.

## கல்வெட்டு.

இக்கோயிலில் பழைமையான கல்வெட்டுக்களும் வரலாறுகளும் ஒன்றும் இல்லை. 15வது குருமூர்த்திகளாக இருந்த ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள் அவர்களால் இக்கோயில் திருப்பணிசெய்விக்கப்பெற்றது. *இக்கல்வெட்டு மெருகேற்றிய கல்லில் எழுதிப் பதிக்கப்பெற்றுள்ளது.

* இந்நூல் 19-ம் பக்கம் பார்க்க

# திருவையாறு

# திருவையாறு

காவிரியால் வளம்பெறுவது தஞ்சை. தஞ்சைத் தலைநகரிலிருந்து வடக்கே எட்டுக்கல் தொலைவில் இருக்கிறது திருவையாறு. "கரவிலருவி கமுகுண்ண தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை அரவந்திரைக் காவிரிக் கோட்டத்தையாறு" என்று சுந்தரர் பெருமானும் "அருங்கலம் பொன்மணி உந்துமையாறு", "இளமங்கையராடும் ஐயாறு", "அறையிளம் பூங்குயிலாலும் ஐயாறு" என்று திருநாவுக்கரசு சுவாமிகளும், "செண்டாடுபுனற்பொன்னிச் செழுமணிகள் வந்தலைக்கும் திருவையாறு" என்று திருஞான சம்பந்த சுவாமிகளும் திருவாய்மலர்ந்தருளுவார்களானால் திரு ஐயாற்றின் காவிரித் தோற்றம், கரைகளில் நெருங்கிய மரங்களின் மாண்பு, தண்மை, பசுமை இவற்றைப்பற்றி யாம் சொல்வது என்ன?

இத்தலம் ஐயாறென்றும், பஞ்சநதம் என்றும், பூலோக கைலாயம் என்றும் வழங்கப்பெறும். திருவையாறு என்னும் அழகிய தமிழ்ப் பெயர் திருவாடி என்று ஆங்கிலத்தி லாய்விட்டது. ஐயாறு பஞ்சநதம்என்றபெயர்கள் ஐந்து தெய்வீக ஆறுகள் தம்முட் கலப்பதால் வந்த பெயரென்று நூல்கள் கூறுகின்றன. ஐந்து ஆறுகள் சூரியபுஷ்கரணி, சந்திர புஷ்கரணி, கங்காதீர்த்தம், பாலாறு, நந்தி வாய்நுரை தீர்த்தமாகிய நந்திதீர்த்தம் என்பனவாம்.

**கோயில் :**

கோயிலுக்கு காவிரிக்கோட்டமென்று சமயாசாரியப் பெருந்தகையார்கள் பெயரிட்டழைக்கின்றார்கள். காவிரியின் இருகரைகளிலுமே பல தலங்களிருப்பினும் இதற்குக் காவிரிக்கோட்டம் எனப் பெயர் வந்தமை தனிச்சிறப்பை விளக்குவதாகும்.

இக்கோயில் ஐந்து பிராகாரங்களை உடையது. சுவாமிக்கும் அம்மைக்கும் தனித்தனி ஆலயங்கள் அமைந்துள்ளன. இரண்டும் கிழக்கு நோக்கிய சந்நிதிகளே. சுவாமிகோயில் இராஜ கோபுரத்தைத் தாண்டியதும் தீர்த்தம் இருக்கிறது. சோமாஸ்கந்த மூர்த்திக்குஇரண்டாம்பிராகாரத்தில் தனிக்கோயில் அமைந்துள்ளது. அதற்கு அருகிலிருப்பது ஜபேச மண்டபம். ஜபேசமென்றால் திருவைந்தெழுத்தை ஜெபிக்க ஒன்று பத்தாகி பெரும்பயன் விளைக்கும் இடம். இது முத்திமண்டபம் எனவும் வழங்கும்.

**சுற்றுக்கோயில்கள் :**

**தக்ஷிணகைலாயம் :—** இது கோயிலுக்குள் சூரியபுஷ்கரணியான குளத்திற்குத் தென்கரையில் இருக்கின்றது.

**உத்தரகைலாயம் :—** இது ஒலோகமாதேவீச்சரம் என வழங்கும்.

**தண்டபாணிகோயில் :—** இது வெளிப்பிரா காரத்து இராசகோபுரத்தை அடுத்துள்ள நூற்றுக் கால் மண்டபத்தில் அமைந்துள்ளது.

**மூர்த்திகள்:**

**ஐயாறப்பர் :—** சிவலிங்கத்திருமேனி. சுயம்பு மூர்த்தம். "திருவையாறகலாத செம்பொற் சோதி" என்று பெருமக்களறிவுறுப்பதால் செம்பொற்சோதீசுரர் என்ற பெயரும் உண்டு. இன்னும் 'ஐயாறுடைய அடிகள்', 'ஐயாற்றின் பெருமான்' என்றும் திருமுறைகள் பெயர்வகுக்கின்றன. புராணத்தில் கைலாயநாதர், ஜபேசர், பிரணதார்த்திஹரர்எனப் பல பெயர்கள் வழங்கும்.

**அம்மையார் :—** அறம்வளர்த்தநாயகி எனவும், திரிபுரசுந்தரி எனவும், தருமாம்பிகை எனவும் வழங்கப்பெறுவர்.

**விநாயகர் :—** இத்தலத்தில் வல்லபைவிநாயகர், ஆதிவிநாயகர், ஓலமிட்ட விநாயகர் எனப் பல விநாயகர் ரூபங்கள் உள்ளன. இங்குள்ள முருகப் பெருமான் கையில் வில்லேந்தி ஏனைப் படைக்கலங் களையும் ஏற்று விளங்குகிறார். அதனால் தனுசு சுப்பிரமணியம், வில்வேள் நாயனார் என்று வழங்கப் பெறுகிறார்.

**தக்ஷிணாமூர்த்தி :—** வலப்பக்கமுள்ள மேல் நோக்கியிருக்கிறதிருக்கரத்தில் கபாலமும் கீழ்நோக்

கிய திருக்கரத்தில் சின்முத்திரையும் மேல்நோக்கிய இடது கரத்தில் சூலமும் கீழ்நோக்கிய இடது கரத்தில் சிவஞான போதமுங் கொண்டு திருவடியின் கீழே ஆமை விளங்க எழுந்தருளியிருக்கின்றார். இத்தகைய தக்ஷிணாமூர்த்தி உருவம் மிக அருமையானது. திருவடியில் ஆமைமிதித்திருப்பது பொறியடக்கம் இன்றியாமையைக் காட்டுவது என்றும், "ஒருமையு ளாமைபோல் ஐந்தடக்கல்" வேண்டும் என்றும் குறிப்பிக்கின்றதாகும். இவருக்கு ஸ்ரீ அரிகுரு சிவயோக தக்ஷிணாமூர்த்தி எனத் திருநாமம் விளங்குகிறது.

ஆட்கொண்டார் :— தெற்குக் கோபுரத்தை யடுத்து வலதுகைப் பக்கத்து எழுந்தருளியிருக்கின்றார். இவர் சந்நிதியில் எப்பொழுதும் குங்கிலியம் புகைந்துகொண்டேயிருக்கும். இவர் தோற்றம் வீரவடிவம். காலின்கீழ் இரண்டு கண்களும் வெளியே பிதுங்க உடல் நசுங்க நா தொங்க எமன் கிடக்கின்றான்.

**தீர்த்தங்கள் :**

காவிரியாறு, சூரியபுஷ்கரணி, சந்திரபுஷ்கரணி, சமுத்திர தீர்த்தம், தேவாமிர்த தீர்த்தம், நந்தி தீர்த்தம் எனப் பல தீர்த்தங்கள் இருக்கின்றன. இங்குள்ள காவிரித்துறை மிக முக்கியமானது. ஏனைய காவிரித் துறைகளில் ஓராண்டு முழுகும்

பயன் இங்கே ஒருநாள் மூழுக்கால் கிடைக்கு மென்று பேசுகிறது, இந்தக் காவிரித் துறைக்கு பூசமண்டபத்துறை, புஷ்ப மண்டபத்துறை என்று பெயர் வழங்குகிறது. சூரிய புஷ்கரணி தெக்ஷிண கைலாயத்துக்குப் பக்கத்திலுள்ள சிவதீர்த்தம். கைலை சென்ற அப்பருக்கு கைலைக் காட்சிகொடுக்க அழைக்க அவர் எழுந்த இடமும் இதுவே.

**தலவிருட்சம் :**

வில்வம் தலவிருட்சமாக விளங்குகிறது.

**புராணவரலாறுகள் :**

**தன்னைத்தான்பூசித்தது:**—ஐயாறப்பரைப்பூசை செய்துவந்த ஆதிசைவர்கள் இருபத்து நால்வரில் ஒருவர் காசியாத்திரை சென்றனர். மற்றையோர் அவருடைய காணி முதலிய உரிமைகளைக் கவர்ந் தனர். அவருடைய மனைவியாரும் மைந்தரும் ஐயாறப்பர் அடியிணையில் வீழ்ந்து வேண்டி நிற்க, இறைவன் விருத்தராய்ச் சிவ வேதியர் உருக் கொண்டு, அவ்வேதியர் மனைபுகுந்து மனைவியை உசாவி அறிந்து கோயிலில் இறைவனை நியமப்படி பூசித்து, ஓர் மடத்திற்றங்கி இருந்தனர். இச் சமயத்தில் கங்கையாடச் சென்ற ஆதிசைவர் அவ்விடம் வர யாவரும் ஐயங்கொண்டனர். அந் தணர் வடிவுகொண்டுவந்த இறைவன் ஆதிசைவரை

நோக்கி "நீர் யார்" என்று வினவ, "யான் இச் சிவனை அருச்சிக்கும் அந்தணாளர் இருபத்து நால்வருள் ஒருவன்" என்றார். இருவரும் தத்தமக் குரிய ஆவணங்களைக் காட்டினார்கள். அவையின் கண் இருந்த பலரும் கையெழுத்தை ஒத்துப் பார்த்து அந்தணருடையதே மெய்ச்சாசனம் எனக் கண்டனர். ஆதிசைவர் குதூகலித்து நிற்க பெருமான் ஆகாயத்தில் உண்மைத் திருக்கோலத் துடன் காட்சி அளிப்ப, அனைவரும் கண்டு தரிசித்து ஆனந்தமுற்றார்கள்.

இந்த ஐதிகத்தில் இன்றும் சோமாஸ்கந்த மண்டபத்தில் உள்ள ஒரு ஸ்படிகலிங்க மூர்த்தமும் அம்மையின் மூர்த்தமும் பூசிக்கப்பட்டு வருகின்றன.

**திருநந்திதேவர்:—** மகப்பேறின்மையினால் வருத்தமுற்ற சிலாதமுனிதர் ஐயாறப்பனைப் பூசித் துத் தவஞ்செய்ய, ஐயாறப்பர் "சிலாதனே! நீ புத்திரகாமேட்டி யாகம் செய்தல்வேண்டும், யாகம் செய்து யாகபூமியை உழும்பொழுது பெட்டகம் ஒன்று தோன்றும், அதில் ஒரு புத்திரன் காணப் படுவான். அவனுக்கு வயது பதினாறு; அவனை எடுத்துக்கொள்." எனத் திருவாய் மலர்ந்தருளினார். அவ்வாறே சிலாத முனிவரும் யாகமுடிவில் பூமியை உழுங்கால் ஒரு பெட்டகம் அகப்பட அதனைத் திறந்து பார்த்தனர். அதில் நான்கு தோள்களும், மூன்று கண்களும், சந்திரனை யணிந்த முடியும் கொண்டு விளங்கும் ஒரு மூர்த்தியைக் கண்டு வணங்

கினர். ஐயாறப்பர் அசரீரியால் "பெட்டியை மூடித்திற" என்று கட்டளையிட்டருளினர். அவ் வண்ணமே மூடித் திறந்ததும் அம்மூர்த்தி முன்னைய வடிவம் நீங்கி அழகிய குழந்தை வடிவுடன் திகழ்ந்தது. பெற்றோர்கள் அக்குழந்தைக்குச் செபேசுவரர் என்று நாமகரணம் செய்து வளர்த்து வந்தார்கள். செபேசுவரர் பதினன்கு வயதிற்குள் வேதாகம சாஸ்திரங்களாகிய சகல கலைகளிலும் வல்லவரானர்.

அறிவின்மிக்க இம்மைந்தனை இன்னும் இரண்டு வருடத்தில் இழக்கநேருமே என்று ஏங்கிய தாய் தந்தையர்களைக் கண்ட செபேசுரர், ஐயாறப்பன் ஆலயத்தை யடைந்து பூசித்து அயனரி தீர்த்தத்தில் நீராடிக் காலின்மேல் காலையூன்றிக் கடுந்தவம் செய்தனர். செபேசுவரரின் அருமைத் திரு மேனியை நீர்வாழும் பாம்பு, மீன் முதலியவைகள் அரித்துத்தின்றன! பன்னாளாகியும் வெளிவராமை யைக்கண்ட தாய் தந்தையர்களும் மற்றையோரும் கலங்கினர். செபேசுவரரின் உறுதியான அன் புக்கு இறைவன் எளிவந்து காட்சிகொடுத்து வேண்டும் வரங்களையும், பதினறு பேறுகளையும் கொடுத்தருளினர்.

மேலும் இறைவன் செபேசுவரரது எற்புடம் பைக்கண்டு அவ்வுடம்பை நலமுறச் செய்தல் வேண்டுமெனத் திருவுளங்கொண்டு, கங்கை நீர், மேகநீர், பிரமன் கமண்டல நீர், அம்மையின்

கொங்கையின் பால், இடபநந்தியின் வாய் நுரைநீர் எனும் ஐந்துநீரினுலும் தாமே அபிடேகஞ்செய்தார். செபேசுவரர் உடல் ஊறுநீங்கிச் சூரியனைப்போல் விளங்கிற்று.

சிலாத முனிவர், வசிஷ்ட முனிவர் பௌத்திரியும், வியாக்ரபாத முனிவருடைய புத்திரியும், உபமந்யு முனிவர் தங்கையுமாகிய சுயம்பிரகாசையம்மையாரைத் தமது புதல்வனுக்குப் பங்குனிமாத புனர்பூச நக்ஷத்திரத்தில் திருமணம் செய்வித்தார். பின் செபேசுவரர் ஐயாற்றண்ணலால் உபதேசம் பெற்றுக் கயிலையில் சிவ கணங்களுக்குத் தலைவராம் பதவியும், முதற்றிருவாயிலில் இருந்துகாக்கும் உரிமையும், சைவாசாரியருள் முதற் குருவாந் தன்மையும் பெற்ருர்.

அகத்தியர்:— இவர் மாதவர்கள் புடைசூழ இத் தலத்திற்குவந்து சூரியபுஷ்கரணியில் நீராடி, நித்தியகர்மம் முடித்து, செம்பொற்சோதியாரை வணங்கித் தோத்திரம் செய்து உணவு நீக்கித் தவஞ் செய்தார். அருந்தவமுணர்ந்த இறைவன் இடபாரூடராய்க் காட்சியளிக்க, அகத்தியரும் வணங்கி, "அடியேன் உமது திருவடிகளுக்கு அடங்கிநின்று தோத்திரம் செய்யத்தக்க சிறியவடிவுதந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். இறைவனும் குறள் வடிவத்தைக் கொடுத்து "உம்பெயர் குறுமுனியாகுக" என்றும் அருள் புரிந்தார். அன்றுமுதல் அகத்தியர் குறுமுனியாயினர். அகத்தியர் மீண்டும் இறைவனை

நோக்கி "அடியேன் மனம் கயிலையைக் காண விழைகின்றது" என்றுவேண்ட, ஐயாறப்பரும் "பஞ்சாக்கரம் ஓதி சூரியபுஷ்கரணியில் மூழ்கிக் கயிலையடைந்து நம்மைக்காண்பீராக" என்றனர். அவ்வண்ணமே அகத்தியரும் கயிலையடைந்தனர்.

**ஆட்கொண்டார் :—** கௌதமீ தீர வாசி சுசரிதன் என்பான் ஓர் அந்தணச் சிறுவன் தந்தையும் தாயும் இறந்தபின் வருத்தமேலீட்டால் தன் ஊர் நீங்கித் தலயாத்திரை செய்பவன் திருப்பழனம் வந்து தங்க அன்றிரவு கனவில் இயமன் தோன்றி "இன்று ஐந்தாம் நாள் மரணம் அடைவாய்" என்றனன். அதுகேட்டு அஞ்சித் திருவையாறு சென்று சிவதரிசனம் செய்வதே இதற்குத் தகுந்த பரிகாரம் எனத் தேறினன். அங்கு வசிட்டர் அருளியபடி சிவதரிசனம், பஞ்சாக்கர ஜபம் முதலியனசெய்து வருகையில், இயமன் சொல்லியபடி ஐந்தாம்நாள் சிறுவன்முன் தோன்றினன். வசிட்டர், இயமபயத்தை நீக்கிக்கொள்ளத் தெற்குக் கோபுரவாயிலில் சுசரிதனை இருந்து ஜபிக்கும்படி பணித்துத் தாமும் ஜபித்தனர். ஐயாற்று எம்பெருமான் துவாரபாலகரை ஏவி அந்தணச் சிறுவனைக் காக்குமாறு பணித்தனர்; அஞ்சாது எதிர்த்த இயமனை அவர் சங்கரித்து ஒழித்தனர். பின் சிவபெருமான் தெற்குவாயிலின் மேற்புறத்தே தோன்றிச் சுசரிதனுக்கு ஆசிகூறி ஆயுளுமருளி இல்லறத்திருந்து மகப்பேறடைந்து முத்தியும் அடைக எனக்கூறினர்; எமனுக்கும்

உயிர்கொடுத்து, இத்தலத்திலிருக்கும் தன்னடியாரையும், தரிசிப்போரையும் நெருங்காதிருக்குமாறு பணித்து மறைந்தனர். இயமபயந் தீர்த்த அந்த மூர்த்தியே ஆட்கொண்டேசப் பெருமான் ஆவர். அவர் சந்நிதானத்தே எந்நாளும் ஒளிவீசிப் புகைவது குங்கிலியம்.

அம்மையார் :— அகில நாயகனும் எம்பெருமான் பஞ்சநதீசன் தனது ஆன்ம நாயகியாம் அறம்வளர்த்த நாயகியாரின் அரும்பெரும் திருவிளையாட்டை அவனியோர்கண்டு மகிழுமாறு அறங்கள் செய்ய இருநாழி நெல்லை அளந்தளித்தனன். அன்னையார் அதனைப் பெற்றுத் தம் அற்புத சத்தியால் அறங்கள் முப்பத்திரண்டினையும் ஆற்றினளாதலின் ஸ்ரீ அறம்வளர்த்த நாயகியார் (ஸ்ரீ தர்மசம்வர்த்தனீ) எனத் திருப்பெயர் பெற்றார்.

தொன்மை :

இத்தலம் முதன்முதல் சூரியவம்ச சக்ரவர்த்தியான பிரியவிரதனால் திருப்பணிசெய்யப்பெற்றது. இறைவன் திருப்பணி செய்யுமாறு அசரீரியாகப் பணித்தார். இமயத்தில் புலியைப் பொறித்த பெருவீரனாகிய கரிகாற்பெருவளத்தான், இறைவன் ஆணையால் இரண்டாவதாகத் திருப்பணிசெய்வித்தான். வேங்கிநாட்டு விமலாதித்தன் இவ்வாலயத்தைப் புதுக்கினான். முதல் இராஜராஜன் மனைவியான ஒலோகமாதேவி உத்தரகைலாயத்தைக்

கட்டித் தன்பெயரை நிலைநிறுத்தினுள். இவற்ருல் இத்தலம் நெடுநாள்தொட்டு அரசருடைய பாதுகாப்பிலும் பணியெய்திவந்தமை புலனும்.

**மண்டபங்கள் :**

**முத்திமண்டபம் :—** நாகப்பட்டினம் திருவையாறு காசி என்னும் மூன்று தலங்களில்தான் இம் மண்டபம் இருக்கிறது. இந்த மண்டபம் இத்தலத்துச் சபேசமண்டபமென வழங்கும்.

**நூற்றுக்கால்மண்டபம் :—** இது தண்டபாணி கோயிலாக இன்று இருக்கிறது.

**உற்சவமண்டபம் :—** சுவாமி கோயிலிலும் அம்மை கோயிலிலும் தனித்தனியாக இருக்கின்றன. இவையன்றி ஆஸ்தான மண்டபமும் பிரசங்கசபா மண்டபமும் மூன்ரும் பிராகாரத்திலிருக்கின்றன. சொக்கட்டான் மண்டபம் ஐயாறப்பர் சந்நிதியிலிருக்கிறது.

**திருவிழா :**

சித்திரைமாதத்தில் பெருவிழா நடைபெறும். இது பன்னிரண்டுநாள் விழா. ஐந்தாந் திருவிழா மிகச் சிறப்புடையது. அன்று இறைவன் ஐயாறதனிற் சைவனுகித் தன்னைத்தானே பூசித்துக்கொள்வன். அன்று திருநெய்த்தானம் முதலிய ஆறு

ஊர்களிலிருந்துவரும் மூர்த்திகட்கும் சுவாமிகட்கும் சைவ ஆசாரிய பெருமக்கட்கும் மாகேசுவரபூசை நடத்தப்பெறும்.

**ஏழூர்விழா :—** இத்தலத்துக்குச் சிறப்பானது. ஐயாறப்பர் அறம்வளர்த்த நாயகியாருடன் புறப்பட்டு நந்தியெம்பெருமான் சுயம்பிரகாச அம்மையோடும் திருப்பழனம் முதலிய ஆறு தலங்கட்கும் எழுந்தருளி உபசாரங்கொண்டு மறுநாட்காலையில் ஐயாற்றுக்கு எழுந்தருளுவார்கள். இவ்விழா சித்திரைப் பூரணையில் நடைபெறும்.

**மாதவிழா :—** மாதந்தோறும் அமாவாசை விஷு புண்ணியகாலங்களில் ஐயாறப்பர் திருவீதிக்கெழுந்தருளி காவிரியில் தீர்த்தங்கொடுத்தருளுவர்.

பங்குனியில் திருநந்திதேவர் திருமணம் நடைபெறும். அதற்கு ஐயாறப்பர் அறம்வளர்த்த நாயகியாருடன் திருமழபாடிக்கு எழுந்தருளுவர்.

**சுற்றுத்தலங்கள் :**

**திருப்பழனம்:—** திருவையாற்றிலிருந்து கும்பகோணம்போகும் பாதையில் இரண்டுமைலில் இருக்கிறது. இத்தலத் தேவாரத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் அப்பூதியடிகளைச் சிறப்பித்துப் பாடி இருக்கிறார். சுவாமி திருப்பெயர் ஆபத்சகாயர். அம்மையார் பெரியநாயகி.

**திருச்சோற்றுத்துறை:—** இது கௌதமமுனிவர் ஆச்சிரமம். இந்திரன், சூரியன் முதலியோர் பூசித்துப் பஞ்சகாலத்தில் சிவபக்தர்களை வைத்துபசரித்தது. அருளாளர் என்னும் பிராமணபக்தருக்கு அக்ஷயபாத்திரம் அருளியது. இத்தலம் திருக்கண்டியூரினின்றும் கிழக்கே ஒன்றரைமைலில் உள்ளது. திருவேதிகுடியினின்றும் வடக்கே இரண்டு மைலில் உள்ளது. சுவாமிதிருப்பெயர் தொலையாச்செல்வர். அம்மையார் ஒப்பிலாவம்மை.

**திருவேதிகுடி:—** வேதம்பூசித்த தலங்களில் ஒன்று. விநாயகரும் வேதவிநாயகர் என வழங்கப் பெறுவர். திருக்கண்டியூரினின்று கிழக்கே இரண்டரைமைலில் உள்ளது. சுவாமி திருப்பெயர் வேதபுரீசுவரர். அம்மை மங்கையர்க்கரசி.

**திருக்கண்டியூர்:—** வீரட்டத் தலங்கள் எட்டில் ஒன்று. பிரமன் சிரம்கொய்த தலம். திருஞானசம்பந்த சுவாமிகள் 6-ந் திருப்பாட்டிலும், திருநாவுக்கரசு சுவாமிகள் 3-ம் திருப்பாட்டிலும் ஓதியிருக்கின்றார்கள். சதாநந்தர் பூசித்து வழிபட்டது. இத்தலம் தஞ்சாவூரிலிருந்து திருவையாறு வரும் கற்சாலையில் ஏழுமைலில் உள்ளது. இங்குப் பிரமனுக்குத்தனி ஆலயம் இருக்கின்றது. சுவாமிபெயர் வீரட்டேசுவரர். அம்மை மங்களநாயகி.

**திருப்பூந்துருத்தி:—** இந்திரன், காசிபர், சோழன் முதலியோர் பூசித்தது. இங்குத் திரு

ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குத் தரிசனந்தர நந்தி விலகினரென்று கூறுப. திருநாவுக்கரசு சுவாமிகள் திருமடங்கட்டி எழுந்தருளியிருந்த தலம். பாண்டிநாடு சென்றுவந்த திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகளுடைய பல்லக்கைத் திருநாவுக்கரசு சுவாமிகள் தாங்கியது இங்கேதான். இத்தலம் திருக்கண்டியூருக்குமேற்கே இரண்டுகல் தொலேவில் உள்ளது. சுவாமி திருப்பெயர் புஷ்பவனநாதர்; அம்மையார் அழகார்ந்தநாயகி.

**திருநெய்த்தானம்:**—இத்தலம் சரசுவதி பூசித்து வழிபட்டது. திருவையாற்றுக்கு மேற்கே ஒரு மைலில் உள்ளது. சுவாமியின் திருநாமம் நெய்யாடியப்பர்; அம்மை வாலாம்பிகை. இப்பொழுது இது தில்லேஸ்தானம் என மருவி வழங்கப்பெறுகின்றது. சப்தஸ்தான உற்சவத்தில் ஐயாறப்பர் கடைசியாக இங்கு எழுந்தருளி மீண்டும் ஐயாறு அடைவார்.

**சிற்பம்:**

இத்தலத்துச்சிற்பங்கள் மிகப்பழமையானவை. இங்குள்ள பிரமாவின் திருவுரு மிக அழகானது. இங்குள்ள ஆட்கொண்டாராகிய க்ஷேத்திரபாலரும், அவர் திருவடியின் கீழுள்ள எமனும் வழிபடுவார்க்கு அச்சம் வீரம் என்ற இரண்டு சுவைகளேத் தருகின்ற அழகிய உருவங்கள். தக்ஷிண கயிலாயத்து கருப்பக்கிருக வெளிச் சுவரிலும் கொடுங்கை முதலியவற்றிலும் காணப்படும் சிற்பத்திறங்கள் தெக்

காணத்திலுள்ள சாளுக்கியர் காலத்து வேலைப் பாடாக விளங்குகின்றன என்றும், இதனை ஒத்த அழகியஅமைப்பு அனந்தப்பூர் ஜில்லாவில் ஹேமா வதி என்ற ஊரிலிருக்கிறதென்றும் சிற்ப ஆராய்ச்சி யாளர் சொல்கின்றார்கள்.

## கல்வெட்டுக்கள்

இத்தலத்துக் கோயிலுக்குள்ளே ஐயாறப்பர் கோயில், ஒலோகமாதேவீச்சரம், தென்கயிலாயம், திரிபுவனமாதேவீச்சரம் என்ற நான்குகோயில்கள் வரலாற்றுத் தொடர்புடையனவாக இருக்கின்றன. அவற்றைப்பற்றிய குறிப்புக்களைத் தனித்தனியே தொகுத்துநோக்கிப் பின்னர் அரசர்கள் செய்த பணிகளைத் தனித்தனியாக சிந்திப்பதே முறை யாகும்.

**தொன்மையும் அமைப்பும் :**

கோயிலின் தொன்மை அதன் அமைப்பையும், தூண், கொடுங்கை, உருவங்கள் இவற்றையும் கொண்டு ஆய்ந்து அறியத்தக்கன. சிற்பங்கட்கே மூதன்மை பல்லவசிற்பங்களாலே விளைவன. மா மல்லபுரத்துக் குடைகோயில் சிற்பங்களில் துவார பாலகர் இருகரங்களோடு தாளைச் சிறிதுசாய்த்து ஊன்றிக்கொண்டு, இடுப்பு ஒடியோடு நிற்பதைக் கண்டிருக்கலாம். அத்தகைய அமைப்பு எங்கு கண்டாலும் அதைப்போன்ற தொன்மையுடையது

என்று சொல்லிவிடலாம் அல்லவா? திருவையாறு ஐயாறப்பர்கோயில் திருவணுக்கன் திருவாசலில் உள்ள துவாரபாலகர் இருகைகளோடு நிற்கின்றார். இதனைக்கொண்டு இக்கோயில் பல்லவகாலப்படைப்பாக இருக்கலாம் என்று ஊகிக்கலாம். சோமாஸ் கந்தர் ஆலயம் சோழர் நாகரீகமாகத் தோற்றம் அளிப்பதற்கும் துவாரபாலகர் நான்கு திருக்கரங்களோடும் வக்கிரதந்தங்களோடும் இருப்பதே காரணம் ஆகும்.

வரலாற்றுப்பகுதியில் பரகேசரியென்ற பட்டத்தை முதன்முதல் தாங்கிய முதற்பராந்தகன் காலம் முதற்கொண்டு (905 - 947) விளக்கத்திருந்தமை வெளிப்படை.

மூன்றாம் பிராகாரத்து கிழக்கோபுரம் விக்ரம சோழன் திருப்பணி என்பது கல்வெட்டால் விளங்குதலின் அதுவும் தொன்மைக்கும் பராமரிப்புக்கும் துணையாகும்.

பின்னர், புக்கண்ண உடையார் பரம்பரையில் வந்தவரான வீரசெவ்வண உடையார் காலத்தில் (கி. பி. 1381-ல்) இத்திருக்கோயில் திருமண்டபம், மதில் சீர்திருத்தப்பெற்றன. சீர்திருத்தியவர் செங்தலைக்கருப்பூர் கச்சிவீரப்பெருமான் மகனாராவர்.

மேலக்கோபுரமும், முதல் பிராகாரத்துத் திருமாளிகைப்பத்தி முதலியனவும், மூன்றாம் பிராகாரத்து தெற்குக் கோபுரமும் அச்சுதப்பநாயக்கர்

ஆட்சிக்காலத்தில்மருதூர் ஆனையப்பபிள்ளையாலும், அவர் தம்பி வைத்தியநாத அண்ணன் என்பாராலும் எடுப்பிக்கப்பெற்றன. இவர்களே பூசப்படித்துறை கட்டியவர்கள். படித்துறைக்கு அவர்கள் வைத்த பெயர் கல்யாணசிந்து என்பதாம்.

**சிற்பங்கள் :**

ஆனையப்பபிள்ளை உருவமும், வைத்தியநாத அண்ணன், அவர் தாய்தந்தையர்கள் படிவமும் மேற்குப்பிராகாரத்திலிருந்திருக்கின்றன. உடைந்து போன படிவங்களின்மேல், பெயர்மட்டும் அழியாது இருந்து உண்மையையுணர்த்தி வருகின்றன. அவ்வாறே அச்சுதப்பநாயகர் அவர்மனைவியார் படிவங்களும் அதே இடத்து அழகாக அமைக்கப்பெற்றுள்ளன. நாயகமன்னர்கட்கு எங்கும் தம்முருவத்தைப் பதித்துப் பார்ப்பதில் ஆசை என்பதைத் திருநெல்வேலிக் கல்வெட்டும், படிமங்களும் சான்று கூறும். அவ்வாறே பச்சையப்ப முதலியார் தமது இரண்டு மனைவிமார்களோடு மண்டபத்தில் இருக்கிறார்.

**அம்மையார்கோயில் :**

அம்மை திருப்பெயர் திருக்காமக்கோட்டத்து ஆளுடையநாச்சியார் என்றும், உலகுடையநாச்சியார் என்றும் இருகல்வெட்டிற் காணப்பெறுகின்

றது. இப்போது அறம்வளர்த்தநாயகி எனவும், தர்மாம்பிகை, தர்மஸம்வர்த்தனி எனவும் வழங்கி வருகின்றது.

இத்தலம் I-ம் ராசராசன் காலத்து ராசேந்திர சிங்கவளநாட்டுப் பொய்கைநாட்டுத் திருவையாறு என்றும், மூன்ருங்குலோத்துங்கன் காலத்து புவன முழுதுடையாள் வளநாட்டுப் பொய்கைநாட்டுத் திருவையாறு என்றும், சடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்து இராசராச வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாறு என்றும் வழங்கிவந்துள்ளது. பெரும்பாலான தலங்கட்குக் கூற்றமும், சதுர்வேதி மங்கலமும் குறிக்கப்பெற்றிருக்க, இது பொய்கை நாட்டுத் திருவையாறு எனவே குறிக்கப்பெறு வதால் தனியூராக இருக்கலாமோ என்ற ஐயம் எழுகிறது.

ஓலோகமாதேவீச்சரம்:

இது ஐயாறப்பர்கோயிலுக்குவடபக்கம் பெரிய பிராகாரத்திலிருக்கும் திருக்கோயில்; உத்தரகைலாயம் எனவும்வழங்கும். இதனைக்கட்டியவர் முதலாம் இராசராசனது மனைவியாராகிய தந்திசக்திவிடங்கியரான ஓலோகமாதேவியார் ஆவர். இதனுலே இக்கோயில் ஓலோகமாதேவீச்சரம் என வழங்கு வதாயிற்று. இம் முதலாம் இராசராச மன்னர்

கி. பி. 985-ல் முடிசூடியவர். ஆதலால் இவ்வம்மையார் காலமும் இதுவாதல்துணிபு. இராசராசன் ஆட்சி 21-ம் ஆண்டில் காணப்பெற்ற கல்வெட்டே இக்கோயிலில் உள்ளவற்றில் மிகப் பழமையானது ஆதலால் இக்கோயில் கி. பி. 1006-ம் ஆண்டிற்கு முன்கட்டப்பெற்றிருக்கவேண்டும். ஆகவே இற்றைக்குச் சற்றேறக்குறைய 936-ம் ஆண்டுகட்கு முன்காணப்பட்டது ஆகலாம்.

அங்ஙனம் கட்டி முடித்த அம்மையார் ஓலோக மாதேவீச்சரமுடையவரான சிவலிங்கப்பெருமானையும், சோமாஸ்கந்தர் முதலிய இதர பரிவாரங்களையும் பிரதிட்டைசெய்வித்தார். சோமாஸ்கந்தர்க்கு ஓலோகவீதிவிடங்கர் எனப்பெயர்.

இக்கோயிலிலும் சித்திரைமாதப்பெருவிழாவே கொண்டாடப்பெற்றது. இதுவன்றி தன்கணவன் பிறந்த நாளாகிய சதயநாளில் மாதந்தோறும் விழாக்கொண்டாட ஏற்பாடு செய்தாள்.

மற்றும், இங்குள்ள கல்வெட்டுக்களில், தாழ்க்கூட்டுக்கம்பி, திரிசரம், ஓரணை, திருச்சந்தம், முத்துவளையல், பட்டிகை முதலிய அணிவகைகள் குறிக்கப்பெற்றுள்ளன. மக்களின் நாகரீக வளர்ச்சி அவர்கள் அணிந்துவந்த ஆடைவகைகளிலும், அணிகலச் சிறப்பிலுமே இருக்கின்றதென்பது

தெளிவு. ஆதலால் அணிப்பெயர்கள் பல இவ்வூர்க் குறிப்பால் வெளிவரலாம். அவ்வாறே மானவட்டில் என்ற ஒரு பாண்டம் குறிப்பிடப்பெறுகின்றது. கோயிலுக்கென்று பதியிலார் குலத்துதித்தார் மூப் பத்திருவர் நியமிக்கப்பெற்றிருந்தனர். இவர்களின் தலைமையாக 'ஐயாறன் கலியுகச் சுந்தரத்தலைக் கோலி' என்பான் இருந்ததாகத் தெரிகிறது.

**திருபுவனமாதேவீச்சரம் :**


இப்பெயர்கொண்ட திருக்கோயில் ஒன்று இருந்தது. இதனை இரண்டாம்பிராகாரத்து உள்ள மூன்றாங் குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்றும் அறிவிக்கிறது. ஆனால் இக்கோயில் எதுவென இன்னும் தெரியவில்லை.

**தென்கயிலாயம்:**

இது ஐயாறப்பர்கோயில் தெற்குப்பிராகாரத்து இருக்கிறது. கற்கோயில். அர்த்த மண்டபம், மஹா மண்டபம், கர்ப்பக்கருஹம் என்ற மூன்று பிரிவுகளமைந்தது. திருமாளிகைப்பத்தி சூழ்ந்தது. இங்கே அப்பர் சுவாமிகள்வடிவம் அழகாக இருக்கிறது. முதலாம் இராஜேந்திர சோழனின் மனைவியான பஞ்சவன் மதேவியால் இக்கோவில் புதுப்



அப்பருக்கு கயிலைக் காட்சி அளித்த தென்கயிலாயம்



சூர்ய புஷ்கரணி தீர்த்தம்

பிக்கப்பட்டது. இறைவன் பெயர் பஞ்சநதி வாணன். இறைவி பெயர் அஞ்சலை.

ஒரு காலத்து இங்குள்ள திருவுருவங்கள் மறைந்து கிடந்தன என்றும், வானவன் மாராயன் என்பான் வெளிப்படுத்தினன் என்றும் கல்வெட்டறிவிக்கிறது. (149 of 1918)

பிற்காலத்து கிருஷ்ணராஜ உடையார் என்பவர் திருச்சுற்றுமதிலை இடித்துப் புதுக்கினர். அதற்குமுன் கோயில் நான்கு பக்கமும் மதிலும் மாளிகையும் உடையதாக இருந்த தென்று தெரிகிறது.

இத்தலத்திற்கு 70க்கு மேற்பட்டகல்வெட்டுக்கள் உள்ளன. பெரும்பாலும அரசாங்கத்தாரால் படியெடுக்கப் பெற்றன. அவற்றைப் பற்றிய குறிப்புக்கள் வெளிவந்துள்ளன. 1894ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் 43. 1918ம் ஆண்டில் எடுக்கப்பட்டவை 22. 1924ல் எடுக்கப்பட்டவை 1 ஏனையவை பின்எடுக்கப்பட்டன.

**பராந்தகன் I:** கி. பி. 905—947.

இவனுடையதும், இவன் காலத்தில் வைக்கப் பெற்றனவுமாக உள்ள பணிகள் பல விளக்கிடவும்

அவ்விளக்குகளை நெடிது பாதுகாக்கவும் நிலமும் பொன்னுமளித்த செய்திகளைத் தெரிவிக்கின்றன. 223 முதல் 227, 231 முதல் 236 of 1844 முடிய உள்ள கல்வெட்டுக்கள் வெள்ளியாலும் பொன்னாலும் பலவிளக்குகள் வைத்ததையும், அந்த விளக்கு நாடோறும் பகல் இரவு எரிந்து வர நிலம்விட்டதையும் அறிவிக்கின்றன. 240 of 241 1844 கல்வெட்டுக்கள் தன்னாலும் அரசியாலும் விளக்கீட்டிற்குப் பொன்னளிக்கப்பட்டதை விளக்குவன.

இராஜராஜன் I: கி.பி. 985—1015.

இவனைப்பற்றிய கல்வெட்டுக்கள் 17 உள்ளன.

ஆட்சி 9ம் ஆண்டிலும் 10ம் ஆண்டிலும் வெட்டப் பெற்ற 5 கல்வெட்டுக்கள் விளக்கும் விளக்குக்குநிலமும் கொடுத்ததை அறிவிக்கின்றன. 19ம் ஆண்டில் இவனுடைய பட்டமகிஷியால் விளக்குவைக்கப் பெற்றது.

இராஜேந்திரசோழதேவன்: 1011—1043.

இவனுடைய கல்வெட்டு கோப்பரகேசரி வர்மன இராஜேந்திர சோழன் என்று தொடங்குகிறது. இவன் கோயிலுக்களித்த நிபந்தங்கள் அறியப்படவில்லை. சிதைவுபட்டுள்ளன.

இராஜாதிராஜன் I: கி. பி. 1018—1052.

இவனுடைய 32ம் ஆண்டைய நிகழ்ச்சிகள் குறிக்கப் பெற்றிருக்கவேண்டும்.

பரகேசரி இராஜேந்திரன்: கி. பி. 1050—1063.

இவன் ஆட்சி 3ம் ஆண்டில் திருவையாறுடைய மஹாதேவர்க்கு நிலமளிக்கப்பெற்றது.

இராஜேந்திரன் I:

இவன் பட்டமேற்று 5 ஆண்டுகளுக்கு மேல் முதற் குலோத்துங்கனுனன். இக்கல்வெட்டுக்கள் 3ம், 4ம் ஆண்டைய நிகழ்ச்சிகளை அறிவிப்பன ஆதலின் இராஜேந்திரன் என்ற பெயராலேயே குறிக்கப் படுகின்றன. இக் கல்வெட்டுக்களின் செய்தி ஒன்றும் தெரியவில்லை.

இவ்வரசர்களின் கல்வெட்டுக்கள் பெரும் பாலும் விளக்குத் தருமத்தையே விளக்குவதாக உள்ளன. இக்கல்வெட்டுக்களில் காணப்படும் சில குறிப்புக்களைக் கொண்டு சிலவரலாற்று நுணுக்கங் களும் காணக்கிடைக்கின்றன 'கோராஜகேசரிவர் மற்கு' என்று தொடங்கும் 10வது கல்வெட்டில்

திருவையாற்று மகாதேவர் திருவமுதினுக்கு அளித்த நிலத்துக்கு எல்லை கூறுங்கால் பழுவேட்டரையன் மசக்கலுக்கு மேற்கு என்ற குறிப்புக் காணப்படுகிறது. அதனால் பழுவேட்டரையராகிய சேரபரம் பரையினர் சோழநாட்டிலும் பரவியிருந்தனர் என்பது துணியப்பெறும்.

முதற் பராந்தகனுடைய மனைவி திரிபுவன மாதேவியார் என்பதும் மாமியார்பெயர் பெருமாள் திருவரங்கி என்பதும் குறிக்கப்பெற்றுள்ளன.

பாண்டியமன்னர்களில் சடாவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டு ஒன்றுள்ளது. அதில் அவன் ஆட்சி 2-ம் ஆண்டில் (கி. பி. 23 மார்ச் 1253-ல்) இறைவழிபாட்டிற்காக நிலம் அளித்திருக்கின்றான்.

விஜயநகரமன்னர்களில் ஒருவரான (கி. பி. 1422-49). தேவராயர் என்பாரும், (கி. பி. 1680). சதாசிவராயர் என்பாரும், உத்தரகைலாயத்திற்கும், ஐயாறப்பர் கோயிற்கும் நிலம் அளித்திருக்கிறார்கள்.

அம்மங்காதேவி தென் கைலாயமுடைய நாயனார் கோயிலுக்கு விளக்குக்காக 20 காசு பொன்னளித்தாள். இவள் புவனமுழுதுடையாளெனச் சிறப்பிக்கப்பெறுகின்றாள்.

உடையார்மரபைச் சேர்ந்த வீரமுக்கண உடையார் மகனான வீரசேவண உடையாரால் பூசத்திரு நாள் வழிபாட்டிற்காக 19 வேலி நிலம் வழங்கப் பெற்றது.

பெயரும், காலமுங் குறிப்பிடப்படாத கல்வெட்டுக்கள் பதினெட்டுள்ளன. அவற்றால், திருவையாறுடைய பரமமகாதேவர்க்கு விளக்கிட 25 கழஞ்சு பொன்னை சிவபுரிமன்னனிடம் கொடுத்து அறக் கட்டளை விதித்ததும் (135 of 1918) வாணகப்பாடி பெண்ணை வடகரை இருங்கண்டபுரத்து நக்கனம் பான் என்பவன்விளக்கிட 94 ஆடுகள்கொடுத்ததும், (137 of 1918) ராஜராஜவளநாட்டுப் பொய்கைநாட்டு திருவையாறுடைய கோயில் பணிப்பெண்டுகளுக்கு சர்வமானியம் அளித்ததும் (140 of 1918) திருவையாறுடையார், ஆளுடையார், நாச்சியார், ஒலோக மாதேவீச்சரமுடையார் திரிபுவனமாதீச்சரமுடையார் கோயில்களில் தச்சர்களுடைய உரிமை கடமை சுதந்திரம் முதலியவற்றை வரையறுத்ததும் (142 of 1918) இலாடராயர் மகளான அனிந்திதை என்பாள் தினந்தோறும் ஆதிசைவர்கட்கு அன்னமளிக்க ஏற்பாடுகள் செய்ததும், குறிக்கப்பெறுகின்றன. திருப்பள்ளிஎழுச்சிக்காக நிலமளிக்கப்பட்ட தென்பதும் (144, 145 of 1918) தக்ஷிண கைலாயத்துக்கு தாழ்ப்பூட்டுக் கம்பி, திரிசரம், பஞ்சசரிபட்டிகை, குதம்பை முதலிய அணிகள் அளிக்கப்பட்டன என்பதும் (148 of 1918) அறிவிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுக்கு இன்றியமையாத பழுவேட்டரையர் அருமொழி சந்திர மல்லியரான கங்கமாதேவியார் இவர்கள் பெயரும், நிர்வாகத்துறையில் அதிகாரிச்சி குஞ்சரன் எருதன் குஞ்சரமல்லிகையும், அதிகாரிச்சி சோமையன் அமித்ரமல்லியும் உறுப்பினர்களா யிருந்தார்களென்பதும் குறிப்பிடப் படுகின்றன. இவர்கள் இருவரும் பெண்கள்.

# மாயூரம்-விசுவநாதர்கோயில்

# மாயூரம்-விசுவநாதர் கோயில்

துலாக்கட்ட மண்டபத்துக்குத் தெற்கே வெளியில் இருக்கிறது. கிழக்குப்பார்த்த சந்நிதி ஸ்தூபி முதலியன வடநாட்டுக் கோயில்களைப் போலப் புதுக்கிவேலை செய்யப்பட்டு வருகிறது. இறைவன் விசுவநாதர். இறைவி விசாலாக்ஷி, அன்னபூரணி. விநாயகர் துண்டிவிநாயகர். காசிசொர்ணகால பைரவர், தண்டபாணி முதலிய பரிவார தெய்வங்களும் வீற்றிருக்கிறார்கள்.

வரலாறு:

சூரியன் துலாராசியில் சஞ்சரிக்கும் காலமாகிய ஐப்பசி மாசத்தில் அமாவாசையில் இடபப்படித் துறையில் காசிவிசுவநாதர் தென்னாடுய்ய எழுந்தருளினார். கங்காதேவியின்மேல் வைத்த காதல் மிகுதியாலோ புண்ணிய பூமியாகிய தமிழ்நாட்டின் மேல் வைத்த பேரன்பினாலோ சிவலிங்கத் திருமேனியாய் எழுந்தருளினர். இந்திரன் முதலியோர் மலர்மாரி பெய்தனர். அது தெரிந்த அன்னபூர்ணி அம்மையும் தமது தோழியரோடு தொடர்ந்து வந்து இறைவன் பக்கம் எழுந்தருளினார். இதனை அறிந்த காசி துண்டிவிநாயகப்பிள்ளையாரும் பூதகணங்கள் புடைசூழ பெருச்சாளி வாகனத்துப் புறப்பட்டார். மாயூரத்தை அடைந்து தந்தைபக்கல் எழுந்

தருளினார். இதனை உணர்ந்த காசிபயிரவரும் தனது அக்கினி ருத்ரகணங்களோடு புறப்பட்டு மாயூரத்தை வந்தடைந்தார். இதனைப் பார்த்திருந்த இளைய முருகன் எமக்கினி என்ன வேலை என்று தண்டபாணியாய் மாயூரத்தை அடைந்தார். இதனை உணர்ந்த உலகவர்கள் காசியின் சிறப்பானது மாயூரத்திற் காய்விட்டதென்று மகிழ்ந்தார்கள். காசியிடத்திருந்த அன்பை விட்டார்கள். இடப தீர்த்தத்தில் மூழ்கி விசுவநாதன் விசாலாட்சி திருவடிகளை வழிபட்டு கயாஸ்ரார்த்தத்தை இங்கேயே செய்து மகிழ்ந்தார்கள். இந்த விசுவநாதராலயத்து சிரார்த்தம் பிண்டதர்ப்பணம் முதலிய செய்வோர் பிதுரர்களைக் கரையேற்றியவர்கள் ஆவார்கள். பெருஞ்செல்வத்தோடு இன்பமார்ந்திருப்பார்கள்.

# திருப்பனந்தாள்

# திருப்பனந்தாள்

இத்தலம் கும்பகோணத்திலிருந்து வடகிழக்கே 11 மைல் தூரத்திலும், ஆடுதுறைக்கு வடக்கே 6 மைல் தூரத்திலுமுள்ளது. குத்தாலத்திலிருந்தும் போகலாம். இங்கிருந்து லோயர் அணைக்கட்டு மூன்றுகல் தொலைவிலிருக்கும்.

பெயர்கள்:

தலவிருட்சம் பனையாதலாலும் பனையடியில் பெருமான் வீற்றிருப்பதாலும் திருப்பனந்தாள் என வழங்கும். மரூஉமொழியாய்ப் பனசை எனவும் வழங்குகிறது. வடமொழிவாணர் தாலவனம்என்பர்.

கோயில்:

ஊரினடுவே இருக்கிறது. பழமையானகோயில். கிழக்கிலும் மேற்கிலும் இராஜகோபுரங்கள் அணி செய்வன. இரண்டு பிராகாரங்களை யுடையது. இறைவன் மேற்குமுகமாக எழுந்தருளியிருக்கிறார். இறைவி திருக்கோயில் கிழக்கு நோக்கித் தனியே இருக்கின்றது. தலவிருட்சம் இரண்டாவது பிரா காரத்தில் கீழ்ப்பக்கத்தில் இருக்கிறது. அதனடியில் தாடகை பூசித்ததாகச் சிவலிங்கப்பெருமானிருக் கிறார். தலவிநாயகர் ஆண்டபிள்ளையார்.

**மூர்த்திகள்:**

**இறைவர்:—** செஞ்சடையப்பர். மேற்குநோக்கி எழுந்தருளியிருக்கிறார். அருணஜடேசர், செஞ்சடை வேதியர், செஞ்சடைநாதர், ஜடாதரர், தாலவன நாதர் முதலியபெயர்களால் புராணத்து வழங்கப் படுகிறார்.

**அம்மை:—** பெரியநாயகி. கல்வெட்டுக்கள் பெரிய நாச்சியார் என்றழைக்கின்றன.

**நாககன்னிகை:—** நாகதீர்த்தக்கரையில் திரு மாளிகைப்பத்தி மண்டபத்து கிழக்கு நோக்கியிருக் கிறது. நாககன்னிகை இறைவனைப் பூசித்ததாக வரலாறு கூறுகிறது.

**ஊர்த்துவதாண்டவமூர்த்தி:-** ஆஸ்தானமண்ட பத்தில் எழுந்தருளியிருக்கிறார்.

முத்துக்குமாரர், நடராஜர், இலக்குமி, சரசு வதி முதலிய திருவுருவங்களும் ஆங்காங்கு விளங்கு கின்றன. சோமாஸ்கந்தர், சூரியன், சந்திரன், காட்சிகொடுத்த நாயனர், அறுபத்துமூவர் முதலிய திருவுருவங்களும் இருக்கின்றன.

சுவாமி கர்ப்பக்கிருகமண்டபத்தில் இருக்கிற துர்க்கை மிகவும் விசேடகரமானது. வழிபடுவார் விரும்பிய பயன்களை எல்லாம் அளிப்பது.

விமானம் பிரணவாகாரவிமானம் என்று வழங்கப்பெறும். மூன்று சிகரங்களை உடையது.

**தொன்மை:**

பராந்தகசோழன் காலமுதலாகவே விளங்கி வருவது. புராணவரலாற்றில் யுகமுதலிய கால வரம்பினைக் கடந்த மூர்த்தியாகப் போற்றப்பெறுகிறது.

**பெருமை:**

வணங்குவார்க்கு ஞானம் வழங்குவது. பொய், கொலை, களவு முதலிய மாபாதகங்களைத் தீர்த்து ஆன்மாவைப் புனிதமாக்குவது. சிவத்துரோக பாவத்தையும் போக்கவல்லது. அன்பினுயர்வை அனைவருக்கும் விளக்குவது. தீர்த்தங்கள் பல வற்றையுடையது.

**புராண வரலாறு:**

**அம்மையார் ஞானோபதேசம்பெற்றது:—** ஞான தாகங்கொண்ட அம்மையார் இறைவனை வழிபட்டுச் 'சனகாதியர்க் கருளிய ஞானத்தை யடியேனும் பெறுதலாகாதோ? அத்தகைய கருணை எளியேற்குக் கிட்டும் நாளெதுவோ?' என்று குறையிரந்தார். இறைவன் தாலவனஞ்சென்று எம்மை நோக்கித்

தவம் செய்யின் அத்தகைய பேறு தானேசித்திக்கும் என்றனர். பெருமாட்டியும் அவ்வாறே எழுந்தருளி இறைவற்கு எதிர்முகமாகக் கிழக்கு நோக்கி இருந்து நோற்ருர். இறைவனும் ஊமைத்தசும்புள் நீர் நிறைந்தாற்போல அம்மையினிடம் சிவஞானத் தேனூறத் திருவருள் செய்தனர். அம்மை சிவ ஞானஞ் சித்திக்கப் பெறுதற்குமுன் பாலாம்பிகையாயிருந்தவள், கைவரப் பெற்றபின் பெரியநாயகியாயினள்.

ஐராவதம்:— போருக்குத் தயாரான இந்திரன், தன் வாகனமாகிய ஆனையைத் தேட, அது சமயத்தில்லாமையால், காட்டானையாகச் சபித்தான். வெள்ளானை கறுத்தது. காட்டிற் சுற்றிக்கொண்டிருந்தது. நாரதர் எதிர்ப்பட்டார். வழிகாட்டினர். தாலவனம் வந்தது. செஞ்சடைப் பிரானைப் பூசித்தது. சாபம் நீங்கித் தன்னுலகடைந்தது.

தாடகை:— இவள் ஓர் அசுரன் மகள். மகப் பேறு வேண்டிப் பிரமதேவனை நோக்கித் தவமியற்றினள். பிரமன் தாலவனம் சென்று தவமியற்றுக என உத்தரவிட்டான். அவள் அவ்வாறே அடைந்து அன்புடன் அருணசடேசரைப் பூசித்தாள். ஒருநாள் பூசை முடிவில் மாலையைச் சாத்த எழுந்தகாலத்து அவள் அன்பை எல்லாரும் அறிய, அணிந்த ஆடை நழுவச்செய்தார். தாடகையோ தன் இருமுழங்கைகளாலும் ஆடையை இடுக்கிக் கொண்டே மாலைசாத்த முயன்ருள். பெருமான்,

தலைவணங்கி மாலையை ஏற்று மகிழ்ந்தார். இடபாரூடராய்க் காட்சி வழங்கினர். தன் பெயரால் இத்தலக் கோயில் வழங்கவேண்டும் என்று வரங்கேட்டாள். அருள்செய்து அண்ணலார் மறைந்தனர். தாடகை, ஆலயத்திற்கு வடபால் குளந்தொட்டுத் தென்கரையில் வீரியம்மனையும், கீழ்கரையில் பைரவரையும் தாபித்து வணங்கி மகப்பேறு அடைந்தாள்.

**சங்குகன்னன்:—** வேடர் தலைவனாகிய இவன் இத்தலத்து வந்து வழிபட்டு மன அமைதியையும், புதல்வர்ப் பேற்றையும் அடைந்தான்.

**நாகுகன்னன்:—** அந்தணனாயிருந்தும், பிதிர்க்கடனுக்கு வைத்திருந்த பொருள்களை யபகரித்ததினால் வேடனானான். வழிப்பறித் தொழிலால் வாழ்ந்தான். ஒருநாள் முனிவர் சிலருடைய பொருளைப் பறிக்கப் பின்தொடர்ந்து வந்தவன் இத்தலத்தெல்லையை யடைந்ததும் மூன்றுநாள் உணவின்றி மனம் ஒருமித்து இறைவனைப் போற்றினான். திருவாதிரைத்திருநாளில் இன்பநிலை எய்தினான்.

**தீர்த்தங்கள்:**

இத்தலத்தும் பிரமதீர்த்தம், ஐராவத தீர்த்தம், தாடகை தீர்த்தம், விட்டுணுதீர்த்தம், சூரியதீர்த்தம், சந்திரதீர்த்தம், ஆதிசேட தீர்த்தம், அரித்துவச தீர்த்தம், நாககன்னிகை தீர்த்தம், தருமசேன தீர்த்தம், கூ.ப தீர்த்தம், மண்ணியாறு முதலிய பல

தீர்த்தங்கள் உள்ளன. இவற்றுட் சிறந்தது திருக்கோயிலின் உள்ளேயுள்ள நாககன்னிகை தீர்த்தமாகும். இதில் மூழ்குவோர் பிணிகள் நீங்கப்பெறுவர். மணமாகாதவர்கள் கார்த்திகை வெள்ளிகளில் அம்மையார் தீர்த்தங் கொடுத்தருளும்போது மூழ்கின் அடுத்த ஆண்டே மணமெய்துவர்.

**சிற்பங்கள்:**

பழைய பல்லவர் காலத்திய சிற்பத்திறஞ் செறிந்த கோயில்களில் இதுவும் ஒன்று. ராஜகோபுரத்தையடுத்துள்ள பதினாறுகால் மண்டபத்தில், இறைவன் தாடகைக்காக திருமுடி வளைந்ததும், கலயர் கழுத்திற் பூட்டியிழுப்பதும், அப்போது சிவலிங்கத் திருமேனியில் இறைவன் திருமேனி தோற்றியதும், நாயனர் வழிபடுவதுமாகிய திருவுருவங்கள் செதுக்கப்பெற்றுள்ளன. சிங்கவாயிலையடுத்துத் திருக்குறிப்புத்தொண்டர் வரலாறு செதுக்கப்பெற்றுள்ளது. முத்துக்குமாரசுவாமிக்குப் பின்பக்கத்தில் தாடகை பதினாறு கைபெற்ற வரலாற்றுச் சிற்பம் செதுக்கப்பெற்றுள்ளது.

சுதைச் சிற்பம்:- இரண்டாங்கோபுரம் தாண்டி உள்நுழைந்ததும் வௌவால்நத்தி மண்டபத்தில் அமைக்கப்பெற்றிருக்கும் இடபாரூடர் முதலிய பஞ்சமூர்த்திகளின் சிற்பம் அணிவகைகளுடன் பார்ப்பவர் மனத்தைக் கவருந்தன்மையன. இன்

னும் எழுந்தருள் திருவுருவங்களும் மிக அழகும் செப்பமும் வாய்ந்தன.

திருவிழா:

சித்திரை மாதத்தில் பெருவிழா நடைபெறும். கந்தசஷ்டி, ஆடிப்பூரம், கார்த்திகை வெள்ளி விழா முதலியன மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. நவராத்திரி விழாவும் அங்ஙனமே. ஆவணியமாவாசையில் பிரமன் பூசித்த ஐதிகம் நடைபெறுகின்றது. மார்ச், செப்டம்பர் மாதங்களில் சூரியபூசை நடைபெறும். அன்று சாயங்கால பூசை விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடை பெறும்.

அன்பர்களும் அருணூல்களும்:

சம்பந்த சுவாமிகள்:— பலதலங்களையும் வணங்கிக்கொண்டு வருகின்றவர்கள் இத்தலத்தை யடைந்தார்கள். பெருமான் கண்பொலி நெற்றியனைக் காட்சிவழங்கினர். அதில் ஈடுபட்டு இறைவனுடைய எளிவந்த கருணைத்திறங்கள் யாவற்றையும் போற்றினர்.

அப்பர்சுவாமிகள்:— இறைவனைக் காணுமிடங்களாகப் பலவற்றைக் குறிப்பிடுகின்றவர்கள் பாழி, பழனம், பனந்தாள் எனக்குறிப்பிடுகின்றனர்.


**ஐயடிகள் காடவர்கோன்:—** இவர்கள் ஒரு பல்லவ வேந்தர். இறைவன் எழுந்தருளியுள்ள தலங்களைப்பற்றி ஒவ்வொரு வெண்பாவாக க்ஷேத்திர வெண்பா என்ற பெயரால் நூலொன்றுசெய்தருளினார். அது 11ம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. அதில் இத்தலத்தைப்பற்றித் தன்னெஞ்சிற் கறிவிப்பதாக 'மூப்பு வருதற்கு முன்பே தாடகையீச்சரத்தான் தாளைப்பணி' என்று அறிவுறுத்துகின்றார்கள்.

**நம்பியாண்டார் நம்பி:—** திருநாரையூர் ஆதிசைவர். திருமுறை தேடிக்கொடுத்த தெய்வக்கவிஞர். குங்கலியக்கலயர் இத்தலத்துச் செய்த அருஞ்செயலைப் பாராட்டி அந்தாதியிற் குறிப்பிட்டுள்ளார்கள்.


**அருணகிரிநாதர்:—** இவரைத் தெய்வத்தமிழுலகம் நன்கறியும். திருப்புகழில் 'மிக்க பனந்தாளுற்றருள் பெருமாளே' என்று சிறப்பித்துள்ளார்கள்.

**சிதம்பர முனிவர்:—** க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ்இயற்றியவர். முருகனைப்பற்றி 'செஞ்சடைவேதியன் புதல்வனே!' 'பனசையம்பதிமேவும் தண்டீசரையனே' என்று போற்றுகின்றார்கள்.

**காளமேகப்புலவர்:—** இவர் அகிலாண்டேஸ்வரியின் அருளை முழுதும் பெற்றவர். ஆசுகவி திருப்பனந்தாளுக்கு இவர் வந்தபோது கோயிற்



இராஜகோபுரம்



நாககன்னிகை தீர்த்தம்

பட்டராய்வந்த பெருமான் உணவும் நீரும் அளித்தார்; உண்ட களைப்பு நன்றியறிதலாக மாறிச் 'சோறுந்தருவான் திருப்பனந்தாட்பட்டனே' என்று பாராட்டச்செய்தார்.

செஞ்சடைவேதிய தேசிகர்:—பனசைப் புராணமும், பனசைப் பதிகமும் பாடியவர்கள். சைவாசாரிய மரபினர். இவர் கவிநடை எளிமையும் இனிமையும் உடையது.

சண்முகத்தம்பிரான்:— தருமையாதீனத்தில் 70 ஆண்டுகட்கு முன்பு இருந்த முனிவர். சிறந்த படிப்பாளி. தமிழருமையும், அறிவுக்கு மதிப்புக் கொடுக்கும் ஆற்றலுமடைந்தவர்கள். செஞ்சடையப்பர்மாலையும், பெரியநாயகிமாலையும் இவர்கள் செய்தன.

## கல்வெட்டுக்கள்

தலத்தின் பெயர் பனந்தாள் என்றும், கோயிலின் பெயர் தாடகையீச்சரம் என்றும் திருஞானசம்பந்தர் காலத்துக்கு முன்பே வழங்கியது என்பதனைத் "தண்பொழில் சூழ்பனந்தாள் திருத்தாடகையீச்சரமே" என்ற அவர்கள் பாடல் வலியுறுக்கும். இறைவன் தாடகையீச்சர முடையார் என்றும், உடையார் திருத்தாடகையீச்சர முடையா

ரென்றும், திருத்தாடகையீச்சர முடைய நாயனர் என்றும் வழங்கப்பெறுகிருர். அம்மை திருக்காமக் கோட்ட முடைய பெரியநாச்சியார் என்றழைக்கப் பெறுகிருர். இங்குள்ள சோமாஸ்கந்த திருமேனிக்கு சிவலோகவிடங்கதேவர் என்று பெயர் (31 of 1904).

தாடகையீச்சரம்:— இக்கோயிலைப் பின்னெரு காலத்து எடுப்பித்தவன் பனந்தாள் நக்கந்தரணி என்பவன். இதனை Iம் குலோத்துங்கனுடைய 11-ம் ஆண்டுக் கல்வெட்டுக் காட்டுகிறது. ஆனல் நக்கந் தரணி என்பவன் விஜயராஜேந்திரரின் காலத் திருந்தவன். ஆதலால் இக்கல்வெட்டிற்கண்ட கருத்து ஆய்தற் குரியது. எங்ஙனமாயினும் முதற் பராந்தகனுடைய கல்வெட்டு காணப்படுவதால் முதற் பராந்தகனுக்கு முன்பு இத்திருக்கோயில் கற்றளியாக்கப்பெற்றதென்பது துணிபு.

நாச்சியார் கோயில்:—இதனைப் பணிசெய்து நாச்சியார் திருவுருவத்தை எழுந்தருளுவித்தவன் வேங்கூருடையான் அன்பர்க்கரசு மருதமாணிக்க மானவில்லவராயன் என்பவன். இந்த வேங்கூரை விண்கூறென்று சில ஆராய்ச்சியாளர்கள் படிக் கிருர்கள். அப்பர் சுவாமிகள் தேவாரத்து வீழி மிழலை, வெண்காடு, வேங்கூர் என்றே குறிக்கப் படுகிறது. இத்தலம் விருதராஜபயங்கரவளநாட்டு மண்ணிநாட்டுப் பிரமதேயம் என்பதனைப் பல கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்களாக 28 கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் முதற் பராந்தகனது மூன்றும், I-ம் இராஜராஜனது ஒன்றும், I-ம் இராஜேந்திரனது ஒன்றும், முதற்குலோத் துங்கனது மூன்றும், விக்ரமசோழனது ஒன்றும், இரண்டாம் இராஜராஜனது இரண்டும், II-ம் குலோத்துங்கனது இரண்டும், III-ம் குலோத்துங்க னது மூன்றும், III-ம் இராஜராஜனது ஒன்றும், பாண்டியர்களில் மாறவர்மன் சுந்தரபாண்டியனது ஒன்றும், மாறவர்மன் வீரபாண்டியனது ஒன்றும், மாறவர்மன் குலசேகரபாண்டியனது ஒன்றும், பெயரில்லாதன நான்கும், இம்முடிநாயரது ஒன்றும், மருதமாணிக்கம் என்பாரது ஒன்றும், மல்லி கார்ச்சுன தேவமகாராயரது இரண்டும் ஆக 28 கல் வெட்டுக்கள் உள்ளன.

பராந்தகன் I: கி. பி. 907 - 947

இவன் சோழஅரசர்களுள் காலத்தால் முற்பட்ட அரசனுவான். இவன் ஆட்சி 29-ம் யாண்டில் வட கரை மண்ணிநாட்டு இறையன் மாதேவன் என் பான் ஆம்பூர் நாட்டுக் குமாரமங்கலத்து நிலமளித் திருக்கிறான். அதேயாண்டில் இடவை நாட்டி லுள்ள கரம்பியத்தா ரொருவரால் நிலமளிக்கப் பெற்றுளது. (32, 33, of 1904).

23-ம் யாண்டில் திருத்தாடகை யீச்சரத்து மகா தேவர்க்கு அம்பர்நாட்டு காரமங்கலமுடையான்

இனியான் மாதேவன் வைத்த நுந்தாவிளக்கும் தென்கரையினுட்டு காம்பிலீச்சரமுடையான் கர மணி குழிமத்து திருவமுது வைக்கவும் நிலமும் ஆடும் அளிக்கப்பெற்றன. (வெளிவராதது)

இராஜராஜன் I: கி. பி. 985.

இவன் இராஜகேசரிவர்மன் என்று சிறப்பிக் கப்படுகிருன். இவனது ஆட்சி ஆண்டு 18-ல் வட கரை மண்ணிநாட்டுக் கருப்பூருடையானுன கோன் முதன் என்பான் பூந்தோட்டத்திற்காக நிலமளித் திருக்கிருன்.

இராஜேந்திரன் I: கி. பி. 1011 - 1043

எட்டாவதாண்டில் ஒரு விளக்குக்காக 96 ஆடுகளை அளித்திருக்கிருன்.

குலோத்துங்கன் I: கி. பி. 1070 - 1120.

ஆட்சி 11-ம் ஆண்டில் பிரமதேயமான கிராமத் துக்கு இராஜேந்திரநல்லூர் எனப் பெயரிட்டு உள் வரி வாங்கிக்கொள்ள உத்தரவிட்டான். நிலங்களை அளந்துகட்டி வரிக்கூறு நிச்சயித்தவன் இவன் அண்ணனுன ராஜேந்திரன்.

20-ம் ஆண்டில் ஜயங்கொண்டசோழ மண் டலத்துக் காளியூர்க் கோட்டத்துப் புலி வளநாட்டு கண்ணிக் கொளத்துவனுல் நிலம் வாங்கி அளிக் கப்பட்டது.

28-ம் ஆண்டிலும் அதிராஜேந்திரனுடைய 3-வது ஆண்டிலும் குலோத்துங்கனுடைய 23-ம் ஆண்டிலும் இவ்வகையான குற்றங்கள் நிகழ்ந்தன. தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலங்களில் ராஜராஜன் மூவேந்த வேளாளனும், சேனபதிப் பல்லவராயரும், சேனபதி நம்பிராஜரும் பொற் பண்டாரத்தைச் சோதனை யிட்டார்கள். அதே காலத்து வேறு ஐந்துபேர்களுடைய கையாள்களும் கண்டு பிடிக்கப்பட்டார் (46, 47. of 1907).

29-ம் ஆண்டில் தாடகையீச்சரத்துப் பொற் பண்டாரத்திலிருந்து பொன் வெள்ளி நகைகளை மாறிய பட்டருக்கு நாலுநாள் பூசைச் சம்பளம் பிடிக்கப்பட்டது.

**விக்ரமன்:** கி. பி. 1118 - 1136.

இவனாட்சி 9-ம் யாண்டு வேளூருடையான் திருவையாறு தேவனான இராஜேந்திர சோழ பல்லவராயன் வெட்டுவித்த இருநூற்றுப் பதினாறு வன்குளநீரைத் தவறான வழிகளில் பயன்படுத்திக் கொண்டதற்காகத் திருப்பனந்தாள் மகாசபை குற்றத்தண்டம் விதித்ததைக் குறிப்பிடுகின்றது. (80 of 1932)

**இராஜராஜன் II:** கி. பி. 1137.

இவன் காலம் 1146லிருந்து 1178 என்று V. ரங்காசாரியாரவர்கள் கூறுவார்கள். இவனது

ஆட்சியில் மண்ணிநாட்டுத்திருப்பனந்தாளுடையார் தாடகையீச்சரமுடையார் தேவகன்மியும் கோயில் கணக்கருங்கண்டு இத்திருநாளில் கொள்ளிடத்துத் தீர்த்தம் கண்டருள முன்பிலாண்டுகள் எழுந்தருளிய விடத்து திருவீதியின்றிக்கே எழுந்தருள அரிதானமையால் நாங்கள் 'இராஜகம்பீரன்' என்ற திருநாமத்தாலிட்ட திரு வீதிக்கு இக்கோயில் ஆதி சண்டேசுரதேவர் ஸ்ரீ பாதத்திலே நீர்வார்த்துக் கொடுத்த நிலம் (45, of 1904) என்ற பகுதி கொள்ளிடத்திற்கு இராஜகம்பீரன் தெரு என்ற ஒருதெரு ஏற்படுத்தியதைத் தெரிவிக்கிறது.

**குலோத்துங்கன் II:** கி பி. 1113—1150.

ஆட்சி 20ம் ஆண்டில் காளியூர்க்கோட்டத்து புலிவளநாட்டுக் கண்ணிக்குளத்தூரான் ஒருவன் கோயிலுக்கு நிலம் விட்டான் (35 of 1904). பின் விக்ரமனுடைய 15ம் ஆண்டு நிகழ்ச்சி இவன் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது (43 of 1904).

**குலோத்துங்கன் III;** 1178—1218.

இராஜஇராஜர்க்கதிப மாராயன் என்பவன் க்ஷேத்ரபாலராய உற்சவ மூர்த்திக்கு நிலமளித்தான் (34 of 1904).

ஆட்சி 8ம் ஆண்டில் மகர ஞாயிற்றுப் பூர்வ பக்ஷத்துத் திருதியையும் புதன் கிழமையும் பெற்ற திருவோணத்து நாள் விருதராஜபயங்கர வளநாட்டு

மண்ணிநாட்டுத் திருப்பனந்தாள்......கரயமுடை யான் செவ்வே எழுந்தருளுவித்த குங்கிலியக்கலயர் ஸ்ரீ பாதத்துக்குப் பணிசெய்திருக்கும் தீயிலும் பிரியாதான் அழியாவிரதங் கொண்டவனை குங்கிலியக்கலயனேன் தாளப் பிராமணம் எங்களுக்கு ஆன்மார்த்தமாகப் பூசைசெய்துவரும் ராயனூர்க்கும் திருவேடப்பெருமாளுக்கும் திருப்படி மாற்று முதலியவற்றுக்கு ஸ்ரீபாதத்தில் நீர்வார்த்துக்கொடுத்து நிலமளித்த செய்தி குறிப்பிடப் படுகிறது (40 of 1904).

9-ம் ஆண்டில் அதாவது 1187ல் திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியாருக்குப் பணி செய்யும் பெருமக்களுக்குக் கொத்துக்காக (உணவுக்காக) நிலமளித்தான் (41 of 1904).

இராஜராஜன் III: கி. பி. 1216—1246.

ஆட்சி 3ம் ஆண்டில் திருவசனீச்சரமுடையார் கோயிலுக்கு நிலம் விட்ட செய்தி அறிவிக்கப்படுகிறது. விருதராஜன் தொண்டன் முதலிய தலைவர்கள் பெயர்கள் அதில் வருகின்றன. அசனீச்சுரம் என்பது ஊருடையப்பர் என இப்போது வழங்குகிறது. அசனீச்சுரம் என்பதற்குத் தான்றோன்றி நாதர் கோயில் என்பது பொருள். தாடகை ஈச்சரமேற்படுவதற்குமுன்பு அசனீச்சுரம் இருந்தசென்ற வரலாற்றுண்மைகள் சிந்தித்தற்குரியன. தொன்மையான உரிமை பற்றி ஊருடையப்பரென வழங்குகின்றது போலும் (**44 of 994**).

**பாண்டியர்கள்:**

பாண்டிய மன்னர்களில் மாறவர்மன் சுந்தர பாண்டியனும், மாறவர்மன் வீரபாண்டியனும், குலசேகர பாண்டியனும் இத்தலத்திற்கு நிபந்தங்கள் அளித்துள்ளார்கள். அவருள், மாறவர்மன் சுந்தர பாண்டியன் குலசேகரன் மகன். இவனாட்சிக் காலத்துத்தாடகையீச்சரத்து மகாதேவர்க்குப்பூசை வழிபாட்டிற்கும் விழாவிற்குமாகப் பெருவாரியான நிலங்களை அளித்தான் (37 of 1904.).

**மாறவர்மன் வீரபாண்டியன்:**

இவனுடைய ஆட்சி ஆண்டு 25ல் அதாவது 1278ல் கோயிலுக்காகத் திருப்பனந்தாள் சபையார் வீடுகள் வாங்கினார்கள் (38 of 1904.).

**சடையவர்மன் குலசேகரபாண்டியன்:**

கி. பி. 1429 - 1473.

இவனாட்சி இரண்டாம் ஆண்டில் வடகரை விருதராஜபயங்கர வளநாட்டு மண்ணிநாட்டுப் பிரமதேயமான திருப்பனந்தாள் மகாசபையாருக்கு நிலமளித்தான் (36 of 1904.).

**மருதமாணிக்கம்:**

வேங்கூர் வில்லவராயனை அன்பர்க்கரசுமருத மாணிக்கம், திருக்கோயிலுள் தேவி உருவத்தைப் பிரதிட்டை செய்வித்தான் (75 of 1932.)

**மல்லிகார்ச்சுனதேவமகாராயர்:**

இவர் தேவராயமகாராயர் மகன். 1369ல் வைகாசித்திருநாள் செலவுக்காக இடவைநாட்டுக் கரம்பைச்சேற்று நாராயணபட்டருக்கு நிலம் இறையிலியாக அளிக்கப்பெற்றது. (76 of 1932.). சகம் 1366ல் அதாவது கி. பி. 1444ல் கோயிலுக்கு இரண்டு கிராமங்களை விற்றார் (77 of 1932.).

**சிதைந்த சில கல்வெட்டுக்கள்.**

கோயிலுக்குப் பலவகைப்பட்ட தொழிலாளிகளிடமிருந்தும் நிலங்களிலிருந்தும் வரும் வருமான விவரத்தை விளக்கிக் காட்டுகிறது (78 of 1932) ஸ்ரீ சோமாஸ்கந்த திருமேனியாகிய சிவலோக விடங்கதேவருக்கும், அம்மைக்குமாக கிருதி ராஜ ராஜனான ராஜராஜகந்தர்வ மகாராயனால் நிலமளிக்கப் பெற்றது. (31 of 1904.)

**ஊருடையப்பர்:**

இத்தலத்து ஊருடையப்பருக்குச் சில குறிப்புக்கள் முன்னர் ஒருகல்வெட்டால் விளக்கப் பெற்றன. இக்கோயில் இத்தலத்திற்கு மிகப்பழமையானது. மாடக்கோயிலாக, செங்கல் திருப்பணியாக இருப்பதே இதன் பழமையை நன்கு விளக்கும். விமானம் யானையின் பிற்பகுதிபோன்று அமைந்திருக்கிறது. ஆதலால் இது தூங்கானை மாடக் கோயிலில் ஒன்றாகும். கோச்செங்கணனுடையதிருப் பணியாகவும் இருக்கலாம். இக்கோயிலுக்கு அசனீசுரம் என்ற பெயர் வழங்கி யிருக்கிறது. பெருமான்

அசனீசுரமுடையார் என்று குறிப்பிடப்படுகிறார். அசனீசுரம் என்பதற்குப் பிரமன் வழிபட்டதலம் என்பாரும் உளர். தாடகையீச்சரத்தை வழிபட்ட தாகப்புராணம் கூறுகிறதே யன்றி இத்தலத்தை வழிபட்டதான குறிப்பு புராணங்களில் கிடைக்க வில்லை. ஆதலால் தானே தோன்றிய தொன்மை யான கோயில் என்ற பெயரால்வந்த ஊருடையப்பர் என்ற பேருக்கு ஒத்த கருத்தினதாதல் வேண்டும். பிரமன்வழிபட்ட கோயிலாயினும் அஜஈசுரம் அஜே சுரமாகுமேயன்றி அஜனீசுரமாதற்கு விதி இல்லை யாம் என்க.

இத்தலத்தைப்பற்றித் தாடகை யீச்சரத்துள் இரண்டும், இக்கோயில் அருகாலில் மூன்றுமாக ஐந்து கல்வெட்டுக்கள் உள்ளன. திருப்பனந்தாள் மகாசபையோராகிய சிவப்பிராமணர்கள் கணபதி யாதித்தன்பக்கல் 30 காசுகொண்டு திருநுந்தா விளக்கு இரவும் பகலும் எரிக்க இராஜேந்திர சோழன் 2ம் யாண்டு இட்டு கல்வெட்டி வைத்திருக் கிறார்கள். மற்றைய இரண்டு கல்வெட்டுக்களும் சோழமாதேவியார் தங்கள் ஆட்சியில் நிபந்தம் அளித்ததைக் குறிப்பிடுகின்றன. தாடகையீச்சரக் கல்வெட்டுக்கள் இரண்டும் இராஜராஜன் ஆண்டு மூன்றாவதில் நிபந்தம் அளித்ததையும், குலோத் துங்கசோழதேவன் யாண்டு 13வதில் 5காசுகொண்டு திருவிளக்குப் பணிசெய்ய ஒப்புக்கொண்டமையை யும் அறிவிக்கின்றன.

# திருநள்ளாறு

# திருநள்ளாறு

சைவங் காத்த தனிப்பெருந்தலம் திருநள்ளாறு. "போகமார்த்த பூண் முலையாள்" என்னும் பச்சைப் பதிகம் பிறந்ததும் இத் தலத்திலேயே. இது காரைக்காலண்மையில் பிரஞ்சிந்தியாவில் இன்று இருக்கிறது. பேரளம், காரைக்கால் பாதையில் உள்ள ஒரு புகைவண்டி நிலையம். சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று.

தலப்பெயர்கள் :

பிரமதேவன் முதன் முதல் பூசை செய்த தலமாதலால் ஆதிபுரி என்றும், தருப்பையைத் தலவிருட்சமாகக் கொண்டமையால் தருப்பாரண்யம் என்றும், நகவிடங்கராகிய தியாகப்பெருமான் எழுந்தருளி இருப்பதால் நகவிடங்கபுரம் என்றும், நளன் வழிபட்டமையால் நளேசுரம் என்றும் வழங்கும். இந்நான்கு பெயர்களும் நான்கு யுகத்தில் வழங்கியன. நளேசுரம் என்பது இவ்யுகப்பெயர். இத்தலம், அரிசொல்லாற்றுக்கும், வாஞ்ச நதிக்கும் இடையில் இருப்பதால், நள்ளாறு ஆயிற்று. நள்-நடு நண்பகல், நள்ளிருள் என்பன போல நள்ளாறென்பதும், ஆறுகளின் நடுவில் உள்ளது என்னும் பொருளில் வந்தது.

மூர்த்திகள் :

இறைவன் பெயர் நள்ளாறர். இறைவி பெயர் போகமார்த்த பூண்முலையம்மை. இதனைப் பரமாசாரியப் பெருந்தகையார் எடுத்தாள்வார்கள். விநாயகர் திருநாமம், கற்பக விநாயகர், சொர்ண விநாயகர். தியாகர் நகவிடங்கத்தியாகர். அம்மன் நீலோற்பலாம்பாள். நடனம் உன்மத்த நடனம். ஏனைய சிவாலயங்களைப்போல, சபாநாயகர் முதலாக அறுபத்துமூவர் இறுதியாக, எல்லாப் பரிவாரங்களும் இருக்கின்றன. இத்தலத்தில் சனிபகவான் மிகச் சிறப்புடையது.

தீர்த்தங்கள் :

எட்டுத் திக்குகளிலும் திக்குப்பாலகர்களால் அமைக்கப்பட்ட எட்டுத்தீர்த்தங்கள் இருக்கின்றன. சந்நிதியில், பிரமதண்டத்தால் உண்டாக்கப் பெற்ற பிரமதீர்த்தம் இருக்கிறது. வாணிதீர்த்தம், அன்னை தீர்த்தம், நளகூபம் முதலியனவும் உள்ளன. சிவத்திரவியத்தை அபகரித்த, கணக்கன் தலை உருண்ட இடமாகிய மண்டை தீர்த்தமும் இருக்கிறது. அது மட்டைக்குளமென இப்பொழுது வழங்குகிறது.

புராணவரலாறு :

நிடத மன்னனாகிய நளன் தமயந்தியைச் சுயம்வரத்தில் மணந்தான். தேவர்களும் அவளை மணக்க

விரும்பி ஏமாந்தனர். அதனால் சனியின் துணை கொண்டு அவர்களைப் பிரித்து வைத்தனர். நளனும் தமயந்தியும் பிரிந்து ஒளியிழந்து, உருவிழந்து, நிலையிழந்து வருந்தினர். வீமராசன், மீட்டும் சுயம் வரம் ஒன்றை ஏற்படுத்தி இருவரையும் சேர்த்து வைத்தனன். நாடடைந்தனர். அடைந்தும் நளனுக்கு அமைதி ஏற்படவில்லை. நாரதர் உபதேசப்படி தீர்த்த யாத்திரைசெய்யப் புறப்பட்டான். திருநள்ளாறுவந்தான்; நளதீர்த்தத்தில் நீராடினன். நள்ளாறரை வழிபட்டான். சனி விலகினன். நளன் பெயர் சொன்னாரையும் தீண்டுவதில்லை என்று உறுதிகொண்டான். எல்லார் இன்னலையும் நீக்கி இத்தலத்தமர்ந்து அருள் வழங்குகின்றான். நளன் வழிபட்டதை ஞானசம்பந்த சுவாமிகள். "நளன் கெழுவி நாளும் வழிபாடுசெய் நள்ளாறே" என்று பாராட்டுகின்றார்கள்.

பார்க்கனென்னும் வேதியனை அவமதித்த பாபத்தால் கலிங்க மன்னன் காட்டானையானன். இங்குப் பிரமதீர்த்தத்தில் நீராடி உண்மை உருவமுற்றான். அம்மையப்பரை வணங்கினன். ஆலயப் பணிசெய்தான். அவந்தி நாட்டு மன்னனாகிய உருசி என்பவன் பாரத்துவாச முனிவர் சொற்படி இத்தலத்தை அடைந்து, தனுர்மாதத்துப் பௌர்ணமியில் தானதருமங்கள் செய்தான். தர்ப்பாரண்யரை வழிபட்டான். சிவஞானம் கைவரப் பெற்றுச்சிவசாயுச்சியம்பெற்றான். காம்பீலிதேசத்து வணிகமக்களாகிய அக்னிவண்ணர் இத் தலத்தை

அடைந்து நாளும் வழிபட்டு நல்லுணர்வு பெற்றார்கள். இறைவன் மிருத்தியஞ்ச மந்திரத்தை உபதேசித்தார். திருஞானசம்பந்தப் பெருமான், மதுரையில் சமணர்கள் செய்த அனல்வாதத்தில் 'போகமார்த்தபூண் முலையாள்' என்னும் இப்பாசுரத்தை ஏட்டில் எழுதி, தீயிலிட்டு, பச்சையாய்க் கண்டு சைவத்தின் மேன்மையை உலகறியச் செய்தார்கள்.

இத்தலத்தில், வைகாசி உத்தரட்டாதியில் கொடியேறி 18-நாட்கள் பெருவிழா நடைபெறும். மார்கழிமாதப் பௌர்ணமியில் பலர் இத்தல,த்தில் அன்னதானம் செய்வார்கள்.

அன்பர்களும் நூல்களும்:

இத்தலத்தைப் பற்றி ஞானசம்பந்தசுவாமிகள் பதிகங்கள் நான்கும், திருநாவுக்கரசு சுவாமிகள் பதிகம் இரண்டும், சுந்தரர் பதிகம் ஒன்றும் ஆக ஒன்பது பதிகங்கள் உள்ளன. தலபுராணம் ஒன்றுளது. அது 307-பாடல்கள் உள்ளது. அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் ஒன்றுண்டு. சனி பகவான் தோத்திரமென்று ஒரு நூல் பத்துப் பாடல்கள் உடையது. அச்சிடப்பெறாதது. தஞ்சை சரஸ்வதிமால் நூல் நிலையத்தில் உள்ளது.

# திருத்தருமபுரம்

# திருத்தருமபுரம்

இதுவும் காரைக்காலுக் கண்மையில் உள்ள சிவத்தலம். சிறிய திருக்கோயில். புதுத்திருப்பணி. இறைவன் திருநாமம் யாழ்மூரிநாதர். இறைவி மதுரமின்னம்மை. இத்தலத்து திருநீலகண்டயாழ்ப் பாணருடைய தாயார் அவதரித்தார்கள். திருநீல கண்டயாழ்ப்பாணர், ஞானசம்பந்தப் பெருமா னுக்கு யாழ்த்தொண்டு செய்து உடன்வருபவர்கள். மதுரையில், சொக்கலிங்கப்பெருமான் ஆணைப்படி, அடியார்கள் அழைக்க ஆலயத்தினுட் சென்று பொற்பலகையின்மீது ஏறிநின்று யாழ்வாசித்தவர். திருவாரூரில் வடக்கு வாயிலின் நேரே தனிவாயில் திறந்து தியாகேசப் பெருமானுடைய திருவணுக்கம் திருவாயிலை அடைந்து வழிபாடு செய்தவர். திருச் சாத்தமங்கையில், திருநீலநக்க நாயனர் வீட்டில் பூசாமண்டபத்தில் ஓமகுண்டத்தின் பக்கத்தில், நித்தியாக்கினி, முன்னிலும் பன்மடங்கு, ஓங்கிப்பிர காசிக்கும்படி மனைவியுடன் வீற்றிருந்தவர். அத் தகைய இறையருள் பெற்ற திருநீலகண்ட யாழ்ப் பாணருடைய யாழிலேஅடங்காதபண் இத்தலத்து எழுந்தது. அதனலே இறைவன் யாழ்மூரிநாதர் ஆயினர்.

திருவேட்டக்குடியை வணங்கித் தருமபுரத்தை வந்தடைந்த ஞானசம்பந்தப்பெருமானைப் பாணர் சுற்றத்தார் வரவேற்று வணங்கினர். தாம் சம்பந்த

சுவாமிகளுக்கு யாழ்த்தொண்டு செய்வதைத் தம் சுற்றத்தாரிடம் கூறினார். பாணர் சுற்றத்தார், "நீர் யாழ்வாசிப்பதால்தான், பிள்ளையார் பாடும் திருப்பதிகம் சிறப்புப்பெறலாயிற்று". என்றனர். அது கேட்ட பாணர் அஞ்சியவராய், இவ்வடாதசொல் அடங்கவும், உலகோர் அறியவும், பதிக இசை யாழில் அடங்காதபடி பாடியருள வேண்டினார். அவ்வாறே பிள்ளையாரும், "மாதர் மடப்பிடி" என்ற பண்ணைப்பாடினார். அது யாழில் அடங்கவில்லை. கண்டபாணர், தம்மை இவ்வாறு செய்யக் காரணமாக இருந்தது இவ்யாழே என்று யாழை உடைத்தெறியமுற்பட்டார். பிள்ளையார், அதைத் தடுத்து இறைவனும் இறைவியும் அருளிய அருட்டிறமெல்லாம் இவ்யாழில் அடங்குமோ இயன்றளவு வாசித்தலே சால்பு என்று கூறி யாழைக் கையில் அளித்தார்.

# விளநகர்

# விளநகர்

**தலம் :**


மாயூரத்திற்குக் கிழக்கே 4½ மைல் தூரத்தில் இருக்கிறது. பொழில் சூழ்ந்த காவிரியின் தென் கரையில் உள்ளது. கபித்தன் என்னும் அசுரன் பிரமகத்தி தோஷம் நீங்கி வழிபாடுசெய்தான். ஆகையால் கபித்தபுரம் எனவும் வழங்கும். கபித்தம் = விளா. ஆதலால் விளநகர் எனப்பட்டது போலும். இறைவன் பெயர் துறைகாட்டும் வள்ளல். அம்மை காம்பனதோளியம்மை. தீர்த்தம் மெய்ஞ் ஞான தீர்த்தம்.

**வரலாறு :**

அருள்வித்தன் என்றொரு அந்தணன் நாள் தோறும் இறைவனுக்கு அருச்சனைக்காம் திருப் பள்ளித்தாமத்தைக் கொய்து கொடுத்துக்கொண்டு வந்தான். என்ன இடையூறு நேரினும் இப்பணியி லிருந்து இவன் தவறுவதில்லை. இவனை உலகிற்கு அறிவிக்கவும், உலகத்தாரும் சரியைத்தொண்டில் தளராது நின்று ஈடேறவும் திருவுளங்கொண்ட பெருமான் ஒருநாள் விடியற்காலையில் வண்டுதா மலரை நிரம்பப் பறித்துக்கொண்டு ஆற்றோடு வரும் பொழுது ஆறுபெருகிவரத் திருவுள்ளம் பாலித்தார். ஆற்றுநீர் அரையளவாய், மார்பளவாய், கழுத்தள வாய், வாயளவாய்ப் பெருகிற்று. அப்போது

அந்தணன் இரு கையால் நீந்தமுடியாமலும் பூக் கூடையை விட்டுவிட மனமில்லாமலும் திருப்பள்ளி எழுச்சிக்கே பயன்படும் பூவைக் காலந்தாழ்த்துக் கொண்டுசெல்ல லாகாதென்ற எண்ணத்தாலும் விரைந்து வந்துகொண்டிருந்தான். இவனுடைய அன்பையும் உறுதியையும் கண்ட இறைவன் கருணைகூர்ந்து துறைகாட்டிக் கரையேறவிட்டார். அதனால் துறைகாட்டும் வள்ளல் என்ற பெயரைத் தாங்கினார்.

பின்னொருகால் ஞானசம்பந்தப் பெருமான் கடைமுடி முதலான தலங்களை வணங்கிக்கொண்டு மாயூரநாதரை வணங்கவருகின்றவர்கள் ஆற்றைக் கடக்க வழிதெரியாமையால் என்செய்வதென்று இரங்கியருளினார்கள். ஆற்று நீரும் கரைபுரண்டு வழிதெரியாது பரந்தோடிற்று. அப்போது ஞான சம்பந்தப்பெருமான் இங்கு துறைகாட்டுவோர் யாரேனும் உளரோ என்று திருவுளத்துக்கொண் டார். அப்போது ஒரு வேடன் தோன்றி யாம் அழைத்துப் போகிறோமென்று ஆற்றில் இறங் கினான். பரந்துபட்ட காவிரி வெள்ளம் பாலறுவாயர் பாதத்தளவே யாயிற்று. தென்கரையேறிய திரு ஞானசம்பந்தர் துறைகாட்டிய துணையாகிய வேட னைத் திரும்பி நோக்கினார். காணவில்லை. அப்போது துறைகாட்டும் வள்ளலோ என்றிறைஞ்சி யேத்தி னார். இதனை ஞானசம்பந்தர் தேவாரம் நன்கு விளக்கும். அது:—



ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார் கோயில் முன்தோற்றம்

"சொற்றரு மறைபாடினர் சுடர்விடுஞ் சடைமுடியினர்
கற்றருவ் வடங்கையினர் காவிரித்துறை காட்டினர்
மற்றரு திரடோளினர் மாசில்வெண் பொடிப்பூசினர்
விற்றிருமணி மிடறினர் மேயதுவ் விளநகரதே."

## கல்வெட்டுக்கள்

இத்தலத்திற்கு மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன. அதில் நகர் திருவிளநகர் என்று குறிக்கப் பெறுகின்றது. இறைவன் துறைகாட்டுந் தம்பிரானர், துறைகாட்டுவான் என்று அழைக்கப்படுகின்றார். கல்வெட்டுக்களில் மிகப்பழமையானது உத்தமசோழன் காலத்ததாகும். திருவிளநகர் கோயில் அர்த்தயாம பூசைக்காக உத்தமசோழன் பட்டமகிஷியான உத்தமச்சுரபியாள் நெறியுடை சோழப் பேராற்றின் கரையில் நிலமளித்தாள்: இது பரகேசரிவர்மன் ஆட்சி ஐந்தில் நடந்தது. இதனல் இத்தலத்தின் தொன்மை நன்கு விளங்கும்.

தஞ்சை நாயக்க வம்சத்தைச் சேர்ந்த அச்சுதப்ப நாயகர் காலத்தில் ஆறுபாதியைச் சேர்ந்த விளநகர் துறைகாட்டும் வள்ளலார் கோயில் கர்ப்பக் கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் இவைகள் திருப்பணிசெய்விக்கப்பெற்றன. திருப்பணி நிகழ்த்தியவர் கோயில் பணத்தைக்கொண்டும், பல சிவநேசர்களுடைய உதவிகளைக் கொண்டும் செய்வித்

தனர். செய்வித்த பெருந்தகை தன்னுடைய பெயரைக் குறிப்பிடாது வழியடிமை யென்று குறிப்பிட்டுக்கொள்கிறார். முன்பக்கத்து மண்டபத்துத் தூணொன்றிலுள்ள கல்வெட்டு கீலக௵ ஆடிமீ ௰௫உ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தீக்ஷிதர் ஒருவர் நிலமளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது (163, 164, 165 of 1925).

# திருப்பறியலூர்

# திருப்பறியலூர்

இத்தலம் தஞ்சை ஜில்லா மாயூரம் தாலூக்காவில், மாயூரமிருந்துதரங்கம்பாடி செல்லும் இருப்புப் பாதையிலுள்ள செம்பொன்னர்கோயில் என்னும் புகைவண்டி நிலயத்திற்குத் தென்மேற்கில் $1\frac{1}{4}$-கல் தொலைவில் விளங்குகிறது.

**தலப்பெயர்கள்:**

**தட்சபுரம்:**— பிரமன் புதல்வனை தக்கன் தேவர்கள் சூழ மண்ணுலகம் வந்து இத்தலமே சிறந்ததென்று கருதி யாகஞ்செய்த இடமாதலால் இது தட்சபுரம் எனப் பெயர்பெற்றது.

**பறியலூர்:**— தாரகன் என்னும் அசுரனல் தேவர்களுக்கு ஏற்பட்ட பயத்தை நீக்கிய (பறித்த) தாலும், சவுனகர் சாபத்தால் வேடுவனய்த் திரிந்த புற்கலன் இத்தலத்தின் பாங்கர் வந்த ஏழுமுனிவர்களது குடை திருவடி முதலியவற்றைப் பறித்துக் கொண்டமையாலும், இங்கு வந்து வழிபடுவோர்களது பாவங்களை இறைவன் பறித்தலாலும் பறியலூர் எனப்பெயர்பெற்றது. தக்கயாகத்துக்கு வந்த தேவர்களின் தீமையைப் பறித்ததால் பறியல் எனப் பெயர்பெற்றது என்று மாயூர புராணம் கூறுகின்றது. 'பயங்கிளர் நுங்கள் தீமை பறிசெய்தோம் இத்தேத்தற்றுல், தயங்குமித் தானமென்

றும் பறியல் என்று ஓர்பேர் சார்க' என்பது அப் புராணப்பாடற் பகுதி.

புராணவரலாறு:

**புற்கலன்வரலாறு:—** மகளிர்களோடு கடல் நடுவில் நீர்விளையாடல் செய்துகொண்டிருந்த புற்கலன் என்பான், அப்பொழுது ஆங்குவந்த சவுனகரை வணங்காது அவமதித்ததால் அவர் சாபத்தினைப் பெற்று வேடுவனாகி அலைந்துகொண்டிருந்து முடிவில் இத்தலத்தை அடைந்தான். அப்போது இங்கு வந்த ஏழுமுனிவர்களது குடைமுதலாயினவற்றைப் பறித்தான். பறித்ததும் ஊழ்வினைப்பயன் வந்து ஊட்டுங் காலமாதலால் அவர்களுள் ஒருவராகிய அத்திரி முனிவருடைய வாட்டத்தைக் கண்டு மனமிரங்கி, பறித்ததை மீட்டுங் கொடுக்கவே அத்திரி அதனைத் தன்கையால் வாங்கினர். கரம் தீண்டிய விசேடத்தால் புற்கலன் நல்லறிவு பெற்று ஏனைய அறுவர்களது குடை, ஆடை முதலியவற்றையும் அவ்வாறே கொடுத்து அவர்களிடத்தில் உபதேசம் பெற்று ஜெபஞ்செய்துகொண்டிருந்தான். அதன் பயனால் இறைவன் காட்சியளிக்கக் கண்டு களித்து அவராலே வால்மீகி என்னும் பெயரும் பெற்று இராமசரிதம்பாடி முத்தி எய்தினன்.

**தட்சயாகம்:—** உமாதேவியைத் தன்மகளாகப் பெற்று இறைவனுக்கு மணஞ்செய்து கொடுத்து அவரைமருமகனாகப்பெறும் பேற்றினைப்பெற்றான்.

பெற்றிருந்தும், திருமணத்தின்போது அம்மை யாரைக் கைப்பற்றிய பெருமான் அப்போதுமறைந் தருளித் துன்பத்தைக் கொடுத்து மறுமுறையும் தக்கனுக்கு அறியாதபடி வந்து அம்மையாரை அழைத்துச் சென்றதாலும், மகளையும் மருமகனை யும் கண்டு செல்லுதற்பொருட்டு கயிலைக்குச்சென்ற காலத்து வாயிலாளர்களால் தடுக்கப் பட்டதாலும் தக்கன் இறைவனை மதியாதவனாய், வேதங்களால் தொழப்படும் ஒரு முழுமுதல்வனாகிய பெருமானுக்கு அவிகொடுக்கும் முறையினை நீக்கி விட்டுணுவுக்குக் கொடுத்து யாகஞ்செய்யஎண்ணினான். நாரதமுனிவ ருடன் கலந்து யோசித்துப் பாரிசாதவனம் என்னும் இத்தலமே சிறந்ததென்று கருதி ஏவலாளர்களைக் கூவி யாகசாலை அமைக்கச்செய்தான். தக்கன் ஆணையின்படியே விட்டுணு முதலிய தேவர்கள் யாவரும் வந்து கூடினார்கள். வியாழகுரு யாகக் கிரியைகளைச் செய்யத் தொடங்கினார்.

இச்செய்தியை நாரதமுனிவரால் அறிந்த உமையம்மையார் யாகத்துக்குச் செல்ல விரும்பி னள். செல்லுதலில் இறைவனுக்கு உடன்பா டில்லையாயினும் ஒருவாறு விடைபெற்று இத்தலத் துக்கு வந்தாள். வந்ததும் பிதாவாகிய தக்கனால் உபசரிக்கப்பெறாமல் இருந்ததோடு அவன் அம்மை யாரைப்பற்றியும் பெருமானைப்பற்றியும் கூறிய கொடுஞ் சொற்களையும் கேட்டனள்; அதனால் மனம் பொறாமல் "இந்தமாமகம் பொன்றுக; இமை யவர் சிதைக; நிந்தையே செய்த நீயும் இப்

பொழுதே ஒழிக'' எனச் சபித்துக் கயிலையை யுடைந்து பெருமானைவணங்கிநிகழ்ந்தன கூறினள்.

அம்மையார் அருளியதைச் செவியேற்ற பெருமான் வீரபத்திரக்கடவுளைக் கூவி "தக்கன் வேள்விச்சாலையை அடைந்து அவியினைத் தரு கென மொழிவாய்; தாரானாயின் தேவர்களோடு அவனையும் அழிப்பாய்'' என்று அருளலும், வீர பத்திரரும் உலகம் நடுங்கும்படியாக வீரர்கள் சூழ யாகசாலையை அடைந்தார். பிரமனாதியோர் அஞ் சினர். தக்கன் மயங்கினன். சென்ற வீரபத்திரர் 'தக்கனே எம்பெருமானுக்குரிய அவியினைக்கொடு' என்று கூறி, அவன் மறுத்ததால், யாகத்தினை யழிக்கத்தொடங்கினர். விட்டுணுவைத் தண்டா லடித்தும், பிரமனைக் குட்டியும், கலைமகளை மூக்கு அரிந்தும், சந்திரனைத் தேய்த்தும், சூரியன் பற்களை யுடைத்தும், யமன் தலையை வெட்டியும் துன்புறுத் தினர். அக்கினி ஏழுநாக்குகளையும் இழந்தான். பெண்மா னுருக்கொண்டு பயந்து ஓடிய எச்சன் தலையறுபட்டு வீழ்ந்தான். இவ்வாறு யாவரும் துன்புற்றார்கள். ஆயினும் மழு மான் ஆகிய வைகளை ஏந்தி இறைவனைப்போல் விளங்கும் உருத் திரகணங்களும் ஈசானனும் வீரபத்திரரால் துன் புறுத்தப் படாமல் அப்பாற்சென்றார்கள்.

தேவராதியோர்கள் இவ்வாறு துன்புறுதலைக் கண்ட தக்கன் மனம் பதைத்து, "குருமொழி கேட்டிலேன்; மகள் கூறியவற்றை எல்லாம் மறுத் துச் சீறினேன்; விட்டுணுவே முதற்பொருளென்று



ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி கோயில் உள்தோற்றம்

எண்ணினேன்; விதிவழியே மதிசாரும் என்பது எனக்குப் பலித்தது'' என்று வருந்துகையில் வீர பத்திரர் எதிர்தோன்றி கூந்தலைப்பற்றியவராய் "யாவரும் நகைப்ப பரமனை நிந்தித்தனையே; இதோ பார் இவர்கள் உனது யாகத்துக்கு எழுந்தருளி அதனாற் பெறும்பயனை; உன் செருக்கு எங்கே சென்றது; வேள்வி எங்கே?'' என்று கூறிக் கொண்டு வாளினால் தலையையறுத்து அக்கினிக்கு உணவாக்கினார்.

முன்னர், தண்டினால் அடிபட்டு வீழ்ந்த திரு மால் மறுபடியும் எழுந்து மானம் தூண்ட கருட வாகனத்திலேறி வீரபத்திராரை நோக்கி "அவி ஈயேனென்ற தக்கனையன்றி ஏனையோரையும் அழித்தல் முறையோ'' என்று கூறிக்கொண்டு யுத்தஞ்செய்ய முற்பட்டு வில்லினாலும், கதை யினாலும் போர் புரிந்தார். ஒன்றும் பயன்படா மையால் இறுதியாகச் சக்கரத்தை ஏவினார். அது கண்ட வீரபத்திரர் "இது எம்பெருமான் இவருக்குக் கொடுத்த தல்லவோ'' என்று அதனைத் தனது கையாற் பற்றிக்கொண்டார். அதுவும் பயனுறு தொழியவே வாள்கொண்டு எதிர்க்க அது கண்ட வீரபத்திரர் ஊங்காரஞ் செய்தார். அதனால் உளம் நடுங்கி மண்ணில் வீழ்ந்த திருமாலின் முடியை வீர பத்திரர் துணிக்க முற்படவே "செற்றம்நீங்குக'' என்ற அசரீரி உண்டாயிற்று. வீரபத்திரரும் செற்றம் நீங்கினர். பிரமனும் மாலும் அடிபணிந்து பிழைபொறுக்க வேண்டினர்.

இவ்வாறு இருக்கும்போது பெருமான் இடபாரூடராய்த் தோன்றவே மூவரும் அடிபணிந்து வணங்கி நின்றனர். வீரபத்திரரும் மால் பிரமர் வேண்டுகோட்படி "யாகத்தில் இறந்த யாவரும் எழுக" என்ன, துயிலொழிந்து எழுவார்போல யாவரும் எழுந்தனர். தக்கனுக்கு மாத்திரம் ஆட்டுத் தலையினைப்பொருத்தி எழச்செய்தார். எழுந்த தக்கன் முதலியோர் யாவரும் பெருமானை வணங்கி நிற்குங்கால் தக்கன் "பெருமானே! யான் செய் பழி தீர அவியருந்தி யாகத்தை முடித்து இத் தலத்திலேயே இலிங்கவடிவாயெழுந்தருளி யாவருக்கும் அருள்வழங்குதல் வேண்டும. இத்தலமும் எனது பெயரால் வழங்கவேண்டும்" என்று விண்ணப்பித்தனன். பெருமானும் அவ்வாறே வரமருளி வீரபத்திரக்கடவுளை அருகிலே அமரச்செய்து தானும் இலிங்க வடிவாய் விளங்கினர்.

**நூல்கள் :**

இத்தலத்திற்கு ஒரு புராணம் உளது. அது திருப்பறியலூர்ப்புராணம் எனவழங்கும். அருளிச்செய்தவர் திருவாவடுதுறைஆதீன பின் வேலப்ப தேசிகசுவாமிகளாவார்கள். கடவுள்வாழ்த்து உள்பட பதினொரு சருக்கங்களையுடையது. 655 திருவிருத்தங்களை யுடையது. திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடப்பெற்ற பதிகங்களை யுடையது.

# திருக்கருப்பறியலூர்

# திருக்கருப்பறியலூர்

**தலப்பெயரும் சிறப்பும்:**

இத்தலம் காவிரியின் வடகரைத் தலங்களுள் ஒன்று. இத்தலத்தின் இருபக்கமும் விநாயகநதி என்ற ஒரு ஆறு ஓடுகிறது. இத்தலத்திற்கு யூதிகா வனம், கன்மநாசபுரம், ஆதித்தபுரம், திருக்கருப் பறியலூர், மேலைக்காழி எனப் பல பெயர் உள்ளன. தேவாரங்களில் பாடப்பெற்றது திருக்கருப்பறிய லூர் என்னும் பெயரே. சமயாசாரியப் பெருந்தகை யாளர்களால் பாராட்டப்படுகிறது. இத்தலத்துப் புண்ணியம் சிறிது செய்யினும் தினை பனையாகப் பெருகும்.

**மூர்த்திகள்:**

இறைவன் குற்றம் பொறுத்தநாதர். இறைவி கோல்வளைநாயகி. மற்றும் கர்ப்பஞானேசுவரர், கர்ப்பஞானபரமேசுவரி, சட்டநாதர் முதலியோர் திருவுருவங்களும் இருக்கின்றன.

**தீர்த்தங்கள்:**

விநாயக தீர்த்தம், சூரிய தீர்த்தம், வசிஷ்ட தீர்த்தம், அனும தீர்த்தம், நிம்பபுஷ்கரணி, சங்க

புஷ்கரணி, பொற்றாமரைத் தடாகம், செங்கழுநீர்த் தடாகம் என எட்டுத் தீர்த்தங்கள் உள்ளன.

**விநாயகநதி:—** சூரபன்மனுடைய கொடுமைக் கஞ்சிய இந்திரன் வேணுபுரத்து மூங்கிலாய் மறைந் திருந்தான். அப்போது இறைவனை வழிபடுவதற்காக பூந்தோட்டம் வைத்திருந்தான். இந்திரனைத்தேடித் திரிந்த சூரபன்மன் இந்திரன் இருக்குமிடம் மழை வளங்குறையாதிருக்குமென்றுணர்ந்து மேகங்களைச் சிறைப்படுத்தினன். பூங்கா வாடிற்று. இந்திரன் விநாயகப்பெருமானை வேண்ட அவர் அகத்தியர் கமண்டலநீரைப் பெருகி வரச்செய்தார். அது இத்தலத்தின் மேல்பாலும் வடபாலுமாகச் சூழ்ந்து செல்கின்றது; இது விநாயகரால் உண்டாக்கப் பெற்றதாதலின் விநாயகநதியெனப் பெயரெழுந் தது. இந்நதியில் நீராடுபவர் நூற்கடல் படிவார். பிறவிக்கடல் படியார்.

**சூரியதீர்த்தம்:—** சூரியன் தக்கன் யாகத்துச் சென்று பங்குகொண்ட பாதகத்தால் உக்கிர வீரபத்ரர் பல் உடைத்தார். அதனால் ஒளிமழுங் கிற்று. உலகு இருண்டது. இந்திரனுதியர் உன் துயர் போகவேண்டில் கருப்பறியலூரில் சென்று இறை வனை வழிபட்டுப் பல்பெற்று ஒளிபெறுக எனப் பணித்தனர். சூரியன் அவ்வாறே சென்று வழிபட் டான். பெருமான், சந்நிதியில் ஒரு புஷ்கரணியைப்

பாதாளத்திலிருந்து மேல் வரும்படியாக அழைத்து, சூரியனைப் பார்த்து நீ மூழ்குவாயாயின் உடற்பிணி நீங்கி ஒளியுறலாம் என்றனர். அவனும் அவ்வாறே செய்து வழிபட்டு நோய் தீர்ந்தான். ஆகலால் இத் தீர்த்தத்து மூழ்குவோர் அங்கமெலாங் குறைந்து அழுகு தொழுநோயராயினும் அதுநீங்கப்பெறுவர். இவ்வாறே ஏனைய தீர்த்தங்களில் மூழ்கிலும் போகம் பெறலாம். சிந்தை களித்து தீவினை நீங்கி இன்புறலாம்.

### தலப்பெருமை:

விமானத்திலேறி ஆகாயமார்க்கமாகச் செல்லுகின்ற இராவணன் திடீரென விமானம் தடைப்பட, சினந்து கீழே இறங்கினன். திருக்கருப்பறியலூர்க் கோயிலினைக் கண்டான். வணங்கினன். இத்தடை எதனல் ஏற்பட்டதென எண்ணினன். வியந்தான். குற்றம் பொறுத்த நாதரை வேண்டி உய்ந்தான். அவ்வாறே அனுமன் விசித்திராங்கதன் முதலியோரும் அகத்தியர் முதலிய மகரிஷிகளும் வணங்கி நற்பேறு பெற்றனர்.

### அன்பர்கள்:

இத்தலத்திற்கு ஞானசம்பந்தமூர்த்திகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் எழுந்தருளியுள்ளனர். அவர்கள் இயற்றிய பதிகங்கள் இத்தலப் புகழாக

உள்ளன. சம்பந்தர் பெருமான் வாக்கிலிருந்து ஊர் 'கருப்பறியலூர்' என்பதும், சுந்தரர் வாக்கிலிருந்து கோயிற் பெயர் 'கொகுடிக் கோயில்' என்பதும் அறியப்படும்.

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் 18 உள்ளன. அவை 27-ம் ஆண்டில் படியெடுக்கப் பட்டுள்ளன.



ஸ்ரீ குற்றம்பொருத்தீசுவரசுவாமி கோயில்

# திருநின்றியூர்

# திருநின்றியூர்

இத்தலம் மாயூரந் தாலூகாவில், மாயூரமிருந்து சீகாழி செல்லும் கற்பாதையில் சுமார் 6 மைல் தூரத்திலிருக்கிறது.

**பெயர்க்காரணங்கள் :**


திருமகள் வழிபட்டு நிலைபேறெய்திய தலமாதலின் திருநின்றவூர் எனப்பெயர்பெற்றது. பின்னர் வழக்காற்றில் திருநின்றியூர் என மரீஇயிற்று. அன்றிச் சோழன் ஒருவன் தினந்தோறும் வழிபட்டுவந்தான் என்றும், ஒருநாள் அவன் கொண்டுவந்த திரி நின்றுவிடவே, சிவபூசைக்கும் வழிபாட்டிற்கும் இடையூறின்றிச் சிவலிங்கத்தினின்றும் சோதிதோன்றியது என்றும், அதுகண்ட அரசன் மகிழ்ந்து, தான் சிவச்சோதியைக் காணுதற்கேற்ற வாய்ப்பினைத் தான் கொணர்ந்த திரியடைவித்ததால் திரிநின்றவூர் என வழங்கச்செய்தான் என்றும், அது பின்னர், திருநின்றவூர் ஆயிற்று என்றும் செவிவழிச் செய்தியுண்டு.

ஒருகாலத்து வரலாறுகள் உற்பத்தி செய்யப்பட்டதுண்டு. அப்போது சொற்கிடக்கைகளை வைத்துக்கொண்டே தங்கள் கற்பனைத்திறம் போனவாறெல்லாம் வரலாறு சொல்லத்தொடங்கினர்.

அந்தக்காலத்துத் திருநின்றவூர் திரிநின்றவூர் ஆகியிருக்கலாம். அன்றியும் திருநின்றவூர் திருநின்றியூர் ஆனது எங்ஙனம் என்பதும் ஆராயத்தக்கது.

திருநின்றியூர் என்பது மரூஉமொழியாயின் அதனைச் சமயகுரவர் மூவரும் எடுத்தாளமாட்டார்கள். ஒருவரேனும், ஓரிடத்திலேனும் உண்மையுருவைக் கூறிச்செல்வர். ஆதலால் திருநின்றியூர் என்பதே ஊர்ப்பெயராதல் வேண்டும் என்பது துணியப்பெறும். நின்றியூர் என்பதே ஊர்ப்பெயராகத் திரு அடைமொழியாக வந்ததே என்பதற்கு "நின்றியூரின் நிலையோர்க்கே" என்னும் சொற்றொடர்களே சான்றாகும். திருவாரூர் என்பதன்கண் திருவும், ஆரும் (பூமி) பூசித்ததலம் எனப் பொருள்காண்பதுபோல ஈண்டும் திரு (பூசித்து) நின்றவூர் என ஏன் பொருள்காணலாது எனக் கேட்கலாம். அங்கும் திரு பூசித்தமைபோல ஆர் (பூமி) பூசிக்கவில்லை. ஆரூர் என்பதற்கு பிருதுவித் தலம் என்பதே பொருள். அடைமொழி புணர்க்கப் பெற்றுத் திருவாரூர் ஆயிற்று எனலே பொருத்தம். அதுபோல நின்றியூர் என்பதே தலப்பெயர். திரு அடைமொழியே என்பது துணிபு.

'நின்றியூரின் நிலையோர்க்கே' 'நின்றியூரிற் பிச்சமுடையார்', 'நின்றியூரில் உறையும் இறை', 'நின்றியூரின் நிலையாரே' என்ற ஞானசம்பந்தர் வாக்குகளும், நிலைபேறுடையானுடைய ஊர் என்ற கருத்தையே விளக்கிச் சொற்பொருள் விரித்தல்



ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரர் ஆலயம்

என்னும் உத்திக்கு இலக்கியமாக இலங்குகின்றன. நின்றி—நிற்பவன். நில் பகுதி, த் எழுதுப்பேறு. இவினைமுதற்பொருளில் வந்தவிகுதி. அப்பர் சுவாமிகள் வாக்கும் இதற்குத் துணைசெய்யாமற் போகவில்லை. 'நின்றியூர்ப் பதியாக நிலாயவன்' என்று அவர்கள் சொற்பொருள் விரிக்கின்றார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் 'இடமாவது நம் திருநின்றியூரே' என்று இறைவனுக்கு உரிமையான தலம் என்று உரைக்கின்றார்கள். ஆதலால் நின்றியூர்-நிலைபெறுதலை உடையனாகிய இறைவன் ஊர் என்றே பொருள்படுதல் காண்க.

**ஆலய அமைப்பு:**

நாற்புறமும் அழகிய மதிலால் சூழப்பெற்று கிழக்கே இராஜகோபுர முடையதான தோரணத் திருவாயிலை உடையதாக விளங்குகிறது. இறைவன் கிழக்குமுகமாகவும், அம்மை தெற்குமுகமாகவும் விளங்குகின்றார்கள்.

இத்தலத்துத் தீர்த்தம் நீலப்பொய்கை என்று அபிதான சிந்தாமணி ஆசிரியர் குறிக்கின்றார். காரணம் 'நீலம் மலர்ப்பொய்கை நின்ற நின்றியூர்' என்ற ஞானசம்பந்தசுவாமிகள் வாக்கே யாகும். நீலமலர் என்பது பொய்கைக்கு அடையாகுமே யன்றி அதற்குப் பெயராகாமை தெளிவு. அவர் பூசலார் அவதாரத் தலம் இதுவே என்பர்.

தொண்டைநாட்டகத்ததே என்பதனைச் சேக்கிழார் பெருமான் குறிப்பித்துச் செல்கிறார்கள்.


இத்தலத்துக்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்குறுந் தொகை ஒன்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் நட்ட ராகம் தக்கேசி ஆகிய பண்களும் அமைந்துள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாக்கில் 300 வேதியர் கட்கு 360 வேலி நிலத்தையும், நின்றியூரைத் தனக்கும் அளித்துப் பக்திசெய்த பரசுராமர்க்குப் பாதங்காட்டினர் என்ற தலவரலாறு குறிப்பிக்கப் படுகிறது. (நின்றியூர், தக்கேசி 3ம் பாடல்) அடுத்த பாடலில் வருகின்ற, பசு பால் சொரிந்தாட்டிய, வரலாறும் இத்தலத்தில் நடந்திருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது.

## கல்வெட்டு

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டு ஒன்றே உள்ளது. 1921ம் ஆண்டு படிஎடுக்கப்பட்டது.

'திருபுவன சக்ரவர்த்தி ராஜ ராஜ தேவற்கு யாண்டு 15-வது கும்பரவி அட்டமி ஞாயிறு மூல நட்சத்திரம்' என்று தொடங்கி, நிகழ்ச்சி அறிய முடியாது, சிதைந்து, முடிவுறு திருக்கின்றது. (538 of 1921.)

# பேரளம்



ஸ்ரீ சுயம்புநாத சுவாமி கோயில் உள்தோற்றம்

# பேரளம்

இத்தலம் மாயூரமிருந்து திருவாரூர் செல்லும் இருப்புப்பாதையில் புகைவண்டிப் பெருநிலையமாய் விளங்குகிறது. தஞ்சைஜில்லா நன்னிலம் தாலூகாவில் உள்ளது.

சமயாசாரியர்களுடைய திருவருளுக்கும், பாடலும் பெறுவிடினும், மிகப் பழைமையானதொரு தலமாகும். கோயில்முழுதும் செங்கற் பணியாக, வெளவால்நத்தி மண்டப அமைப்பிலே இருப்பது தொன்மைக்குச் சான்றாகும்.

தலப்பெயர்கள் :

பேரள மகரிஷி என்பார் ஒருவர் வெகுகாலம் தவஞ்செய்ய, பெருமான் ரிஷபாரூடராய்த்தோன்றி காட்சி நல்க முனிவர் வரம்பலபெற்றதோடு இந்தத் தலமும் தன்னுடைய பெயரால் வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டமைபற்றிப் பேரளம் என்ற இப்பெயர் வழங்கப்பெறுகிறதென்று பெரியோர் கூறுவர்.

ஆச்சாள்புரம் கல்வெட்டில் 'குலகாலபேரளம்' என்ற ஒருசொற்றொடர் காணப்பெறுகிறது. பெரிய அளம் உப்பு விளைவயல் என்பதே ஆண்டுக் குறிக்கும் பொருளாகும். கடற்கரையிலிருந்து ஐங்காதம்

வரையில் உப்புப் படும் அளங்கள் இருத்தல் இயல் பாதலின் இத்தலமும் பேரளமாயிற்றோ என்று எண்ணக்கூடும். இது ஆய்விற்குரியது.

**கோயிலமைப்பு :**

புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் இரண்டு பர்லாங் தொலைவில் வடகிழக்கில் ஊருக்குமத்தியில் நான்குபுறங்களிலும் பெருமதிலாற் சூழப்பெற்று மேற்குமுகமான கோபுரவாயிலுடன் திருக்கோயில் அமைந்துள்ளது. இரண்டு பிராகாரங்களுண்டு. முதற் பிராகாரத்தில் ஆஸ்தானமண்டபம், யாக சாலை, பரிமார்த்த அறை இவைகளும் அம்பாளுக் குத் தனியாகக் கோயிலும், அதன் முன்பு பெரிய மண்டபங்களும், தேவஸ்தானக் காரியாலயமும் அமைந்துள்ளன.

சுவாமிகோயில் கட்டைக் கோபுர வாயிலில் மேற்குமுகமாக விநாயகரும், சுப்பிரமணியரும், குட வறையில் வடக்குமுகமாக அதிகாரநந்திகேஸ்வரரும் பிரதிட்டை ஆகியிருக்கின்றனர். சுவாமிகோயில் மேலைப்பிராகாரம்திருமாளிகைப்பத்தியில் வடபுறம் சுப்பிரமணியர், மகாலட்சுமி பிரதிட்டை ஆகியிருக் கின்றனர். வடக்குத்திருமாளிகைப்பத்தியில் சுப்பிர மணியர், உத்ஸவர், நடராஜர், சந்திரசேகரர், பரிவா ரங்கள் எழுந்தருளியாகி இருக்கின்றனர். வடக்குப் பிராகாரத்தில் கிணறும், தீர்த்தமும், சண்டிகேசுரர்

கோயிலும் கிழக்குத் திருமாளிகைப்பத்தியில் சனி பகவான், சூரியன், சந்திரன், துர்க்கையம்மன், வயிரவர் முதலிய பரிவாரங்களும், அக்கினிமூலையில் மடைப்பள்ளியும் இருக்கின்றன. கர்ப்பக்கிருகத்தில் தென்புறம் தட்சிணாமூர்த்தி பிரதிட்டையாயிருக்கிறது. தென் திருமாளிகைப்பத்தியில் சமயாசாரியர் நால்வரும் மேலைத் திருமாளிகைப்பத்தியில் விநாயகரும் அதன் கீழ்புறம் மண்டபத்தில் கிழக்குமுகமாக பேரள மகரிஷியும் பிரதிட்டை ஆகியிருக்கிறார்கள். சோமாஸ்கந்தர் கிழக்குமுகமாக எழுந்தருளியிருக்கிறார். பெருமான் மூலவிக்கிரகம் மேற்குப்பார்த்தது. அந்தராளமண்டபத்தில் நந்தி, பலிபீடம் இருக்கின்றன.

மூர்த்திகள் :

இறைவர் திருநாமம் ஸ்ரீசுயம்புநாத சுவாமி. இறைவி திருநாமம் ஸ்ரீபவானி அம்மன். மற்றும் சபாநாதர், சந்திரசேகரர், சமயாசாரியர் நால்வர் முதலிய திருவுருவங்களுமுள்ளன.

தீர்த்தங்கள் :

அக்கினிதீர்த்தம் :— இது மிகவும் சிறப்புடையது. ஆலயத்திற்குக் கீழ்பால் இருக்கிறது. சுந்தர தீர்த்தம், சூரியபுஷ்கரணிதீர்த்தம் என்னும் மற்றும் பல தீர்த்தங்களும் உள்ளன.

## தலப்பெருமை :

தவத்தின்மிக்கவரான பேரளமுனிவர் இத்தலத்தின் பன்னுள் சுயம்புநாதரையும் பவானியம்மையையும் நோக்கித் தவஞ்செய்து கலிதோஷத்தால் ஆன்மாக்களுக்கு ஏற்படும் துன்பங்கள் இந்த மூர்த்தியைத் தரிசித்தவுடன் நீங்கவும் தன்பெரால் இத்தலம் விளங்கவும் வரம்பெற்றுர். கார்ஷணுஜனி முனிவருக்கு அவர்செய்த பிரதக்ஷண நமஸ்கார பாடலிபுர புஷ்பபூஜை முதலியவைகளால் திருப்தியடைந்த சுயம்புநாதர் அவர்முன்தோன்றி சுவாமியின் கர்ப்பக்கிருகக் கல்லில் இப் பூதலத்திலுள்ள இலிங்கமூர்த்திகளது திருநாமங்கள் உச்சரிக்கச் செய்து எல்லா இலிங்க உருவங்களையும் சமஷ்டியாக சுயம்புலிங்கத்தில் ஆகர்ஷித்துத் தரிசனங்காட்டி அருளினர். அதனுல் இதற்குச் சுயம்புக்ஷேத்திரம், பாடலிவனஸ்தலம், நாமாத்திகஸ்தலம் என்னும் நாமங்கள் வழங்கிவருகின்றன.

இத்தலப்பெருமானுகிய சுயம்புநாதர் தன்னைப் பூசித்த இந்திரனுக்குப் பெறுதற்கரிய பேற்றினைக் கொடுத்தார்; சூரியனுக்கு மிகுந்த ஒளியினை அளித்தார். யாக்ஞவல்கியர் பூசித்துப் பிரமஞானத்தைப் பெற்றுர். சுக்கிராசாரியர் வழிபட்டு இறந்தவரைப் பிழைப்பிக்கும் ஆற்றலைப்பெற்றுர். மார்க்கண்டேயர் வழிபட்டு நித்தியத்துவத்தையடைந்தார். தவசிரேஷ்டரான விசுவாமித்திரர் பூசித்து அதனுல்

க்ஷத்திரிய உடலை விட்டு பிராமண்யத்தை அடைந்தார்.

**புராண வரலாறு:**

மந்தரன் என்பன் அரசகுமாரன். ஆயினும் கல்வியறிவு இல்லாதவன். பிறவுயிர்களுக்கு ஒரு போதும் நன்மை செய்யாதவன். தீமை செய்வதையே பொழுதுபோக்காகக் கொண்டவன். காம வலையில் சிக்குண்டவன். இவனது தீய காரியங்களைக் கண்ட அமைச்சர்கள் பல்லாற்றாலும் திருத்த முயன்றார்கள். பயன் பெற்றார்களில்லை. அப்போது அரசன் இறக்கவே அவனது குமாரனாகிய இவன் பட்டத்திற்கு வரவேண்டியவனாயினான். உடன்பாடில்லாத அமைச்சர்கள் இவன் அரசாளின் அரசு கேடுறும் என்று அஞ்சி இவனைத் தந்திரத்தாற் கொலைசெய்ய எண்ணினார்கள். அஃதறிந்த மந்தரன் யாரும் அறியாமல் தன் நகரைவிட்டு நீங்கி வேறு தேசம் சென்றான். சென்ற இடங்களிலும் கொலை, களவு, காமம் முதலிய தீய செயல்களையே செய்து வந்தான். ஆயினும் ஏதோ முற்பிறவியிற் செய்த சிறிது புண்ணியத்தினால் பேரளமாகிய இத்தலத்தை யடைந்தான். அடைந்தவுடனே அவனது மனம் செம்மையுற்றது; ஒரு நிலைப்பட்டது. தவஞ் செய்துகொண்டிருந்த பேரள முனிவரை வணங்கி, அவர் அனுமதிப்படி தன் வாலாறு முழுவதையும் விரித்துக்கூறினான்.

அதுகேட்ட பேரள முனிவர் "மந்தர! நீ செய்த பாவங்களைக் கேட்டவுடனே மனம் நடுங்குகிறது. பெறுதற்கரிய பிறவியாகிய மானுடப் பிறவியை நீ பெற்றும் பெற்றதாலாகிய பயனைப் பெருமல் அதற்கு மாருக பாபச் செயல்களையே செய்துவந்திருக்கிருய். அதனுல் அநேக கோடி கற்பங்கள் நரகிடைவீழ்ந்து துன்புறப்போகின்ருய். அவ்வாறு துன்புருமல் இருத்தற்கு ஓர் உபாயம் உண்டு. உன்னிடத்து ஏற்பட்ட கருணையால் சொல்லுகின்றேன். இங்கு உள்ள இலிங்கம் தானுகவே தோன்றியதால் சுயம்புலிங்கமெனப் படும். இதனைத் தரிசித்த மாத்திரையே முத்தி யெய்தலாம். ஆதலால் நீ இங்குள்ள அக்னி தீர்த்தத்தில் மூழ்கி ஸ்ரீ சுயம்புநாதரை மெய்யன்போடு வழிபடுவாயாக. அவ்வாறு செய்யின் உன் பாபம் நீங்கப்பெறும் என்று அருளிச்செய்தார். மந்தரனும் பேரளர் ஆணையின்வண்ணம் நாடோறும் வழிபாடு செய்து பாவம் நீங்கப்பெற்று முத்தியடைந்தான்:

திராவிட தேசத்துப் பிராமணன் ஒருவன் தீய ஒழுக்கங்களையே மேற்கொண்டு தன் குல ஒழுக்கத்தை முழுதும் கைவிட்டு உயிர்களுக்குத் தீமை செய்துவந்தான். ஒருநாள் வழி நடந்த வருத்தத்தினுல் களைப்புற்ற ஒரு முனிவர் பிராமணனிடம் வர, ஏதோ இவன் முன்செய்த புண்ணியத்தினுல் முறைப்படி அவரை வழிபட்டு "அடியேனுக்கு அநுக்கிரகம் செய்யவேண்டும்" என்று விண்ணப்

பித்தான். அதனைச் செவியேற்ற முனிவர் அந்தணனே! சுயம்புக்ஷேத்திரமாகிய பேரளம்சென்று தீர்த்தத்தில் மூழ்கிச் சுயம்புலிங்கத்தை வழிபடுக என்றுகூற அந்தணனும் அவ்வாறே இங்குவந்து நீராடி வழிபட்டுக் கொலைப்பாதகம் நீங்கப்பெற்று பிரமத கணங்களுக்கு அதிபதியா யிருத்தலைப் பெற்றான். பின்னர் அவன் பல முறையும் வழிபட்டு முடிவில் சிவலோகத்தையுமடைந்தான்.

வங்கதேசத்துப் பிராமணன் ஒருவன் பிறர் பொருளைக் களவுசெய்தும், நல்லோர்களைக் கொன்றும் உயிர் வாழ்ந்து வந்தான். ஒருநாள் இத்தலத்தில் வாழ்ந்துவந்த அந்தணன் கங்கை நீராட விருப்புற்றுச் செல்லுங்கால் வங்க தேசத்தை அடைந்ததும், திருவருள் வசத்தால் கொடியவனான அப் பிராமணன் வீட்டு வாசலையடைந்து பிச்சை வேண்டினான். அந்தணனுடைய பசிப்பிணியைப் பார்த்து வருந்தி நீ யாரென வினவ, அந்தணன் தன் வரலாறு கூறும் வாயிலாக இத்தலப் பெருமை முழுவதும் அறிவித்தான். பின்னர் பிராமணன் அன்னமளித்து இத்தலப் பெருமையைக்கேட்ட அப்புண்ணியத்தினால் சிவலோகமடைந்தான்.

கனகலன் என்னும் அரசன் பலநாள் நடுவு நிலை தவறாது, செங்கோல் செலுத்தி, மூப்படைந்ததும் மனைவியோடும் காடுசென்று தவஞ்செய்து வந்தான். அப்பொழுது ஒருநாள் தனது மனைவி

யிறக்க அவளது மரண வேதனையைக் கண்டு அஞ்சி மிருத்யுஞ்சய மகாமந்திரத்தால் மகாதேவனைப் பூசித்து மரணபயம் நீங்கி நித்யத்துவம் அடையலாம் என்று மன உறுதிகொண்டு, பற்பல தலங்களையடைந்து அங்காங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கிப் பெருமானை வழிபட்டுக்கொண்டுவந்தான்; எண்ணிய எண்ணியாங்கு எய்தப் பெற்றான். முடிவில் இத்தலத்துக்கு வந்து, பேரள முனிவரை வணங்கி, அவரால் இத்தலப் பெருமையை அறிந்து அக்னி தீர்த்தத்தில் மூழ்கிச் சுயம்புநாதப் பெருமானை நாடோறும் விதிப்படி வழிபாடு செய்துவந்தான்: வழிபாட்டிற்கு உகந்த பெருமான் ஒருநாள் காட்சியளித்து விரும்பிய வரங்கள் அனைத்தையும் கொடுத்து மறைந்தருளினர்.

வழிபட்டோர்கள்:

விட்டுணு, பிரமன், சூரியன், தேவேந்திரன், பேரள முனிவர், யாக்ஞவல்கியர், சுக்ராசாரியார், மார்க்கண்டேயர், வாலகில்யர்கள், விசுவாமித்ரர், கனகலர், மந்தரன் முதலிய பல்லோர் இத்தலப் பெருமானை வழிபட்டு அருள் பெற்றுள்ளார்கள்.

# திருக்கற்குடி

# திருக்கற்குடி

காவிரி வளஞ் செய்யும் புனலுடைய சோழநாட்டிலே திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 3 கல் தொலைவில் இத்தலம் இருக்கிறது.

இந்தத் தலத்திற்கு உய்யக்கொண்டான்மலை உய்யக்கொண்டீச்சரம் எனப் புராண இலக்கியங்களில் பெயர் வழங்குகின்றன. கல்வெட்டுக்களில் இராஜாஸ்ரய சதுர்வேதி மங்கலத்து நந்திவர்ம மங்கலம் என்றுவழங்குகின்றது. தேவாரம் திருக்கற்குடி என்று அழைக்கின்றது. கற்குடி என்பதற்கு இறைவன் கல்லைக் குடியாகக்கொண்ட இடம் என்பது பொருள்.

இறைவன் கல்லின் சாரத்தைக் குடித்து விட்டதால் கற்குடியாயிற்று என்று செவிவழிச் செய்தி வழங்குகிறது. ஆன்மாக்களை உய்யக் கொள்வதற்கு எழுந்தருளிய பெருமானின் இருப்பிடமாகலின் உய்யக்கொண்டான் திருமலை எனப்பெயர் பெறும். நந்திவர்மபல்லவனால் திருப்பணி செய்யப்பெற்றமையின் நந்திவர்மமங்கலம் என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

**ஆலய அமைப்பு:**

இத்தலத்துள்ள கோயில், பாறையில் இருக்கிறது. அதன் உயரம் சுமார் 50 அடி. கோயிலை

யடுத்து வட்டமான மதிலும், வெளியே சதுரமான பெரிய மதிலும் உள்ளன. கோயிலின் பரப்பு கீழ் மேல் முந்நூறடியும் தென்வடலில் அறுநூறடியும் அமைந்தது. மேற்கு நோக்கிய சந்நிதி. அம்மன் சந்நிதிகள் இரண்டு உள்ளன. திருவீதியோடு ஐந்து பிராகாரங்கள் உள்ளன.

பயிர்க்காலங்களில் கண்களுக்கெட்டியவரையில் காற்றலைப்புண்ட பசும் பயிரின் நடுவிலே விளங்கும் இம்மலை நீலக்கடலின் நடுவேவிளங்கும் மரக்கலத் தோற்றத்தை மனத்திலாக்கும்.

மூர்த்திகள்:

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு உச்சிநாதர், முத்தீசர், கர்ப்பகநாதர், உச்சீவநாதசுவாமி, உய்யக்கொண்ட நாயனர், விழுமியார், ஆள்வார் விழுமியதேவர், விழுமியநாயனர் என்னும் திருநாமங்கள் கல்வெட்டுக்களாலும் புராணங்களாலும் பேசப்படுகின்றன. அம்மை திருப்பெயர் அஞ்சனட்சி.

இறைவன் தானே தோன்றியமையின் (உளி படாது) சுயம்புமூர்த்தி. மக்களுடைய புருவமத்தியத்தில் விளங்குவதுபோல மலையின் உச்சியில் விளங்குவதால் உச்சிநாதர் என்ற இப்பெயர் எய்தினர்.

கற்பகநாதர்:--விரும்பி வழிபடுவோர் எண்ணிய எல்லாவற்றையும் ஈடேற்றுவதால் இப்பெயர் வந்தது.

உய்யக்கொண்ட நாயனர் முதலிய பெயர்கள் ஆன்மாக்களுடைய இருவினைக்கு ஏற்ப அருள் வழங்கி ஆட்கொள்ளுகின்ற தன்மையால் வந்தன வாகும், சிறந்த பொருள்கள் எல்லாவற்றினும் சிறந்ததாயிருத்தலின் விழுமியாரெனக் கல்வெட்டுக் கருதிற்றுப்போலும்.

அம்மை:—ஒரு அம்மை மேற்குநோக்கி எழுந்தருளியிருக்கின்ருர். அவரது இடதுகரத்திலிருக்கிற நீலப்பூவின் இதழ் ஒன்று உடைபட்டமையின் பிற்காலத்துப் புது அம்மையைக் கிழக்குநோக்கிய சந்நிதியாகப் பிரதிட்டைசெய்தனர்போலும். பின்னர், பழைய அம்மனை அப்புறப்படுத்த முயன்றபோது அம்மை, கோயிலதிகாரி கனவிற்ருேன்றி, அங்கேயே அமைக்கும்படி ஆணைதந்தனர். அவ்வாறே செய்து இரண்டு அம்மைக்கும் நாள்வழிபாடு செய்து வருகின்றனர்.

**தீர்த்தங்கள்:**

இங்குப் பொன்னெளி ஓடை முதலிய ஐந்து தீர்த்தங்கள் இருக்கின்றன.

பொன்னெளி ஓடை:— இது கோயிலுக்குத் தெற்கே 3 பர்லாங்கு தொலைவில் இருக்கிறது. எப்

போதும் ஊறிக்கொண்டேயிருக்கும் இயற்கை யூற்று. இப்போது சிறிய வாய்க்காலைப் போன்றுள்ளது. இது பல நோய்களைத் தீர்க்கவல்லது.

குடமுருட்டி:—கோயிலின் கீழ்த்திசையில் ஒரு பர்லாங்கு தூரத்தில் தெற்கு வடக்காக ஓடும் நதி. இது தஞ்சை ஜில்லாவில் ஓடும் குடமுருட்டி அன்று. உய்யக்கொண்டாறு, சர்ப்பநதி என்று பழைய இலக்கியங்கள் அழைக்கின்றன. கல்வெட்டுக்களில் வயிரமேகவாய்க்கால் என்று குறிப்பிடுவது இதனையே போலும்.

ஞானவாவி:— கோயிலுக்குத் தெற்கே நான்காம் பிராகாரத்திலுள்ள ஒரு சிறு தீர்த்தம். முத்தி தீர்த்தம் எனவும் வழங்கும். இதன் பக்கத்திலுள்ள மண்டபத்தில் அறுமுகக்கடவுள் எழுந்தருளியிருக்கிறார். தம்மை அர்ச்சித்து வழிபட்ட அறுமுகக் கடவுளுக்கு இறைவன் ஆறுமுகங்களின் தத்துவங்களையும் உபதேசித்ததாக ஐதிகம் வழங்குகிறது. வசந்தமண்டபமும் இதுவே.

எண்கோணக்கிணறு:--மூன்றும் பிராகாரத்தில் வடக்கே இருக்கிறது. இதனமைப்பைக் கொண்டே இப்பெயர் வழங்குகிறது.

நாற்கோணக்கிணறு:— கோயிலுக்குத் தென் கிழக்கில் மூன்றும் பிராகாரத்திலுள்ளது. இதிலிருந்தே திருமேனிக்கு முழுக்காட்டத் திருமஞ்சனம் எடுக்கப்படுகிறது.

சுற்றுக்கோயில்கள்:

ஆளுடையார்கோயில்:— இது கரன் பூசித்த தலம். கோயிலுக்கு மேற்புறத்திலுள்ளது.

இடர்தீர்த்தவர் கோயில்:— இது இரண்டாம் பிராகாரத்திலிருக்கிறது. இதைப்பற்றிய வரலாறென்றும் தெரியவில்லை.

புராணவரலாறு:

இத்தலத்திற்கு அச்சில் புராணமில்லை எனினும் சில வரலாறுகள் கர்ணபரம்பரையாகச் சொல்லப்படுகின்றன. அவைகளில் சுருக்கம் இங்குத் தரப்படுகின்றன.

மார்க்கண்டர்:— மிருகண்டு முனிவர் முற்கல முனிவரின் தவப்புதல்வியாகிய மருந்துவதியென்னும் கன்னிகையை மணந்து நெடுங்காலம் புத்திரப்பேறின்மையால் காசித்தலத்தை யடைந்து மணிகர்ணிகையில் நீராடிச் சிவபெருமானை நோக்கிப் புத்திரப்பேற்றினை யவாவித் தவஞ்செய்தார். சிவபெருமான் பிரத்தியக்ஷமாகி "துர்க்குணம், அங்கஹீனம் இவற்றோடுகூடி, நூறு வயது வாழும் புதல்வன் வேண்டுமா? அல்லது அழகு, அன்பு, நற்குண நற்செய்கை முதலியவற்றைப்பெற்றுப் பதினாறுவயது ஜீவித்திருக்கும் மைந்தன்வேண்டுமா?" எனக்கேட்க, முனிவன் "வயது குறைந்து வாழ்வாயினும் சற்புத்திரனையே விரும்புகிறேன்" என்று

விண்ணப்பிக்க, அவ்வாறேவரமளித்துப் பெருமான் மறையலாயினர். பிறகு சிறிதுநாளில் முனிவர் மனைவி கருப்பமுற்று நல்ல சுப முகூர்த்தத்தில் ஓர் மைந்தனைப் பெற்றெடுத்தனள். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். தேவதுந்துபி முதலியன முழங்கின. பிரமன் அச்சிறுவனுக்கு மார்க்கண்ட னென நாமகரணம் செய்தனன். மார்க்கண்டேயர் வேதம், ஆகமம் முதலிய நூல்களில் தேர்ந்து சிவ பெருமானே உண்மைப் பொருளென்றுணர்ந்து, சிவபக்தியுஞ் சிவனடியாரிடத்தன்பும் அதிகரித்து விளங்கினர்.

மார்க்கண்டருக்கு வயது பதினைந்தாகவே தாய் தந்தையர் அவரைப்பற்றிக் கவலைகொண்டனர். அதனையுணர்ந்த மார்க்கண்டேயர் தந்தையைக் கேட்டுக் காரணமறிந்து "எந்தையே சிவபெருமா னது பேரருளால் சிரஞ்சீவியாகின்றேன். அஞ்ச வேண்டா" என்று கூறி விடைபெற்றுக்கொண்டு, காசிமுதல் தெற்குநோக்கி ஒவ்வொரு க்ஷேத்திரத் திற்குஞ்சென்று சிவபெருமானை வழிபட்டுக்கொண்டு வந்தார்.

வழியில் இத்தலத்திற்கு வந்து பொன்னொளி நீரோடையில் ஸ்நானம்செய்து அனுஷ்டானங்களை முடித்துச், சிவபெருமானைப் பூசிக்க மாமலை யடைந்தார். மாமலையைச் சுற்றிலும் சில முனிவர் கள் தவமியற்றிக் கொண்டிருத்தலைக் கண்டார். அவர்களெல்லாரும் சிவயோகத்தி லிருந்துகொண்

டிருந்தார்கள். அவர்களை வணங்கிக்கொண்டே மாமலையின் மீதிலிருக்கும் மாதேவனை நோக்கிச் சென்றார். உபமன்யு முனிவரையும் நாரத முனிவரையும் கண்டார். அவர்களிடம் அணுகி அன்புடன் அடிபணிந்து அநுக்கிரஹம்பெற்று, மூலப் பெருமானைநாடி, திரிகரணசுத்தியுடன் அருச்சித்து, ஆராதித்துக் கைகூப்பிச் சிவத்தியான நிலையை அடைந்தார்.

இவர் இப்படியிருக்கக் கயிலைமலையில் சிவபெருமானை உமையவள் நோக்கி, "பெரும! பாலன் மார்க்கண்டேயன் உம்மை மெய்யாய் நம்பிப் பூசிக்கின்றான். அவனுக்கு அருள்புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தனள். சிவபெருமான் உமாதேவியுடன் திருக்கற்குடிமாமலையிலுள்ள இலிங்கமூர்த்தியினின்றும் தோன்றி மார்க்கண்டேயரைப் பார்த்து, "மார்க்கண்ட! உன் மெய்யன்பையும், அருச்சனையையும் மெச்சினோம். யாதுவரம் வேண்டும்" என்றார். மார்க்கண்டேயர் உமேசரைக்கண்டு ஆனந்தக்கண்ணீர் பெருக்கி "ஒருமையுடன் திருவடி நிழலில் ஆருயிரைச் சமர்ப்பித்தேன். தங்களது மீளா அடிமையைச் சிரஞ்சீவியாய் ஆட்கொள்ள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் "பெரும் பாலனே! உனக்கு உயிரும் அளித்தோம். சிரஞ்சீவியாகுக. இயமபயம் நீக்கி உன்னை ஆட்கொள்வோம்" என்று அநுக்கிரகம்செய்து மறைந்தருளினர்.

இவ்வைபவத்தினை நெடுநாளாய்க் காணத் தவம் செய்துகொண்டிருந்த ரிஷிகளெல்லாம் நிஷ்டை நீங்கிப், பக்தியுடன் சிவபெருமானைத் துதி செய்து வணங்கினார்கள். சிவபெருமான் முனிவர்களை நோக்கி உங்கள் கோரிக்கை யாது என்றார். முனிவர்கள் "தேவாதிதேவா! எந்த நியம நெறிகளால் உலகம் விளங்குகின்றதோ அந்த விபரத்தை அடியேங்களுக்கு அனுக்கிரகிக்கவேண்டும்" என்றார்கள். சிவபெருமான் தெற்கு முகமாய் எழுந்தருளியிருந்து விழுமியநூலை விளக்கி, வியனுலகேழும் விளங்கும் விவரத்தை எடுத்துக்கூறி மறைந்தருளினார்.

**கரன் வழிபட்டது:**—விச்சிரவசுவுக்குச் சாகையிடத்துப் பிறந்த மூன்று புதல்வர்களுள் மூத்தவன் இவன். சகோதரர் தூஷணன், திரிசிரன் என்போராவர். இவர்கள் இராவணனுடைய சகோதரர்கள் கரன் ஜனஸ்தானத்தில் சேனதிபதியாயிருந்தவன். திரிசிரன் திருச்சியில் அரசாண்டபோது இவன் இத்தலத் திறைவனைப் பூசித்து வழிபட்டதோடல்லாமல் தனிக்கோயில் அமைத்தும் வழிபட்டான். இது ஆலயத்திற்கு மேல்புறம் ஆளுடையார் கோயில் எனவழங்கி வருகிறது.

**ஈழநாட்டரசன் வழிபட்டது:**— ஈழநாட்டரசன் ஒருவன் இத்தலத்துக்கு வந்து உச்சிக் காலத்தில் இறைவனை வழிபட்டுப் பலபேறுகளைப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

**சர்ப்பநதி வரலாறு:—** தஞ்சை மன்னன் ஒருவன் தன் நாட்டில் தண்ணீரில்லாமல் மக்கள் வருந்தவே தன் குல தெய்வத்தைப் பிரார்த்திக்க, அத்தெய்வம் கனவில் தெரிவித்தபடி அரசன் திருச்சிக்கு மேற்கில் காவிரியிலிருந்து ஓர் கிளை நதியை வெட்டுவித்து அதிலிருந்து நீர்கொண்டுவரச்செய்தான். இந்நதி திருக்கற்குடியாகிய இத்தலத்தின் பக்கம் வந்ததும் நீர் மறைந்துபோயிற்று. அரசன் இத்தலத்துப் பெருமானைப் பிரார்த்திக்க நதியில் மீண்டும் நீர்பெருகி ஓடிச் செல்லலாயிற்று. இந்நதி தஞ்சை ஜில்லா வரையில் சர்ப்பம்போல் வளைந்து வளைந்து சென்றதாகவும், நாளடைவில் பிற்பகுதி மறைந்து திருச்சி ஜில்லாவரையில்நின்றுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

**சுற்றுத்தலங்கள்:**

புத்தூர் குடுமியாயம்மன் கோயிலும், மேற்கில் நாச்சிக்குரிச்சி மல்லியம்பத்து முதலிய கிராமங்களும் வடக்கே பாண்டுமங்கலமும் இருக்கின்றன. இத்தலத்துக்கு மேற்கே 4 மைல் தொலைவில் வயலூரில் முருகன் எழுந்தருளியிருக்கிறார். சிவகுருநாதனாக இருந்து சிவபெருமானுக்கு உபதேசித்ததும் அருணகிரிநாதருக்கு அருள்புரிந்ததுமாகிய பெருமையையுடையது இத்தலம்.

**அன்பர்கள்:**

**மார்க்கண்டேயர்:—** இவருடையவரலாறு எல்லாருமறிந்த ஒன்று. இவருடைய சிலை நடராஜர்

சந்நிதிக்கு எதிரிலுள்ள மண்டபத்தில் உத்தரப் பத்தியில் பொறிக்கப் பெற்றுள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளும் "வருங்காலனுயிரை மடியத்திருமெல் விரலால் பெரும்பாலன்றனக்காய் பிரிவித்த பெருந் தகையே" என்று பேசுவதால் இவ்வரலாறு துணியப்பெறும்.

திருஞானசம்பந்தர்—திருமழபாடிமுதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருக்கற்குடியை அடைந்தார்கள். அப்போது வேண்டுதல் வேண்டாமையில்லாதானாகிய விண்ணவர் பெருமான் விருப்பு வெறுப்பற்ற ஞானிகள் வாழுகின்ற கற்குடியில் இருப்பதைக் கண்டார்கள். ஒரு பெண்ணைப் பாகத்தில் வைத்து, ஒருபெண்ணைச் சடையில் வைத்த சதுரர் முப்புரிநூலைமட்டும் அணிந்து பிரமசாரியாய் இருப்பதைக் கண்டு வியந்தார்கள். வியப்பு பதிகமாயிற்று. இவர்கள் பாடியருளிய பதிகம் ஒன்று.

திருநாவுக்கரசுசுவாமிகள்:— சுவாமிகள் திருப்பைஞ்ஞீலியை வணங்கிக்கொண்டு கற்குடிக்கு எழுந்தருளினார்கள். "கற்குடியைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன்" என்று திருத்தாண்டகம் பாடினார்கள். இவர்கள் பாடியருளிய தாண்டகப் பதிகம் ஒன்று.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்:— திருச்சிராப்பள்ளியை வணங்கி வழிச்செல்லுகின்றவர்கள் கற்குடியை யடைந்தார்கள். "விடையாருங் கொடி

யாய்'' என்ற பதிகத்தை அருளிச்செய்தார்கள். பாடல்கள்தோறும் 'அடியேனையும் அஞ்சலென்னே' என்று அருளிச்செய்கின்றார்கள்.

அருணகிரிநாதர்:— வயலூர் முருகனிடத்து அருளுபதேசங்கேட்ட அருணகிரிநாத சுவாமிகள் கற்குடியுடைய முருகப்பெருமானை நோக்கி 'தோத்தரிக்கத்தக்க கருத்தைக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டு' மென்று வேண்டுகின்றார்கள்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:— திரிசிரபுரம் மகா வித்துவான் என்ற தமிழ்நாட்டுப் பாராட்டுக் குரியவர்கள். பிற்காலக் கம்பர் என்று தமிழ்நாடு பேசும். இவர்கள் இயற்றிய நூல்களுள் கற்குடிமாமலைமாலை யென்பதும் ஒன்று. மிகக் கனிந்த தோத்திரப் பிரபந்தம் இது. 100 பாடல்களாலாயது.

இவையன்றித் தனிப்பாடல்கள் பல இத்தலத்தைப் பற்றி வழங்குகின்றன. அவைகளைத் தனிப் பாடற்றிரட்டில் காணலாம். ஒரு பாடல் மட்டும் இங்குத்தரப்படுகிறது.

"எத்தி யலவன் இடங்கெடுத்த ஆராலைக்
கொத்தி முகங்கெடுத்த கூன் கொக்குச்—சுத்த
கழையேற்றம் போன்றொளிரும் கற்குடியே கங்கை
உழையேற்ற செஞ்சடையா னூர்.

## கல்வெட்டுக்கள்:

### தலம்:

சம்பந்தசுவாமிகளும் அப்பர் சுவாமிகளும் 'கற்குடி மாமலையாரே' என்றும், 'கற்குடியில் விழுமியானே' யென்றும் கூறுவதால் தலத்தின் பெயர் கற்குடியென்று அறியப்படும். பெரியபுராணமும் இப்பெயராலேயே வழங்குகிறது.

பல்லவராட்சியில் நந்திவர்மப் பல்லவன் இத்தலத்தைப் புதிதாகக் கண்டானாதலின் தன்பெயரைச் சூட்டி நந்திவர்மமங்கலம் என்றழைத்தான். பின்பு முதல் இராஜராஜன் பத்தாவது யாண்டில் இராஜாஸ்ரய சதுர்வேதி மங்கலமென்று மாற்றப்பட்டது (464—468).

### இடம்:

இத்தலம் பாண்டிய குலாசனி வளநாட்டைச் சேர்ந்தது என்றும், தென்கரை கேரளாந்தக வளநாட்டைச் சேர்ந்தது என்றும், இராஜகம்பீர வளநாட்டைச் சேர்ந்ததென்றும், இராஜமகேந்திர வளநாட்டைச் சேர்ந்ததென்றும் வெவ்வேறு காலங்களில் வழங்கப்பெற்றது. இதனால் இத்தலம் ஒரு எல்லைக் கோட்டில் இருந்ததனால் இப்படியும் அப்படியும் ஒதுக்கப்பட்டு பலகாலங்களில் பல வளநாட்டைச் சேர்ந்ததாக ஆயிற்றென்று எண்ணக்கூடும். இதனைப் பாண்டியகுலவளநாட்டு ராஜாஸ்ரய சதுர்

வேதிமங்கலத்து திருக்கற்குடி விழுமியாற்கு என வரும் (455 of 1908) ராஜராஜன் கல்வெட்டும், ராஜ மகேந்திர வளநாட்டு உறையூர்க் கூற்றத்துப் பிரம தேயமான ராஜாஸ்ரய சதுர்வேதிமங்கலத்துத் திருக்கற்குடியெனவரும் குலோத்துங்கன் 30ம்யாண் டுக் கல்வெட்டும் (460 of 1908), கேரளாந்தக வள நாட்டுஉறையூர்க் கூற்றத்துத் திருக்கற்குடி யென வரும் I ம் இராஜேந்திரனது கல்வெட்டும், (461 of 1908) இராஜகம்பீர வளநாட்டுப் பிரமதேயமான உய்யக்கொண்டான்திருமலையெனவரும் மல்லிகார்ச் சுனமகாராஜர் காலத்துக் கல்வெட்டும் (474of1908) கோநேரின்மைகொண்டான் காலத்துக்கல்வெட்டும் அறிவிக்கின்றன. இவற்றிலிருந்து வடநாட்டுப்பாகு பாடு மாறியநிலை நன்கு அறியப்படும்.

**இறைவன்பெயர்:—** தேவாரத்து அப்பர்சுவாமி கள் கற்குடியில் விழுமியானென்றும், கற்பகம் என் றும் குறிப்பிடுகிறார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'கற்பகமே திருக்கற்குடி மன்னும்' என்று சொல்வ தாலும், 'திருக்கற்குடிக்கற்பகம்' என இறுதிப்பாட் டில் கூறுவதாலும் கற்பகம், விழுமியான் என்ற பெயர்கள் தேவாரக்காலத்திலேயே ஆட்சி பெற் றன. அவற்றையே கல்வெட்டுக்களும் கற்குடி விழுமியான் (455 of 1908), உய்யக்கொண்டநாயனார் (457 of 1908), திருக்கற்குடி பரமேஸ்வரர் (458 of 1908), விழுமியநாயனார் (474 of 1908), விழுமியதேவர் (476 of 1908) என்ற பெயர்கள் வழங்கிவந்தன.

ஆறுகள்:

செம்பியன்மாதேவிசெய்த தருமத்தில் வயிர மேகன் வாய்க்கால் என்ற ஒன்று குறிக்கப்படுகிறது. வயிரமேகன் என்பது மூன்றாவது நந்தி வர்மனுக்குப் பெயர். ஆதலால் அது பல்லவராட்சிக் காலத்து வழங்கிய பெயராகும். இப்போது உய்யக் கொண்டான் வாய்க்கால் என்றும், குடமுருட்டி யென்றும் கூறப்படுகின்றது. (458 of 1908). இன்னும் நெற்குன்றம், அபிமானராமம், தறிளபந்தம். முருகநல்லூர் முதலிய கிராமப் பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன.

பராந்தகன் I: கி. பி. 907—947.

ஆட்சி 2ம் ஆண்டில் இருங்கோளப்பனை புகல் விப்ரகண்டன் அவனிவல்லான் ஒரு விளக்குக்காக 96 ஆடுகளைக்கோயிலுக்குக் கொடுத்தான் (472-1908). கிருஷ்ணசாஸ்திரிகள் இக்கல்வெட்டு கொண்டவன் IIம் பராந்தகன் என்பார்.

யாண்டு 10வதில் உரத்தூர்க் கூற்றத்து தென்கரை வீரநாராயணன் செம்பியன்மாராயனை கொடும்பாலூர் வீரசோழ இருங்கோவேளாரின் அடியான் கோயிலுக்கு 2 விளக்கிட 140 ஆடுகளைக் கொடுத்தான். இக்கல்வெட்டு பரகேசரிவர்மற்கு 10ம் ஆண்டில் என்று தொடங்குகிறது. ஆதலால் அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் முதற் பராந்தகனையே குறிக்குமென்கிறார்கள். இதில் குறிக்கப்

பட்ட வீரசோழ இருங்கோவேள் என்பவனைப்பற்றி திருச்செந்துறை 323 of 1903 கல்வெட்டு பரகேசரி வர்மற்கு 23ம் ஆண்டில் வீரசோழ இருங்கோவான ஆதித்தன் திருவொற்றியூரடிகள் தன்மணத்தை முன்னிட்டு நிலம் வழங்கினன் என்றசெய்தி காணப் படுகிறது. அதில் முதற் பராந்தகனைப்பற்றி இவனே குறிப்பிடுகிறான். வீரசோழன் என்ற பட்டம் பெற்றமையும் அவனால் குறிக்கப்படுகிறது. ஆதலால் பரகேசரிவர்மன் என்பது ஈண்டு முதற் பராந்தகனையே குறிப்பதாகும் (470 of 1908).

34ம் ஆண்டில் பராந்தகமாதேவ அடிகளா ராகிய கண்டராதித்த சோழ மன்னரின் அரசியார் உய்யக்கொண்டான் விழுமியாருக்கு ஒருவிளக்களித் தாள் (96 of 1892).

பராந்தகன் மாதேவ அடிகளாராகிய செம்பி யன்மாதேவியார் திருக்கற்குடிப் பரமேசுரருக்குப் பூசைக்கு நிலம் விட்டார். நிலத்திற்கு எல்லை கூறும் பொழுது வைரமேகன் வாய்க்காலுக்குத் தெற்கில் என்ற குறிப்புக் காணப்படுகிறது.

உத்தம சோழன்: கி. பி. 979.

பரகேசரி வர்மனான உத்தமசோழனால் விழுமி யாருக்கு சகம் 901-ல் கலி 4080-ல் பூசைக்கு நிலம் வழங்கப்பெற்றது.

இராஜராஜன் I: கி. பி. 985—1013.

27-ம் ஆண்டு ஆட்சியில் I இராஜராஜ ராஜ கேசரி வர்மனன இராஜராஜன் கற்குடி விழுமி யாருக்கு அவன் அரசியாய நக்கனருண்மொழி யாகிய பிராட்டிமாதேவியார் ஒரு விளக்கிட 96 ஆடுகள் அளித்தார்.

29-ம் ஆண்டில் ஜயங்கொண்ட சோழம்! என் னும் பெயருடைய பட்டமொன்று விழுமியாருக்கு வழங்கப்பட்டது. அதேயாண்டில் கோனுட்டு உறை யூர்க் கூற்றத்துவாசி ஒருவரால் ஒரு விளக்கிற்கு 90 ஆடுகள் விடப்பட்டன.

இவனுடைய 10-ம் ஆண்டுக் கல்வெட்டொன்று சிதைந்துவிட்டது (95 of 1892.)

தென்கரை கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து இராஜாஸ்ரய சதுர்வேதி மங்கலத்து உய்யக்கொண்ட நாயனுர் கோயில் விழாவிற்காகப் பொன்னளித்தான். (457 of 1908·)

10-ம் ஆண்டில் திருக்கற்குடி ஆழ்வார் விழுமி யாருக்கு அரசியார் பராந்தகன் மாதேவ அடிகளார் செம்பியன் மாதேவியார் கண்டன் மதுராந்தகனுன உத்தமசோழன் பிறப்பிற்காக பொன்னும் முத்தும் மூடியும் இரத்தினங்களும் பணமும் அளித்தார். (454 of 1908.)

**பரகேசரி இராஜேந்திரன் I: கி. பி. 1012—1044.**

3-ம் ஆண்டில் விழுமியார் கோயில் குத்தகைதார்கள் சரிவர கோயில் குத்தகைகளை அளக்காமையால் பாலையூருடையானை திருமந்திர ஓலை நாயகம் அரசன் உத்தரவுப்படியே குத்தகைகளை மாற்றி நிலத்தை அளந்து ஒப்படிசெய்தான். (163 of 1908.)

10ம் ஆண்டில் கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்துத் திருக்கற்குடி விழுமியாருக்கு விளக்கிட 96 ஆடுகளை அளித்தான். (461 of 1908.)

தன் பிறந்தநாளாகிய திருவாதிரைத்திருநாளில் விழுமியாருக்கும் மூத்த பிள்ளையாருக்கும் திருமஞ்சனமாட்ட ஆண்டுதோறும் நெல்லளக்க ஏற்பாடு செய்தான். (464 of 1908).

12ம் ஆண்டில் அருமொழித்தேவ வளநாட்டு புலியூர்க் கூற்றத்து முருகநல்லூரிலுறையும் ஒருவரால் தெய்வத்திருக்கோயில் பணியாளருக்கு உணவளிக்க நிலம் விடப்பட்டது. (467 of 1908)

**இராஜகேசரி வீரராஜேந்திரன்: கி. பி. 1064—1070.**

2ம் ஆண்டில் விழுமிய தேவர்க்கு மூன்று விளக்கிட ராஜாஸ்ரய சதுர்வேதிமங்கலத்து, பிராம்ஹணி ஒருவனுக்குப் பொன்னளிக்கப் பெற்றது. (465 of 1908)

3ம் ஆண்டில் கற்குடிக்கோயில் விழாவிற்காக வரி வசூலித்துக்கொள்ள இரண்டு தேவதானக் கிராமங்களை விட்டான். அவை ஸ்ரீ காரைநல்லூர், கற்குடி என்பனவாம். பின்னர், திருவானைக் காவலைச் சார்ந்த அபிமானராமம் என்பதும் சேர்த்துக்கொடுக்கப்பட்டது. இது புதிதாகச் சேர்த்த தானபந்தமாகும். (462 of 1908)

5ம் ஆண்டைய கல்வெட்டு சிதைந்துள்ளது. அடுத்ததும் அப்படியே.

இராஜகேசரி குலோத்துங்கன் I: கி.பி. 1070—1120.

ஆட்சி 4ம் ஆண்டில் திருக்கற்குடி விழுமிய தேவர்க்கு இராஜா ஸ்ரீ சதுர்வேதிமங்கலத்து நிலம் விட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இதனடியில் அனுலோமன் முதலிய ஜாதிகளின் கடமைகளும் குறிக்கப்பெற்றுள்ளன. (479 of 1908)

48ம் ஆண்டிலும் அதற்குமுன்னும் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. நிகழ்ச்சிகள் அறிய முடியவில்லை.

30ம் ஆண்டில் இரட்டபாடிகொண்ட சோழவள நாட்டு உறையூர்க் கூற்றத்துப் பிரமதேய மான குண்டூராகிய இராஜநாராயண சதுர்வேதிமங்கலத்து நெற்குன்றமென்ற கிராமத்தை விழுமிய தேவர்க்களித்தான்.


**மல்லிகார்ச்சுனமகாராயன்:** கி. பி. 1455.

விஜயநகரத்தரசஞன வீரப்பிரதாப தேவ ராயர் மகஞன மல்லிகார்ச்சுனராய மழவராயரால் சகம் 1377ல் இராஜகம்பீர வளநாட்டுப் பிரமதேய மான உய்யக்கொண்டான் திருமலை விழுமிய நாயஞர் கோயிலுக்கும், பூசைக்கும், விழாவுக்குமாக நிலம் விட்டான். இந்தக் கல்வெட்டுமட்டும் அம்மை கோயில் தென்சுவரில் இருக்கிறது. சோழமன்னர் கள் கல்வெட்டு அம்மை கோயிலில் காணப்படாமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

**மயிலைத்திண்ணன்:**

மயிலைத்திண்ணன் என்பவஞல் விடேல் விடுகு என்னும் பொன் நிறை கல்லால் பொன் நிறுத்துக் கொடுத்து வயிரமேகன்வாய்க்கால் கரையில் நிலம் வாங்கிக் கோயிலுக்கு அளிக்கப் பெற்றது.

வடகரை உத்துங்கவளநாட்டு குன்றக்கூற்றத்து கூத்தூர் வாசியான ஒருவர் விழுமியார் கோயி லுக்கு நிலம் விட்ட செய்தியை காலமும், அரசர் பெயருந் தெரியாத கல்வெட்டு விளக்குகிறது.



ஸ்ரீ உஜ்ஜீவனநாத சுவாமி கோயில் (கற்குடிமாமலை)

# திருவாரூர்
# இராஜாங்கக்கட்டளை

# திருவாரூர் : : : : : இராஜாங்கக்கட்டளை

இத்தலம் மாயூரம் அறந்தாங்கிப் பாதையில் உள்ள புகைவண்டிக் கூட்டுநிலையம். சத்த விடங்கத் தலங்களுள் ஒன்று. வீதி விடங்கப் பெருமானே எல்லா விடங்கங்கட்கும் முதன்மையாய்த் திருமாலாலும், இந்திரனாலும் பூசிக்கப்பெற்ற சிறப்புடையார் ஆதலின், அவரைச் சூழ ஏனைய ஆறுவிடங்கர்களும் எழுந்தருள, இவர் இத்தலத்து நடுநாயகமாக வீற்றிருக்கின்றார்.

இத்தலம் மிகத் தொன்மையானது. 'திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ திருவாரூர்க் கோயிலாக் கொண்டநாளே' என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கு இதனை மெய்ப்பிக்கும். இத்தலத்தில் பிரமன் கோயில், துருவாச ஆசிரமம், பரவையுண் மண்டளி, திருநீலகண்டர் கோயில், தண்டபாணி கோயில்,பரவையார்கோயில், ராஜதுர்க்கைகோயில், நடுவணநாதர்கோயில், மாற்றுரைத்த விநாயகர் கோயில், சோமநாதர் கோயில், குளுந்தாளம்மன் கோயில், ஐயனார்கோயில், உருத்திரகோடீசுவரர் கோயில், குமரக்கோயில், எல்லையம்மன் கோயில் மாணிக்கநாச்சியார் கோயில் முதலிய கோயில்கள் உள்ளன.

தலப்பெயர்:

இத்தலத்துக்குக் கமலாலயபுரம், க்ஷேத்ரவர புரம், ஆடகேசுரபுரம், மூலாதாரபுரம், சக்திபுரம், கந்தபுரம் எனப் பலபெயர்கள் இலக்கியங்களில் வழங்குகின்றன.

தீர்த்தங்கள் :

தேவ தீர்த்தம், சங்கதீர்த்தம், சரசுவதிதீர்த்தம் முதலிய 21 தீர்த்தங்கள் இருப்பதாகப் புராணங்கள் புகலுகின்றன.

உட்கோயில்கள்:

திருக்கோயிலுக்குப் பூங்கோயிலென்று பெயர். கோயிலுக்குள் அசலேசம், ஆடகேசம், ஆனந்தேசம், அருணசலேசம், விச்வகன்மேசம், சித்தீசம் எனப் பல உட்கோயில்கள் உள்ளன. அவற்றுள் அசலேசம் திருநாவுக்கரசர் பாடல் பெற்றது.

மூர்த்திகள் :

ஐங்கலக்காசு விநாயகர், வன்மீகநாதர், தியாகேசர், வாதாபி விநாயகர், நீலோத்பலாம்பிகை, விடங்கர், தருணேந்துசேகரர், கமலாம்பிகை, சுந்தரர், சேரமான் முதலிய மூர்த்திகள் எழுந்தருளியுள்ளார்கள்.

**வாத்தியம்:**

பஞ்சமுக வாத்தியம், பாரிநாயனம், சுத்த மத்தளம் என்பவை இத்தலத்துக்குச் சிறந்த வாத்தியங்கள்.

தியாகப்பள்ளு, தியாகக்குறவஞ்சி, வீராணுக்க விசயம் என்பன இத்தலத்து ஆடப்பட்ட கூத்து வகை நூல்கள்.

**மண்டபங்கள்:**

தேவாசிரயமண்டபம், பக்தகாட்சி மண்டபம், ஊஞ்சல்மண்டபம், துலாபார மண்டபம், சபாபதி மண்டபம், புராணமண்டபம், இராஜ நாராயண மண்டபம், தட்டஞ்சுற்றி மண்டபம், வசந்த மண்டபம், திருப்பள்ளித்தாம மண்டபம் முதலிய பல மண்டபங்கள் உள்ளன.

**அன்பர்கள்:**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேரமான், ஏயர்கோன் கலிக்காமர், கழற்சிங்கர், விறன்மிண்டர், செருத்துணையார், நமிநந்தியடிகள், தண்டியடிகள், சோமாசிமாறர், பரவைநாச்சியார், செட்டித்தெரு ஞானப்பிரகாசர், கமலை ஞானப்பிரகாசர், குருஞானசம்பந்தர் முதலிய பலர் இத்தலத்தை வழிபட்ட அன்பர்கள் ஆவார்கள்.

**புலவர்கள்:**

சேக்கிழார், கச்சியப்பர், சம்பந்த முனிவர், சிதம்பரம் மறைஞானசம்பந்தர், குமரகுருபரர், அந்தகக்கவி வீரராகவமுதலியார், வைத்தியநாத நாவலர், சைவ எல்லப்ப நாவலர், சிவஞானதேசிகர், தியாகராஜச் செட்டியார், கீழ்வேளூர் குருசாமி தேசிகர், சிதம்பர முனிவர், சதாசிவநாவலர், நிர்மலமணி தேசிகர், தத்துவப்பிரகாசர் முதலிய பல புலவர்கள் வடமொழி தென் மொழி நூற் கோயில்களைக்கண்டு இன்புற்றிருந்தார்கள்.

## கல்வெட்டுக்கள்

சோழர்கள் தம் அரண்மனைத்தெய்வங்களாக வைத்துப் போற்றும் சிவாலயங்களில் இத்தலத்துக் கோயில் முதன்மையானது. இத்தலம் கயாமாணிக்க வளநாட்டைச் சார்ந்த திருவாரூர் என்றும், அதிராஜ வளநாட்டைச் சேர்ந்த திருவாரூர் என்றும், க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருவாரூர்க்கூற்றத்துத் திருவாரூர் என்றும் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

இரண்டாம் இராஜாதிராஜன் தன் ஆட்சி 16-ம் ஆண்டில் பெரிய கோபுரத்தையும் சபாபதி மண்டபத்தையும் கட்டினன். செம்பியன் மாதேவியார் அரநெறிக்கோயிலைக் கற்கோயிலாகக் கட்டுவித்

தார். லக்கம தண்டம நாயக்க உடையாருக்கு நன்றாக அவர் மந்திரி ஒரு கோபுரம் கட்டினான். இரண்டாம் இராஜேந்திரன் வீதிவிடங்கநாதர் கருப்பக் கிருகத்தையும், வன்மீகநாதர் கோயிலையும் பொன் வேய்ந்தான்.

திருமுறை ஆசிரியர்களின் திருநாட்களில் விழாக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தன.

நம்பியாரூரர்தாயான இசைஞானியார்கௌதம கோத்திரத்தாரான ஞான சிவாசாரியாருடைய புத்திரி என்பதை ஒரு கல்வெட்டறிவிக்கிறது.

பராந்தகன், இராஜராஜன் I, இராஜேந்திரன் I, இராஜாதிராஜன் I, குலோத்துங்கன் I, இராஜேந்திரன் II, விக்ரமசோழன் குலோத்துங்கன் II, இராஜாதிராஜன் முதலிய சோழ அரசருடைய கல்வெட்டுக்களும் திருவிளக்குக்களும் தேவதானங்களும் குறிப்பிடப்படுகின்றன.

தியாகராஜசாமி கோயில் இரண்டாம் பிராகார வடசுவரில் (164 of 1894) மனுச்சரிதம் கண்ட கல்வெட்டில் மனுச்சரிதம் முழுதும் குறிப்பிடப் படுகிறது.

இத்தலத்தில் தருமை ஆதிகுருமூர்த்திகளின் குருமூர்த்தியாகிய கமலை ஞானப்பிரகாசருக்குத் தஞ்சை மன்னனும், கிருஷ்ணதேவராயனும்

அளித்த தேவ தானங்களும் வீதிவிடங்கப் பெருமானுக்கும் வன்மீகநாதப்பெருமானுக்கும் நித்தியார்ச்சனை பெருநீராட்டு இவைகட்காக அளித்த தேவதானங்களும் இராஜாங்கக்கட்டளை என்ற பெயரோடு விளங்கிவருகின்றன. அவற்றை அவர்கள் குருஞானசம்பந்த சுவாமிகளிடத்தில் ஒப்படைத்து விட்டார்கள். அது இப்போதும் தருமை ஆதீன நிர்வாகத்திலேயே நடைபெற்று வருகிறது.

இவற்றின் விரிவைத் 'திருவாரூர்' என்னும் ஆதீன வெளியீடு 189ல் காணலாம்.



# திருச்சி
# மௌனமடம்

# மௌனமடம்

இத்தலம் மிக விளக்கமானது. மலைக்காட்சியின் முதலிடமாக உள்ளது. காவிரிக்குத் தென்கரையில் அமைந்தது. கலாசாலைகளும், கல்லூரிகளும் நிறைந்து எல்லாவிதமான அறிவுத்துறையிலும் வளர்ச்சிக்குரிய இடமாக இருப்பது.

சரித்திர காலத்திலும் கி. மு. 2ம்நூற்றூண்டுக்கு முன்பிருந்தே விளங்கிவருவது. சோழர் தலைநகரங்களில் ஒன்ருகிய உறையூரைத் தன்னகத்துக் கொண்டு விளங்குவது.

**பெயர்க்காரணம்:**

திரிசிராப்பள்ளி என்பதற்குத் திரிசிரன் என்னும் அரக்கன் பூசித்துப் பேறுபெற்றதனல், இப்பெயர் பெற்றது என்று புராணங் கூறும். இம்மலைக்கே மூன்று சிகரங்கள் உள்ளன. அதனல் திரிசிராப்பள்ளியெனப் பெற்றது என்று செவிவழிச் செய்தி நிலவுகிறது. இந்தப் பொருள்களில் வழங்கிய திரிசிராப்பள்ளி திருச்சிராப்பள்ளி

ஆதற்கு என்ன விதியுண்டு என்பதை யறிஞர்கள் ஆய்ந்து முடிவுகாண்பார்களாக.

நமதுசமயாசாரியப் பெருந்தகையார்கள் 'சிராப் பள்ளிக் குன்றுடையானை', 'சிராப்பள்ளிச் செல் வன்' 'சிரகிரி' எனவே வழங்குகின்றார்கள். திரிசிரா என்பதில் திரி என்பது மூன்று என்ற பொருள் குறித்த சொல்லாயின் அதனை விடுத்துச் சிராப் பள்ளி என்று வழங்கியிரார்கள்..ஆதலால் அவர்கள் காலத்தில் திரு என்பதை யடைமொழியாகக் கொண்டதே சிராப்பள்ளி என்பதற்கு வேறு பொருள் இருந்திருக்கவேண்டும் என்பதனைக் கருத இடந்தருகின்றது.

"சிராப்பள்ளி" என்றதன் பெயர்க்காரணத் தைப்பற்றி நமது சரித்திரப் பேரறிஞர் தி. வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் சென்ற மாதத் துச் செந்தமிழில் எழுதியுள்ளார்கள். அதன் சுருக்கக் கருத்து இங்கே தரப்பெறுகின்றது.

சிராப்பள்ளிக் கோயில்கட்டியவன் கி. பி. 7-ம் நூற்றுண்டில் நமது அப்பாடிகளை வருத்திச் சைவ னான முதல் மகேந்திரவர்மனே. அவன் இத்தலத்து எட்டு ஸ்லோகங்கள் அடங்கிய கல்வெட்டு ஒன்று அமைத்திருக்கிறான். அதில் தான் சைவனானதை யும் (S. I. I. Vol. I. No. 33, 34) திருவதிகையில்

அமண் பள்ளிகளையிடித்துக் குணபரேச்சுரம் கட்டியதையும் குறிப்பிடுகின்றான். குணபரன் என்பது மகேந்திரவர்மனையே குறிக்கும் பட்டப்பெயர். இதனைச் சிராப்பள்ளியிலும், செங்கற்பட்டு வல்லத்திலும் உள்ள குகைக்கோயிற் கல்வெட்டுக்கள் வலியுறுத்தும். அதைப்போலவே சிராப்பள்ளியாகிய இவ்விடத்தும் அமணப்பள்ளி ஒன்றுபெரியதாக இருந்தது. அதனை யிடித்தே இந்தக் கோயிலைச் சைவனான மகேந்திரவர்மன் கட்டினான் (S. I. I. Vol. I. No.33).

உச்சிப்பிள்ளையார்கோயிலின் பின்பக்கத்தில் இன்றும் சமணமுனிவர்களுடைய கற்படுக்கைகளைக் காணலாம். அவற்றில் அந்தந்தப் படுக்கையிலிருந்த அமணமுனிவர் பெயர்கள் குறிக்கப்பெற்றுள்ளன. அவைகள் 5ம் நூற்றாண்டின் நிகழ்ச்சிகள். அவர்களில் ஒருவர் சிரா என்னும் பெயருடையவர் என்று ஒரு கற்படுக்கை யறிவிக்கிறது. ஆதலால் பள்ளி கோயிலானாலும், பெயர்போகாமல் சிராப்பள்ளி எனவே வழங்குகிறது.

**ஊர்ப்பெயரும் - கோயிற் பெயரும்:**

ஊர்ப்பெயர் சிற்றம்பர். கோயிற்பெயர் சிராப்பள்ளி. இதனை நன்கு விளக்குவது, இராஜராஜன் I ஆட்சியாண்டு 16ல் வெட்டப்பெற்ற (412 of 1904),

விக்கிரமசிங்க மூவேந்தவேளான் விளத்தூர் நாட்டில் நிலம் வாங்கி அதனை உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பரிலுள்ள சிராப்பள்ளி கோயிலுக்கு அளித்தான் என்ற கல்வெட்டுப் பகுதியாம். வரகுண பாண்டியன் 11ம் யாண்டுக் கல்வெட்டும் இதனையே குறிக்கிறது. இன்னும் சில பகுதிகளிலும் சிற்றம்பர், சிற்றம்பர் நகர், சிற்றம்பர்ப்பதியென இத்தலம் வழங்கப்பெறுகின்றது. ஆதலால் ஊர் சிற்றம்பர் எனவும், கோயில் சிராப்பள்ளி எனவும் வழங்கி வந்தமை தெளிவு.

மூர்த்தி:

இறைவன் பெயர் திருமலைக்கொழுந்தர், தாயுமானவர், செவ்வந்திநாதர் எனவும், அம்மையின் பெயர் மட்டுவார்குழலம்மை எனவும் வழங்கும். வடமொழிவாணர் மாதுருபூதேஸ்வரர், சுகந்த குந்தளாம்பிகை யெனக் கூறுவர். கல்வெட்டுக்களில் இறைவன் திருமலைப்பெருமான் அடிகள் என்ற பெயரால் குறிக்கப்பெறுகின்றார். உச்சிப் பிள்ளையார், மாணிக்கவிநாயகர் ஆலயங்களும், மௌன மடம் முருகன் கோயிலும் மிகச் சிறப்புடையன.

**தீர்த்தங்கள்:**

காவிரி, சிவகங்கை, நன்றுடையான், தீயதில்லான், பிரமதீர்த்தம் முதலியன உள்ளன.

அவற்றுள் 'நன்றுடையான்' 'தீயதில்லான்' என்ற தீர்த்தங்கள் ஞானசம்பந்தர் தெய்வவாக்கிலும் திகழ்வன. இவையன்றித் தெப்பக்குளம் ஒன்றுண்டு. அது 16ம் நூற்றூண்டில் அரசாண்ட விஸ்வநாத நாயக்கர் வெட்டுவித்தது.

**மலை:**

இது மேருவின் சிகரங்களில் ஒன்று. ஆதிசேடனுக்கும், வாயுதேவனுக்கும் நடந்த சொற்போட்டியால் பிரிந்த சிகரங்களில் ஒன்று திருக்காளத்தி, மற்ருென்று திரிகோணமலை, மற்ருென்று திரிசிராமலை என்று புராணம் கூறும்.

**தாயுமானர்:**

கருவுயிர்க்க வருந்திய இரத்தினவதியின் நிறைந்த அன்பிற்கிரங்கிப் பெருமானே தாயாக எழுந்தருளிப் பணிபலபுரிந்து பாதுகாத்தார். ஆதலால் தாயுமானர் ஆயினர்.

**மேற்குமுகங்கண்டவரலாறு:**

செவ்வந்திப்பூவைத்திருடிய சிவதிரவியாபகாரியான பூவாணிகனைக்கண்டிக்காத பராந்தகனது

அரச அநீதியைக்கண்டு, சாரமாமுனிவர் வேண்டு கோட்படி பெருமான் மேற்குப்பக்கமாக உறை யூரைப்பார்க்கத் திரும்பினர். மண்மாரியால் நகர் அழிந்தது. மன்னன் அழிந்தான். மன்னன் மனைவி கருவுற்றிருந்தாள். காவிரியில் வீழ்ந்தாள். அந்த தணன் ஒருவன் பாதுகாத்தான். கரிகாலன் பிறந் தான். கருவுற்ற ஆதித்தசோழன் மனைவியாகிய காந்திமதிக்கு இறைவன் தானே தோன்றி காட்சி கொடுத்து, தான்றோன்றீசர் என்ற திருநாமம் பெற்ற வரலாறுகளும் புராணங்களில் பேசப் படுகின்றன.

இங்கு, குகைகள் உள்ளன. இவை மகேந் திரன் காலத்தனவே என்பது குறிப்பிடப்பட்டது. ஒன்று மலைமேலுள்ளது. மற்றொன்று அடிவாரத்தி லுள்ளது. மலைமேலுள்ள கோயில்களிலேயே கல் வெட்டுக்கள் மிகுதியாக உள்ளன. வடமொழியி லமைந்த எட்டு ஸ்லோகங்கள் மகேந்திரவர்மனது மதமாற்றத்தையும் அதனல் அவன் செய்த சிவப் பணிகளையும் தெரிவிக்கின்றன. அவற்றில் கல்தச்ச ராலே இந்த அரசனுடைய புகழ் விரிந்து நீடித் திருக்கவேண்டும் என்ற செய்தி தெரிவிக்கிறது ஒரு ஸ்லோகம். இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக் களும் செப்புப் பட்டயங்களும் நிரம்ப உள்ளன. அவற்றுள் காலத்தால் முற்பட்டது கி. மு. 2-ம் நூற்றாண்டில் எழுந்த பிராமி எழுத்தால் எழுதப் பட்ட கல்வெட்டாகும் (139 of 1938).

அவற்றிலிருந்து கொடர்ச்சியாகப் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை பல்லவ கிரந்தத்தாலும், தமிழாலும ஆக்கப்பெற்றன.

இராஜகேசரிவர்மன்:

இவன் ஆட்சி 16ம் ஆண்டில் சாகுபடிக்குக் கொண்டுவரப்படாத நிலங்களைக் குறைந்தவிலையாக ஐந்துகழஞ்சுக்குவிற்று நிலம் விளைச்சலுக்குவந்த பிறகு, நிலம் வாங்கியவர்கள் திருவிழாக்காலங்களில் சித்திரைத்திருநாளில் ஒன்பதுநாட்களுக்குப் பன்மாகேசுவரர்களுக்கும் உணவு இடும்படி உத்தர விட்டான் (985 of 1013).

பாண்டியன் மாறன் சடையன்:

இவன் ஆட்சி 4ம் ஆண்டில் நிலமளித்திருக்கிறான். இதில் இறைவன் திருமலைப் பெருமான் என்றழைக்கப்படுகிறான். 413, 414 of 1904. வேங்கட தேவ மகாராயர் சகம் 1539ல் வீரப்பநாயக்கருடைய மேன்மைக்காக நிலமளித்தார். மதுரை விஜயரங்க சொக்கநாத நாயக்கருடைய காலத்தில் நரசபந்துலு என்னும் தன்வந்திரி வைத்தியருக்கு இறையிலியாக நிலமளிக்கப்பட்டது (E.P.R. 1911. Page 90).

அவ்வாறே திருமலையப்பராயத் தொண்டைமான் மகனும், திருமலைராயத் தொண்டைமான்

பேரனுமான ராஜாவிஜயரகுநாததொண்டைமான் சகம் 1727ல் கி. பி. 1805ல் ஓராண்டிக்கோடி கிராமத்தை தேனும்பட்டணம் இருளப்ப முதலியாரிடம் அளித்து, திருச்சிராப்பள்ளியில் அறச்சாலை நடத்த ஏற்பாடுசெய்தான். நல்லப்ப காலாட்க தோழராலும், ரங்கப்ப காலாட்க தோழராலும் அளிக்கப்பட்ட தேவதானங்களை அறிவிக்கும் செப்புப்பட்டயங்கள் உள. கல்வெட்டுக்களில் சிறப்பாகக் குகைக்கோயில்பின் சுவரில்திரிசிராமலை அந்தாதி யொன்று எழுதப்பெற்றுள்ளது. அது 103 பாடல்களை உடையது. அதில் 104ம் பாடலாக "மாட மதுரை மணலூர் மதில்வேம்பை, யோடமர் சேய்ஞலூர் குண்டூரின்—நீடிய, நற்பதிக் கோன் நாரா யணன்சி ராமலைமேல், கற்பதித்தான் சொன்ன கவி" என்றதால் நாராயணன் என்பவன் கல்வெட்டுவித்தான் என்று குறிப்பிடப் படுகிறது.

மௌனமடம்:— விஜயரகுநாதசொக்கலிங்க நாயகர் சகம் 1627—1654 (கி. பி. 1705—1732)ல் அரசாண்டவர். இவர்காலத்தில் இருந்தவர்கள் தாயுமானசுவாமிகள். தாயுமானசுவாமிகள் தமதுபாடலில் மௌனகுருவணக்கத்தைச் சேர்த்திருக்கிறார்கள். அதிலும் 'மூலன்மரபில்வரும் மௌனகுருவே' என்று குறிப்பிடுகிறார்கள். திருமூலர் தற்சிறப்புப் பாயிரத்துள் தன்னுடைய குருபரம்பரையைப் பற்றிப் பேசிய இடத்தில் மாலாங்கன்முதல் மலையன்

இறுதியாக எழுவரைக்கூறி இந்த எழுவரும் என் வழியாமே என்று கூறுகின்றார்கள். ஆதலால் தாயுமானசுவாமிகளின் குருவாகிய மௌனகுருவும் இவர்கள் சந்ததியாரில் ஒருவராக இருக்கவேண்டும். ஆதலால் மௌனமடமும் திருக்கயிலாய பரம்பரை நந்திமரபு திருமூலர் சந்தானத்து வழிவழியாக வருவது. மௌனகுருதேவர் ஸ்ரீ தாயுமான அடிகட்கு ஞானதீட்சை செய்து சிவஞானோபதேசம் அருளிய இடம் மௌனமடத்துள்ள பூசைமேடை என்ற செவிவழிச்செய்தி பரம்பரையாகச் சொல்லப் படுகிறது.

மௌனமடத்து ஆதீன கர்த்தராகிய ஒருவர் திருமேனிநிலை குன்றியிருந்தகாலத்துத் தருமபுர வாதீனத்துத் தம்பிரான்களிலொருவருக்குப்பட்டம் சூட்டிச் சென்றனர். அதுமுதல் மௌனமடத்து நிர்வாகம் முதலியவும், கட்டளை விசாரணைகளும் தருமபுர ஆதீனத்து நிர்வாகத்திலேயே இருந்து வருகின்றன. இதனைத் தொடர்ந்து நடைபெறும் சில தருமநிகழ்ச்சிகளை ஒருவாறு பட்டயமும் காட்டும். இந்தப்பட்டயம் தருமபுர மடாலயத்துப் புத்தகசாலையில் உள்ளது.

ஸ்வஸ்தி ஸ்ரீவிசயா .... .... சாலிவாகன சகாப்தம் 1117 கல்யப்தம் 4897 இதன்மேற்செல்லாநின்ற ராக்ஷஸ வருஷத்தில் சித்திரை மாதத்தில் மதுரை ராசாதிராச ராசபரமேசுவர வீரப்பிரதாப ஸ்ரீவீர

வேங்கடபதிதேவ மகாராஜா அவர்கள் நகரத்தில் ஏற்றின சிம்மாஸனத்தில் எழுந்தருளிப் பிருதிவி இராஜ்யம்பண்ணுகின்ற காலத்தில் வேங்கடாசல செட்டியார் அவர்கள் மாதுருபூதேஸ்வரசுவாமிக்கு நித்யார்ச்சனை நைவேத்ய உபயத்திற்கும் காவேரி ஸ்நானகட்டத்தில் விபூதி, மஞ்சள், குங்குமம் அளித்துவர ஏற்பாடுசெய்வதற்குமாக, நிலம் மௌனத்தம்பிரானவர்கட்கு விட்டுச், சிஷ்ய பாரம்பரியமாகவும், ஆசந்திரார்க்கவரை அநுபவித்துக் கொள்ளவும் செய்துகொடுத்த தாம்ரசாஸனம்.

# திருவிடைமருதூர்
# பிச்சக்கட்டளை

திருவிடைமருதூர்

# பிச்சக்கட்டளை

இத்தலம் மாயூரம் கும்பகோணம் பாதையி லுள்ள புகைவண்டி நிலையமாகும். வடமொழியில் மத்தியார்ஜுனம் என வழங்கப்படும். நமது தென் இந்தியாவில் மூன்று அர்ஜுனஸ்தலங்கள் உள் ளன. ஒன்று மத்யார்ஜுனம். இரண்டு புடார் ஜுனமாகிய திருப்புடைமருதூர். மூன்று மல்லிகார் ஜுனமாகிய கர்னூல் ஜில்லாவிலுள்ள ஊர். இந்த மூன்றிலும் மருதமரம் தலவிருக்ஷமாதலின் இப் பெயர்பெற்றது. இங்கு எழுந்தருளியுள்ள இறை வன் மகாலிங்கப்பெருமான். நாள்விழாப் பெரு விழாக்கள் யாவும் இப்பெருமானுக்கே நடைபெறும். தைமாதத்து நடக்கும் பெருவிழாவில் பூசநாளே தீர்த்தவாரிப் பெருவிழா நடைபெறுநாளாகும்.

இத்தலத்துப் பிரதக்ஷிணம் வருதல்மேலானது. அஸ்வமேதப்பிரதக்ஷிணம் என்றபெரிய பிராகாரம் வலம் வருதலால் எல்லா நன்மைகளும் உண்டாகும். பகை யகலும். சித்தசுத்தியுண்டாகும். அஸ்வமேத யாகம் செய்தபலன் சித்திக்கும். ஆதலால் இந்தியா வின் பல பாகங்களிலிருந்தும் இகபர நன்மைகளை விரும்புகின்றவரனைவரும் இந்தப் பிரதக்ஷிணத்தை யும், மகாலிங்க வழிபாட்டையும் விரும்பி வருவார் கள். இவ்விடத்துப் பைத்தியம் நீங்குகிறது.

ஒருகாலத்தில் மூத்தபிள்ளையாரைநோக்கிச் சிவ பெருமான் இத்தலத்து வழிபடும் வண்ணம் ஆணை தந்தார். ஆதலால் தலவிநாயகர் ஆண்டபிள்ளையார் என வழங்கப்பெறுவர். இதனை வடமொழி ஆக்ஞா கணபதி என வழங்கும்.

கீழ்ப்பக்கத்து 2ம் கோபுரத்து சோழப் பிரம ஹத்தியின் வடிவம் இருக்கிறது. சோழ மன்னன் பிராமணனைக் கொன்ற பாவத்தால் பிரமகத்தி அவனைத் தொடர்ந்தது. அரசன் அஞ்சி கோயில்கள் தீர்த்தங்கள் தலங்கள் எங்கும்சென்றான். பயன் இல்லை. இறுதியாக இத்தலத்தை அடைந்தான். பிரமகத்தி தொலைந்தது. வரகுண பாண்டியனைத் தொடர்ந்த பிரமகத்தியும் இத்தலத்து வந்தவுடன் தொலைந்தது.

பட்டினத்தடிகள், பத்திரகிரியார் முதலிய சிவ ஞானச் செல்வர்களும் இத்தலத்து வசித்துப் பேரின்பம் எய்தினர்.

## கல்வெட்டுக்கள்

குலோத்துங்கன் I ஆட்சி 38ம் யாண்டில் நிலங் கள் அளந்து வரிக்கூறு செய்யப்பெற்ற நிகழ்ச்சி குறிக்கப்பெற்றுள்ளது. விழாக்காலங்களில் கோயி லுக்குள்ளும், தெரு விழாக்களிலும் நடனமாடவும், இசை பாடவும் உள்ள ஏற்பாடுகளில் சில திருத் தங்கள் செய்யப்பெற்றன. சகம் 1466ல் (கி.பி. 1544)

விட்டலதேவ மகாராஜாவிற்காகச் சிற்றம்பலப் பட்டன் சண்டைக்குப் போகும்போது துணிபுரிந் தான். அப்போதும் மகாலிங்கத்தையும் மத்யார் ஜுனத்தையும் மறந்தவனல்லன். ஆவணம், சிற் ரூடி யென்னுங் கிராமங்கள் கைம்மாறிப் போன வற்றை மீட்டு மருதப்பார்என்று முத்திரையிட்ட கல்லைநட்டுக் கோயிலுக்களித்தான்.

பரகேசரிவர்மன் 4ம்யாண்டில், விளக்கிற்காகக் கொடுக்கப்பெற்ற தங்கத்தின் கணக்கெடுத்து, கல் வெட்டுக்களையும் ஆராய்ந்து பதிவு செய்துகொண்டு, அவற்றைப் பூமியின்கீழ்ப் புதைத்துவிட்டு அவற் றின் நகல் புதுக்கல்லில் வெட்டிவைக்கப்பெற்றது. கூத்துவிகற்பங்கள் இந்தக் கோயிலில் நடைபெற் றன. இந்தக் கூத்து ஆரியக்கூத்து என்று அழைக்கப்பெற்றது. அதற்கு நிபந்தம் ஏற்படுத்தப் பெற்றது. அந்த நிகழ்ச்சிகளையறிவிக்கும் கல் வெட்டுக்களும் புதைக்கப்பெற்று, அவற்றின் நகல் திரும்பவும் வெட்டுவிக்கப்பெற்றது.

இத்தலத்தில் 160 கல்வெட்டுக்கள் உள்ளன. அவை 1895ம் ஆண்டிலும், 1907ம் ஆண்டிலும் அரசாங்கத்தாரால் படியெடுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் முப்பத்துமூன்று கல்வெட்டுக்கள் வெளியாயுள்ளன. ஏனையவை குறிப்புமட்டும்கொடுக் கப்பெற்றுள்ளன.

இத்தலம் உய்யக்கொண்ட வளநாட்டு திரைமூர்நாட்டு இடைமருது என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. கல்வெட்டுக்களிற் பெரும்பாலானவை ராஜகேசரிவன்மன் காலத்தனவே.

இத்தலத்துப் பிச்சக்கட்டளையென்ற ஒன்று இவ்வாதீனத்துக்கு உரியதாக இருக்கிறது.

பிச்சக்கட்டளை என்பது இக்காலத்தில்பிச்சைக் கட்டளையாகிப் பிச்சையிடவேண்டிய தருமமே இது செய்யவேண்டியது என்று கருதப்பெற்று வருகிறது. 'ஆதித்தன் பிச்சன்' என்னும் அரசியலலுவலாளன் ஒருவன் தென்னாட்டுக் கோயில்கள் பலவற்றில் அரசற்கு நன்றுண்டாக சில நிபந்தங்களை ஏற்படுத்தினன். இறைவற்கே பணி பலபுரியப் பணித்திருக்கின்றான். அதனால் பிச்சக்கட்டளையென்றாயிற்று என்று கருதுவது பொருந்தும்.

# திருக்கடவூர்

# திருக்கடவூர்

**தலம் :**

தஞ்சைஜில்லா மாயூரம் தாலூகாவிலுள்ளது. மாயூரமிருந்து தரங்கம்பாடி செல்லும் இரயில் பாதையில் இருக்கிறது. இது ஒரு புகைவண்டி நிலையம். சோலைகளும், குளங்களும் மணற்பாங்கான நிலப்பரப்பும் உடையது.

**மறுபெயர்கள் :**

வில்வவனம், பிஞ்சிலவனம், கடவூர் எனப் பெயர்கள் வழங்குகின்றன.

**வில்வவனம்:—** பிரமன் ஞானேபதேசம் பெற விரும்பி இறைவனைவழிபட, இறைவன் வில்வவிதை ஒன்றனைக் கையிற்கொடுத்து, இட்ட ஒரு முகூர்த்தத்துக்குள் எந்த இடத்தில் முளைக்கிறதோ, அங்கு எம்மை வழிபடுவாயாக என்று ஆணையிட்டனன். பிரமன் பல இடங்களில் பரிசோதித்தான். இத்தலத்தில், அவ்வாறே நிகழ்ந்தது. ஞானேபதேசம் பெற்றான். அதனல் இத்தலம் வில்வவனமாயிற்று.

**பிஞ்சிலவனம்:—** மார்க்கண்டேயர் கொண்டு வந்த திருமஞ்சனக் குடத்துக் கங்கையோடு வந்த பிஞ்சிலம் (ஜாதிமுல்லை) இத்தலத்திற்கு தலவிருட்ச

மாயிற்று. ஆதலால் இத்தலம் பிஞ்சிலவனம் என அழைக்கப்படலாயிற்று.

அமுதம் கடைந்த அசுரர்களும், அமரர்களும் அமுதத்தைக் குடத்தில் இட்டு, இங்கே வைத்து நீராடச்சென்றனர். திரும்பிவந்து எடுக்க முயன்றனர். அக்குடம் பாதாளம் ஊடுருவிய சிவலிங்கத் திருமேனியாக இருக்கக்கண்டார்கள். ஆதலால் இத்தலம் கடவூர் என வழங்கலாயிற்று. மக்கள் கடவூரைக் கடையூராக்கிவிட்டனர்.

கோயிலமைப்பு:

திருவீதிஉட்பட ஐந்து பிராகாரங்கள் அமைந்த கோயில். கோயிலுக்குள்ளே நந்தவனம் இருக்கிறது. மேற்குப்பார்த்த சந்நிதி. கிழக்கிலும் மேற்கிலும் இராஜ கோபுரங்கள் உள்ளன. கிழக்குக் கோபுரத்தில் முனீசுவரர் இருப்பதால், முனீசுவரர் கோபுரம் என வழங்குகிறது. பரிவார தேவதையோடு திருமாளிகைப்பத்தி மண்டபம் அமைந்துள்ளது. அலங்கார மண்டபமும், சங்காபிஷேக மண்டபமும் இருக்கின்றன.

மூர்த்திகள்:

**கள்ளவாரணர்:-** தேவர்கள் இறைவனைவேண்டி ஞானவாவியில் பெற்ற ஞானமிர்தத்தைக் காணாது திகைத்தார்கள். வருந்தினார்கள். இறைவன் காட்சி

யளித்துக் கணபதியை வணங்கக் கட்டளையிட்டார். அவ்வாறே அவர்கள் வணங்கி, ஞானமிர்தத்தைப் பெற்றார்கள். அங்ஙனம் உள்ளம் கவர்ந்த கணபதி யாதலின் கள்ளக்கணபதி யாயினர். சோர கணபதி என்று வடமொழி நூல் கூறுகிறது.

**அமுதலிங்கம்:-** அமுதமே இலிங்கமாக ஆயின மையின் இப்பெயர் பெற்றது. இஃதன்றி அமுத கடோற்பவர், அமுதகடேசர் என்ற திருநாமங்களும் இவருக்கு உண்டு. காஞ்சிபுரத்து அம்மையின் முலையும் வளையும் ஒத்தத்தழும்புற்ற திருமேனி இயம னுடைய பாசம்படத் தழும்புறாதிருக்குமா? ஆதலால் லிங்கத்தின் உச்சியில் ஓர் பிளப்பும், மேனிமேல் தழும்பும் காணப்படுகின்றன.

**அபிராமி அம்மையார்:—** இது இறைவியின் திருநாமம். அம்மை கிழக்குநோக்கி எழுந்தருளி இருக்கிறார். அம்மை, ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் நிறைந்து, தெளிந்த ஞானத்திருவை அள்ளி வீசுகின்றாள்.

**புண்ணியவர்த்தனர்:—** புலத்திய முனிவர் மார்க் கண்டேய முனிவரைக் காணவந்தபோது பிர திட்டை செய்த சிவலிங்கத் திருமேனி. புண்ணி யத்தை வளர்ப்பவர் என்பது இதன் பொருள்.

**பாபவிமோசனர்:—** உலகவர் பாபமோட அகத் தியர் பூசித்த சிவலிங்கம்.

**வில்வவனேசர்:—** பிரமன் பூசித்த ஆதி சிவ லிங்கமூர்த்தி. பிச்சாடனமூர்த்தியின் பக்கத்தில் இச்சந்நிதி இருக்கிறது.

**காலசங்காரக்கடவுள்:—** இயமனை உதைத்து அருள்செய்த உத்தமர். தெற்குமுகமாக எழுந்தருளி இருக்கிறார். வலது திருக்கரங்களில் சூலமும் மழுவும், இடது திருக்கரங்களில் பாசமும் சுட்டுமுத்திரையுமாகக் காட்சியளிக்கின்றார். உதையுண்ட இயமன் காற்கீழ் கவிழ்ந்து கிடக்கின்றான். மார்க்கண்டேயர் இறைவனுக்கு மேற்பக்கத்தில் இருக்கின்றார். வாலாம்பிகை இறைவனுக்குப் பக்கத்தில் எழுந்தருளி உள்ளார். இவருக்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள திருமாளிகைப்பத்தியில் எதிர்முகமாக இயமன் இருக்கின்றான். காலசங்கார மூர்த்திக்கு ஆண்டில் பதினொரு முறைதான் திருமஞ்சனம் நடைபெறும். ஆண்டில் ஒருமுறைதான் திருவீதிக்கு எழுந்தருளுவர்.


குங்குலியக்கலையர், முருகர், மார்க்கண்டர், சந்திரசேகரர், இரத்தினகிரீடேசுவரர் முதலிய திருவுருவங்களும் இருக்கின்றன.

**புராணவரலாறு:**

மார்க்கண்டேயர் அமுதகடேசுவரரை வழிபட்டு, என்றும் 16 ஆண்டாக இருக்கும் வரம் பெற்றார். குங்குலியக்கலையர், குங்குலியதூபமிட்டு இழந்த பொருளையும், முடிந்த பேரின்பத்தையும் பெற்றார்.

அபிராமிபட்டர் அபிராமியின் அருளுக்கு இலக்காகி அமாவாசையிலும் சந்திரோதயங்காட்டி, அரசனுந் தனது ஏவல்கேட்க அந்தாதி வாயிலாக அருள் வெள்ளத்தை நாட்டிற்கு வழங்கி அருளினர். காரி நாயனர் இவ்வூரில் அவதரித்துச் செந்தமிழ்ச் செல்வராய்க் காரிக்கோவைபாடி மூவேந்தரிடமும் பொருள் பெற்றுச் சிவாலயங்கள் கட்டுவித்த பெரியாராவர். இவர் 63 நாயன்மார்களில் ஒருவர்.

**தீர்த்தங்கள்:**



அமிர்தபுட்கரணிதீர்த்தம்

அமிர்த புஷ்கரணி:- கீழக்கோபுரத்திற்கு முன்னிலையில் கோயிலுக்குள் இருக்கிறது. இதன் கரையில் அமிர்தசித்திவிநாயகர் இருக்கிரூர்.

**மார்க்கண்டேய தீர்த்தம்:-** இது கடவூர் மயானத்தின்கண் இருக்கிறது. இதிலிருந்து எடுக்கப்படும் தண்ணீர் அமுதகடேசுவரருக்குமட்டும் உபயோகப்படுத்தப்படுகிறது.

இயமனால் உண்டாக்கப்பெற்ற தீர்த்தமுண்டு. அது காலதீர்த்தம். யானைக்குளம் என இப்போது வழங்கப்படுகிறது.

**மண்டபங்கள்:**

நூற்றுக்கால்மண்டபம், அலங்காரமண்டபம், சங்குமண்டபம் முதலிய பலமண்டபங்கள் உள்ளன. அவற்றுள் அலங்காரமண்டபம் எழுத்து மண்டபமென வழங்கப்படுகிறது. குலோத்துங்கசோழன் திருவெடுத்துக்கட்டிய மண்டபத்தில் எனவரும் மூன்றாங் குலோத்துங்கனது கல்வெட்டுக் குறிப்பிற்கும், எழுத்து மண்டபத்திற்கும் ஓர் இயைபு இருக்கலாமோ என்பது அறிஞர் ஆய்விற்குரியது.

**திருவிழா:**

சித்திரை மாதத்தில் பெருவிழா நடைபெறும். அதில் ஆறாந்திருநாள் காலசங்காரம் நடைபெறும். பங்குனியில் மார்க்கண்டேயர் கங்கை அழைத்த வரலாறு நடைபெறும். அம்மை கோயிலில் ஆடிப்பூர, நவராத்திரி விழாக்களும் உண்டு.



நூற்றுக்கால்மண்டபம்

## கல்வெட்டுக்கள்:

கோயில் சுற்றுமதில்களிலும், கர்ப்பக்கிருகத்திலும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றை அரசாங்கக்கல்வெட்டிலாகா அதிகாரிகள் 1906ம் ஆண்டிலும், 1925ம் ஆண்டிலும் படி எடுத்திருக்கிறார்கள். அவற்றின் குறிப்புக்கள் மட்டும் வெளிவந்துள்ளன. கல்வெட்டுக்களின் மொத்த எண் 54.

இராசராசன் I விருந்து இராசராசன் III வரையில்உள்ள சோழமன்னர்கள் ஒன்பதின்மருடைய வரலாற்றுக்குறிப்புக்களும், வள்ளன்மையும், பெரும்பாலான கல்வெட்டுக்களால்அறிவிக்கப்படுகின்றன. பாண்டியர்களுள், சுந்தரபாண்டியன், வீரபாண்டியன், குலசேகரபாண்டியன் ஆகிய மூவருடைய கொடைத்தன்மை பேசப்படுகிறது. விஜயநகர வேந்தருள் கிருஷ்ணதேவராயரும், மூக்கண உடையார் பரம்பரையில் விருப்பண உடையாரும் தேவஸ்தானத் தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

இத்தலம், திரிபுவன சக்ரவர்த்தி இராசராசன் காலத்து, செயங்கொண்ட சோழவளநாட்டு ஆக்கூர் நாட்டுக் கடவூர் என்றும் (245 of 1925), முதற் குலோத்துங்கன் காலத்து இராசநாராயண வளநாட்டு அம்பர் நாட்டுத் திருக்கடவூர் என்றும், பரகேசரி இராஜேந்திரன் காலத்து உய்யக்கொண்

டான் வளநாட்டு அம்பர்நாட்டுக்கடவூர் என்றும், (241 of 25.) மூன்ருங் குலோத்துங்கன் காலத்துச் செயங்கொண்டவளநாட்டு ஆக்கூர்நாட்டுப்பிரிவான அம்பர்நாட்டுக் திருக்கடவூர் என்றும் (43 of 1906) குறிக்கப்பட்டுள்ளன. இதனுல் வளநாடு, நாடுபற்றிய பிரிவினைகள் அந்தந்தக் காலத்தில், வேறு வேருக இருந்தமை அறியலாம்.

**மூர்த்திகளின் பெயர்கள்:-** திருவீரட்டமுடைய பரமசுவாமி என்றும், காலகால தேவர் என்றும், திருக்கடவூர் நாயகர் என்றும் பெயர்கள்வழங்குகின் றன. திருக்கடவூர், திருவீரட்ட நாட்டுப்படையேவிய திருக்கடவூர், உட்படையேவிய திருக்கடவூர், உட் பாத மேவிய திருக்கடவூர் என்று குறிக்கப்பெறு கின்றது. உட் கோயில்களாகக் குலோத்துங்க சோளீச்சுரமுடையாரும், விக்ரமசோளீச்சுரமுடை யாரும் குறிக்கப்படுகின்ருர்கள். விசய நகர அரசர் காலத்துக்கல்வெட்டுக்களில், காலகாலதேவர் கோயி லோடு திருமால் கோயிலும் சேர்த்துக் குறிப்பிடப் படுகின்றது.

**பணி :**

குலோத்துங்க சோழன் தன்னுட்சிக் காலத்து, மண்டபங்களை எடுத்துக் கட்டினுன் போலும். அதனைக் 'குலோத்துங்கசோழன் திருவெடுத்துக் கட்டிய மண்டபம்' என்றதால் அறியலாம் (257 of 1927).

பெயர் அறியப்படாத கொழும்பு மன்னன் ஒருவனல், காலகால தேவர்மேல் பாடல் ஒன்று செய்யப்பெற்றதாக (50 of 1906) கல்வெட்டு குறிப்பிடுகிறது. பாண்டியநாட்டு பெருந்தனக்காரர் ஒருவரால் காலசங்கார மூர்த்திக்குச் சிம்மாசனம் வழங்கப்பட்டது.

இராசராசன் I: கி. பி. 985—1013.

இவனது 7ம் யாண்டு 242ம் நாள் திரு வீரட்டானமுடையார் கோயில் நிலங்களுக்கும், அதனைச் சுற்றியுள்ள நிலங்களுக்கும் பெருந்தொகையைத் தள்ளுபடி செய்தான். (245 of 1925). 249 of 2195 லும் இச்செய்தியே அறிவிக்கப் பெற்றுள்ளது.

13வது யாண்டில், திருக்கடவூர்ச் சபையார் நிலத்தை வாங்கித் திருவீரட்டமுடையபரமேசுரர் கோயிலுக்குச், சிலதிரு உருவங்களின் முன், ஆண்டு முழுதும் மூன்று விளக்கிடவும், காலைமாலை நாட் பூசைக்குமாக, உதயசந்திரன் அமுதனன மயிலாற்றி என்னும் அவ்வூர் வணிகனிடம், வாரமில்லாது கொடுத்துத் தருமம் இடையீடின்றி நடந்துவர ஏற்பாடுசெய்தான்.

14ம் யாண்டில், திருக்கடவூர் மகாசபையார், காலகால தேவர் கோயில், குலோத்துங்கசோழன் திருவெடுத்துக்கட்டி மண்டபத்தில் சுவாமி கோயில் அணிகளை ஆராய்ந்து வைணவர்களும், மாகேசுரரு

மாகக் கலந்து விற்ற கிரீடத்தைத் திரும்பவாங்கிச் சேர்த்தது. (257 of 1925).

அதேயாண்டில், நிலம் அளித்தமை குறிப்பிடப் படுகிறது. இதில் இறைவன், படையேவிய திருக்கட வூர் காலகால தேவர் என்று குறிப்பிடப் பெறுதல் நுனித்தறியத்தக்கது.

15ம் யாண்டில், திருவீரட்டானத்துப் பெருமான் அடிகளாருக்குப் பணிசெய்யும் பணிப்பெருமக்க ளுக்கு நிலம் விடப்பெற்றது.

16ம் யாண்டில், அம்பர் நாட்டுப் படையேவிய திருக்கடவூரில், சில நிலங்களை விற்றசெய்தி குறிப் பிடப் படுகிறது. இந்தநாள், 23-9-1000 என்று E. P. Ind Vol. 9. P 9. கூறுகிறது. (26, 27, of 1906).

பரகேசரி இராஜேந்திரசோழன்: கி.பி. 1011—1043.

13ம் யாண்டுக் கல்வெட்டு முற்றுப் பெறுதது. ஆனாலும் அதில் நித்தவிநோதவளநாட்டு, நல்லூர் நாட்டு நல்லூர் குறிப்பிடப்படுகிறது. (24of 1906).

15ம் யாண்டில், உய்யக்கொண்டான்வளநாட்டுப் படையேவிய திருக்கடவூர் மகாசபையார் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். 24ம் யாண்டில் உண்டான இக் கல்வெட்டில், தன் ஆட்சி 18ம் யாண்டில் காலகால தேவர்க்குச் சித்திரைவிழா நடத்தவும், நித்திய பூசைக்கு நாள்தோறும் நெல்லாக வருஷம்

தோறும் அளித்து வரவும், இராசராசன் மூவேந்த வேளான் நிலம் விட்டசெய்தி அறிவிக்கிறது.

விஜயராஜேந்திரன்: கி. பி. 1052.

36ம் யாண்டைய நிகழ்ச்சி ஒன்று குறிப்பிடப் படுகிறது. இதில் திருக்கொடியொடு என்று இவன் மெய்க்கீர்த்தி தொடங்குகிறது. சோமக்குடி பிச்ச ஞதித்தனை விசயராஜேந்திரசோழ மூவேந்த வேளாளனுர் இராஜாதிராஜன் சாலையில், 17 மாகேசுரர்களுக்கு உணவுக்கும், காலகால தேவர் பூசைக்குமாக நிலம் விட்டான். அந்நிலம், சாகுபடி செய்தற்கு வரும்வரையில் குடிகள் அனுபவித்துக் கொள்வது என்றும், அதன் பிறகு சாலா போகத் திற்கு எடுத்துக்கொள்வதென்றும், குறிப்பிட்டான் (244 of 25).

இராஜாதிராஜன்: கி. பி. 1018.

இவன் இராசகேசரி வர்மனை திரிபுவன சக்ர வர்த்தி, மதுரையும் ஈழமுங்கொண்ட இராஜாதி ராஜன் என்று வழங்கப்படுகிருன். இவனுடைய மெய்க்கீர்த்தி கடல்சூழ்ந்த என்று தொடங்குகிறது. ஆக்கூர் நாட்டுப் பிரிவான அம்பர்நாட்டு மகாசபை யாராகிய, 240 பேரிளமையார்,(Assembly of Elders) நிலங்களிலிருந்து வரி வசூலித்தும், யாருக்கும் சொந்தமில்லாத நிலங்களை விற்றும், கோயிலுக்கு

உரிமையாக்கின விவரம் தரப்பெற்றுளது. மேற்படி யாண்டு 180வது நாள் 240 வேளாளர்கள், அரசர் நினைவாக காலகால தேவர்க்குக் காணிக்கை அளித்தார்கள். (253, 256, of 1925).

நடுவில் நாடான இராசராசவளநாட்டு ஏமப்பேறூர்நாட்டு, ஏமப்பேறூரான் ஒருவனால் விளக்கும் இடையீடின்றி விளக்கெரிக்க நெடும்புறநாட்டில் நிலமும் அளிக்கப்பட்டன. உய்யக்கொண்டார் வளநாட்டு, பாம்புணிநாட்டு நடாறுடையான் ஒருவனால் ஒரு விளக்கும் அளிக்கப்பெற்றது. (35 of 196) பாண்டியகுலாசனி வளநாட்டுப் பூதலூர் நாட்டுப் பூதலூருடையான் ஒருவனால் விளக்குக்கு நிலம் அளிக்கப்பட்டது.

**வீராஜேந்திரன்: கி. பி. 1062.**

2-வது யாண்டில், செயங்கொண்ட சோழவளநாட்டு திருக்கடவூருடையார் காலகால தேவர்க்கு விளக்குக்கு நிலம் விட்டான். (34 of 1906.)

**குலோத்துங்கன் I: கி. பி. 1070—1120.**

இவன் இராஜகேசரிவர்மனான திரிபுவனச் சக்ரவர்த்திகள் குலோத்துங்க சோழன் என்றே குறிப்பிடப் பெறுகிறான். இவனது 18,19 of 1906 என்ற கல்வெட்டுக்கள் சிதைந்தமையால் முழுதும்

அறியப்படவில்லை. ஆயினும் விளக்குக்கு நிபந்தம் அளித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. 26-ம்யாண்டில் இராசநாராயணன் வளநாட்டு அமரர்நாட்டு, உட்படை யேவிய திருக்கடவூர் மகாசபையார் செய்து கொண்ட ஒப்பந்தம் குறிப்பிடப்பட்டுள்ளது.

27ம் யாண்டில், (தனுர்மீ° 16வ அஷ்டமிதிதி) 1¾ வேலி நிலத்தை விற்று, 50 ஆண்டிற்கு, ஒரு கடைமையும் பெறுதபடி, சட்டமலை வளநாட்டு, பாம்புணிக் கூற்றத்து கொற்றமங்கலத்து வாணவ ராயர், அரசனுக்கு நன்றுண்டாக மார்க்கண்டேய மடத்தில், வேதாத்யயனம் செய்த 10 சிவயோகியர்களுக்குத் திருவமுதளிக்க மடப்புறமாக திருக்கடவூர் மகாசபையாருக்களித்தார். இச்சபையின் கூட்டம், கோயிலுக்குள்ளேயுள்ள திருச்சிறம்பல வேலைக்காரன் திருமண்டபத்தில் கூடியது. இப்போது திருக்கடவூர்ப்பக்கமுள்ள மணல்மேட்டில், மார்க்கண்டேயர் கோயில் ஒன்று இருக்கிறது. மார்க்கண்டேய மடத்திற்கும் இதற்கும் தொடர்புண்டா என்பது ஆராயத்தக்கது. (243 of 1925)

44-ம் யாண்டில், காலகாலதேவர்க்கு விளக்கிற்கும், விளக்குத்தண்டிற்குமாக நிலம் அளித்தான். 48-ம் யாண்டுக் கல்வெட்டு சிதைந்தது.

**விக்கிரமசோழன்: கி. பி. 1118—1135.**

இவனாட்சி 2-ம் யாண்டில் திருக்கோயிலுக்கு நிலமளித்தான். இச்செய்தி விளக்கமாகக்கிடைக்

காத வண்ணம் சிதைந்திருக்கிறது. நான்காம் யாண்டில், ராஜநாராயண வளநாட்டுக் குறும்பர் நாட்டுத் தில்லையாளிநல்லூரில் திருக்கடவூர் நாயனரின் அர்ச்சனபோகமாக நிலமளித்து, அதனைத்திருக்கடவூர் மகாசபையார் அம்பர்நாட்டுத் திருக்கடவூரில் கல்வெட்டுவித்துக்கொள்ள உத்தரவிட்டான். அதில் அருளாகரன் வாய்க்கால் குறிப்பிடப்பெறுகின்றது (250 of 1925). 6-ம் யாண்டில் கண்ட கல்வெட்டு முற்றுப்பெற்றது. 7-ம் யாண்டில் விளக்குக்குப் பொன் அளித்தது குறிப்பிடப்பெறுகின்றது.

குலோத்துங்கன் III: கி. பி. 1186—1216

பரகேசரிவர்மனை திரிபுவன குலோத்துங்கன் என்று குறிப்பிடப்படுகிறான். இவனுடைய 9-ம் ஆட்சியாண்டில் விருதராசபயங்கர வளநாட்டு நல்லூர் நாட்டு மூலங்குடியான் ஒருவனால், காலகாலதேவர் திருமுன் விளக்குக்காக நிலம் விடப்பட்டது (37 of 1906). இராசராசவளநாட்டு கீழ் வேங்கை நாட்டுப் பெருநல்லூருடையான் ஒருவனால், எருக்காட்டுச்சேரி மணற்குன்றில் நிலம் விடப்பெற்றது.

15-ம் யாண்டுக் கல்வெட்டில், மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட என்று சிறப்பிக்கப்படுகிறான். மெய்க்கீர்த்தி "புயல் வாய்த்து" என்று தொடங்குகிறது. மெர்கன் நாயகன் திருநடனம் புரிஞ்சான் என்பவனால் ஊர்ப்பொதுவான

நிலங்களைப் பூந்தோட்டப் பாதுகாப்பிற்காகத், தோட்டக்காரர்களுக்கு அளித்து இறையிலி ஆக்கப் பெற்றது. 16-ம் யாண்டில், அரையன் இராசராச தேவனுன வாணுதிராயனுல் காலகாலர் கோயிலில் இராஜராஜேசுவரர் படிமத்தை எழுந்தருளுவித்து நிலம் வழங்கப்பெற்றது. 17-ம் யாண்டில், திருவீரட்டான முடையார் கோயிலில் உள்ள குலோத்துங்க சோளீச்சுரமுடையார், விக்கிரமசோளீச்சுரமுடையார், கூத்தாடும் காலதேவராகிய காலகாலதேவர் இவர்களுக்குப், பூசைவழிபாட்டிற்காகப் பரம்பரையாக இருந்த சைவாசாரியர்களை விலக்கிவிட்டுப் புதிதாக இரண்டுபேரை வைத்துத் திருக்கோயில் பூசைமுறைகளையும் மாற்றினுர். மாற்றியவர் சுவாமி தேவர் என்பவர் (40 of 1906). 23-ம் யாண்டு 283-ம் நாளில் அரசகவியாகிய, வீராந்தப்பல்லவ ராயருடைய பிரிதீக்காகப் பாரசைவன் பொன்னனுகிய காலவிநோத நிருத்தப்பிரியனை நிருத்தநிலைக்காக நியமித்து நெல் சம்பளம்வழங்க ஏற்பாடு செய்தான். இந்த நிகழ்ச்சி சிதம்பரம் கல்வெட்டிலும் குறிக்கப்பெற்றுள்ளது.

**திரிபுவனச்சக்ரவர்த்தி இராசராசன் III:**

கி. பி. 1216—1246

5-வது யாண்டில் செயங்கொண்ட சோழவளநாட்டு ஆக்கூர் நாட்டுத் திருக்கடவூருடையார் காலகால தேவர்க்கு நிலம் அளித்தான் (31 of 1906).

18-ம் யாண்டில் மேல்வளநாட்டுப் பழையனூரானன வேதவனமுடைய அம்மையப்பரால் நிலம் அளிக்கப்பெற்றது (32 of 1906). பெரிய தேவரான மூன்றாங் குலோத்துங்க தேவரால் ஆட்சி 13-ம் யாண்டில் அளிக்கப்பட்ட நிபந்தங்களை இவனாட்சி 21-ம் யாண்டில் குறிப்பிடுகிறார். இது பழங்கதையாயினும் நமக்கொரு பெரும்பயன் விளைக்கிறது. இந்த ராசராசனை மூன்றாமவனாகத்துணியத் துணை செய்கிறது.

கோநேரின்மைகொண்டான்:

இப்பெயர், இரு அரசர்களுக்கு வழங்கிய தென்று முன்னரே குறிக்கப்பெற்றது. இவன் ஆட்சி 12-ம் யாண்டு 272-ம் நாள் ஆக்கூரான ராஜேந்திர சதுர்வேதிமங்கலத்துக் குலோத்துங்க சோழன் கருப்பூரில் காளிங்கராயன் வேண்டுகோட்படி 31 வேலி நிலத்தை ஒதுக்கிக்கொடுத்து,குலசேகரன் சந்தி என்னும் நாள் வழிபாடும் தான் பிறந்த நாளாகிய ஆனிமூலத்தில் சிறப்புவழிபாடும் நடக்க ஏற்பாடுசெய்தான் (247 of 1945), 18-ம் யாண்டு 285-ம் நாள் மூவரையன் வேண்டுகோட்காக அரசனுக்கு நன்றுண்டாகக் கோயிலுக்குத் தென்பால் நந்தவனப்புறமாக நிலம் வழங்கப்பெற்றது. நுந்தா விளக்குக்காக எருக்காட்டஞ்சேரி கிராமத்தையும் பாய்ச்சல் வசதி முழுதும் செய்து அளித்தான். கோயில் நகைப்பாதுகாப்பிற்காகக் காவிரிப்பூம்

பட்டினத்தில் கட்டிடம் ஒன்று கட்டிக்கொடுத்தான் (251 of 1025).

**சுந்தரபாண்டியதேவன் :**

பெருமாள் சுந்தரபாண்டியதேவன் என்று குறிப்பிடப்படுகின்ருன். இவனுடைய எழுத்து சிதைந்துவிட்டது (51 of 1906).

**ஜடாவர்மன் வீரபாண்டியன் :** கி. பி. 1268—1253

இவனது ஆட்சி 34-ம்யாண்டில் நிலம்விட்டான். இவன் முன்னேனது 41-ம்யாண்டின் நிகழ்ச்சியும் இதில் குறிப்பிடப்படுகிறது (45 of 1906).

**மாறவர்மன் குலசேகரபாண்டியன்:** கி. பி. 1308

உலகுடைய பெருமானின் நன்மைக்காகக் காலகால தேவர் சந்நிதியில் 40 விளக்குகள் இட நிலம் விட்டான். இந்தக் காலத்தில் இவன் சகோதரர்களாலேயே நாட்டில் குழப்பமிருந்தது என்று இதில் குறிப்பிடப்படுகிறது (46 of 1906).

**விருப்பண உடையார் :**

சகம்1307-ல் செயங்கொண்ட சோழவளநாட்டுக் கீழ்ப்பாக்கத்துப் பிரமதேயமான திருக்கடவூர் கால

கால தேவர் கோயிலுக்கு 100 வேலி நிலத்தை எல்லாவகையான வரிகளேயும் நீக்கித் தேவதான மாக அளித்தான். இவன் அரியப்ப உடையாரு டைய மகன் என்று குறிப்பிடப்படுகின்ருன்.

கிருஷ்ணதேவராயர் :

இவர் விசயநகர அரசர். இவர்காலத்து, திருக் கடவூர் ஆபத்சகாயன் என்ற அந்தணனல் கோயில் பழுதுபார்க்கப்பெற்றது. இவ்வந்தணன் ரேச்சூரில் நடந்த போரில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டான் (47 of 1906). சகம் 1443-ல் (கி.பி. 1521) திருக் கடவூர் ஆதித்தபட்டர், கரியமாணிக்கபட்டர், புக்க துறைவல்ல சோழபிரமராயர் இவர்கள் விசயநகரம் சென்று, அரசனேக்கண்டு, சோதி சூலம் ஆகிய இவற் றைக்காட்டிக் கோயிலில் தங்களுக்குச் சில சலுகை களேப் பெற்றுக்கொண்டார்கள். அரசன் 8 வேலி கோயிலுக்காக அளித்தான் (24 of 1925). திருக் கடவூரிலுள்ள சிவ விஷ்ணு கோயிலுக்குச் சுமார் 10000 பொன்வரை வஜாசெய்ய உத்தரவளித்தான் (251 of 1925).

கொழும்பாசன் :

திருக்கடவூர் கோயிலேக் கட்டினன். இவன் காலகால தேவரைப்பற்றி ஒரு பாடல் இயற்றி இருக்கிருன். அந்தப்பாடல் மூன்ருங் கோபுரத்தில் இருக்கின்றது.

# திருக்கோளிலி

# திருக்கோளிலி

இத்தலம் தஞ்சை ஜில்லா நாகப்பட்டணம் தாலூகாவில் திருவாரூரிலிருந்து அறந்தாங்கி செல்லும் இருப்புப்பாதையில் திருநெல்லிக்காவல் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஏழு கல் தூரத்திலும், நாகப்பட்டணமிருந்து திருத்துறைப் பூண்டிக்குச் செல்லும் கற்பாதையில் கீழையூரி லிருந்து மூன்று கல் தூரத்திலும் விளங்குகிறது.

**தலப்பெயர்கள்:**

ஆதியில் பிரமதேவன் சிருட்டித்தொழிலைப் பெறவேண்டிப் பூசித்தமையால் பிரம தபோவனம் எனப்பெறும். முசுகுந்தன், தேவேந்திரன்பாற் பெற்றுக்கொடுவந்து பிரதிட்டித்த விடங்கத்தலம் ஏழில் இது அவனிவிடங்கத் தலம். கதகாரண்யம் (தேற்றாமர வனம்), புஷ்ப வனம், தென்கயிலை என்னும் பெயர்கள் இத்தலத்து உலாவில் வழங்கப் பெறுகின்றன. நவக்கிரகங்கள் முதலியோர்க்கும் உளதாய குற்றத்தை நீக்கி அருள்புரிந்தமையால் கோளிலி என்னும் பெயர் பெற்றது. தற்போது திருக்குவளை என்று மருவிவழங்குகிறது.

**மூர்த்திகள்:**

பிரமதேவன் பூசைசெய்தமையால் பிர்மபுரீஸ்வரர். தியாகமூர்த்தியின் திருநாமம் ஊழிப்பரன்,

அவனிவிடங்கத் தியாகர். அம்மையார் திருநாமம் வண்டமர்பூங்குழலாள். விநாயகர் தியாகவிநாயகர். முருகப்பெருமானது திருநாமம் சுந்தரவடிவேலர்.


**தலப்பெருமை:**

திருஞானசம்பந்தர் முதலிய மூவர்களாலும் பாடப்பெற்றது.


வன்றொண்டர், குண்டையூர்கிழார்தந்த நெல் மலையைத் திருவாரூர் பரவைமாளிகைக்கு எடுத்துச் செல்ல ஆள்வேண்டிப்பாடி அவ்வாறு பூதங்களால் நெல்மலையைத் கொண்டுபோய்ச் சேர்த்த அற்புதம் நிகழ்ந்ததான பெருமை வாய்ந்தது இத்தலம்.

**ஆலய அமைப்பும்-மூர்த்திகளும்:**

ஆலயம் தலத்துக்குநடுவணுள்ளது. கிழக்குநோக் கியசந்நிதி. கீழ்புறம் இராஜகோபுரம். பிராகாரங் கள் இரண்டு. இரண்டாம் பிராகாரத்தில் உட் கோபுரம் சிறபவேலையமைந்தது. முதல் பிராகாரம் வடபுறம் வசந்தமண்டபமும் யாகசாலையும் தென் புறம் தட்டிசுத்தி மண்டபமுமுள்ளது. திருமாளி கைப்பத்தி மூன்றுபுறமும் அமைந்தது. நிருதியில் விநாயர்;அதைஅடுத்து விசுவநாதர் இலிங்கவடிவம், இந்திரலிங்கம், சந்திரலிங்கம்; அதை அடுத்து முருகப்பிரான்; பக்கத்தில் வடபுறமாய்ச் சொக்க



ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கோயில் மேல்தளம்



பஞ்சபாண்டவர்கள் பூஜை செய்தல் (கல்வெட்டு)

லிங்கம், அண்ணாமலையார், காளத்தியார் மூவரது இலிங்கவடிவங்களிருக்கின்றன.

அம்மையார் கோயில் கிழக்குச் சந்நிதியாக தனிக்கோயிலாயுள்ளது. ஈசானத்தில் சபாநாதர் உயர்ந்த உருவத்தில் மிக்கழகுடையதாய் விளங்குகிறார். அதை அடுத்து மேற்புறம் நவக்கிரகங்கள் ஒருமுகமாய்ப் பிரதிட்டிக்கப் பட்டிருக்கின்றன. சுவாமிகர்ப்பக்கிருஹம் வடபுறம் அர்த்தநாரீசுர வடிவம் ஒன்றும், பிர்மா துர்க்கையும், உமாமகேஸ்வரர் வடிவமொன்றும் இருக்கின்றன. மேல்புறம் சங்குசக்கிரதாரியாய் விண்டுதேவர் உருவம் ஒன்றும் இருக்கிறது.

கீழ்புறம் மாளிகைப்பத்தியில் சந்திரர் சூரியர் முதலிய உருவங்களுமுள்ளன. உட்கோபுரத்தில் தென்புறமாய் பஞ்சபாண்டவர், பூசித்து ஏத்துங் கோலத்தோடு கல்லில் பொறிக்கப்பட்டிருக்கிறார். மூலத்தானத்தை அடுத்துத் தென்புறமாய் தியாகப் பெருமான் சந்நிதியுள்ளது. தியாகர் சந்நிதியில் சுந்தரர் பரவையாரோடும் நின்று சேவிக்குங் கோலம் உள்ளது. சுவாமிகோயிலுக்கும் அம்மன் கோயிலுக்கும் மத்தியில் அகத்தியர் பூசித்த இலிங்கம் ஒன்று உள்ளது. அது தனிக்கர்ப்பக் கிருகத்தில் இருக்கிறது. சண்டீசுரர் திருவுருவங்கள் இத்தலத்தில் மூன்றிருக்கின்றன.

**தீர்த்தங்களும் தலவிருக்ஷமும்:**

ஆலயத்திற்கு வடபுறம் மிக்க அணிமையில் புனிதமும் புண்ணியமும் வாய்ந்த முத்திநதியாகிய சந்திரநதி கிழக்குநோக்கிச்செல்கிறது. சந்நிதிமுன் அருகில் பிரமதீர்த்த மென்னும் மணி கர்ணிகை உளது. தென்புறம் இந்திர தீர்த்தமும் மேல்புறம் அகத்தியர் தீர்த்தமும் உள்ளது. தென்மேற்கு மூலையில் சிவலோக விநாயகர் கற்றளியினருகில் விநாயக தீர்த்தமொன்று உள்ளது. ஆலயத்தில் அம்மன் சந்நிதியில் சத்தி தீர்த்தமென்று ஒரு கூவலுளது. மிகப்புனிதமானது. அதுதான் அபிஷேக முதலியவற்றிற்குப் பயன்படுகிறது. தலவிருக்ஷம் தேற்றுமரம்.

**சுற்றியுள்ள தலங்கள் :**

வடபால் குண்டையூரும் வலிவலமும், தெற்கே எட்டுகுடியும், மேற்கில் கைச்சின்னமும், கிழக்கில் சந்திர தீர்த்த சங்கமமெனப்பெறும் காமேசுரமும் இருக்கின்றன.

**புறக்கோயில்கள்:**

நிருதியில் சிவலோகவிநாயகர் வீற்றிருக்கிறார். ஓமகாந்தமகாராசாவுக்குச் சிவலோகங் காட்டியவர் இவர். கோயிலுக்குத் தெற்கே பெருமாள் கோயில்

இருக்கிறது. திருநாமம் வரதராஜப் பெருமாள். தென்புறம் அருகில் தெற்குவீதியில் அங்காளம்மன் கோயில் ஒன்றிருக்கிறது. கீழ்புறம் மாரியம்மன் கோயில் உளது.

**வழிபட்டோர்:**

பிரமதேவர், தாமரைக்கண்ணன், வலாரி, அகத்தியன், மூசுகுந்தன், பஞ்சபாண்டவர்கள், நவக்கிரகாதிகள், ஓமகாந்தன் மன்னர் உள்ளிட்டபலர் பூசைசெய்தும் வழிபட்டும் எண்ணிறந்த வரம் பெற்றுள்ளார்கள்.

**விழாக்கள்:**

மாசிமாதத்தில் மகநாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பூதங்கள் நெல் அட்டிச்செல்லும் திருவிழா மூன்றுநாட்களும் பக்த உற்சவமாக நடைபெறுகின்றது. மார்கழித்திங்களில் ஆருத்ரா தரிசனமும், தியாகராஜப் பெருமான் வசந்த மண்டபத்தில் காட்சி அளித்தலும் நடைபெறும். கார்த்திகை மாதத்தில் சோழமன்னனுக்குவேண்டி ஞாயிற்றுக் கிழமை நான்கிலும் தீர்த்தம் பிர்மதீர்த்தத்தில் அளிக்கப் பெறுகிறது.

**அன்பர்களும் அருணூல்களும்:**

ஞானசம்பந்தப்பெருமான் திருக்கைச் சினம் முதலிய தலங்களை வழிபட்டு இங்கு எழுந்தருளினர்.

அப்போது பெருமான் கோள்களின் தீமையைப் போக்கி ஆட்கொள்வார் என்றகுறிப்புப்பட 'கோளாய நீக்குமவன், கோளரவ நீக்குமவன்' என்று குறிப்பிடுகிறார்கள். பஞ்சவரில் பார்த்தனுக்குப் பாசுபதம் ஈந்துவந்தான் என்பது பாண்டவருக்கும் கோளிலிக்கும் உள்ள தொடர்பை விளக்குவதாகும். பழந்தக்கராகப் பண் அமைந்தபதிகம் ஒன்று இத் தலத்திற்குண்டு.

திருநாவுக்கரசுசுவாமிகளருளிய திருக்குறுந் தொகை இரண்டு தலத்திற்கு உண்டு. இவர்களும் கோளிலிப் பெருமானைத் தொழ 'அல்லல் நீங்கும் வினைநாசமாம் அல்லல் இல்லை' என்றே அறிவிக்கிறார்கள். இவருடைய குறுந்தொகையில் நோய்கள் 64 வகை என்ற தொகை குறிப்பிடப்படுகிறது.

சுந்தரமூர்த்திசுவாமிகள் :— பங்குனிஉத்திரத் திருநாளில் சுந்தரர் மாளிகைக்கனுப்ப நெல் இல்லாமையால் வருந்திய குண்டையூர்க் கிழாருக்கு இறைவனருளால் நென்மலை கிடைத்தது. கிடைத்த நென்மலையைச் சுந்தரர்பெருமான் கோளிலியப்பரை வேண்டி, திருவாரூருக்குக் கொணர்வித்தார். அந்த வேண்டுதலை விளக்கும் பகுதிகள் 'சில நெல்லுப் பெற்றேன் ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணி' என்பதாம்.

பரணர்:— சங்ககாலப்பரணரும் இவரும் ஒருவரா? என்பது ஆய்வுக்குரியது: இவர் பிற்பட்டவர்

என்றே ஆராய்ச்சியாளர்கள் துணிகின்றார்கள். இவர் பாடிய திருவந்தாதியில் இத்தலத்தைப் பற்றிய செய்தி வந்துள்ளது.

**திருக்கோளிலிநாதருலா:**— இயற்றியவர் பெயர் தெரியவில்லை. ஆனால் இதன் நடையழகு சிறந்த புலவரியற்றியது என்பதைத் தெரிவிக்கின்றது.

## கல்வெட்டுக்கள்

இக் கோயிலைப்பற்றிய கல்வெட்டுக்கள் 19 உள்ளன. அவற்றுள் சடாவர்மன் சுந்தரபாண்டியன், குலசேகர பாண்டியன், இராஜராஜன், இராஜாதிராஜன், இராஜேந்திரன் முதலிய சோழ பாண்டிய அரசர்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் உணர்த்தப்படுகின்றன.

**தலம்:**

திருக்கோளிலி எனவழங்கும். இது ராஜேந்திர சோழவளநாட்டு இடையளநாட்டு வெண்டாழை வேளூர்க் கூற்றத்துக்கு உட்பட்டதாய் இருந்தது. வேளூரென்று பெயருடைய தலங்கள் பல இருத்தலில் வெண்டாழை என்பது இனம் விலக்கவந்த அடைமொழியாகும்.

மூர்த்திகள் :

இறைவன் திருக்கோளிலி உடையார், திருக் கோளிலி உடையநாயனுர் என்று வழங்கப்படுகிருர். தியாகப்பெருமான் அவனிவிடங்கத்தியாகர் என வழங்கப்படுகிருர்.

திருப்பணி :

வடவல்லத்தை இருக்கையாகவுடைய இருன் குடியான் இந்திராவதிநல்லூர் உய்யவந்தான் சீகாழிப்பிள்ளையான ஜயதுங்கபன்மன் மஹா மண்டபம் தொடங்கிக் கீழைவாசல் வரையும் திருப் பணிசெய்தான். இப்பணி சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலத்ததாகும். இருன்குடி இக் காலத்து இறையாங்குடி என்று வழங்குகிறது. சந்திரநதிப் பெருக்கால் இத்தலத்தின் வடவெல்லே அழிந்துபட்டதாகவும் மீளவும் பாலேக்குறிச்சி உடை யான் திருமறைக்காடுடையான் சீர்திருத்தினுன் என்று தெரிகிறது.

சிற்பம் :

இரண்டாங் கோபுரத்தின் தென்பக்கத்துக் கீழ்மதிலிலே குந்தி, திரௌபதை, நகுலன், அர்ச் சுனன், சகாதேவன், பீஷ்மன், பீஷ்மபுரீ சுரர் இவர்களுடைய திருவுருவங்கள் பெயர்க்

குறிப்புடன் காணப்படுகின்றன. தல விருட்சமாகிய தேத்தாமரமும் அதில் செதுக்கப்பட்டிருக்கிறது. அதுவன்றிப் பகாசுரனுடைய வுருவமும் கோபுரத்தில் இருக்கிறது. செம்படவர்களில் ஆலனென்பான் அதிபத்தநாயனுருடைய திருவுருவத்தை எழுந்தருளுவித்து அதற்கு அமுதுபடிக்காக இரண்டாயிரத்துநூறு காசைத் தாமோதரப் பட்டன்பக்கல் கொடுத்து, இத்தருமம் முட்டின்றி நடைபெற ஏற்பாடுசெய்தான். இது செய்தகாலம் இராஜராஜதேவனின் நான்காம் ஆண்டிலாகும்.

**இராஜாதிராஜன்:**

ஆட்சி 10-வது யாண்டில் பழையனூர் நாட்டு, பழையனூருடையான் வேதவனமுடையான் நுந்தா விளக்குக்காக 100 காசு அளித்தான்.

**குலோத்துங்கன் III:** கி. பி. 1178—1218.

மதுரையும் ஈழமும் பாண்டியன்முடித்தலையுங் கொண்ட குலோத்துங்க சோழன் காலத்து, திருக்கோளிலி உடையார்க்கு விளக்கொன்றுக்கு எண்ணெய் உபயமாக 1000 காசு கொடுத்தான். யாண்டு 20 வதில், திருச்சாட்டியக்குடி திருமடை வளாகத்து ......... நூந்தாவிளக்கு உபயமாக கொண்ட காசு 800. யாண்டு 5 வதிலும், விளக்குக்கு எண்ணெயிட காசு நிபந்தம் விட்டமை அறிவிக்கப்படுகிறது.

இராஜராஜன் III: கி. பி. 1216—1246.

இவன் ஆட்சி நான்காம் யாண்டு உடையார் திருக்கோளிலி உடையார் கோயிலில் சிவன்படரில் ஒருவனான ஆலன் என்பான், அதிபத்தநாயனார் திருப்படிவத்தை எழுந்தருளுவித்தான். அதற்கு நித்யபூசைக்காகத் தன் சாதியார்பக்கல் 2100 காசு இரந்து பெற்றான். அதனைத் தாமோதரபட்டன் என்பவனிடம் கொடுத்து, 2 நாழி அரிசி நாள் ஒன்றுக்குப் படிமாற்றுக்காகக் கொடுத்துவரச் செய்தான்.

சடையவர்மன் சுந்தரபாண்டியன்: 1251—1258.

இவன் ஆட்சி 18ம் யாண்டில், இவன் பிறந்த நாளாகிய திருவாதிரைதோறும் அரசர்க்கு நன்று உண்டாகப், பெருமானும் நாச்சியாரும் சிறப்பமுது செய்தருளித் திருவுலாப்போதவும், ஆளுடையப் பிள்ளையார் திருநாளமுது செய்து திருவுலாப் போதவும் தேவாரம் அருளிப் பாடவும்,நிலம் வாங்கி அளித்தான். திருக்கோளிலி உடையார் கோயில் மண்டபவாயில் தொடங்கி, கீழைவாசல் அறுதியாக வடவல்லத்திருக்கை, இருங்குடியான் இந்திராதிபதி நல்லூர் உய்யவந்தான் சீகாழிப் பிள்ளையான செயதுங்கமன்னன் திருப்பணி செய்வித்ததோடு விளக்குக்கும் நிலம் விட்டான். யாண்டு 15வதில்


வல்லத்திருங்குடியான் சேரனை வென்ற பாண்டிய தேவனுக்குப் பிரமாணம்பண்ணி திருக்கோளிலி உடையாருக்கு பஞ்சத்திரவியம் ஆடியருளுதற்காக ஸ்ரீ பண்டாரத்து 100 பொன் அளித்தான். ஆண்டு எட்டாவதில் பாலக்குறிச்சியுடையான் திருமறைக்காடுடையான், வயிராதிராயன், சந்திர மௌலிப் பேராற்றுப் பெருக்கால்அழிந்த வடக்குத் திருவீதியைச் செப்பனிட்டு, ஆற்று வடகரை தென் கரையும் சீர்திருத்திக் கொடுத்தான்.

வீரராஜேந்திரன்: கி. பி. 1262.

7வது யாண்டில் இராஜேந்திர சோழவளநாட்டு அந்நாட்டுடையார் திருக்கோளிலி உடையார்க்கு வெண்டாழை வேளூர்க்கூற்றத்துப் பெரிய உடையார் திருநுந்தாவிளக்குக்கு எண்ணெய்க்காக 135 காசு அளித்தான். யாண்டு 30வதில் பாலைக் குறிச்சி யுடையான் திருமறைக்காடுடையான், தான்பிறந்த நாளாகிய கேட்டை நாளில் பெருமான் திருவுலாப் போத, அமுதுபடி,சாத்துபடி, திருப்பள்ளித்தாமம் திருவிளக்கெண்ணெய் உள்ளிட்ட வற்றிற்கும், சீபாதந் தாங்கவும் திருப்பள்ளித் தொங்கல் எடுக்கவும் பிறவற்றிற்குமாக நிலம் 5½ காணி அளித்தான். பாண்டிய குலாசனிவளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து நாடுகிழான் அழகிய திருநாமத்துக் காணியாகத் தேவதானம் அளித்தான்.

குலசேகரபாண்டியன் 1218—1308.

யாண்டு 31வதில் சித்தமல்லி வளநாட்டு பாம்புணிக்கூற்றத்து பொன்னிநல்லூருடையான், சீராமதேவன், திருக்கோளிலிஉடைய நாயனருக்கு, இரண்டு நுந்தா விளக்கிட விளக்குப்புறமாக நிலம் அளித்தான்.



# தென் திருமுல்லைவாயில்

# தென் திருமுல்லைவாயில்

இத்தலம் சோழமண்டலத்து ஆலிநாட்டின் கண் காவிரிநதியின் வடபால் சமுத்திரதீரத்திற் சிறந்து விளங்குவது: சிறியதிருக்கோயில். சோலைகள் சூழ்ந்தது. இதன் பொழில்வளத்தையுங் கடல் வளத்தையுங் கண்ட ஞானசம்பந்தப்பெருமான் "களிமண்டுசோலை கழனிக்கலந்து கமலங்கள் தங்கு மதுவில் தெளிமண்டியுண்டு சிறைவண்டு பாடும் திருமுல்லைவாயில்" என்று அறிமுகப் படுத்துகிறார்கள். அங்கு எப்பொழுதும் புன்னைமலர் மணம்வீசுமாம்.

மூர்த்திகள்:

இறைவன் முல்லைவனநாதர். மாசிலாமணீசர் எனவும் பெயர் வழங்குவதுண்டு. இறைவி அணிகொண்ட கோதையம்மை. விநாயகர் வரசக்தி விநாயகர்.

தொன்மை:

இத்தலத்துப் பூசித்துப் பேறு பெற்றவன் கிள்ளிவளவன். இவன் இராசகேசரி, பரகேசரி இவர்களுக்குப் பின்னும் முதலாம் இராஜராஜனுக்கு முன்னும் இருந்தவன். 'காலனுக்கிது வழக்கெனவுரைத்த அவன்' என்று கலிங்கத்துப்பரணி இவனைப்பாராட்டுகிறது. இக்கிள்ளிக்குப்பின் இவன் பெயருடையார் பலர் இருந்தனர். அவருள் கூடலரங்கன் பழையன் மாறனைப் பொருது சாதித்து

கோதைமார்பனால் பாராட்டப்பட்ட கிள்ளிவளவன் ஒருவன் (அகம் 346). சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவ்ன் ஒருவன் (புறம் 373). சோழன்குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஒருவன் (புற 34—41, 46, 69, 70, 173, 229 ) இக் கிள்ளி, சிறுகுடி கிழான்பண்ணனைப்பாடிய புலவனு மாவன். ஆகவே இத்தலத்து முத்தியடைந்த கிள்ளி வளவன் யாராயினும் தொன்மைக்கிழுக்கில்லை.

**தீர்த்தங்கள்:**

இத்தலத்து வாயு திசையில் உள்ள கிணற்றில் கங்கை நித்தியவாசம் பண்ணுகின்றாள். அக்னி திசையில் பிரமதீர்த்தமும், முல்லைவனநாதர் முன் னிலையில் சந்திர தீர்த்தமும் உள்ளன. இத்தீர்த்தத் தில் சந்திரன் விதிப்படி மூழ்கி க்ஷயரோகம் நீங்கப் பெற்றான்.

**புராணவரலாறு:**

பாண்டிய வளநாட்டில் சிறந்த பிராமண குலத்தில் யாகங்கள் பல செய்த சுசாவி என்னும் அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் ஒழுக்கங்களில் சிறந்தார். அவருக்குப் பிள்ளைகள் எண்மர் உளர். அவருள் வாமதேவர் மூத்தவர். இவரும் தந்தையைப் போலவே தவத்தாலும் ஞானத்தாலும் உயர்ந்தவர். தந்தை இறந்ததும் அவருடைய ஆணைப்படியே அவருடைய எலும்பை எடுத்துக்கொண்டு புண்ணிய தீர்த்தங்களில் போடமுயன்றார். தந்தைசொற்படி

எந்த தீர்த்தத்திலும் அரதனமாகவில்லை. கடைசியாக முல்லைவாயில் அடைந்தார். விஷ்ணுதீர்த்தத்து அங்கத்தைக் கரைத்துப் பிதிர்க்கடன் இயற்றினர். அங்க எலும்புகள் அரதனமாகக்கண்டார். கழிபேருவகை கொண்டார். தந்தைக்கு முத்தியளித்த தனயனுனர்.

இறைவனிடத்தில் ஐந்தெழுத் துண்மையை உபதேசவாயிலாகக் கேட்டு அறிந்த அம்மையார், இவ்வைந்தெழுத்தி னுண்மையைச் சித்திப்பதெத் தலம்என்று இறைவனை வினவி, தென்றமிழ் நாட்டு விளங்கும் திருமுல்லைவாயிலை அடைந்தால் ஐந்தெழுத்தின் சித்திவிளங்குமென அறிந்து, அம்மை அவ்வாறே பல தலங்களையும் வணங்கி, திருமுல்லைவாயிலை அடைந்து, இறைவனை முறைப்படி வழிபட்டு, திருவைந்தெழுத்தினை ஓதிச் சிவஞானம் கைவரப்பெற்றார்.

இத்தலத்து மகோதய புண்ணிய காலத்தும், சூரியசந்திரகிரஹண காலத்தும், அமாவாசையிலும், விதிபாதயோகத்தும் திருவைந்தெழுத்தை ஓதுவோர் வினையகன்று நன்மை எய்துவர்.

மங்களபுரம் என்ற ஊரிலேயே தன்னலம் விற்றுண்ணும் பரத்தையொருத்தி இருந்தாள். அவள் மிகப்பெரும் பாவங்கள் செய்யினும் முல்லைவனப் பெருமான் திருவடிமறவாத சிந்தையள். பரத்தைமையினும் ஒரு ஒழுங்குடையவள். ஒரு தினத்திற்

நீண்டினுரைத் தன்கணவனுகக் கொண்டு அன்று முழுதும் வரம்புகடவாதவள். இவளுக்கு இறுதிநாள் யெய்தியது. இயமதூதுவர் நரகிற்கு அழைத்துச் சென்றனர். இவள் நெறியையும், நீங்காத சிவ பக்தியையும் எண்ணிச் சிவகணங்கள் திருக்கைலை யை யடைவித்தன.

**கிள்ளிவளவன்:**

சோழ நாட்டை ஆண்ட கிள்ளிச் சோழன் என்பவன் மனுநெறி தவருமல் அரசாண்டு வந்தான். ஒரு நாள் யானை சேனை புடைசூழ வேட்டைமேற் சென்ருன். காலினும் கடுகிச் செல்லும் குதிரையின் காலினை முல்லைக்கொடி தடுத்தது. குதிரையும் மந்திரத்தால் கட்டுண்ட நாகம் போல, திடீரென நின்றது. சினந்த அரசன் கீழேகுதித்து முல்லைக்கொடியினைத் தனது உடை வாளால் வீசிச்சிதைத்தான். வாள் ஒரு கெட்டியான பொருளில் தாக்கியதை அறிந்து கூர்ந்து நோக்கி ஞன். குபீரெனக் குருதிபாயக்கண்டு பதைபதைத் தான். முல்லைக்கொடி படும் வேதனையைத் தானும் பட உடைவாளால் தன்னைத் துன்புறுத்திக் கொண்டான். அப்படியும் அமையாது நொந்து வீழ்ந்தான். இவன் துயர்கண்ட இறைவன் விண் ணிடை விடைமீதூர்ந்து காட்சி வழங்கினர். இறைவன் ஆணைப்படி திருக்கோயில் கட்டினன். மாசிமாத மகநட்சத்திரத்து விழாக் கொண்டாடி ஞன்.

அன்பர்கள்:

இத்தலத்தைப்பற்றி, ஞானசம்பந்தசுவாமிகள் பதிகம் ஒன்று உள்ளது. சீகாழி வடுகநாததேசிகர் அவர்களால் தென் திருமுல்லைவாயில் புராணம் ஒன்று இயற்றப் பெற்றது. அந்நூல் 415 பாடல்களையுடையது.

இத்தலத்தைப்பற்றிய செப்புப் பட்டயங்கள் இரண்டுள்ளன. அவையிரண்டும் கிருஷ்ண தேவ ராயர் காலத்தன. அவற்றின் படி இங்குதரப்படுகிறது.

C. P. No. 1.

ஸ்ரீ கணபதியே நம: முல்லைவனநாதேஸ்வர அணி கோதையம்மன் பாதாரவிந்தமே நம:

சிதம்பரம் இந்த ஒப்பம் நல்லப்ப உத்தண்டநயினர் கையொப்பம். ஸ்வஸ்தி ஸ்ரீமான் மகாமண்டலேஸ்வரரான ஆரியர் ஆயிரதள விபாடன் பாடிப்புத்த புவனயிர கண்டன். கண்டநாடுகொண்டு கொண்டநாடு குடாதான் சோழமண்டல ஸ்தாபனசாரியன் பூர்வ தக்ஷிண பச்சிம உத்திரசமுத்திரமும் எம்மண்டலமுங்கொண்டு ஈழந்துறை கொண்ட ராஜாதிராஜ பரமேஸ்வர ராசாப்த தம்பிரான் விசயநகர ராச்சிய சிங்கா்தனத்திலே எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணதேவமகாராயர் ஸ்ரீமந் தஞ்சைநகராதிபதியாகிய ராஜமாந்ய பிரதாபசிம்ம மகாராஜா ராஜ்ய பரிபாலனம் பண்ணியருளாநின்ற சகாப்தம் 1685க்கு மேல் செல்லாநின்ற சுபானு வருஷம் ஐப்பிசி மாதம் 30உ

சுக்கிரவாரம் ஏகாதசி அஸ்தம்பெற்ற சுபதினத்தில் துலாகாவேரி ஸ்நானம் ரிஷபதீர்த்தக்கரையில் மூவர் பாடல் மகரமூர்த்தி பூசித்த பதினொருதீர்த்தமும் பகர் மணலொரு சிவலிங்கமாக மகத்துவம்பெற்ற கொள்ளிடங் காவேரி மத்தியஸ்தலமாகிய தென்திருமுல்லைவாயில் முல்லைவனநாத உடையதம்பிரானார் ஸ்ரீமந் பாதாரவிந் தத்தில் நித்தியார்ச்சனை அபிஷேக நைவேத்தியங்களுக்கு சோழைகவலன் ராயர்மெச்சிய ராவுத்தமிண்டன் ஏகோசி ராசா மெச்சியிருந்திடு கொலுவும் காவிரிசாந்தன் விருது பெற்று அக்கினிப் பரியேறிய நல்லப்பராவுத்த மிண்ட நயினார் அவர்கள் பூமிதான சர்வமான்யத்துக்கு தாம்பர சாஸனப் பட்டயம் எழுதிக்கொடுத்தபடி நம்மூர் சீகாழிச் சீமை வரிசைப்பற்று உளதாம் நல்லூரில் பெருவாய்க் காலுக்குக் கிழக்கு காடுவெட்டிக்குமேற்கு, மோட்டுக் கோட்டத்திற்கு, ஆற்றங்கரைக்கு வடக்கு, நான்குள் பட்ட நஞ்சைமானிய நிலம் 21 அடிக்கோலால் குழி 1000 இந்த ஆயிரமென்ற நிலமும் செலதருபாஷாணநிதி நிக்ஷேப ஆடகோப சித்தேஸ்வாமியங்களோடே கிரய விக்ரசாசனமாக சந்திராத்தவரைக்கும் அநுபவித்துக் கொள்வார்களாகவும். இந்த உத்தரப்படி பெரிய தனம் அருணசலப் பிள்ளையவர்கள் சம்பிரதி வைத்தியலிங்க முதலியார்க்குக் கோவில் காறுபார் செம்பப்பையன் நல்ல தம்பியாப்பிள்ளை ஸ்தானீகம் சுப்பிரமணியபிள்ளை நிலம் முட்டுக்கட்டி ஒப்புக்கொண்டமையினாலே சுகத்திலே அநுபவித்துக்கொள்வாராகவும். இந்த தர்மத்துக்கு யாரொருவர் அகிதம்பண்ணினால் கெங்கைக்கரையில் கோகத்தியும் கோப்பிராமணரையும் கொண்ணதோஷத் தையும் அடைவார்கள். மற்ற சாதிக்காரர் விகிதம் பண்ணினால் அவரவர் வேதங்களையழித்த தோஷத்தை

யடைவார்கள். இதனின்று மனோவாக்குக்காயங்களிலே தர்மபரிபாலனம் பண்ணினவர்களும், தர்மம் பண்ணின வர்களும் கெங்கையில் மகாதானம் பண்ணினபலனும் முல்லைவனநாதன் சுவாமி சந்நிதியில் கிள்ளிச்சோழன் பெற்ற பெத்தமுத்தியும்பெறுவார்கள். சுபமஸ்து.

## C. P. No. 2.

ஸ்வஸ்தி ஸ்ரீமந் சகலவிஜய மகாமண்டலேஸ்வரரான ஆரியராயிர தளவிபாடகன் பாஷாணசைதிக்கு தப்புவார் ஆயிரகண்டன் கண்டநாடுகொண்டு கொண்டநாடு குடாதான் கிருஷ்ணதேவ மகாராயருக்குப்பின் தஞ்சா அதிபதியாகிய ராஜமான்ய ராஜப்பிரதாபசிம்ம மகாராஜா அவர்கள் பிருதிவிராஜ்ய பரிபாலனம் பண்ணியருளா நின்ற நாளான சகாப்தம் 1685 கலியாப்தம் 4864 மேல் செல்லாநின்ற பார்த்திபஸு ஐப்பசிமீ வெள்ளிக்கிழமை சதுர்த்தசி கேட்டை நட்சத்திரங்கூடிய சுபநட்சத்திரமும் பெற்ற சுபதினத்தில் சிவதேவமகாதேவரான மூவர் பாடலும் மும்மூர்த்தியும் பூசித்து பதினொருதீர்த்தமும் பகர்மணலாலொரு சிவலிங்கமுமாக மகத்துவம் பெற்ற தலமாகிய தென்திருமுல்லைவாயில் முல்லைவனநாதஸ்வாமி அணிகொண்ட கோதையம்மன் பாதாரவிந்தங்களுக்கு நித்யார்ச்சனை அபிஷேக நிவேதனம் முதலாகிய பணிக்குப் பிள்ளையவர்கள் அருணசலம் பிள்ளையவர்கள் கட்டளை பிரதோஷ சுக்கிரவாரக கட்டளைக்குச் சமைப்பவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித தம்பிரான் அவர்கள் மத்யட்சத்தில் 100 சதரத்துக்கானபருக்கு சேமேய்த்த 100 அவர்கள் குத்தகையில் பாளையக்காரரான நல்லப்ப ராவுத்த மிண்ட நயினர் பண்டாரக்காரர் அவர்கள் கார்யக்கர்த்தரான அருணசலம் பிள்ளையவர்கள் பெரிய

தனத்தில் திருமுல்லைவாயிலில் இருக்கும் வரிசபத்துள கிராமத்தார் சேஷு பிள்ளையவர்கள் உட்பட்டாரும் தர்கா தாண்டவராய முதலி அசநல்லி கூடைபிடி அள குட்டையன் நயினுரான பட்டணஞ்சேரி அறுகாடி குழந்தை கொடுக்கன் முத்துக்குமரன் முட்டைக்கார நாட்டாமை குருநாதன் மற்றஅனைவரும் சம்மதித்து பிள்ளையவர்கள் கட்டளைக்குத் தருமசாஸனப் பட்டையம் எழுதிக்கொடுத்தோம்.

கட்டளைக்கு ராதாநல்லூர் குடியானவர்கள் நஞ்சைக் குப்பேர்வழிக்குக் குடிக்குக் குறுணியும், செறுபாள் கோயில் மானியத்தில் சேர்ந்தது. 21 அடிக்கோலால் குழி 200 தர்க்காபொதுவில் கூடைபிடி அளகன்பங்கில் .........ஆகப்பட்டணச் சேரியில் மாசம் 1க்கு படகு 3க்கு பொன் 3 ஆகப் பின்னையும் அவர்பட்ட சூதாயம் கட்டளைக்குக் கொடுத்து வருவோமாகவும். இப்படிக்கு அனைவரும் சம்மதித்துப் பிள்ளையவர் கட்டளைக்கு மகமை தர்மசாஸனப் பட்டயம் எழுதிக்கொடுத்தோமாகவும். சந்திராதித்தவரைக்கும் புத்திர பௌத்திர பரம்பரைக்கும் மகமைகொடுத்து வருவோமாகவும். இந்த தருமத்துக்கு யாதாமொருவர் மனோவாக்குக் காயங்களின் எத்தர்ம பரிபாலனம்பண்ணினவர்கள் அநேககோடி கங்காஸ்நானம் பண்ணினவர்கள். அவரவர் வதைத்தல் பண்ணினவர்கள் போனதோஷத்தையடைவார்கள்.

இது அறிந்து தர்மபரிபாலனம் பண்ணினவாள் முல்லைவனநாதீஸ்வரர் அணிகொண்டகோதை அம்மன் கடாக்ஷத்தினுலே புத்திரமித்திரர்கள் தரித்திராதிகள் அகன்று அகத்தில் இருப்பார்களாகவும். சுபமஸ்து.

C. P. No. 3. ஸ்ரீ கணபதியே நம:

ஸ்வஸ்தி ஸ்ரீ சகலவிசய ஸ்ரீ மந் மகாராஜாதிராஜ பரமேஸ்வர மகாமண்டலேஸ்வர ஆரியர் ஆயிர தளவிபாட பாஷைக்குத் தப்புவார் ஆயிரவர்கண்டன் சோழமண்டல ஸ்தாபனுசாரியன் விஜயநகர வீரப்பிரதாப கிருஷ்ணதேவ மகாராயன் பிருதிவிராச்ய பரிபாலனம் பண்ணியருளா நின்ற சகாப்தம் 1435க்குமேல் செல்லாநின்ற வெகுதான்ய வருஷம் ஐப்பசிமாதம் 19ந்தேதி பூர்வபக்ஷம் தசமியும் பெற்றநாளில் திருக்கழுமலப் பற்றுநாட்டுக் காவேரி கொள்ளடமத்யஸ்தலமான திருமுல்லைவாயில் முல்லைவன நாத தம்பிராஞருக்குக் கிருஷ்ணதேவமகாராயர் தர்ம மாகச் சேர்த்ததிருக்கழுமலப்பற்று ராதாநல்லூரில் பூர்வ மாக நடந்துவருகிறதும், ராதாநல்லூர் எல்லைக்கு கிழக்கு மேற்குக் கிடையான நிலம் ஐவேலியும் தரைக்குக் கிழக்கு நிலம் அரையுமாக நிலம் ஐந்தரைக்கு திடருக்குச் சிற்ருே டைக்கு வடக்கு பேரோடைக்கும் திருமுல்லைவாயில் உல குண்டபெருமாள் திருவிளையாட்டத்திற்கு தெற்கு திட ருக்கு மேற்கு நிலம் மூன்றுவேலியும் முல்லைவாயில் உல குண்டுமிழ்ந்தபெருமாள் திருவிளையாட்டம் இட்ட கடை யில் நிலம் தாழந்தோண்டி நஞ்சை புஞ்சை நான்கெல்லை யும் திருமுல்லைவாயில் உள்ள புஞ்சைப்பற்றுக் கால்வாயும் இந்தச் சீமைகுளச் சிறுவேர்தாழைலை பின்னக்காடும் தாழந்தோண்டி சனிக்கிழமைச் சந்தையும் முல்லைவாசனப் பேட்டையும் உப்பனாற்றுக்குத் தெற்கு திருவம்பலநல்லூ ரான கோனேரிராஜன்பட்டணமான நிகரத்தான்பட்ட ணம் தேவனுங்கோட்டையுளப்பட புஞ்சையும், திருக் கழுமலநாட்டுப்பற்று புறவாய்க்காலுக்குவடக்கு, வடகால் உள ஞானவாக்குத் தம் செங்கால்திடல் உள்பட நிலம் 30 வேலியும், திருமுல்லைவாயில்துறையில் மானவராய்ப்

பாக்கு பனங்கட்டிக்கு வாட்டுபொதிக்குமுக்காணி பண
மும் நிறைசாக்குக்குத் துலாத்துக்கு ஒருநாள் பணமும்,
பட்டுநார் சந்தனம் கற்பூரம் உட்பட்டவகைக்கு விலை
நாவச்சத்தில் 10 க்குக் கால்பணமும் ஒருகப்பல் சமபோக்
குக்கு ஏழுபணமும் சம்பானபருஞ்சித்துருவுக்கு மூன்று
பணமும் துறையில் அளவுக்குப் பணத்துக்கு இருநாழியும்
செட்டியும் பலபட்டடையாதிகளும் கொடுக்கும் பொன்
30 ம் ஆக இந்தவகைப்படி திருமுல்லைவாயில் முல்லைவன
நாத தம்பிரானுருக்குப் பூர்வபூசைக்கு நடத்த கட்டளைப்
படிக்கு சேத்த நாமத்துக்கு சந்திராதித்த வரைக்கும்
நடக்கக்கடவதாகவும் இத்தருமத்துக்கு அகிதம்பண்ணின
பேர்கள் கங்கைக்கரையில் மாதாபிதாவையும் கோப்பிரா
மணர்களையும் கொண்டிபாவத்திலேபோக்கிக் கடவார்கள்.
சர்வேஸ்வர ரக்ஷை; பன்மாகேசுவர ரக்ஷை; சுபமஸ்து.

C. P. No. 4. ஸ்வஸ்தி ஸ்ரீமாந்

மகாமண்டலேஸ்வர சகலவிஜயராஜாதிராஜன் ராஜ
ராஜ ஸ்ரீமாந் ஏகசக்ராதிபதியாகிய ராஜமானிய துளசா
மகாராஜசாயபு அவர்கள் பிருதிவிராஜ்ய பரிபாலனம்
பண்ணியருளாநின்ற நாளான சாலிவாகன சகாப்தம்
1681 க்குமேல் செல்லாநின்ற சர்வசித்துவருஷம் ஆவணி
மாதம் 7ந்தேதி திருமுல்லைவாயி... மூலவைனநாதர் திருப்
பணி தர்மத்துக்கு தர்க்கா.........................................
டைருகக்குசேமைதா அவர்கள் தந்து... தப் பெரிய அருணா
சலம் பிள்ளை அவர்கள் பெரியதினத்தில் வர்த்தகர்களுக்கு
மகமைக்காக அருணாசலம் பிள்ளை அவர்கள் போய் தாம
ரைத்தாயர் அருணாசலம் பிள்ளை கொண்டு செட்டியார்க்
குதவி செட்டியார் சிவக்தலிங்க செட்டியார் நாகப்பட்ட

ணம் திருமேனி செட்டியார் புதுச்சேரி வில்லப்ப செட்டியார். சென்னை முத்து முதலியார் மற்றுமுள்ள உள்ளூர்ப் பிரதேசத்தவர் அனைவரும் சம்மதித்து திருப்பணி தர்ம சாஸனப்பட்டையம் எழுதிக்கொடுத்த வயணம் வந்தா துறைமுகத்தில் இறக்கப்பட்ட இந்தக்கண்ணிகளுக்கும் சுமைவிராகன் 1 ஆக காய் தானியங்களுக்குக் கட்டளை இரண்டுபேருருவங்களுக்கு அரையாக பிற ஆவணத்தில் கொள்ளவிக்கப்பட்டாவும் இந்தப்படி ஈஸ்வரமானபேர் மேல் பண்ணிக்கொடுத்தது போகத் தமிழ் பிரத்தாரம் தசாதிக்காரர்க்கு சுவாமி கோயில் திருப்பணி தர்மத்துக்கொடுத்துச் சந்திராதித்த வரைக்கும் புத்திர பௌத்திர பரம்பரையாய் நடப்பிக்க வருவோமாகவும் இதில் யாதொரு சாதிக்காரர் விதாயம் பண்ணினால் அவரவர் மாதா பிதாக்களைக் கோவர்த்திபண்ணின தோஷத்தை யடைவார்களாகவும்.

C. P. No 5.

திருமுல்லைவாயில் முல்லைவனநாதஸ்வாமிக்கு சர்வ மான்யப் பட்டயம் இது.

சகாப்தம் 1692க்கு மேல் விக்ருதிளு ஐப்பசிமீ 12ந் தேதி ஸ்வஸ்தி ஸ்ரீ சகலவிஜய ராஜாதிராஜ மகா மண்டேஸ்வர தஞ்சை ராஜாதிபதியாகிய ஸ்ரீ துளசிமகா ராஜா அவர்கள் தர்மமாகவிட்டது. முல்லைவனநாத சுவாமி மகாபூஜைக்குச் சர்வமானியம் பூர்வமாக நடத்தி நிலத்தில் நாளது முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள் அதிகாரத்தில் பெரிய வகுப்பு முத்துக்குமார ராவுத்த நயினர் அவர்கள் நாளில் திருமுல்லைவாயில்

உள்ளூர் ஊருக்கு மேற்கு கலிவாயி நஞ்சை நிலத்தில் நிலம் தாழந்தோண்டி பிச்சிவட்டம் கோட்ட நத்தம் நஞ்சை புஞ்சை மா...... ஆக $2\frac{3}{4}$ம் அளந்துவிட்டபடியினாலே சிலாதருபாஷாண நிதிநிக்ஷேபகிரயவிக்ரம சாசனமாக சந்திராதித்தவரை ஆண்டு அநுபவித்துக்கொள்வாராக. இதற்கு யாதாமொரு பேர்கள் விகாதம்பண்ணினால் கோகஸ்தி பண்ணின தோஷத்தை யடைவர்கள். தர்ம பரிபாலனம் பண்ணிவைக்க சிரஞ்சீவியாய் இருப்பார்களாகவும். சுபமஸ்து. தேவிசகாயம். மகாதேவஸ்தபதி ஹஸ்த லிகிதம்.

தருமபுர ஆதீனம்

# தருமபுர ஆதீனம்

## 1. ஸ்ரீ தருமபுரீஸ்வரர்கோயில்

இந்த ஆலயம் மாயூரத்திற்கு கிழக்கே 2 மைல் தூரத்தில் தருமபுரத்தில் உள்ளது. அழகான சோலை சூழ்ந்த இடம். காவிரிக்கரையை யடுத்து இருக்கிறது. இங்கேதான் ஆதீன மடாலயம் இருக்கிறது. இவ்வாலயத்தின்மேல்பால் ஞானபுரீசுவரர் ஆலயம் விளங்குவதாதலின் அது மேலக்கோயில் எனவும் இதுகீழக்கோயில் எனவும் வழங்கப்பெறுகிறது. சத்தமாதாக்களுள் இந்திராணி பூசித்த தலம்.

இயமன், திருக்கடவூரில் அமுதகடேசர்மீது, அறியாமை மிகுதியால் பாசம் வீசியதால் விளைந்த பாவத்தை இத்தலத்தில் தருமபுரீசரைத் தாபித்து வழிபட்டுப் போக்கிக்கொண்டான். இது அகத்தியாச்சிரமமாக இருந்தது என்பதும் அக்காலத்து இக்கோயில் அவர்கள் மேற்பார்வையில் இருந்தது என்பதுமாகிய நிகழ்ச்சிகள் முன்னரே ஆதீன மடாலயம் என்ற தலைப்பில் குறிக்கப்பெற்றுள்ளன.

அம்மையார் திருநாமம் அபயாம்பாள். கோயில் இரு பிராகாரங்களையுடையது. நடராஜர் உள்ளிட்ட உற்சவமூர்த்திகளும் இருக்கின்றன. யமராஜா என்றபெயருடன் இயமன் இருக்கின்றான். யமராஜாவழிபாடு இங்கு மிகச்சிறந்தது.


## 2. ஸ்ரீஞானபுரீசுவரர் கோயில்

ஆதீனமடாலயத்தின் வடபால் உள்ளது இவ்வாலயம் இருபிராகாரங்களையுடையது. அழகிய திருப்பணி. ஞானபுரீசுவரர் சந்நிதி கிழக்குநோக்கியது. ஞானம்பிகைசந்நிதி தெற்கு நோக்கியது.


வெளிப்பிராகாரத்தில் தென்புறம் ஆஸ்தான மண்டபமும், வடகிழக்குமூலையில் யாகசாலையும் இருக்கின்றன. உட்பிராகாரத்தில் தென் திருமாளிகைப்பத்தியில் சமயாசாரியர் திருவுருவங்கள் பிரதிட்டிக்கப்பட்டிருக்கின்றன. மேல்புறம் விநாயகர், சோமாஸ்கந்தர், முருகப்பிரான், இலக்குமி ஆகியோர் எழுந்தருளியிருக்கின்றார்கள். கருப்பக்கிருகத்தின் வெளியில் தென்புறம் தக்ஷிணாமூர்த்தி எழுந்தருளி யிருக்கின்றார். வடபுறம் சண்டீசப் பெருமான் காட்சி வழங்குகின்றார்.

இவ்வாலயம் ஆதீன ஆதிகுருமூர்த்திகள் சிவசமாதி யெய்திய இடமாகும்: இவ்வாலயம் நான்காவது குருமூர்த்திகளாகிய மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் திருக்கோயிலாகக் கட்டப்பெற்றது: அதுமுதல் சிவாகம விதிப்படி நித்ய நைமித்திகபூசைகள் ஆதி சைவப் பெருமக்களைக்கொண்டு இயற்றுவிக்கப் பெற்று வருகின்றன.

ஆதீனஸ்தாபகர் குருபூஜை விழாவை ஒட்டி முன் பத்து நாட்களும் மகோற்சவம் நடைபெற்று வருகிறது.



ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயம்



ஸ்ரீ தர்மபுரீசுவரர் ஆலயம்

உ

குருபாதம்

# தருமபுர ஆதீன வெளியீடுகள்

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 1. | குருஞானசம்பந்த சுவாமிகள் தாலாட்டு சமூகமாலை முதலியன | 1924 |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1944 |
| 2. | நித்திய கன்மநெறி | 1927 |
| 3. | திருமுல்லைவாயிற் புராணம் | ,, |
| 4. | திரிபதார்த்தரூபாதிதசகாரிய அகவல் | ,, |
| 5. | சித்தாந்த நிச்சயம் | 1928 |
| 6. | சம்பிரதாய தீபம் | 1928 |
| 7. | வருணச்சிரம சந்திரிகை | 1930 |
| 8. | சிகாரத்தின மாலை | ,, |
| 9. | திருப்பதிகமும் பஞ்சரத்தினமும் | ,, |
| 10. | தசமணிமாலை | ,, |
| 11. | ஞானசம்பந்த குருராயவட்டகமும், சந்திரகலாமாலையும் | 1930 |
| 12. | திருவையாற்றுப் புராணம் | ,, |
| 13. | சிவானந்தபோத சாரம் | 1931 |
| 14. | சோடசகலாப் பிராசாத சட்கம் | ,, |
| 15. | சைவசன்யாச பத்ததி (வடமொழி) | 1932 |
| 16. | சிவபோகசாரம் | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1936 |

| எண் | பெயர் | வருஷம் |
| --- | --- | --- |
| 17. | சிவப்பிரகாசக்கட்டளை | 1932 |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1939 |
| 18. | உங-வது மகாசந்நிதானத்தின்மீது பலர் பாடிய தோத்திரப் பாடல் | 1933 |
| 19. | திருத்துருத்திப் புராணம் | 1933 |
| 20. | ஞானசரிதை | 1934 |
| 21. | முத்திநிச்சயம் — சிற்றுரையுடன் | ,, |
| 22. | அறிவானந்த சமுத்திரம் | ,, |
| 23. | பண்டாரமும்மணிக்கோவை குறிப்புரையுடன் | 1937 |
| 24. | இந்துமத பாலபாடம் | ,, |
| 25. | சிதம்பரச் செய்யுட்கோவை உரையுடன் | ,, |
| 26. | திருவையாற்றுத் தலமகிமைச் சுருக்கம் | ,, |
| 27. | கிளிவிடுதூது | ,, |
| 28. | திருமுலைப்பால் சிறப்பு | 1939 |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1941 |
| 29. | பதி பசு பாசத்தொகை | 1940 |
| 30. | ஸ்ரீலஸ்ரீசிவஞானதேசிகர்நான்மணிமாலை | ,, |
| 31. | திருபுவனத் தலமகிமைச் சுருக்கம் | ,, |
| 32. | கீர்த்தித்திருவகவல் | 1941 |
| 33. | ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளின் வரலாறும் சில பாசுரங்களும் | ,, |
| 34. | வைத்தீஸ்வரன்கோயில் தேவாரம் திருப்புகழ் | ,, |
| 35. | திருத்தொண்டத் தொகையும் அசபாநடன பதிகமும் | ,, |
| 36. | குங்கிலியக்கலய நாயனர் அன்பின்திறம் | ,, |
| 37. | திருக்கடவூர்த் தேவாரம் திருப்புகழ் | ,, |
| 38. | திருவையாற்றுத் தேவாரம் திருவாசகம் திருப்புகழ் | ,, |
| 39. | புள்ளிருக்குவேளூர்ப் புராணம் | ,, |
| 40. | சித்தாந்த சைவ வினவிடை | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 41. | நால்வர் சரித்திரமும் அற்புதத் தேவாரத் திரட்டும் | 1941 |
| 42. | ஆச்சாள்புரத் தலவரலாறு | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1943 |
| 43. | திருவையாற்றுத் தலவரலாறு | 1941 |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1943 |
| 44. | சுப்பிரமணியர் திருவவதாரமும் கந்தர்கலி வெண்பாவும் | 1941 |
| 45. | தருமபுர ஆதீனம் மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு | ,, |
| 46. | சிவபூஜாவிதி | ,, |
| 47. | சைவாநுட்டானவிதி | ,, |
| 48. | திருக்கடவூர் உலா குறிப்புரையுடன் | ,, |
| 49. | திருப்பாடல்கள் | 1924 |
| 50. | விநாயகர் அகவல்கள் | ,, |
| 51. | சீகாழித் தலவரலாறு | ,, |
| 52. | மெய்கண்டசாத்திரம் மூலம் | ,, |
| 53. | கற்குடித் தலவரலாறு | 1943 |
| 54. | நீதிநெறிவிளக்கம் (உரையுடன்) | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1949 |
| 55. | திருவாரூர் நான்மணிமாலை மூலமும் வசனமும் | 1943 |
| 56. | சகலகலாவல்லிமாலை (உரையுடன்) | ,, |
| 57. | கந்தரனுபூதி | ,, |
| 58. | குத்தாலத் தலவரலாறு | ,, |
| 59. | குறுக்கைத் தலவரலாறு | ,, |
| 60. | திருபுவனத் தலவரலாறு | ,, |
| 61. | திருக்கடவூர்த் தலவரலாறு | ,, |
| 62. | புள்ளிருக்குவேளூர்த் தலவரலாறு | ,, |
| 63. | திருப்பனந்தாள் தலவரலாறு | ,, |
| 64. | உச-வது மகாசந்நிதானம் பத்தாண்டு ஆட்சி மலர் | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 65. | அப்பர் சுவாமிகள் புராணம் C. K. S. விரிவுரையுடன் | 1944 |
| 66. | மெய்கண்டான் சித்தாந்தமகாநாடு திருமுறைத் திருநாள் நிகழ்ச்சிகள் | ,, |
| 67. | சிவஞானபோத சூத்திரக் கட்டுரை | ,, |

உரு-வது மகாசந்நிதானம்

## ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களால் வெளியிடப்பட்டவை.

| | | |
|---|---|---|
| 68. | ஞானசம்பந்தர் வழங்கிய ஞானவுரை | 1945 |
| 69. | சிவப்பிரகாசம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | ,, |
| 70. | தருமபுர ஆதீன நூல் நிலயப்புத்தகப்பட்டி | ,, |
| 71. | புள்ளிருக்குவேளூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1946 |
| 72. | பஞ்சாவரணத் தோத்திரங்கள் | 1945 |
| 73. | சிதம்பரத்துத் திருப்பதிகங்கள் | ,, |
| 74. | தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா | ,, |
| 75. | திருவேட்களத் திருப்பதிகங்கள் | ,, |
| 76. | திருநெல்வாயில் திருப்பதிகம் | ,, |
| 77. | திருக்கழிப்பாலைத் திருப்பதிகங்கள் | ,, |
| 78. | திருநாரையூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 79. | தருமபுர ஆதீன ஆவணிமூலத் திருநாள் | ,, |
| 80. | ஆச்சாள்புரத் திருப்பதிகம் | ,, |
| 81. | திருமயேந்திரப்பள்ளித் திருப்பதிகம் | ,, |
| 82. | திருத்துருத்தித் திருப்பதிகங்கள் | 1945 |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1946 |


| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 83. | திருமங்கலக்குடித் திருப்பதிகங்கள் | 1945 |
| 84. | திருநகோளிலித் திருப்பதிகங்கள் | ,, |
| 85. | திருக்கடவூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1946 |
| 86. | சிவஞானபோதம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | 1945 |
| 87. | சோமவார விரதம் | ,, |
| 88. | திருநீறு | ,, |
| 89. | உருத்திராக்கம் | 1945 |
| 90. | ஐந்தெழுத்து | ,, |
| 91. | கந்தர்சஷ்டிவிரதச்சிறப்பு (திருமுருகாற்றுப்படையுடன்) | 1946 |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1948 |
| 92. | திருவருட்பயன் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | 1946 |
| 93. | தென்திருமுல்லைவாயில் திருப்பதிகம் | ,, |
| 94. | ஆண்டாள் திருப்பாவை | ,, |
| 95. | திருக்கலிக்காமூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 96. | தருமபுரஆதீனப்பாடசாலை நிர்ணயவிதிகள் | ,, |
| 97. | திருநெல்வேலித் திருப்பதிகம் | ,, |
| 98. | திலகவதியார் (உரைநடை) | ,, |
| 99. | சீகாழித் திருப்பதிகங்கள் | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1948 |
| 100. | திருக்கோலக்காத் திருப்பதிகங்கள் | 1946 |
| 101. | திருக்குருகாவூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 102. | திருச்சாய்க்காட்டுத் திருப்பதிகங்கள் | ,, |
| 103. | திருப்பல்லவனீச்சரத் திருப்பதிகங்கள் | ,, |
| 104. | திருவெண்காட்டுத் திருப்பதிகங்கள் | ,, |
| 105. | கீழைத்திருக்காட்டுப்பள்ளித் திருப்பதிகம் | ,, |
| 106. | சித்தாந்தத் திரயம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 107. | ஸ்ரீகண்டன் (ஓர் சிறு நாடகம்) | 1946 |
| 108. | திருமுலைப்பால் சிறப்பு | ,, |
| 109. | முத்திநிச்சயப்பேருரை | ,, |
| 110. | மிருகேந்திரம் (தமிழ்மொழிபெயர்ப்புடன்) | ,, |
| 111. | நடராஜசதகம் | ,, |
| 112. | உண்மைவிளக்கம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | ,, |
| 113. | திருக்கண்ணார்கோயில் திருப்பதிகம் | ,, |
| 114. | சுவாமிநாதசுவாமி தோத்திரங்கள் | ,, |
| 115. | திருநள்ளாற்றுத் திருப்பதிகங்கள் | ,, |
| 116. | திருக்கடைமுடித் திருப்பதிகம் | ,, |
| 117. | திருப்பறியலூர்த் திருப்பதிகம் | ,, |
| 118. | திருவிளநகர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 119. | திருமின்றியூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 120. | திருஆக்கூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 121. | திருக்கடவூர்மயானத் திருப்பதிகங்கள் | ,, |
| 122. | மாயூரத் திருப்பதிகங்கள் | ,, |
| 123. | திருநீடூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 124. | திருப்புன்கூர்த் திருப்பதிகங்கள் | 1947 |
| 125. | திருஅன்னியூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 126. | திருத்தருமபுரத் திருப்பதிகம் | ,, |
| 127. | ஆலயவழிபாடு (வசனம்) தோத்திரங்களுடன் | ,, |
| 128. | திருவேள்விக்குடித் திருப்பதிகங்கள் | ,, |
| 129. | திருஎதிர்கொள்பாடித் திருப்பதிகம் | ,, |
| 130. | திருமயிலாப்பூர்த் திருப்பதிகம் | ,, |
| 131. | திருஒற்றியூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 132. | திருஞானசம்பந்த நாயனார் புராணம் முதல் நூறுபாடல்கள் C. K. S. விரிவுரையுடன் | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 133. | திருமணஞ்சேரித் திருப்பதிகங்கள் | 1946 |
| 134. | இருபா இருபஃது (ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | ,, |
| 135. | திருக்குறுக்கைத் திருப்பதிகங்கள் | ,, |
| 136. | தருமபுர ஆதீனப் பாடசாலை ஆறாவது ஆண்டு அறிக்கை | ,, |
| 137. | திருக்கருப்பறியலூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 138. | உடு-வது மகாசந்நிதானம் முதலாண்டு ஆட்சி அறிக்கை | ,, |
| 139. | திருக்குரக்குக்காத் திருப்பதிகம் | ,, |
| 140. | அருஅஞ்சைக்களத் திருப்பதிகம் | ,, |
| 141. | திருப்பழமண்ணிப்படிக்கரைத் திருப்பதிகம் | ,, |
| 142. | திருவாழ்கொளிபுத்தூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 143. | திருஓமாம்புலியூர்த் திருப்பதிகம் | ,, |
| 144. | சிவபோகசாரம் விரிவுரையுடனும் ஆங்கிலமொழி பெயர்ப்புடனும் | ,, |
| 145. | திருக்காணுட்டுமுள்ளூர்த் திருப்பதிகம் | ,, |
| 146. | துள்ளிவருகுதுவேல் (வசனம்) | ,, |
| 147. | திருக்கடம்பூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 148. | திருஅவிநாசித் திருப்பதிகம் | ,, |
| 149. | திருமுருகன்பூண்டித் திருப்பதிகம் | ,, |
| 150. | திருவெம்பாவைத் திருப்பதிகம் விளக்கத்துடன் | ,, |
| 151. | திருவலஞ்சுழித் திருப்பதிகங்கள் | ,, |
| 152. | உடு-வது மகாசந்நிதானம் இரண்டாவதாண்டு ஆட்சி அறிக்கை | 1948 |
| 153. | திருப்பந்தணைநல்லூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 154. | திருக்கஞ்சனூர்த் திருப்பதிகம் | ,, |
| 155. | திருக்கோடிகாத் திருப்பதிகங்கள் | ,, |
| 156. | திருவாப்பாடித் திருப்பதிகம் | ,, |
| 157. | சிவஞானசித்தியார் சுபக்கம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 158. | அபிராமி அந்தாதி விரிவுரையுடன் | 1948 |
| 159. | திருச்சேய்ஞலூர்த் திருப்பதிகம் | ,, |
| 160. | பண்டாரசாத்திரம் முதல் தொகுதி | ,, |
| 161. | நல்வழி | ,, |
| 162. | சுவாமிநாதன் பிரபாவம் | ,, |
| 163. | திருந்துதேவன்குடித் திருப்பதிகம் | ,, |
| 164. | இன்பம் | ,, |
| 165. | அறுபத்துமூவர் | ,, |
| 166. | திருவியலூர்த் திருப்பதிகம் | ,, |
| 167. | மெய்கண்டநூற் பொருட்சிறப்பு | ,, |
| 168. | திருக்கொட்டையூர்த் திருப்பதிகம் | ,, |
| 169. | திருஇன்னம்பர் திருப்பதிகம் | ,, |
| 170. | தண்டாயுதபாணித் தோத்திரங்கள் | ,, |
| 171. | உடு-வது மகாசந்நிதானம் மூன்றுவதாண்டு ஆட்சி அறிக்கை | ,, |
| 172. | திருப்பாதிரிப்புலியூர்த் திருப்பதிகம் | ,, |
| 173. | திருப்புறம்பயத் திருப்பதிகம் | ,, |
| 174. | திருவிசயமங்கைத் திருப்பதிகம் | ,, |
| 175. | சைவத் திருமுறைகள் (வசனம்) | ,, |
| 176. | அமைதி | ,, |
| 177. | திருவைகாவூர்த் திருப்பதிகம் | ,, |
| 178. | திருச்சிவபுரத் திருப்பதிகம் | ,, |
| 179. | மதுரைப்பதிகம் தலவரலாற்றுடன் | ,, |
| 180. | திருப்பரங்குன்றத் திருப்பதிகம் | ,, |
| 181. | திருவடகுரங்காடுதுறைத் திருப்பதிகம் | ,, |
| 182. | திருப்பழனத் திருப்பதிகம் | 1949 |
| 183. | திருக்குறள் கதைகள் எண்பது | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 184. | சிதம்பரம் - பதிகங்களுடன் | 1949 |
| 185. | திருப்பெரும்புலியூர்த் திருப்பதிகம். | ,, |
| 186. | பத்தாண்டுவிழா நிகழ்ச்சி | ,, |
| 187. | திருநெய்த்தானத் திருப்பதிகம் | ,, |
| 188. | திருக்கண்டியூர்த் திருப்பதிகம் | ,, |
| 189. | திருவாரூர் - பதிகங்களுடன் | ,, |
| 190. | திருவாலம்பொழில் திருப்பதிகம் | ,, |
| 191. | தாயுமானவர் மடல் குறிப்புரையுடன் | ,, |
| 192. | ஆதீனக் கோயில்கள் | ,, |
| 193. | திருத்தொண்டர் கீதம் | ,, |
| 194. | திருமழபாடித் திருப்பதிகங்கள் | ,, |
| 195. | திருமுருகாற்றுப்படையும், கோளறு திருப்பதிகமும் | ,, |
| 196. | ஆபதுத்தாரணர் மாலை அஷ்டோத்திரசதநாமங்களுடன் | ,, |



உ

குருபாதம்

# தருமபுர ஆதீனம் :
# இயற்றிவரும் பணிகள்.

1. தேவாரபாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.
2. சிவாகம பாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசை முறைகளைப் பயிற்றுவிப்பது.
3. சிவஞான நூல்களைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.
4. சமய நுணுக்கங்களை நூல்களாக வெளியிடுவது.
5. தலங்கள்தோறும் திருப்பதிகங்கள் உரையுடன் வெளியிடுவது.
6. அறிஞரைக் கொண்டு ஆலயம் தோறும் அறவுரைவழங்குவது.
7. பிரசார வாகனத்தின் மூலம் தமிழ்நாடெங்கும் சமயம் வளர்ப்பது.

8. ஆங்கிலக்கலாசாலையில் தமிழ்ப்பரிசு அமைப்பது.

9. ஆதீனக்கோயில்தோறும் பண்ணிசைத் தமிழ் வளர்ப்பது.

10. தமிழ்க்கல்லூரி நிறுவி வித்துவான் தேர்விற் கனுப்புவது.

11. வடமொழிக் கல்லூரி நிறுவி சிரோமணித் தேர் விற்கனுப்புவது.

12. ஏழிசையும் இனிதோங்க இசைப்பிரிவு அமைப்பது

13. நூல் ஆராய்ச்சிகள் எழுதுவித்து வழங்குவது.

14. விஞ்ஞான மெய்ஞ்ஞான நூல்களை வெளியிட்டு வழங்குவது.

15. சமய நூல்களைத் தக்கமுறையில் வெளியிடுவது.

16. "ஞானசம்பந்தம்" என்னும் மாதப்பத்திரிகை வாயிலாக சமயஉண்மைகளை அறிவுறுத்துவது.

17. சமயக் கூட்டங்களுக்குத் தக்கன செய்வது.

18. தமிழ்ப்பணி சமயப்பணி செய்பவர்க்குதவுவது.

19. தமிழ்நாட்டுத் தல வரலாறுகளை எழுதுவித்து வழங்குவது.

20. புத்தகசாலையமைத்துப் பழந்தமிழ் நூல்களைப் பாதுகாப்பது.

21. நாடோறும் ஹரிஜன மாணவர்களுக்கு அன்னமளிப்பது.

22. பொருளும் புத்தகமும் அளித்து ஏழை மாணவர்களுக்கு உதவுவது.

23. மாயூரத்தில் பிரசவ ஆஸ்பத்திரி கட்டி வருவது.

24. குடிமக்கட்கு அடிக்கடி எண்ணெய் முழுக்கும் அன்னமும் அளித்து வருவது.

25. காந்தி நிதி, ஹரிஜன பண்டு, அகதிகள் நிவாரணநிதி, காசநோய் ஆஸ்பத்திரி உதவி நிதி முதலிய பற்பல பொது ஸ்தாபனங்கட்குப் பெருந்தொகையளிப்பது முதலியன.